# கழகக்குரல்




தி.மு.க 5 ஆவது
பொது மாநாட்டு மலர் '75

ஆசிரியர் :
சி. சிட்டிபாபு எம்.பி.






விலை
ரூ. 3





இதய செல்வத்தின்



இலட்சிய பவனி




பழைய
நிகழ்ச்சிகள்
பசுமை
நினைவுகள்


கடமை
கண்ணியம்
கட்டுப்பாடு

# அண்ணன் வாழ்வில் அழியாத நிகழ்ச்சிகள்







# குவியட்டும் வெற்றியெனக் குளிர்விழியால் வாழ்த்தண்ணா!

வங்கக் கடலலையின் தங்கக் கரங்கள் தாலாட்ட -- பொதிகைத் தென்றலுனைத் தேடி வந்து இசை பாட -- முத்தமிழ் வளர்த்த மொழி நிலவே! நீயுறங்கும் திசை நோக்கித் தொழுத வண்ணம் கூடுகின்றோம், கோவையிலே!

ஆவி நிகர்ச் செந்தமிழின் மேவுபுகழ் பாடி -- அகிலமதில் அகில் மணமாய் மணப்பவரே! அண்ணா! நீ தந்த ஆற்றலன்றோ எம் செயல்கள்! நீ போட்ட



பாதையன்றோ எம் வழித்தடங்கள்! நீயளித்த கொடையன்றோ இந்த வாழ்க்கை!

காலங்கள் கடந்தாலும் -- இயற்கைச் சூழல்கள் நிலைமாறிப் போனாலும் -- நின் புகழ் மாறப் போமோ?

நீ சொன்ன தத்துவ வித்தல்லவா இப்போது தழைத்துவரும் தமிழர் வாழ்வு! 'நாங்கள் வாழ்கிறோம் -- எங்கள் வாழ்விலே நீயும் வாழ்கின்றாய்' என உலகினருக்கு உணர்த்தவே இம் மலர்!

சிந்தனை -- செயல் -- திறம் அத்துணையும் இயன்றவரை பயின்றதன் விளைவே இம்மாநாட்டு மலர்!

நீயின்றி நடக்கும் முதல் பொது மாநாட்டு மலரை, நின் பொன்னடியில் வைக்கின்றோம்! 'குவியட்டும் வெற்றியென'க் குவித்திதழை வாழ்த்தண்ணா!

# காணிக்கை

திராவிட முன்னேற்றக் கழக ஐந்தாவது பொது மாநாட்டினையொட்டி, இந்தச் சிறப்பு மலரினை உங்கள் கரங்களில் தவழ விடுவதிலே 'கழகக் குரல்' பெருமை யடைகிறது!

'கழகக் குரல்' தொடங்கி ஒன்றரையாண்டே ஆகிறது என்றாலும், அது படைத்துள்ள சிறப்பு மலர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுப் பேழையாக அமைந்து -- அனைவரது பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது!

'கழகக் குரல்' நமது இலட்சியத்தின் குரல்—என்று தொடக்க இதழிலேயே நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனை ஒவ்வோர் இதழிலும் உறுதிப்படுத்தி வந்திருக்கிறோம்.

அந்த முறையில்தான் இந்த மலரினையும் உருவாக்கி -- ஓர் இலட்சிய மலராகவே படைத்துள்ளோம்!

இந்த மலரில் எழுதியுள்ளவர்களில் பலர் எழுத்தாளராக அறிமுகமானவர்கள் அல்லர்; ஆனால் அவர்களின் எழுத்தோவியங்கள் அனைவர் இதயத்தையும் தொடுவனவாக உள்ளன.

இயக்கத்தின் செயல் வீரர்கள்-பழம் பெரும் தொண்டர்களெல்லாம் மகிழும் வண்ணம் இன்றைய இளந்தலைமுறையினர் பல செய்திகளைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு, அவர்களின் கட்டுரைகள் அமைந்துள்ளன.

'கழகக் குரல்' என்றால், அது, நமது இயக்கத்தின் பழைய நிகழ்ச்சிகளை -- தகவல்களையெல்லாம் திரட்டி இக்கால இளைய தலைமுறையினருக்குத் தக்க வகையில் வழங்கும் சரித்திர ஏடு என்ற பெயர் ஏற்பட்டுவிட்டது!

அந்தப் பெயரை நிலைநாட்டும் வகையிலேயே இந்த மலரும் உருவாக்கப்பட்டது; இனியும் இதே முறையில்தான் பழைய 'புதையல்'களையெல்லாம் தோண்டித் தோண்டியெடுத்துத் தொன்மை விருந்து படைத்திடும் 'கழகக் குரல்'.

இம்மலரை உருவாக்கும் முயற்சி மிகக் குறுகிய காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டதால், திட்டமிட்டபடி எல்லாச் சிறப்புக்களையும் சேர்த்திட முடியவில்லை; பக்கங்களையும் கூடுதலாக்க இயலவில்லை.

எனினும், பக்கத்துக்குப் பக்கம் எழிற்கோலம் பூண்டு கருத்து மணம் கமழும் வகையில் இதனை ஆக்கியிருக்கிறோம் -- சுவைத்து மகிழுங்கள்!

இந்த எளிய இலட்சிய மலரை, நம் தோன்றாத் துணையாக என்றும் நம்மோடு இருந்துவரும் 'இதய தெய்வ'மாம் பேரறிஞர் அண்ணாவுக்குப் படைக்கிறோம்!

வாழ்க—அண்ணாவின் புகழ்!
வெல்க—கழக இலட்சியம்!

**சி. சிட்டிபாபு**
ஆசிரியர்

## நன்றி

இம்மலருக்கெனத் தங்கள் கைவசமிருந்த பழைய புகைப்படங்களையெல்லாம் கொடுத்துதவிய தோழர்களுக்கு 'கழகக் குரல்' தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

# சந்தனப் பேழைக்குள்
# கற்பூரப் பெட்டகம்





# கலைஞரின் கவிதாஞ்சலி



பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம் — அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்—அவர்
மலர்இதழ்கள் தமிழ்பேசும்—
மா,பலா, வாழையெனும்
முக்கனியும் தோற்றுவிடும் !

விழிமலர்கள் வேலாகும்—வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால் !
கால்மலர்கள் வாடிடினும் அவர் கடும்பயணம் நிற்காது
கைமலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை
அம்மலரே எதிரிகளை மன்னித்து
நெற்கதிர்போல் தலைநாணச் செய்துவிடும்.

மக்களாட்சி மலர்குலுங்க—
சமதர்மப் பூமணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்
நாடிவரும் பூமுடியே ! புகழ்முடியே ! உமைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே—தினம்
பாடிவரும் வண்டாக நான்பறப்பேன் !
உனைக்காக்க எனைத்துறப்பேன், என—
ஒருகோடித் தமிழ்இளைஞர்
பாடிநின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்......
முடுகிற் செறிந்த தமிழார்வம்
முதிரா இளைஞர் ஆருயிராய்ப்
பெருகச் செய்த செயல்மறவர்
சிறப்பைப் பாடக் கேண்மினோ !

தங்குகண் வேல்செய்த புண்களை
அன்பெனும் வேதுகொண் டொற்றியுஞ்
செங்கனிவாய் மருந்தூட்டுவார்
சீர்மையைப் பாடக் கேண்மினோ !

பொருதடக்கை வாளெங்கே ; மணிமார் பெங்கே ;
போர்முகத்தில் எவர்வரினும் புறங்கொ டாத
பருவயிரத் தோளெங்கே யெங்கே யென்று
தம்பியரைக் கேட்டானைக் கேண்மின் ! கேண்மின் !

காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
கலவி மடவீர் கழற்சென்னி
காஞ்சியிருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ என்று
மயல்கொண்ட மாதர்தமைத் துயில்எழுப்பச்
செயங்கொண்டார் பாடினார்,
களப்பரணி......கலிங்கத்துப் பரணி
அளப்பரிய வீரத்தின் புகழ்ப்பரணி—யான்
கவிப்பரணியேறிக் காஞ்சி புரப்பரணி பாடிநின்றேன்—இன்று
அவலப் பரணி—பாடுகின்றேன்.

கவியினில் பொருளெனக் கரும்பினில் சுவையெனக்
கதிரினில் ஒளியெனக் காவினில் மலரென
நிலவினில் குளிரென நிலமிசை வளமெனக்
குலவிடும் அருவி குழிறிடும் மொழியென
உலவிடும் காற்றில் ஏறிடும் இசையென
அலையெழுங் கடலில் ஆடிடும் நுரையெனக்
கலைமணங் கமழக் கூடிய கவிஞர்
தலைமகன் அண்ணா திருப்புகழ் பாடிட
நிலமகள் வடிக்கும் கண்ணீர் அந்தோ !
வெள்ளம் ! வெள்ளம் ! மாபெரும் வெள்ளம் !

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஏழாம் ஆண்டில்
தாயகத்தில் மொழிப்புரட்சி தோன்றுதற்கு
வித்திட்டார் சிலபேர் என்றால் ; ஈரோட்டு
நாயகத்தின் இணையில்லாத் தலைமை வீரர்
எங்களண்ணன் களம்புகுந்தார் காஞ்சிபூண்டு
இருமூன்று திங்கள்வரை சிறையில் வாடி
தரும்ஊன்று கோலாகத் தமிழைத் தந்து
அருமூன்று எழுத்தாலே அண்ணா வானார்......
அன்றொருநாள் ஐம்பத்தி ரெண்டதனில்
சென்னையிலே சொன்னேனே
நினைவுண்டா உங்களுக்கு ?

'மூன்றெழுத்திலே ஒருசிறப்புண்டு--முத்தமிழ் மணமுண்டு,
மூவேந்தர் முக்கொடி முக்கனியென
மும்முர சார்த்தவர் தமிழர்—அவர்வாழ்ந்த
தமிழ் 'வாழ்வு'க்கு மூன்றெழுத்து—அந்த
வாழ்வுக்கு அடிப்படையாம் 'அன்பு'க்கு மூன்றெழுத்து
அன்புக்குத் துணைநிற்கும் 'அறிவு'க்கு மூன்றெழுத்து ;
அறிவார்ந்தோர் இடையிலெழும் 'காத'லுக்கு மூன்றெழுத்து ;
காதலர்கள் போற்றிநின்ற கடும் 'வீரமே' மூன்றெழுத்து ;
வீரம் விளைக்கின்ற 'களம்' மூன்றெழுத்து ;
களம் சென்று காணுகின்ற 'வெற்றி' மூன்றெழுத்து ;
அந்த வெற்றிக்கு நமையெல்லாம் ஊக்குவிக்கும்
அமைதிமிகு 'அண்ணா' மூன்றெழுத்து --
அறிந்திடுவீர்' எனச் சொனனேன்

திக்கெட்டும் தமிழ்முழக்கம்
திசையெங்கும் சொன்மாரி
வக்கற்றோர் வகையற்றோர்
வாழ்வதற்குத் திட்டம் கோரி
வண்டாகச் சுற்றுகின்றார் மேடையேறி !
எழுதுகின்றார் அண்ணா
ஏடெல்லாம் வீடெல்லாம் தமிழ்
நாடெல்லாம் புதுமை மணக்குதங்கே......

"ஏடா தம்பி எடுடா பேனா"
எத்தனை உணர்ச்சி ! எத்தனை எழுச்சி !

கொள்கைக் கோமான்கள் கூடும்
கோவைப் பொது மாநாடு வெற்றி பெற
எங்கள் நல்வாழ்த்துக்கள் !



பட்டு சேலைகள் சூட்டிங் & சர்ட்டிங் பாவாடைதுணிகள் ரெடிமேடு ஆடைகள்

ஷோபா

கிளாத் சென்டர்

கோயமுத்தூர்......... போன் : 24364



''கத்தியைத் தீட்டாதே -- புத்தியைத் தீட்டு''
கருத்துப் பேழை கற்பூரப் பெட்டகம்!

''மரக்கிளையிலே பிணம்—வெந்த புண்ணிலே வேல்!''
மறந்திடப் போமோ; மனங்கவர் வாசகம்!

''சாலை யோரத்திலே வேலையற்றதுகள்
வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்;
வேந்தே! அதுதான் காலக்குறி.
அண்ணனுக்கன்றி யாருக்குவரும்
இந்த அழகுநடை? அறிவுநடை?

'கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது'
தமிழகம் மறவாத் தலையங்க மன்றோ?

'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்—
தம்பியுடையான் படைக்கஞ்சான்''
ஒப்பிலா வரிகள் உரைத்திடும் பனுவல்
மனோன்மணீயம் எனினும்—நம்
மனத்தில் பதித்தவர் அண்ணா வன்றோ!

''மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும்''
அரசியல் பண்பினைப் போதிக்கும் அழகே!

''மறப்போம்—மன்னிப்போம்''
மாற்றார் ஏசல் தாங்கிடும் மாண்பே!
எவர் கற்றுத் தந்தார் இதனை?

'சுவர் வைத்துச் சித்திரம் எழுதுதல்போல்
நயமிகு பண்புடன் அரசியல் நடாத்தல்
நன்றென்றார்' அண்ணா—அதைமறுத்து,
நாலைந்து பேர் குதித்திட்டார் என்றால்
அவர்கண்டு சிரித்திட்டார் அண்ணா!

'அனைவரையும் ஓர்அன்னை பெற்றெடுக்க
வயிறு தாங்காக் காரணத்தால்
தனித்தனித்தாய் ஈன்றெடுத்த தம்பிகளே' எனஅழைத்து
கனிச்சுவையாய்க் கற்கண்டாய்த்
தேன்பாகாய் அன்புகாட்டிப்
பனிமலர்வீழ் தும்பியதாய்த் தழுவிக் கொண்டார்

சொலல்வல்லார் சேதுப்பிள்ளைதனைச்
சோமசுந்தர பாரதியைச் சொற்போரில்
சொக்க வைத்தார்—பாவம்; சிக்கவைத்தார்!

நீதிக் கட்சியென்று நெடியமதில் சுவருக்குள்ளே—பணச்
சாதிக்குக் கட்சியாய் இருத்த லாகாதெனும்
கொள்கையாலே—அதனை
வீதிக்குக் கொண்டு வந்தார்!
'வீசிடுக வெள்ளையர்கள் பட்டத்தை' யென்று
சேலத்து மாநாட்டில் தீர்மானம் போட்டு விட்டார்!
—அண்ணாவின் போர்க்
கோலத்தை எதிர்க்க மாட்டாமல்
கோலற்ற குருடர்போலக் கொள்கையற்றோர் வீழ்ந்துபோனார்
தீரர் அண்ணா திராவிடர் கழகமெனும்
பெயர்மாற்றத் தீர்மானம்—
வீரர் கூடிய மாநாட்டில் கொண்டு வந்தார்

அண்ணல் காந்தியார் அறவழி கண்டு
ஆங்கில ஆட்சியை அகற்றிய போது
துன்ப நாளெனும் பெரியார் அறிக்கையை மறுத்துத்
தொடங்கினார் போரை—
'இன்ப நாளிது -- இனிய நாளிது;
என்பு தோலாய் ஆன இந்தியர்
அன்புறு காந்தியின் அருளால் இன்று
எழுந்தனர் அடிமைத் தளையினை அறுத்து
முழங்குவோம் விடுதலை முரசினை எடுத்து'—
என்றே அண்ணா அன்றே சொன்னார்!

அன்றுமுதல் அண்ணன்—அய்யா உறவினிலே கீறல்விழ
அதுநாற்பத் தொன்பதாம் ஆண்டினிலே பிரிவாய் மாறி
முகில்கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியாய்
முன்னேற்றக் கழகத்தை முகிழ்க்கச் செய்தார்!

தலைவருடன் கூடிவாழ முடியாமல்
பெரும்பான்மைத் தோழருடன்
வெளியே வந்தும்,
நிலைகுலையா நம்அண்ணன் அன்று சொன்னார்—
அது,
நேற்று சொன்னதுபோல் இருக்குதம்மா!

'தலைவரில்லை முன்னேற்றக் கழகத்துக்கு—என்
தலைவர் இருந்த நாற்காலி காலியாக இருக்கும்—அதில்
தலைவர் அவர் என்றேனும் வந்தமர்வார்;
அதுவரையில் காத்திருப்பேன்' என்றார்!

பூத்திருக்கும் மலர்த்தோட்டம்
காலைப் பனிநீர் வடிப்பதுபோல்
காத்திருந்து கூட்டம் கேட்டோர்
கண்ணீர் வடித்தார்!
'கண்ணீர்த் துளிகளே -- நாட்டின் கண்மணிகளே'
என அழைத்து;
செந்நீர் சிந்துதற்கு அணிவகுத்தார்!

பாரேனும் பகர்ந்ததுண்டா?
யாரேனும் கேட்டதுண்டா?
பதினெட்டு ஆண்டுக்குள் ஓர்இயக்கம்
பதுங்கிப் பாயும் வேங்கையெனப்—
பாராள வந்தகதை?

ஈராண்டு முடியவில்லை எம்அண்ணா ஆட்சியேற்று
சீரார்ந்த செயல்பலவும் செய்தலுற்றார்;

ஏரார்ந்த உழவர்கெல்லாம் ஏற்றம் தந்து
எழில்வாழ்வு குவிப்பதற்கு எடுத்தார் முயற்சி;
உலகத் தமிழ்மாநாடு துவக்க வந்த
ஓங்குபுகழ்க் குடியரசுத் தலைவரவர்,
'இணையற்ற காட்சி கண்டேன் - மாட்சி கண்டேன்;
இதுபோல வாழ்வில் என்றும் கண்டதில்லை' என,
ஊர்மெச்சப் புகழ்ந்துரைத்தார் அண்ணன் கீர்த்தி;

ஆந்திரத்துப் பிருமானந்த ரெட்டிகாரும்
'ஆகா -- நீதானே அசல்காந்திய வாதி'யென்று
ஆராதனை செய்திட்டார் – ஆண்டொன்று கழியவில்லை!
'மதுவிலக்கைத் தீவிரமாய் ஆக்குகின்றீர்—பல
மாநிலத்தில் கைகழுவிக்
    கலயம் கட்டிவிட்டார் மரங்களிலே;
மகாத்மாவின் தோன்றல் நீர்தான்' என்று;
கிரியென்றால் மலையன்றோ—அந்த
மலைதழுவும் முகிலானார் நம் அண்ணா—
வி. வி. கிரி தந்த வாழ்த்துக்கு விளக்கமிது!

பன்னாட்டுப் பேரறிஞர் வாழ்த்தி நின்றார்—அன்று
தென்னாட்டுச் சிகரமாக இருந்திட்டோர்—
அண்ணன்பற்றி என்னசொன்னார்......
பழந்தமிழ் வித்தகர் பல்லாவரத்தார்—அண்ணா
பழத்தமிழ்ப் பேச்சால் மயங்கி நின்றார்—அந்த
மறைமலை தந்த புகழ்மொழி ஆயிரம்!
பசுமலை பாரதி—பாண்டியன் தோற்றம்— அவரை
'நாவலர்' என்று நாடே அழைக்கும்; அவர்,
'சழக்கரால் வீழ்ந்த தமிழ்நிலம் காக்க—மன
அழுக்கிலாத் தலைவன் கிடைத்தான்' என்றே
அண்ணன் பெருமை சொன்னார் அன்று!

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்றுபோல
இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை
நூறாயிரம் கோடிஎன ஆண்டுபல வாழ்வதற்கு
நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள்; எனினும்,
கலைமகளாம் நம்அன்னை வள்ளுவனைத்
தலைமகனாய்ப் பெற்றெடுத்தாள்!

மலர்என்றால் தாமரைதான்
மன்னன் என்றால் கரிகாலன்
நூல்என்றால் திருக்குறளே
எனப்போற்றும் அறப்பனுவல்
அளித்திட்டான்—மாந்தரெல்லாம் களித்திட்டார்!

விண்முட்டும் மலையோரம்— நம்
கண்பட்டும் பாடலும் எழுகின்ற நச்சுமரம்போல
பண்பட்ட தமிழர் வாழ்வில் —முதுகில்
புண்பட்ட கொள்கையெல்லாம் மூண்டதந்தோ
சாதிகளைக் காணாது குறள்ஒலித்த தமிழ்மண்ணில்
பாதியிலே வந்ததம்மா பலகோடி சாதிகளும்!
அறிவுமணங் கமழுகின்ற ஆலயங்கள் அற்றுப்போய்
ஆயிரம் தெய்வங்கள் உறைகின்ற கோயில்கள்
    கண்டுவிட்டார்.

மொழியுணர்வே இல்லாத
    வாயுணர்வின் மாக்கள்—தமிழ்
அழியினும் வாழினும்என் னென்று
    இருந்திட்டார்;
அறநெறியே குறிக்கோளாய்த்
    திகழ்ந்திட்ட பெருநிலத்தில்
பிறநெறிகள் பயிர்செய்தார் பிழைகுவித்தார்!

மழையற்றுப்போன வயல்போல
    மாறிற்றுத் தமிழர்மனம்;
அழுக்காறு -- அவா -- வெகுளி -- இன்னாச்சொல் நான்குமின்றி
நடக்காது வேலையென்று நடந்திட்டார் சில தமிழர்;

பொருளிலார்க்கு இவ்வுலக மில்லையென்று
பொருள்குவித்து வளம்செழித்த நாட்டில்—இன்று
இருள்கவிந்து வாட்டம் கொடிபோட்டதங்கே!
வாடினாள் தமிழன்னை—சோகப் பாட்டுப்
பாடினாள் தமிழன்னை—சுடுநெருப்பில்
ஆடினாள் தமிழன்னை—
ஓடினாள் ஓடினாள்
ஒருவழியும் கிடைக்கவில்லை;

புவியூர் விட்டுப் புகழூரில் வாழ்கின்றான்
கவியூரின் பெருவேந்தன் குறளாசான்
ஆண்டு சென்று; 'அருமை மகனே
வேண்டுகோள் ஒன்று விடுத்தேன்' என்றாள்!

'என்னம்மா' என்றான் குறளோன்!
'தோண்டுகின்ற இடமெல்லாம் தங்கம் வரும் தமிழகத்தில்
மீண்டும்நீ பிறந்திட வேண்டும்' என்றாள்;

'தங்கம் எடுக்கவா' என்றான்;
தமிழர்மனம் வாழ்வெல்லாம்
தங்கமாக ஆக்க' என்றாள்.
'இன்றென்ன ஆயிற்'றென்றான்.
'குன்றனைய மொழிக்கு ஆபத்'தென்றாள்;
'சென்றடையக் குடிலில்லை ஏழை'க் கென்றாள்;
'கடிதோச்சி மெல்ல எறியத் தெரியாமல்
கொன்றெறியும் கோல்ஓங்கி'ற் றென்றான்; அறிவில்—
கன்றனையோர் வீணில் கதைக்கின்ற
    கதையும் சொன்னாள்!

அழுத கண்ணைத் துடைத்தவாறு
அமுதமொழி வள்ளுவனும்,
'அம்மாநான் எங்கே பிறப்ப' தென்றான்!

தொழுதமகன் உச்சி மோந்து— ஆல
விழுதனைய கைகளாலே அணைத்துக்கொண்டு
'உழுதவயல் நாற்றின்றிக் காயாது
    இனிமேலே' எனமகிழும்
உழவன்போல் உள்ளமெலாம் பூரிப்புத் துள்ளிஎழ,
'காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி வார்த்திடவே
கற்கண்டே -- தேன்பாகே -- திருக்குறளே --
    நீ காஞ்சியிலே பிறந்திடுக' என்றாள!

பிறந்திட்டான் நம் அண்ணா னாக;
அறிவு மன்னனாக—
பொதிகை மலைத்தென்றலாய்
போதாகி மலர்கின்ற தமிழ்உணர்வின் புதுமணமாய்
பதிகத்துப் பொருளாய்ப்
பழந்தமிழர்ப் புறப்பட்டாய்
வந்துதித்தான் அண்ணன்—கீழ்
வானுதித்த கதிர்போல—
புரியாதார்க்கு ஒருபுதிர் போல—
அவன்புகழைப் பாடுதற்கு
அவன்வளர்த்த தம்பி நானும்
அவன்தந்த தமிழ்எடுத்து
இவண்வந்தேன்; இதுதான் உண்மை;

தலைவரென்பார் -- தத்துவ மேதை என்பார்;
நடிகர் என்பார் -- நாடக வேந்தர் என்பார்;
சொல்லாற்றல் சுவைமிக்க
    எழுத்தாற்றல் பெற்றார் என்பார்;
மனிதரென்பார் -- மாணிக்க மென்பார் --
    மாநிலத்து அமைச்ச ரென்பார்;
அன்னை யென்பார் -- அருள்மொழிக் காவல் என்பார்;
அரசியல்வாதி என்பார்—அத்தனையும்
    தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர்
    நெஞ்சத்து அன்பாலே,
'அண்ணா' என்ற ஒருசொல்லால்
அழைக்கட்டும் என்றே—அவர்அன்னை
பெயரும் தந்தார்!

அந்த அன்னை குலம் போற்றுதற்கு
ஔவைக்கோர் சிலை
அறம் வளர்த்த கண்ணகிக்கோர் சிலை
வளையாத நெஞ்சப் பாரதிக்கும் --
வணங்காமுடிப் பாரதி தாசருக்கும் சிலை
வீரமா முனிவருக்கும் சிலை
கால்டுவெல் போப்புக்கும் சிலை -- கம்பர்க்கும் சிலை
தீரமாய்க் கப்பலோட்டிய தமிழர்க்கும் சிலை
திக்கெட்டும் குரல்பரப்பத் திருவள்ளுவர்க்கும் சிலை
பத்துச்சிலை வைத்ததனால்—அண்ணன்
    தமிழன்பால் வைத்துள்ள
பற்றுதலை உலகறிய—
அந்த அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது,

ஆட்காட்டி விரல்மட்டும் காட்டி நின்றார்......
'ஆணையிடுகிறார் எம்அண்ணா' என்றிருந்தோம்;
அய்யகோ; 'இன்னும்
ஓராண்டே வாழப்போகிறேன்' என்றுஅவர்
ஓர்விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!
எம்அண்ணா......இதயமன்னா......
படைக்கஞ்சாத் தம்பியுண்டென்று
பகர்ந்தாயே;
எமைவிடுத்துப் பெரும் பயணத்தை ஏன்தொடர்ந்தாய்?

உன்கண்ணொளியின் கதகதப்பிலே வளர்ந்தோமே;
எம்கண்ணெல்லாம் குளமாக ஏன்மாற்றி விட்டாய்?
'நிழல்நீதான்' என்றிருந்தோம்; நீ. கடல்
நிலத்துக்குள் நிழல்தேடப் போய்விட்டாய்--நியாயந்தானா?
'கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம் முத்தல்ல;
நான்தானடா நன்முத்து' எனச்சொல்லி,
கடற்கரையில் உறங்குதியோ?

நாத இசை கொட்டுகின்ற
நாவையேன் சுருட்டிக் கொண்டாய்?
விரல்அசைத்து எழுத்துலகில்
விந்தைகளைச் செய்தாயே; அந்த
விரலையேன் மடக்கிக் கொண்டாய்?
கண்மூடிக்கொண்டு நீ சிந்திக்கும்
பேரழகைப் பார்த்துள்ளேன்;
இன்று மண்மூடிக் கொண்டுன்னைப் பார்க்காமல்
தடுப்பதென்ன கொடுமை,
கொடுமைக்கு முடிவுகண்டாய்; எமைக்
கொடுமைக்கு ஆளாக்கி ஏன்சென்றாய்?

'எதையும் தாங்கும் இதயம் வேண்டு'மென்றாய்
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?
கடற்கரையில் காற்று
வாங்கியது போதும் அண்ணா;
எழுந்து வா எம்அண்ணா......

வரமாட்டாய்—வரமாட்டாய்;
இயற்கையின்சதி எமக்குத் தெரியும் அண்ணா—நீ
இருக்குமிடந் தேடி யான் வரும்வரையில்
இரவலாக உன்இதயத்தைத் தந்திடண்ணா;
நான்வரும்போது கையோடு கொணர்ந்து அஃதை
உன்கால் மலரில் வைப்பேன் அண்ணா!

★

# நமது குடும்பம்

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் நாம், ஒரு குடும்பத்தில் இருப்பவர்களைப் போலப் பழகி விட்டோம்; பாசமும் நேசமும் நம்மை ஒன்ருகப் பிணைத்தது போல, வேறெதுவும் செய்ததில்லை!

சொந்த வாழ்வில் நமக்கு எவ்வளவு துயர்களும் -- துன்பங்களும் வந்தபோதிலும், பொது வாழ்வில் -- நமது கழகத்தில் கிடைத்த தோழமை எனும் மருந்து அவற்றையெல்லாம் ஆற்றி வந்தது!



மாநாடோ -- பொதுக் குழுவோ நடக்கப் போகிறதென்ருல், ஏதோ நம் குடும்பத்தில் நடக்கவிருக்கும் விழாவாக—மகிழ்ச்சி தரும் நன்னுளாக எண்ணியே ஒவ்வொருவரும் பூரிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றினுர்கள்; அவர்களுடைய அன்பு கலந்த அழைப்பே, வருவோருக்கே ஒளி வீசிடும் வரவேற்பு வளையமாயிற்று! மகிழ்ச்சி தரும் முகமே எழுதவொண்ணுத வரவேற்பு இதழாயிற்று! ஆர்வ மொழியே தெவிட்டாத அமுதாயிற்று! ஒவ்வொரு மாநாடும், குடும்பத்தினர் கூடிப் பிரியும் இடமாக இருந்தது!

நம் குடும்பத்திலே நிலவிய பாசம்தான், ஏசலும் பூசலும்—ஏளனமும் கேலியும் நம்மைத் தாக்கிய நேரங்களில், நம்மை நிலை கலங்கச் செய்யாதிருந்தது!

"ஏசுவோர் சிலர்—நம்மை நேசிப்போர் பலர் இருக்கின்றனர்" என்ற எண்ணம், மற்ற இழிமொழிகளையும்--பழிச் சொற்களையும் தாங்கிக் கொள்ளச் செய்தது!

அந்தக் குடும்பப் பாசம்தான், வேதனைப்பட்ட நிலையிலும் -- கலங்கி நின்ற நேரத்திலும் நமது வேதனையைத் தணித்துக் கலக்கத்தை நீக்கிக் காரியமாற்றும் திறமையைத் தந்தது!

அத்தகைய குடும்பப் பாசமும் -- நேசமும் நம்மிடையே நிலவியதால்தான் மிகக் குறுகிய கால அளவில், கட்டுப்பாடும் -- கண்ணியமும் மிக்க, மிகப் பெரும் கட்சி அமைப்பை நாம் உண்டாக்கிவிட முடிந்தது!

மற்றக் கட்சிகளில் இருப்பதுபோல், 'தலைமைப் பீடம்' என்ற ஒரு விசாரணைக்கூடமோ — பழி வாங்கும் பலி பீடமோ இங்கு இல்லாது போயிற்று!

மற்றவர்கள் துடிதுடிப்புடனும் -- ஆவேசத்துடனும் தரும் கட்டளைகளுக்குப் புன்முறுவலுடன் பதில் தந்து சாந்தப்படுத்த வேண்டிய நிலையில் இயக்கத் தலைவர்கள் இருந்தனரேயொழிய, 'இதோ -- புதிய கட்டளை; ஏற்றுக் கொண்டு செய்; இல்லையானுல் வெளியேறு' என்று எப்பொழுதும் சொல்லியதில்லை!

**கழகப் பொதுச் செயலாளர்**

## டாக்டர் நாவலர்

நமது குடும்பத்தில் குமுறல் கிடையாது--விம்முதல் கிடையாது!

தம்பி பென்சில் கேட்டு அண்ணன் உடனே வாங்கித் தரா விட்டால் தம்பிக்குக் கோபம் வருவதைப் போல, 'எங்கள் ஊருக்குக் கூப்பிட்டேன்--வரவில்லை' எனக் கோபப்படும் தம்பிமார்கள் உண்டு; அந்தக் கோபம், பேச்சிலே படபடப்பைக் காட்டும்; ஆனுல், இதயத்தில் குமுறலை உண்டாக்குவதில்லை!

அன்பிலே எழுந்த மறுப்பு--ஆர்வத்திலே உண்டான கோபம் -- இது, பாசத்தை நம்மிடம் அதிகமாக வளர்த்தது!

தம்பிமார்களாகிய நாம், பல தடவைகளில் அறிந்தோ அறியாமலோ, அண்ணன்மார்களுக்குக் கோபத்தைத் தந்திருப்போம்; அவர்களும் பல தடவைகள் வருத்தப்பட்டும்--சில சமயங்களில் கோபப்பட்டும் இருப்பார்கள்; ஆனுல், இவை நமது பாசத்தை முறித்ததில்லை--நேசத்தை அழித்ததில்லை; காரணம், நமது உள்ளத்தில் கள்ளம் இருந்ததில்லை! இதயத்தை மறந்து நாம் எதுவும் செய்ததில்லை!

இயக்கம் தொடங்கியபோது, நமக்கென்று கூற ஏதும் இருந்ததில்லை; உழைப்பும் வியர்வையும்தான் நமக்கு இருந்தவை; குடியிருந்த இடத்திலிருந்து நாம் எதையும் நம்முடன் எடுத்து வரவில்லை—கண்ணியத்தையும், தன்மதிப்பையும் தவிர!

பிரிந்து வந்த நாம் சிதறி விடவில்லை; நமது குடும்பம் மறைந்து விடவில்லை; வாழ்வதற்குப் புது வீடு உண்டாக்குவதில் கவனஞ் செலுத்திஞேம்; கால்கோள் காணப்பட்டது; அடிப்படை தோண்டப்பட்டது; கல்லும் முள்ளும் நிறைந்த கொல்லையைப் பண்படுத்த வேண்டிய பணியும் நம் முன் இருந்தது!

நமது வேலை பயன் தராதெனக் கூறிஞேரும் உண்டு! எள்ளி நகையாடி ஏளனம் செய்தோரும் உண்டு!

நாம் புது வீடு கட்டும்பொழுது மற்றவர்கள் நம்மீது வீசிய ஏளனத்தையும், கேலியையும் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டியிருந்தது.

ஏளனத்துக்கு ஏளனம்--கேலிக்குக் கேலி என்று பேசிக் கொண்டிருந்தால், நமது வேலை தடைப்பட்டிருக்கும் -- வளர்ச்சி குன்றியிருக்கும் !

வரண்டு கிடந்த இடத்தில், நமது குடும்பம் வாழ்வதற்கு ஒரு வீட்டை அமைத்தோம்! பக்கத்தில் வாச மலர்த் தோட்டத்தை உண்டாக்கினோம் !

''போகிற நேரம் தவறானது--புகுந்த இடம் பொல்லாதது'' என்று நம்மைப் பயமுறுத்தினார்களே—அது பொய்யாக்கப்பட்டது!

போன இடம் பொன்னான இடமாக—வேலை துவங்கிய நாள் ஒரு நன்னாளாக ஆயிற்று !

நமது குடும்பம் தழைத்தது--குடும்பப் பெயர் விளங்கியது !

'வீழ்ந்தது' எனக் கருதப்பட்ட குடும்பம் எழுந்தது கண்டு ஆச்சரியப்பட்டனர் !

வெற்று இடத்தில் புது வீடு; நமது முயற்சி, வெற்றிக் கொடியுடன் நிற்பது கண்டு பலர் ஆச்சரியப்பட்டனர்--சிலர் பொறாமைப் பட்டனர் !

விலைக்கு வந்தால் வீட்டை வாங்கச் சிலர் காத்திருந்தனர் !

''கடன் கொடுத்துப் பார்ப்போம்; பின், குடும்பம் முழுகிய பின் ஏலத்தில் வீட்டை எடுத்து விடலாம்'' எனச் சிலர் கருதினர் !

அரசியல் செல்வந்தர்களிடம் நாம் நமது வீட்டை விற்க வேண்டிய நிலை என்றுமே பிறக்காது! கடன் வாங்கிக் காலந் தள்ள வேண்டிய கட்டத்திலும் நாம் இல்லை!

தோட்டத்தில் மல்லிகை மணம் வீசிய நேரத்தில், பறித்துக் கொள்ள நினைத்துக் கொண்டோர் சிலர் !

அத்தகைய சூது நடைபெறாவண்ணம் தடுத்த வேலியும்--காவலும் கண்டு ஆயாசமடைந்தனர் — 'ஆகாது இந்தக் காவல்' என்று முறையிட்டனர் !

நமது வாசற்படியில் வந்து, முறைமையுடன் உள்ளே வருவோருக்கு மலர்ச் செண்டு தருவோம்; ஆனால், 'வேலி தாண்டி மலரை எடுத்துச் செல்லலாம்' என்று யாராவது நினைத்தால், நிச்சயமாக அதில் முள் பட்டு -- கீறலும் வேதனையும் உண்டாகுமே தவிர, மலர் கிடைக்காது !

வியர்வையை வேரிலே விட்டு--பெருமூச்சைக் காற்றாக்கிச் செடியை வளர்த்தவர்கள்; அவர்களுக்கு மலரின் மணமும் தெரியும் --அதன் பயனும் தெரியும் !

நமது குடும்பம், புது வீட்டிலே; தூற்றலுக்கும் கொடுமைச் சாரலுக்கும் இடந்தராத--ஒளியைத் தடுக்கும் வாயில்களில்லாத—உள்ளே நுழையும்பொழுது மண்டையில் அடித்து வரவேற்கும் நிலைப் படி இல்லாத—கட்டி முடித்த அண்ணன்களில் ஒருவர் உருவத்தில் சற்றுக் குறைந்த உயரமெனினும் உள்ளத்தால் உயர்ந்தவராதலால், உயர்ந்த உள்ளம் படைத்தோர் எவரையும் மட்டுப்படுத்தாத வாயில் நமது வீட்டுக்கு அமைந்தது !

இரகசிய அறைகள் இல்லாத—மந்திர மாடம் இல்லாத—பூஜைக்கூடம் இல்லாத—அந்தப் புதிய வீட்டில் நாம் இருக்கிறோம் !

அங்கு ஒளி வீசிச் செல்கிறது ! தென்றல் தவழ்ந்து வருகிறது!

அது, நாட்டு அறிவின் அகமாக—நமது அன்பின் இடமாக விளங்குகிறது !

ஊராரின் கேலி--உற்றாரின் ஏளனம்--பகைமையின் எதிர்ப்பு--பங்காளியின் காய்ச்சல் எதுவும் நம்மைப் பிரிக்கவில்லை !

நமது பாசம் வளர்ந்தது -- நமது குடும்பம் வளர்ந்தது !

ஊராள்வோரின் அடக்குமுறையும், மாற்றுக் கட்சியினரின் கொடுமையும் நம்மீது பாய்ச்சப்பட்டபொழுது, குடும்பப் பாசம் நம்மையெல்லாம் ஒன்றாகக் கட்டிக் காத்தது !

கொள்கை நம்மை ஒன்றுகூடச் செய்தது ! பாசமும் நேசமும் நம்மை ஒருவரோடொருவர் கைகோர்த்து -- ஒன்றாகச் நிற்கச் செய்தன !

உறுதியான கொள்கை—பண்புமிக்க பாசம்—இவற்றால் கட்டப்பட்டு சேர்ந்து வாழ்கிறோம் !

விலகி நிற்கும் விரல்கள், தண்ணீரைக்கூடச் சேந்தி எடுக்க முடியாது ; ஆனால் ஒன்றுபட்டு மடக்கப்பட்ட விரல்கள், கல்லைத் தாக்கும் அளவுக்கு வலிவு பெறுகின்றன ! அத்தகைய வலிவு -- ஒன்றுபட்ட தன்மை -- குடும்பப் பாசத்தினால் வருகிறது !

# புதுமை கண்ட நன்னாளில்...

நமது குடும்பம்—அது புதுமை கண்ட நன்னாள் ! அதை முழுப் பொலிவுடன் கொண்டாடும் வாய்ப்பு நமக்கு ஒரு சமயம் இல்லாமற் போயிற்று! குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிதறிக்கிடந்தனர்--சிறைச்சாலைகளில் !

புதுமை கண்ட அந்த நன்னாளில் நமது குடும்பத்தினர் பலர், குண்டடி பட்டும்--தடியடி தாங்கியும்--படுகாயமுற்றும் மருத்துவ மனையில் கிடந்தனர்--அதில் ஆறுபேர் இறந்தும் விட்டனர் !

இந்த நினைவுகள்--இந்த நன்னாளில், நாம் கொள்ள வேண்டிய குதூகலத்தை மட்டுப்படுத்துகிறது !

'வாழ்த்துப் பா'க்களைப் பார்க்க வேண்டிய நேரத்தில், அந்தப் பட்டியல்களையெல்லாம் நினைவில் கொள்ள வேண்டியிருக்கிறது !

அந்த நேரத்தில், 'குற்றவாளிகள்' எனத் தண்டிக்கப்பட்டனர் பலர்; அதனால், நமது குடும்பத்துக்குத் தலையிறக்கம் எதும் ஏற்படவில்லை ; இதனையும் நமது கவனத்தில் இன்று நாம் கொள்ளுகிறோம் !

நோயினால் செத்த மகனைக் கண்டு புலம்பிடும் தாய், 'நாட்டைக் காக்கும் வீரப் போரில் மகன் மாண்டான்' என்று கேள்விப்பட்டால் களிப்படைவாள்' என்று படிக்கிறோம்; அது போல், உரிமைப் போராட்டத்தில்—தாயகத்தின் விடுதலைப் போரில் கலந்துகொள்ள எண்ணற்ற வீரர்களை -- இளங்காளைகளை -- குடும்பத்துச் செல்வங்களை -- குலவிளக்குகளை அந்த நாளில் அனுப்பியிருந்தது இந்தக் குடும்பம் ; களத்தில் அவர்கள் காட்டிய வீரம் கண்டு மகிழ்வடைந்தது— குடும்பத்தின் நற்பெயர் காப்பாற்றப்பட்டது' கேட்டு கவலைவிட்டது; இவை அனைத்தையும் இன்று நாம் எண்ணிப் பார்க்கிறோம் !

''எங்கள் குடும்பம் பெரிது'' என்று கூறிப் பெருமைப்படும் பொழுது, அதனால் நமக்குள்ள பெரும் பொறுப்புக்களை நாம் மறந்துவிடக் கூடாது !

தோட்டத்தில் செடிகள் உலர்ந்து போகாமல் தண்ணீர் விட்டு வரவேண்டும். மலர்ந்த பூச்கள் பறிபோகாமல் பாதுகாக்க வேண்டும் !

கடுமையான எதிர்ப்பு நம்மீது வீசப்படும் நேரத்தில், நாட்டின் உரிமைகளைக் காக்க -- நமது குடும்பத்தின் நற்பெயரைக் காக்க -- நாம் போராடி நிற்போம் -- கண்ணியத்தை இழவாமல், பாசத்தையும் நேசத்தையும் மறவாமல் !

★



# நிதி சேர்த்த நிதி!

"பதினோர் இலட்சம் ரூபாயைத் தம்பி கருணாநிதி என்னிடம் தந்தார்.

அண்ணனிடம் தம்பி தருவது சிறுகச் சிறுகத் திருப்பப் பெறத்தானே அல்லாது, அண்ணனிடமே தங்கிவிட அல்ல !

தம்பி கருணாநிதி பேசும்போது அவர், அந்தத் தொகையைத் தன்னால் சேர்க்க முடியுமா என்று என் விழிகள் வியப்பால் விரிந்ததாகக் கூறினார்.

தம்பி ! உனக்கு 'நிதி' என்று பெயரிட்டார்களே உன் தாயார் -- சும்மாவா இட்டார்கள் ?

தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பொருள் உள்ளவை என்பதில், நான் அசையாத நம்பிக்கை கொண்டவன் ; உன் தாயார் உனக்கு 'நிதி' என்று பெயரிட்டதே, 'உன்னை நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும்' என்று தான் ! இன்றைக்கு அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால், 'உனக்கு இட்ட பெயர் வீணாகிடவில்லை' என்று உன் தாயார் மகிழ்ச்சியடைவார் !

ரூ. 10 இலட்சம் கேட்டதற்கு, நீ, பதினோர் இலட்சம் கொடுத்திருக்கிறாய் !

ஆனால், மக்கள் மட்டும் சிக்க வேண்டிய நேரத்தில் உன்னிடத்தில் சிக்கி இருந்தால், நீ இன்னமும் அதிகம் சேர்த்திருப்பாய் !"

—அறிஞர் அண்ணா

(விருகம்பாக்கம் 4-ஆவது பொது மாநாட்டில்)

# நியாயத்தின் பக்கம் நிற்பவர்!

"கொடிய நில நடுக்கந்தான் விளைந்ததுவோ—புயல் வெள்ளம் விளைத்ததுதான் இந்த அழிவோ—எரிமலை வெடித்துக் குமுறியதோ—வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் வீரத் தோள்கள் எல்லாம் வெற்றுத் தோளாயினவோ—இனி பேச்சு எழுமோ, மூச்சுந்தான் செயல்படுமோ—ஏக்கந்தான் இனி ஆளுமோ—இத்துயர் என்றுதான் மாளுமோ?—இனித் தமிழகந்தான் மீளுமோ?" என்று ஆடவரும் பெண்டிரும் ஏங்குமாறு, அத்தனை மக்கள் உரையிலும் நினைவிலும், உள்ளத்திலும் ஒளியாக நிறைந்திருந்த அறிஞர் அண்ணா ஓய்வு கொண்டுவிட்டார்!

ஓர் ஆற்றல்மிக்க சொற்பொழிவாளரோ—திறன்மிக்க எழுத்தாளரோ—ஒரு தன்னிகரற்ற நடிகரோ—அன்றி ஓர் அரசியல் தலைவரோ—யாவரேயாயினும், இந்தத் தனி நிலையை -- மக்கள் உள்ளத்தில் அண்ணா பெற்றிருந்த ஒப்பற்ற இடத்தைப் பெறுதல் இயலாததாகும்!

இத்தகு ஆற்றல் அனைத்தும் அறிஞர் அண்ணாவிடம் திரண்டிருந்தன என்பதால் மட்டும் இந்தப் பெருநிலை வாய்த்தது என்று துணிதல் இயலாது!

அவரது ஆற்றல்கள் நாளும் வளர்ந்து—மக்களிடையே தனிச் செல்வாக்கை வளர்த்து—மக்கள் பேராதரவு பெருகி—ஒரு தலைவராக அரசியல் படிக்கட்டின் உச்சியில் ஏறி—தமிழகத்தின் மாண்பு

கழகப் பொருளாளர்

## பேராசிரியர்

மிகு முதல் அமைச்சராக அமர்ந்திருந்த தகைமையாலேயே மக்களின் உள்ளக் கோயிலில் அண்ணாவுக்கு இந்த வழிபாடு கிடைத்ததென்றும் கொள்ள இயலாது!

நாளுக்கு நாள் மக்கள் அவரை அறியவும், அவர் கருத்தை ஏற்கவும், ஆதரித்துப் பாராட்டிப் போற்றவும், அவரது அறிவு -- ஆற்றல் -- உழைப்பு -- திறமை -- தொண்டு -- தலைமை ஆகியவை துணையாயின; எனினும், அவரது இயல்பும் பண்பும், கனிவும் சால்புமே மக்களின் அன்புத் தெய்வமாக அவரை உயர்த்தின என்பது கருதற்பாலது!

அன்பின் திருவுருவம்—அடக்கத்தின் பிறப்பிடம்—ஆர்வக் கொள்கலம்—இரக்கத்தின் விளைநிலம்—பொறுமையின் சிகரம்—பண்பின் பெட்டகம் என்றெல்லாம் போற்றுதற்குரிய சிறப்பியல்புகள், அவரது வாழ்க்கையில் மெல்லப் பயின்று அவரிடம் படிந்தவையாகும்!

அண்ணா அவர்கள் எளிய குடும்பத்தில் பிறந்து ஏழ்மையை நுகர்ந்தவர்! பிற்பட்ட சமூக மக்களிடையே வளர்ந்து -- அவர்தம் துன்பத்தில் பங்கு கொண்டவர்! உழைப்பாளிகளுடன் கலந்து நின்று அவர்தம் ஏக்கத்தை உணர்ந்தவர்! இதனால், தம்மைச் சூழ்ந்துள்ளவர்களிடமும் -- நாட்டு மக்களிடமும் பரிவும் பற்றும் பிறந்தன!

குழந்தைப் பருவத்திலேயே அச்சங் கலந்த அடக்கமும்-- கட்டுப்பட்டுச் செயற்படும் இயல்பும், எதனையும் கூர்ந்து நோக்கி அறியும் திறனும் அவரிடம் அரும்பின!

பள்ளிப் பருவத்தில் கல்வியில் நாட்டமும், பிறரை மதிக்கும் இயல்பும், பலரொடும் நட்புப் பாராட்டும் மனமும் அவரிடம் முகிழ்த்தன!

கல்லூரி நாட்களில், பல்வேறு திறப்பட்ட அறிவு ஏடுகளில் ஆர்வமும், நூல் நிலையங்களையே நாடிப் பயிலும் வேட்கையும், ஆழ்ந்த சிந்தனையும், ஆராய்ந்து உண்மை காணும் திறனும் அவரிடம் மலர்ந்தன!

ஆசிரியப் பணியாற்ற முற்பட்டுப் பொதுப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டது முதல் இளையோரை ஊக்குவித்தலும், எளியோருக்குத் துணை நிற்றலும், பெரியோரை மதித்தலும், தக்கோரைப் போற்றுதலும், மாற்றாரை இகழாமையும் அவரிடம் வளர்ந்தன!

பேரறிஞர் அண்ணா அவர்கள், எந்நிலையிலும்-- எந்த நேரத்திலும் நியாயத்தின் பக்கமே நின்றார் என்பதற்குச் சான்று பகரும் சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டித் தமக்கே உரிய நடையில் எழுதியுள்ளார் -- நமது கழகப் பொருளாளர் பேராசிரியர் அவர்கள் -- இக்கட்டுரையை!



முன்னேற்றக் கழகம் கண்டது முதல் பொறுப்பு உணர்ச்சி அவரை ஆட்கொண்டது; 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு'—இவை அவரது செயல் மூச்சாக அமைந்தன!

முதலமைச்சரான அண்ணா அதனை, 'சனநாயகத்தால் கிடைத்த பேறு' என்று மட்டும் கொள்ளாமல், சனநாயகம் என்னும் மரபுக்கும் -- முறைகட்கும் ஏற்ப எல்லாரையும் மதிக்கவும், எவரது கருத்தையும் எளிதில் ஒதுக்காது எண்ணிப் பார்க்கவும், எல்லாருக்கும் ஏற்றது தமக்கும் ஏற்றதாகும் என்று ஏற்கவும் முன்வந்தார்!

பதவியில் உயர்ந்த நிலை பெற்றபோது, தமது உள்ளத்தின் பரந்த பொது நோக்கத்தால், அதனினும் அவர் உயர்ந்தார்!

'தமிழ் நாட்டின் முதலமைச்சர்' என்னும் நிலைக்குரிய மதிப்பே அன்றி, இந்தியா முழுவதும் மதிக்கப்பட்ட ஒரு தேசியத் தலைவராகக் கொள்ளப்படுதற்குரிய தகுதியை -- சனநாயகத்தை ஒரு மனப்பான்மையாக மேற்கொண்டதன் மூலம், குடிதழுவிய கோலாட்சி நிலைத்தற்கும்--செம்மைப்படுதற்கும் அவர் எடுத்துக்காட்டு ஆனார்!

பிறர் கருத்தை மதிப்பினும், தம் கருத்தில் உறுதிப்பாடும்-- மாற்றார் கருத்தை உட்கொண்டும் தம் கொள்கையை நிலைநாட்டும் திறனும் அவரிடத்தில் நிறைந்திருந்தன; அதனாலேயே —மாற்றார் தோட்டத்து மல்லிகை என்பதாலேயே—அது, மணம் கமழாது என்று அவர் கருதியதில்லை!

அவரது அந்தத் தெளிவுதான்—அரசியலில் காங்கிரசுடன் மாறுபாடு கொண்டிருந்தபோதிலும்—சுதந்தரம் கிடைத்த நாளில் தலைவர் பெரியார் அதனைத் 'துக்க நாள்' என்று கண்டனம் எழுப்பியபோதிலும், அந்த விடுதலையைக் கொண்டாட வேண்டும் என அண்ணா முற்பட ஏதுவாயிற்று!

உத்தமர் காந்தி அண்ணலின் உயர்நோக்கத்தைப் போற்றி —அவர் மறைந்தபோது வானொலியில் அண்ணா நிகழ்த்திய உரை, அவரது ஈடுபாட்டை நாட்டவர்க்குப் புலப்படுத்தியது!

செஞ்சீனா அத்துமீறிய படையெடுப்பு நிகழ்த்தியபோது அண்ணா நிகழ்த்திய உரையும், விடுத்த வேண்டுகோளும், இந்தியாவின் பொதுப் பாதுகாப்பிலும்--சுதந்தரத்தை நிலைபெறச் செய்வதிலும் அவர் கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தின!

அதன் தொடர்பாகவே, இந்திய நாட்டின் பொது நன்மைக்கும்--வலிவுக்கும் ஊறுகு விடக்கூடாது என்பதுடன், சனநாயக உரிமைகளை நிலைபெறச் செய்வதன் மூலமே தென்னக மக்களின் தாழ்நிலையை மாற்றியமைக்க முடியும் என்பதையும் கருத்திற் கொண்டு, நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிடுவதாகவும் அறிவித்ததனை யாவரும் அறிவர்!

சனநாயக முறை கெடாது, ஆட்சி மாற்றம் காண்பதற்கு வேண்டும் வலிமையை மக்கள் பெறுவதற்குக் கருவியாகுமாறு தனியார் உரிமையை வலியுறுத்தும் சுதந்திராக் கட்சி, மற்றும்

பொதுவுடைமைக் கட்சி ஆகியவற்றை ஒரே அணியாக நிற்கச் செய்து- மாறுபாட்டைக் குறைத்து--மக்கள் வாக்கு எதிர்க் கட்சிகளிடையே சிதறாது செய்த ஆற்றலை நாடு மறக்காது!

மாநில ஆட்சியின் நியாயமான உரிமைக்கும்--கிடைக்க வேண்டிய வருவாய்கட்கும் மத்திய அரசுடன் வாதிடுகின்ற தலைவராக இருந்தபோதும் உறவு நிலை கெடாமலும், வெறுப்பும் கசப்பும் வளராமலும், உரிமை கோரும் அறிஞராக விளங்கினார் என்பது, இந்தியப் பேரரசின் தலைமையமைச்சரும்--ஏனைய அமைச்சர்களும் ஆற்றிய நல்லுரைகளால் விளங்கும்.

மொழி ஆதிக்க எதிர்ப்பாளராகவே நாட்டுக்கு அறிமுகமாகி—பலப்பல அறப்போராட்டம் நடத்தி — பலமுறை சிறைத் தண்டனை பெற்று விடுதலையாகி—நாடறிந்த தலைவராகவும், தமிழகத்தின் முதலமைச்சராகவும் விளங்கிய நிலையிலும், இந்திய அரசின் ஆட்சி மொழிக் கொள்கை குறித்துத் தமிழகச் சட்ட மன்றத்தைக் கூட்டி, 'மாணவர்க்கு இரு மொழித் திட்டமே போதும்' என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிச் சட்டப்படி நிலை நிறுத்தியதோடன்றி, மத்திய அரசுடன் போர் தொடுக்காத பெருந்தன்மையையும் நாடறியும்!

நாட்டு மக்கள் கொந்தளித்துக் கிளம்பும்போது, அதைக் கிளறி விட்டுப் பெருநெருப்பு ஆக்காமலும்--உரிமை விளக்கு அணைந்து விடாமலும் காக்கும் தன்னிகரற்ற அறப்போர் வீரராக விளங்கி வந்தார்!

தமிழகத்தில் வாழ்ந்துவரும் பிற மொழி பேசும் மற்ற மாநில மக்கள் யாவரும், அண்ணாவின் ஆட்சியில், கொள்கையாலும்--நடைமுறையாலும் தங்கள் உரிமை வாழ்வுக்குப் பாதுகாப்பு உள்ளதை உணர்ந்து பாராட்டும் நிலை பெற்றனர்!

பிற மாநிலங்களில் சிவசேனை போன்ற இயக்கங்களால் தமிழ் மக்கள் கொடுமைக்கு ஆளான நிலையில், தமிழ்நாட்டில் எதிர்ப்பு உணர்ச்சி ஓர் இயக்கமாக உருவாகாதவாறு பொறுப்பு உணர்ச்சியுடன் தடுத்து வைத்தார்!

உண்மையான பகுத்தறிவை வளர்க்கும் சமூகச் சீர்திருத்தவாதியாக விளங்கிடினும், ஆத்திக உணர்வுடையோர் மனம் புண்பட அவர் இடம் தந்ததில்லை!

புரட்சி மனப்பான்மையுடையோர்தம் ஆக்கக் கருத்தை ஏற்றபோதிலும், வன்முறையைத் தூண்டுவதற்கு ஒருப்பட்டதில்லை; மாறாக, வன்முறையால் எதிர்பார்க்கும் பலனை நன்முறையால் நிறைவேற்ற உறுதியுடன் செயல்பட்டார்!

அண்மைக் காலத்தில்—தம்மை ஒரு கட்சித் தலைவனாகக் கொள்ளும் நிலையிலிருந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் தலைவனாக அமையும் நிலையில்—தமது பேச்சு, நடை முறை, கொள்கை அனைத்தையும் உருவாக்கிக் கொண்டார்!

ஆத்திகரும் -- நாத்திகரும், முதலாளிகளும்--தொழிலாளிகளும், உயர் வகுப்பாரும்--தாழ்த்தப்பட்டவரும், அறிஞர்களும்--பாமரரும், நகரத்தாரும்--கிராமத்து மக்களும், ஆளுங் கட்சியினரும்--மாற்றுக் கட்சியினரும் அண்ணாவிடம் பழகினும், அவர் கருத்தைக் கேட்பினும், 'அவர் நடுநிலையுடையவர்--நியாயத்தின் பக்கம் நிற்பவர் -- நம்மை வெறுக்காதவர் -- அவர் அன்புள்ளத்தில் நமக்கும் இடம் உண்டு' என்று உறுதிகொண்டு போற்றும் வண்ணம் திகழ்ந்தார்!

இந்தியாவில் சனநாயக மரபு வளர்ச்சிக்கும்—திருத்தப்பட வேண்டிய அரசியல் சட்டக் கோட்பாடுகளுக்கும் திசை காட்டும் கலங்கரை விளக்கமாக நின்றார்!

தமிழன் மாட்சி, உலகு உணரத் துணையானார்!

திருக்குறள் நெறியினது அருமையைப் பிற நாட்டவரும்--வேற்று மொழியினரும் அறிந்து போற்ற ஏதுவானார்!

தமிழகத்திற்கு—தமிழன்னையின் நெடுநாளைய ஏக்கம் நீங்க, 'தமிழ் நாடு' என்னும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்!

வட திசையின் வல்லாண்மை மிக்காரெல்லாம் தென்னகத்தை ஒதுக்கியும்--தென்னகத் தலைவர்களைப் புறக்கணித்தும் வந்த நிலையையும் நினைப்பையும் மாற்றி வைத்தார்!

இவ்வாறு இந்தியாவின் பல்வேறு அரசியல் தலைவர்களின் கவனத்தையும் -- கருத்தையும் கவர்ந்து, பிற நாட்டு நல்லறிஞர் பாராட்டையும் பெற்று விளங்கிய அண்ணா அவர்கள், தோற்றத்திலோ எளிய உடை—கனிந்த பார்வை—பரந்த நெற்றி—முறுவல் காட்டும் முகம்—உயரமில்லாத உருவம் கொண்டோராகவே, கண்டவரது உள்ளம் கொள்ளை கொண்டார்!

எவரிடத்தும் அன்பு கலந்த பேச்சு—நண்பர்களிடையே கேலி கலந்த நகைச்சுவை—மாற்றாரிடம் இனிய உரையாடல்—மேடையில் அடுக்கி வரும் அழகுத் தமிழ்க் கருத்துப் பொழிவு—ஆங்கிலத்தில் எடுப்பான விளக்க உரை ஆகியவை, அவரது உரையைக் கேட்டோர் காதுகளைக் குளிரச் செய்தவை!

ஆழமான கருத்து—எளிய நடை—தொடுப்பான விளக்கம்—அழகான உவமைகள்—துண்டுக் கதைகள்—மாற்றாரையும் மனம் மாற்றும் சான்றுகள் ஆகியவை, அவர்தம் எழுத்துக்களைப் பயின்றோரை அவரிடம் ஈடுபடச் செய்தவை!

காலத்துக்கேற்ற கருத்து — புதுமை தழுவும் போக்கு — பொருத்தமான பாத்திரப் படைப்பு—தாமே ஏற்று நடிக்கும் எடுப்பான வேடம்—இவை யாவும், கலை உலக மறுமலர்ச்சிக்கு அவரது காணிக்கை!

கடுஞ் சினமும் வெகுண்ட சொல்லும் — தண்டித்தலும் வெறுத்தலும், அவர் அறியாதவை!

அவர் எத்தகைய அன்பு நீர் பாய்ச்சி, ஆயிரமாயிரம் தம்பிமார்களையும் -- தோழர்களையும் ஒரே குடும்பமாக உருவாகச் செய்தார் என்பதை எண்ணுவோர், அவரது உள்ளத்தில் எத்தனை இலட்சக்கணக்கானவர்களுக்கு இடம் வைத்திருந்தார் என்பதை எண்ணி வியக்காமல் இரார்!

தமிழர் தலைவராகி — இந்தியாவின் காவலராகி — மனிதகுல வழிகாட்டியாகும் சிறப்பினை, அவரது உள்ளத்தால் -- பண்பால்--அன்பால் அவர் எய்தினார்!

இவ்வாறு, உயர்ந்த மனிதராக வாழ்ந்து—நம் உள்ளத்திலெல்லாம் நிறைந்த அண்ணன் நினைவு எக்காலமும் வாழ்வதாகும்!

வளர்க—அவரது புகழ்! ★




இதோ மங்கள மணி ஓசை!

மகிழ்ச்சி பொங்கிடும் கிருஸ்துமஸ் பண்டிகைக்கு



கோ-ஆப்டெக்ஸ் அளித்திடும் சலுகை

பருத்தி மற்றும் பட்டு ரகங்களின் மீது 20% சிறப்புத் தள்ளுபடி

நேர்த்தியான அலங்காரத் துணி வகைகள்!
மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் துவாலைகள்!
சொகுசான படுக்கை விரிப்புகள்!

கோ-ஆப்டெக்ஸ் வண்ணத்துப்பூச்சி உங்களது கிருஸ்துமஸ் மகிழ்ச்சி!

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

20-12-1975 முதல் 20-1-1976 வரை தள்ளுபடி உண்டு.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை தினங்களிலும், எமது விற்பனை நிலையங்கள் திறந்திருக்கும்.

# ★ வண்ணப் பட விளக்கங்கள் ★

## முதல் பக்கத்தில்.....

பேரறிஞர் அண்ணா, முதல் தடவையாக அமெரிக்கா சென்று திரும்பியபோது நடைபெற்ற வரவேற்பு ஊர்வலக் காட்சி!

காங்கிரசுப் பெருந் தலைவர் காமராசர், மூதறிஞர் இராஜாஜி, சிலம்புச் செல்வர் ம. பொ. சி., இலட்சிய வீரர் என். வி என். ஆகியோருடன் அண்ணா.

## இரண்டாம் பக்கத்தில்.....

1965-இல், பொள்ளாச்சியில் நடைபெற்ற கோவை மாவட்ட தி. மு. க. நான்காவது மாநாட்டு நிகழ்ச்சி; மேடையில், நமது 'கழகக் குரல்' ஆசிரியர் சிட்டிபாபு, மறைந்த தோழர் உடுமலை நாராயணன் ஆகியோரைக் காணலாம்.

பேரறிஞர் அண்ணா, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர்., டபிள்யூ. கே. தேவராசனர் ஆகியோர் அமர்ந்திருக்க, பின் வரிசையில்—நாவலர், சேலம் சித்தையன், சி. வி. இராசகோபால், இரா. செழியன், கடலூர் இளம்வழுதி, சோழவந்தான் ஆவுடையப்பன் முதலியோர் நிற்கும் நிழற்படம் ஒன்றும் இப் பக்கத்தில் உள்ளது.

மேடையில் அண்ணா பல்வேறு கோணங்களில்!

முதல் மாநில மாநாட்டில் அண்ணா பேசும் காட்சி ஒரு படம்; விலைவாசிப் போராட்டத்தில் சிறை சென்று - கைதி உடையுடன் வெளிவரும் கலைஞருடன், ஏ. கே. வேலனையும் இன்னொரு படத்தில் காணலாம்!

கழகத் தேர்தல் நிதிக்கு, அன்றைப் பொருளாளர் கலைஞர் அவர்கள் கடை கடையாகச் சென்று உண்டியல் குலுக்கிய காட்சி—மற்றொரு படத்தில்!

நாகர்கோவிலில், கலைஞருடன் குமரி மாவட்டத் தோழர்கள் எடுத்துக்கொண்ட புகைப் படம் கீழேயுள்ளது.

## மூன்றும் பக்கத்தில்....

பல்கலைக் கழகப் பட்டம் பெற்றபோது அணிந்திருந்த உடையுடன் அண்ணா; 1945-ஆம் ஆண்டில் அண்ணா (அங்க வஸ்திரத்துடன் இருக்கும் படம்); மற்றும் பல்வேறு கோணங்களில் அண்ணா (1966).

## நான்காம் பக்கத்தில்....

முதல்படம்—வட சென்னையில் பேரறிஞர் அண்ணாவுக்கு சால்வை போர்த்தி தேர்தல் நிதி வழங்குகிறார் — கே. எம். கண்ணபிரான்.

ஏனைய படங்கள் :—விருகம்பாக்கம் மாநாட்டுக் காட்சிகள்; மேடையில் மூதறிஞர் இராஜாஜி, காயிதே மில்லத், பாபாகி தங்கல் முகமது கோயா, ம. பொ. சி., கலைஞர், நாவலர், சி. பி. சி., என். வி. என். ஆகியோருடன் அண்ணா.




# சென்டெக்ஸ்
# கைத்தறித் துணிகள்

## பண்டிகைக் கால விசேடத் தள்ளுபடி 20%
## 20--12--75 முதல் 26--1--76 வரை

**உம்மிடியார் அங்காடி மையம்,**

(குளுகுளு வசதியுடன் L. I. C. எதிரில்)

162, அண்ணா சாலை, : : சென்னை-2.

# சென்டெக்ஸ்

பிரத்தியேக ஷோ-ரூமிற்கு இன்றே விஜயம் செய்யுங்கள்!

## சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.,

சென்னிமலை, தமிழ்நாடு.

**மு. ப. நாச்சிமுத்து,** B.A., B.L.,

தலைவர்.

விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஷோ-ரூம் திறந்திருக்கும்.

சாதனைச் செம்மல் சரித்திர நாயகன்
தானைத் தலைவன் தமிழகக் காவலன்
டாக்டர் கலைஞர் தலைமை ஏற்கும்
இம்மாநில மாநாடு நானிலம் போற்றிட
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

★

# தாராபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்.,

தாராபுரம், கோவை மாவட்டம்.

தொலைபேசி எண்: 279

**மு. பழனிசாமி,** எம்.எல்.ஏ.,
தலைவர்.

சேமிக்க முந்துக! செலவு செய்யத் தயங்குக!

# நீலகிரி மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

**உதகமண்டலம்.**

தொலைபேசி எண்: 2420

கிளைகள்: குன்னூர், 684 கோத்தகிரி, 332 கடலூர். 24

★

உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை!

இதர விவரங்களுக்கு எங்களை இன்றே அணுகுங்கள்.

ஜே. மாதா கவுடர், எம்.பி., பெருந் தலைவர்.

பா. பிரகாசம், எம்.ஏ., எச்.டி.சி., துணைப் பதிவாளர்/காரியதரிசி.

# கோவை மாவட்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

★

**உழவர் பெருமக்களே!**

உங்கள் விளை பொருட்களை நல்ல விலைக்கு விற்று நன்மையடைய, அண்மையில் உள்ள எங்களது ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை நாடுங்கள்!

உங்களது பொருளாதாரத்தை உயர்த்த அணுகுவீர்! பயன் பெறுவீர்!

★

கே. ஏ. குழந்தையப்பன், பி.எஸ்ஸி. (விவ.) செயலாளர், கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி, கோயமுத்தூர்.

சு. துரைசாமி, எம்.எல்.ஏ., தலைவர், கோயமுத்தூர் மார்க்கெட் கமிட்டி, கோயமுத்தூர்.

துவக்கம்: 1933

# திருப்பூர் கூட்டுறவு நிலவள வங்கி

(வரையறுக்கப்பட்டது) **திருப்பூர்** எண்: கே. 677

ஆர். நாச்சிமுத்து கவுண்டர், துணைத் தலைவர்.

இரா. முருகேசன், தலைவர்.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 15·00 லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ | 11·79 லட்சம் |
| வங்கி பெற்றுள்ள கடன் நிலுவை | ரூ. | 152·30 லட்சம் |
| வங்கி வழங்கியுள்ள கடன் நிலுவை | ரூ. | 155·15 லட்சம் |

மாநில நிலவள வங்கி சார்பாக எங்கள் வங்கியில் முதலீடு செய்யும் பிக்செட் டெபாசிட்டுகளுக்கு ஓர் ஆண்டுக்கும்—அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் 8½% வட்டி வழங்கப்படும்.

நில நீர்க் கோட்ட அனுமதியை அனுசரித்துத் திருப்பூர் வட்டாரத்தில் வறட்சி நிவாரணச் சிறப்பு அம்சமாகக் கிணறு அடிவெட்டுக்கு ரூ. 10,000 வரை கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது.

நிர்வாகக் குழு இயக்குநர்கள்:

எஸ். பழனிசாமி
ஆர். சுப்பையன்
என். ராமச்சந்திர நாயுடு
எஸ். கந்தசாமி கவுண்டர்
என். ஏ. குப்புசாமி
ரங்கசாமி கவுண்டர்
எம். மாரப்பன்
என். கந்தசாமி பி.ஏ.,பி.எல்.
என். முத்துசாமி
முத்துரத்தின சபாபதி
என். கே. சாமி
சாமிராசு

**சி. பழனிசாமி,** மே. மேலாளர்.

**பி. கணேசன்,** செயலாளர்.



இந்திய அரசியலில் தி. மு. கழகத்தின் வரலாறு தனிச் சிறப்புடையதாகும்!

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெற்றபின், எத்தனையோ கட்சிகள் தோன்றின!

இங்கிலாந்து நாட்டில் இருப்பது போன்று, குறைந்த எண்ணிக்கையில்--கட்சிகள் நமது ஜனநாயகத்தில் பங்கு பெறவில்லை!

எத்தனையோ கட்சிகளைப் புதிது புதிதாக எத்தனையோ பேர் துவக்கினர்; சொந்த இலாபத்திற்காகவும்--தனி நபர்களின் பெருமைக்காகவும்--சாதி அடிப்படையிலும்--குறுகிய மனப்போக்குடனும்--காழ்ப்பு உணர்வுடனும்--பகை நோக்குடனும் பற்பல கட்சிகள் தோன்றின! அப்படித் தோன்றியதல்ல தி. மு. க. கழகம்!

சொந்தக் கட்சி செல்வாக்குப் பெற, 'எதையும் செய்யலாம்' என்று துணிந்த கட்சிகள் ஏராளம்!

'எதையும், உரிய நேரத்தில்--உரிய முறையில் செய்ய வேண்டும்' என்று திட்டமிட்டு அரசியலில் ஈடுபட்டது தி. மு. கழகம்!

எதிரிகளைக் கொடுமைப்படுத்தியும்--தரக் குறைவான செயல்களில் ஈடுபட்டும் வெற்றி காணலாம் என்று நினைத்த கட்சிகள் ஏராளம்!

பலாத்காரச் செயலில் துளியும் நாட்டம் கொள்ளாமல் நாரிககமான அரசியலை நடைமுறைக்குக் கொண்டுவந்த பெருமையைத் தி. மு. கழகம் பெற்றிருக்கிறது!

**1949** ஆம் ஆண்டு, நமது வரலாற்றில் தனிச் சிறப்பு பெற்ற ஆண்டாகும்!

தாழ்ந்த இனம் மீண்டும் தலை தூக்க முற்பட்ட நேரத்தில், பேராபத்தைச் சந்தித்த ஆண்டு அது!

''என்னே நம் நிலை? என்னே நம் கதி? எங்கே நமக்குப் புகலிடம்? என்னதான் நமக்கு எதிர்காலம்?'' என்று நெஞ்சிலே பெரும் வேதனையைத் தாங்கித் தவித்த ஆண்டும் அதுவே!

''தன்மானத் தூதர்களாம்—பகுத்தறிவுப் பட்டாளமாம்—தாயகத்தைக் காக்க வந்தவர்களாம்—சுரண்டலை ஒழிப்பவர்களாம்—அநீதியை அழிப்பவர்களாம்—ஊருக்கு உழைக்கும் உத்தமர்களாம்—ஈரோட்டுப் பாசறையில் பயின்றவர்களாம்—திராவிடர்களாம்—கழகமாம்—நல்லாட்சி நடத்த வந்தவர்களாம்—இனி அவர்களின் கதை முடிந்துவிட்டது'' என்று எதிரிகள் ஆரூடம் கணித்த ஆண்டும் அதுவே!

உண்மையில் அந்த ஆண்டில் நமக்கு ஏற்பட்ட சோதனை, வேறு எந்தக் கட்சியின் வரலாற்றிலும் ஏற்படாததாகும்!

தம்மைப் பின்பற்றி அரும் சாதனைகள் பல புரிந்தவர்களின்--குறுகிய காலத்தில் பெரியதோர் அமைப்பை உருவாக்கித் தந்தவர்களின் முகத்தில் கரி பூசி விட்டார் தலைவர்!

வெட்கப்படவும்--வேதனைப்படவும் வைத்தார் தலைவர்! கழகத் தோழர்கள் அனைவரையும், துரோகிகள்--நாணயமற்றவர்கள்' என்றுகூறும் பழிச்சொல்லுக்கு ஆளாக்கிவிட்டார் தலைவர்!

அந்தச் சூழ்நிலையில் தொண்டர்கள் அனைவரும் ஒன்று கூடி--கலந்துரையாடி உருவாக்கியது தான் தி. மு. க.!

''தலைவரின் திருமணம் நடந்தேறிவிட்டது; இனி செய்ய வேண்டியது என்ன என்பதை அவசரமும் ஆத்திரமும் இன்றிச் சிந்திக்க வேண்டும்; தூண்டி

ஏ.எஸ்.வேணு

விடுவோர்—தூபமிடுவோர்—சிண்டு முடிந்து வைப்போர்—ஆகியவர்களின் சூழ்ச்சிகளுக்கு நாம் இரையாகிவிடக் கூடாது'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

'கண்ணீர்த் துளி'களின் கருத்தை ஏற்று உருவாக்கியது தான் தி.மு. கழகம்!

''இவர்களால் முடியுமா ஓர் இயக்கத்தை நடத்த? அதிலும் பெரியார் தலைமை இல்லாத நிலையில் என்ன செய்யப் போகிறார்கள்? அற்பாயுசுக்காரர்கள்--ஆழம் தெரியாமல் காலை விடுகிறார்கள்'' என்றெல்லாம் கெக்கலி கொட்டினர்!

''சிறு பிள்ளை விட்ட வேளாண்மை வீடு வந்து சேருமா?'' என்று கேலியாகப் பேசினார்கள்; அந்தச் சிறு பிள்ளைகளின் அறுவடைதான் இன்று இந்தியாவில் தலைசிறந்த--நிலையான--நல்ல சனநாயக அரசை நமது கழகம் நடத்தி கொண்டிருக்கிறது!

பெரியாரின் தலைமையை இழந்து தவித்த நம்மையெல்லாம், நல்ல பாதையில் உடனிருந்து நடத்திச் சென்று, செயலற்றுக் கிடந்த இயக்கத்திற்கு முறையாக--படிப்படியாகப் புத்துயிரூட்டி, தி.மு. கழகத்தை எவராலும் அசைக்க முடியாத--அழிக்க முடியாத மாபெரும் இயக்கமாக ஆக்கித் தந்தவர் நமது அண்ணா!

வரலாறுகளைப் படித்தறிந்த அண்ணா—நமக்குப் புதிய வரலாற்றைப் படைத்தார்!

பொருளாதாரம் பயின்ற அண்ணா—நமக்குப் பயனுள்ள திட்டங்களைத் தீட்டித் தந்தார்!

உலக அரசியலைக் கற்றறிந்த அண்ணா—நமது எதிர்காலத்திற்கு நல்ல வழிகளை வகுத்துக் காட்டினார்!

மாற்றார் மலைக்கும் அளவுக்கு—சாபமிட்டோர் சஞ்சலப்படும் நிலைக்கு--கழகத்தைக் கட்டிக் காத்து வளர்த்தார்!

1949-இல் ஏற்பட்ட ஆபத்தில் நமக்கு ஏதும் சேதம் இல்லை—எதிரிகளுக்குத்தான் நட்டமும், ஏமாற்றமும்!

அன்று செய்வதறியாது தவித்த நாம், இன்று வியத்தகு சாதனைகளின் சொந்தக்காரர்களாகி விட்டோம்! எதிரிகளின் மனக் கோட்டையைத் தகர்த்து விட்டோம்!

'வளர்ந்திருக்கிறோம்' என்றால் சாதாரணமாகவா? இந்த வளர்ச்சியைப் பெற என்ன பாடு பட்டிருக்கிறோம்?

நமது கழகக் கிளைகள் இல்லாத இடமேது? அண்ணன் கொடுத்த கொடி பட்டொளி வீசிப் பறப்பதைக் காணாத கண்கள் ஏது?

எத்தனைக் கூட்டங்கள்--நாடகங்கள்--மாநாடுகள்--ஏடுகள்-கலை நிகழ்ச்சிகள்--சிறப்புச் சொற்பொழிவுகள்--கண்டனக் கூட்டங்கள்--பேரணிகள்--ஊர்வலங்கள்--அறப் போராட்டங்கள்--கருப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள்!

நமது கழகத் தோழர்கள்மீது சுமத்தப்படாத போலி வழக்குகள் இல்லை! நமது தொண்டர்களை வரவேற்காத சிறைக் கூடங்கள் இல்லை!

கல்லடிபட்டனர் நம்மவர்! கரலிழந்தனர்—கண் இழந்தனர்—கரங்களை இழந்தனர்—உயிர்களையே பணயமாக்கினர்!

தடியடிகளைத் தாங்கியும்—கண்ணீர்ப் புகைகளை ஏற்றும்—துப்பாக்கி முனைகளைச் சந்தித்தும் எண்ணற்ற தங்கத் தம்பிகள்




நமது இயக்கத்திற்குப் பொன்னுன வரலாறு படைத்தனர்.

எழுத்துரிமையைப் பறிக்கும் அளவில், கழக ஏடுகளுக்கு ஜாமீன் தொகை கேட்கப்பட்டது!

நிதி நிலை சிறிதளவும் இல்லாத தலைவர்களுக்கு நாட்டு மக்களே நன்கொடை அளித்தனர்!

''அடுக்கு மொழி பேசுகிருர்களே—அவர்கள் பேச்சைக் கேட்கக் கூட்டம் கூடுகிறதே'' என்ற பொச்சரிப்பில் தடை உத்தரவு பிறப்பித்து -- பேச்சுரிமையைப் பறிக்க முனைந்தனர்!

தடையைக் கண்டு துடை நடுக்கம் கொள்ளாமல், பேச்சுரிமையை நிலைநாட்டச் சிறை புகுந்தனர் தோழர்கள்!

நூல்களைத் தடை செய்தனர்!

நாடகங்களுக்குத் தடை விதித்தனர்!

கழக வெளியீடுகளைப் பள்ளிக் கூடங்கள் -- நூல் நிலையங்களில் வைக்கத் தடை விதித்தனர்!

''பாட நூலில் பகுத்தறிவு தலைகாட்டக் கூடாது'' என்றனர்!

கடந்த 25 ஆண்டுக் காலத்தில் இப்படியெல்லாம் நமது கழகம், எண்ணற்ற எதிர்ப்புக்களைச் சந்தித்தது.

பல இலட்சங்களைச் செலவிட்டுப் பெரிய மாநாடுகளை நடத்தி வெளிச்சம் போட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை, தி. மு. கழகத்திற்கு என்றுமே இருந்ததில்லை!

அதன் இலட்சியங்களுக்குள்ள வலிமை, எதிரிகளின் இலட்சங்களுக்கும் மேலானதாகும்.

நாடெங்கிலும் கழகத்தை அமைத்து -- சனநாயக முறையில் செயலாற்றும் திறனைத் தி. மு. கழகம் பெற்றுவிட்டது என்பதை உறுதிப்படுத்துவதே கோவையில் நடைபெறும் ஐந்தாவது பொது மாநாடாகும்.

சனநாயக முறையில் நாம் ஆற்றிய சாதனைகளைக் கோவையில் நடைபெறும் ஐந்தாவது பொது மாநாட்டின் மூலம் உலகிற்கு உணர்த்த முனைந்துள்ளோம்!

★

தி. மு. கழகத்தின் இருபத்தைந்து ஆண்டுக்கால வரலாற்றில் எவ்வளவு சாதனைகள் — என்னென்ன தியாகங்கள் — எவ்வளவு அருமையான படைப்புகள்!

சனநாயக அரசியல் முறைகளை அறிந்த எந்த நாட்டிலும், புதிதாக எதிர்க் கட்சி ஒன்று உருவாகும் நேரத்தில், அவசரப்பட்டு அந்தக் கட்சியை அடியோடு ஒழித்துக்கட்ட எந்தக் கட்சியும் பொதுவாக விரும்பாது; நல்லதோர் ஆளும் கட்சி, பண்புள்ள எதிர்க் கட்சி ஒன்றை வரவேற்பதென்பது மக்களாட்சியில் இயல்பு; ஆனல் நமது கழகத்திற்கு அந்த இயல்பு கிட்டவில்லை.

நம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதற்காக எத்தனையோ எதேச்சாதிகார அடக்குமுறைகளைக் கையாண்ட எதிரிகளைத் தான் நாம் சந்திக்க வேண்டியிருந்தது!

''தி. மு. கழகத்தினர் அலங்காரமாகப் பேசுகின்றனர்; அதனல்தான் அவர்களுக்குக் கூட்டம் கூடுகிறது'' என்று அவர்கள் தப்புக் கணக்குப் போட்டனர்; அவர்களும் அப்படிப் பேசிப் பார்த்தனர்; அது, குயிலைப் பார்த்துக் கோட்டான் பாட முயன்ற கதையாக முடிந்து விட்டது!

தி. மு. கழகத்தின் அடிப்படை இலட்சியங்கள், மக்களின் பிரச்சினைகளுடன் பிணைக்கப்பட்டவை என்பதை அவர்கள் உணர மறுத்தனர்!

நாம் இயக்கம் தொடங்குவதற்குமுன், அரசியலில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் நிலை பாமர மக்களுக்கு இருந்ததில்லை! சனநாயகம் என்பது என்ன என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்பட்டதில்லை!

''தி. மு. க.—ஒரு நடமாடும் பல்கலைக் கழகம்; அன்ருட அரசியல் நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்ல, கட்டணமில்லாமல் வகுப்புகள் நடத்துகிருேம்; அரசியலில் விழிப்புணர்ச்சியை உண்டாக்கி வருகிருேம்; சனநாயகத்தைச் சாகாமல் காப்பாற்றுவோம்'' என்று இயக்கத்தின் தொடக்கத்திலேயே அண்ணு அவர்கள், நாட்டிற்கு -- நாட்டு மக்களுக்கு அறிவித்தார்!

அவர் காட்டிய அந்தப் புதிய பாதையில், கால் நூற்ருண்டுக் காலமாகப் பாதை தவருது பயணம் செய்து வந்திருக்கிருேம் என்பதை நமது வரலாறு உணர்த்துகிறது!

அன்றுபோல் இன்றும் சர்வாதிகாரத்தை நாம் அறவே வெறுப்பவர்கள் என்பதையும் அனைவரும் அறிவர்!

வாழ்க்கையில் நமது எழுத்தாளர்கள் எவருமே ஏடுகளை நடத்தும் வசதியையோ, நூல்களை வெளியிடும் வாய்ப்பினையோ சிறிதளவும் பெற்றிருந்ததில்லை!

நமது கழகம் விரைவாக வளர்ச்சியுற வேண்டும் என்ற ஆர்வத்தில் சிலர் ஏடுகள் பல நடத்தினர்; எண்ணற்ற நூல்களை வெளியிட்டனர்; நாட்டு மக்களிடம் அவைகளுக்கு நல்ல ஆதரவும் கிடைத்து வந்தது.

கழக வெளியீடுகளால்தான் மக்கள் ஆதரவு கழகத்தினருக்குப் பெரும் அளவில் கிடைக்கிறது என்று எதிரிகள் தவருகக் கணித்தனர்; அதன் விளைவாக அவர்களும் குறைந்த விலையில்--தரமான தாள்களில்--அழகிய முகப்புகளுடன் பல வெளியீடுகளை நமக்குப் போட்டியாக மக்கள் மன்றத்தில் நடமாடச் செய்தனர்! புலியைக் கண்டு பூனை சூடு போட்டுக் கொண்ட கதையாகவே அதுவும் முடிந்தது!

'கடை விரித்தோம்—சீந்துவாரில்லை' என்ற முகாரியுடன் மூட்டைக் கட்டிக் கொண்டு விட்டனர்!

''இனியும் இவர்களை விட்டு வைத்தால் வளர்ச்சியுற்று விடுவார்கள்'' என்ற எண்ணத்தில், நமது ஏடுகளுக்கு 'ஜாமீன்' தொகை கேட்டனர்; அந்தத் தொகையையும் பொதுமக்களே ஓரணு -- இரண்டணுவாகச் செலுத்தினர்!

அண்ணு அவர்கள் எழுதிய 'ஆரிய மாயை' எனும் ஏட்டினை, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தடை செய்தனர்; அச்சிட்டவருக்கு அபராதம் விதித்தனர்; இந்த மிரட்டலுக்கும் மக்கள் சரியான பதிலடி தந்தனர்; தடை செய்யப்பட்ட நூல்களைத் தாங்களே விற்றனர்!

அண்ணுவைச் சிறையில் வைத்த அரசு, பத்தே நாட்களில் அவரை விடுதலை செய்து விட்டது!

தி. மு க. ஏடுகள், பெறும் பாறைகளைப் பிளந்தெறியும் சிற்றுளிகளாக விளங்கின!

நாம் வெளியிட்ட நூல்கள், இருளை விரட்டியடிக்கும் அணையா விளக்குகளாக விளங்கின!

வெள்ளம் போல் திரண்டு ஊர்வலமாக நமது கழகத்தவர் செல்வதைக் கண்ட அரசினர், தடை உத்தரவுகள் பிறப்பித்தனர்! தடையை மீறினேம்—வளர்ந்தோம்!

நம்மை ஒழிக்க நினைத்தவர்கள், இன்று தனி மனிதர்களாக உலா வருகின்றனர்!

அந்தக் காலத்தில் மாநாடு என்ருல்—ஏதோ ஒரு பெரிய மண்டபத்திலோ, சீமான்களின் மாளிகையிலோ நடைபெறும்; விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே கலந்துகொள்வர்; சுவையான விருந்திற்குப் பின் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும்; மறுநாளே, பணத்தைக் கையாடி விட்டதாக ஒருவர்மீது ஒருவர் புகார்களைக் கிளப்புவர்; இதைத்தான் அன்று நாடு கண்டது!

நமது கழக மாநாடு என்ருல், போர் முகாமுக்குப் புறப்பட்டுச் செல்லும் வீரர்களைப்போல் குடும்பம் குடும்பமாகக் கழகத் தோழர்கள் திரண்டு செல்வதை முதல் முதலில் நாடு கண்டது!

மாபெரும் பந்தலில்—தியாகிகளின் அரங்கில்—தலைவர்களின் முழக்கத்தைக் கேட்க இலட்சக் கணக்கில் மக்கள் கூடிய காட்சி வேறு எங்கும் நடைபெற்றதில்லை!

போக்குவரத்து வசதி–உணவு வசதி—மின்சார வசதி போன்றவைகளைத் தடைப்படுத்தினல், அடுத்த மாநாடுகளுக்குக் கூட்டம் குறைந்துவிடும்--கழகமும் செல்வாக்கு இழந்துவிடும் என்று எண்ணிச் செயல்பட்டனர்;



சிறிதளவும் அந்த எண்ணமும் ஈடேறவில்லை!

மாவட்டங்கள்தோறும் நாம் மாநாடு நடத்தி இருப்பதுபோல் வேறு எவரும் நடத்தியதில்லை!

மாணவர் மாநாடு—தொழிலாளர் மாநாடு—முத்தமிழ் மாநாடு—சமுதாயச் சீர்திருத்த மாநாடு—மாதர் மாநாடு—எழுத்தாளர் மாநாடு-இந்தி எதிர்ப்பு மாநாடு — உழவர் மாநாடு — பொது மாநாடு—சிறப்பு மாநாடு—என்றெல்லாம் எத்தனையோ மாநாடுகளை இந்த இருபத்தைந்தாண்டுக் காலத்தில் நாம் நடத்திக் காட்டியிருக்கிறோம்!

பேச்சுரிமையை நிலை நாட்டப் போராடினோம்!

எழுத்துரிமையைக் காக்கப் போராடினோம்!

சனநாயக உரிமைகளைப் பாதுகாத்த பெருமையைப் பெற்றோம்!

உரிமை இழந்து--வாழ்விழந்து -- ஒடுக்கப்பட்டு -- வஞ்சிக்கப்பட்டுக் கிடந்த மக்களுக்கு நீதி வழங்கிட, நாடாண்ட நீதிக் கட்சி நடைமுறைப்படுத்திய வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறைக்கு வேட்டுவைத்து அநீதி இழைத்த நேரத்தில், அந்த உரிமையை நிலை நிறுத்தப் போராடியவர்கள் தி. மு. கழகத் தொண்டர்கள்தான்!

சித்தூர் எல்லைப் போராட்டத்தை நடத்தியது தி.மு.க.!

டால்மியாபுரம் என்ற வட நாட்டுப் பெயரை மாற்றி — கல்லக்குடி என்ற தமிழ்ப் பெயரைக் கொண்டு வந்தது தி.மு.க.!

தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று போராடியது தி.மு.க.!

'புதுவை, தமிழகத்துடன் சேர்க்கப்பட வேண்டும்' என்று வற்புறுத்தியது தி.மு.க.!

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு உரிய பரிகாரம் தேடப் பாடுபட்டது தி.மு.க.!

நங்கவரத்தில், உழவர்களின் உரிமையைக் காக்கப் போராடியது தி.மு.க.!

திருச்சியில் பீடித் தொழிலாளர்களுக்காகப் போராடி -- அவர்களின் கோரிக்கையை ஈடேறச் செய்தது தி.மு.க.!

தஞ்சையில் எஸ். எம். டி. தொழிலாளர்களுக்காகப் போராடி வெற்றி கண்டது தி.மு.க.!

தமிழகத்திற்கு, 'தமிழ் நாடு' என்று பெயரிடப் பாடுபட்டது தி. மு. க.!

தமிழகத்தின் இயற்கை வளங்களைச் சுட்டிக் காட்டி—தொழில் வளர்ச்சிக்குக் குரல் கொடுத்தது தி. மு. க.!

விலையேற்றத்தைத் தடுக்கப் பாடுபட்டது தி. மு. க.!

தி. மு. க. வெற்றி கண்ட போராட்டப் பட்டியல்கள்—இத்தனைப் போராட்டங்களிலும் எந்த நேரத்திலும் உயிரைக் கொடுக்கத் தயாரான தொண்டர்களின் எண்ணிக்கை சாமானியமானதுமல்ல -- புறக்கணிக்கப்படக்கூடியதும் அல்ல!

இத்தனைப் போராட்டங்களிலும் நாம் மகத்தான வெற்றிகளை எளிதில் பெற வழிகாட்டியவர் நம் அண்ணா! 'தென்னாட்டுக் காந்தி' என்று அவரை அழைப்பதும் சாலப் பொருத்தமாகும்; ஏனெனில், எந்தப் போராட்ட நேரத்திலும் கழகத் தோழர்கள் தந்திக் கம்பிகளை அறுக்க — தபாலாபீசுகளைக் கொளுத்த — தண்டவாளத்தைப் பெயர்க்க—எவர் மீதும் திராவகம் வீச—எவரையும் துன்புறுத்துவது போன்ற செயல்களுக்குச் சிறிதளவும் இடம் தரவில்லை அண்ணா! கனவிலும் அப்படி நினைப்பதற்கு அவர் இடம் தந்ததில்லை!

"கண்டிப்பாகக் கூறுகிறேன் என்று கவலைப் படாதீர்கள்; அறப்போர் நடத்தும் ஆற்றலை மட்டும் நாம் பெற்று விட்டால் போதாது; அது, கட்டுக்கு அடங்கியதாக-கண்ணியம் நிறைந்ததாக இருக்க வேண்டும் என்பதனால் இவைகளைக் கூறுகிறேன்; என்னிடம் நிரம்ப அன்புகாட்டும் தம்பிகளுக்குக் கூறுகிறேன்"

என்ற அண்ணாவின் அறநெறி உரையினைக் கேட்டபின்னர் தான், ஒவ்வொரு போராட்டத்திலும் தி. மு. கழகம் ஈடுபட்டு வந்திருக்கிறது!

"திடீர் போராட்டங்களில் குதிக்கும் அமைப்பு அல்ல—தி. மு. க.''



"போராட்டத்தைத் தேடி அலையும் நிலையில் இல்லை—தி. மு. க."

"போராட்டம் நடத்தித் தான் பிழைக்க வேண்டும் என்ற நிலையில் இல்லை—தி. மு. க.!'

என்று அழகாக ஒவ்வோர் அறப்போர் கட்டத்திலும் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றார்!

"கையில் காசு இல்லாதவன்தான் எதுவும் செய்வான்; பொருள் இருப்பவன் சற்று அடக்கத்தோடுதான் இருப்பான்!

ஆள் இல்லாத கட்சித் தலைவன் ஆயிரத்தெட்டு திட்டம் தருவான்; பலமுள்ள கட்சிக்காரன் யோசித்துத்தான் திட்டம் தருவான்'

என்றெல்லாம் அவர், போராட்டத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க நினைப்பவர்களுக்கு-தரக்குறைவாகப் பேசிப் பிழைப்பு நடத்தும் அரைவேக்காடு அரசியல்வாதிகளுக்கு—நமது கழகத்தின் வழிமுறைச் சிறப்பை வெகு அழகாக எடுத்துரைத்தார்! நமது வெற்றிக்கு வழிகாட்டியாக விளங்கினார்!

அமைதிக்குப் பங்கம் ஏற்படாத நிலையில்—வன்முறைக்கு இடந்தராத முறையில்—மக்களின் அதிருப்தியைத் தெரியப்படுத்த, நாகரிக உலகம் ஏற்றிருக்கும் சனநாயக வழியில் கருப்புக் கொடி காட்டுவது என்பதைத் தி. மு. கழகம் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறியும், அந்த நெறியை ஏற்காது புறக்கணித்ததன் விளைவாகக் கழகத் தோழர்கள் கண் இழக்கவும்—கால் இழக்கவும்—உயிரிழக்கவும்—சிறைத் தண்டனை அனுபவிக்கவுமான நிலை, தி.மு.க. வரலாற்றில் ஏற்பட்டுவிட்டது!

ஒரு கட்சி பொதுவாக மூன்று முறைகளைக் கையாண்டு வளர்ச்சி பெறுவதுண்டு; ஒன்று—வேட்டு முறை; இது புரட்சிப் பாதை; இதில் பலாத்காரச் செயல்களுக்கும் இடம் உண்டு!

இரண்டாவது—ஒட்டு முறை: இது. வலிவற்ற ஒரு கட்சி வலிவைத் தேடிக்கொள்ள வேறு கட்சியுடன் உறவு கொள்வது!

மூன்றாவது — ஓட்டு முறை; இது, இலட்சியவாதிகள் சனநாயக அடிப்படையில் செயல்படுவது!

நமது கழகம், மூன்றாவது முறையை விரும்பி ஏற்று -- 25 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது!

பண பலத்தை நம்பியே அரசியல் நடத்தி வந்தவர்கள், 'தி. மு. கழகம் எங்கே வாழப் போகிறது -- வளரப் போகிறது' என்று ஆரூடம் கணித்தனர்!

நம்மிடையே இலட்சங்கள் இருக்கவில்லை; ஆனால், இலட்சியங்கள் இருந்தன!

இந்தப் பஞ்சைப் பராரிகள் எதனைச் சாதிக்கப் போகின்றனர்?

சோற்றுக்கே தாளம் போடும் இவர்களால் என்ன ஆகப் போகிறது -- என்ன செய்ய முடியும்?

இப்படித்தான் நம்மை ஏளனமாகப் பேசினர் — செல்வச் சீமான்களின் கூட்டாளிகள்!

"சோதனைமேல் சோதனைகளைத் தந்தால் சோர்ந்து விடுவார்கள்—ஆசை காட்டினால் மயங்கிவிடுவார்கள் — மிரட்டலுக்குப் பயந்துவிடுவார்கள்—அடக்குமுறைகளைத் தாங்காமல் அழிந்து போவார்கள்'' என்றெல்லாம் நையாண்டி செய்தனர்!

'விரலை வெட்டுவோம்' என்றார்கள்; 'நாக்கை அறுப்போம்' என்றார்கள்!

கழகக் கொடிக் கம்பங்களைத் தகர்த்தனர்—கொள்கை வீரர்களைத் தாக்கினர்—மன்றங்களில் புகுந்து அட்டூழியம் புரிந்தனர்!

கழகச் செயல் வீரர்களை, கத்தி—அரிவாள்கொண்டு சாய்த்தனர்!

நாமோ—இரத்தத்தைச் சிந்தி -- எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல் வளர்ந்து விட்டோம்!

25 ஆண்டுகள் உருண்டோடி விட்டன!

எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் அல்லவா அண்ணாவின் தம்பிமார்கள்!

இந்த 25 ஆண்டுக் காலத்தில் நாம் யாருக்கும் கையாட்களாக இருந்ததில்லை! எவர் மிரட்டலுக்கும் மிரண்டதில்லை! எவர் ஆசை காட்டியும் மயங்கியதில்லை!

இந்த நாட்டின் பொது வாழ்வில், நமது தலைவரைத் தவிர வேறு எவர் — 'அடிபடுவது கோழைத்தனமல்ல; அடித்தவர்களின் கை வலிக்கும் வரை அடிகளைத் தாங்கிக் கொள்ளவும்—திட்டுகின்ற வாய்கள் வலிக்கும் வரை திட்டுகளைச் சகித்துக் கொள்ளவுமான பொறுப்பு உணர்ச்சி நமது தோழர்களுக்கு ஏற்பட வேண்டும்' என்று வற்புறுத்தியிருக்கிறார்!

இந்த நாட்டு அரசியலில், எத்தனையோ புதுமைகளைப் புகுத்தியவர்கள் நாம்!

தேன் துளிகள் தேடிப் பொது வாழ்விற்கு வந்தவர்கள் அல்லர் நாம்! தேள் கடிக்கும்--பாம்புக் கடிக்கும் பலியாக நேரிடும் என்பது தெரிந்திருந்தும் கழகத்தில் சேர்ந்தோம்--கழகம் வளர்ச்சி பெறப் பாடுபட்டோம்!

நம்மைப் போல் வேறு எந்தக் கட்சியும், தொடங்கப்பட்ட நாளிலிருந்தே தொல்லைகளைத் தாங்கி—25 ஆண்டுகளாகத் தொடர்ந்தாற்போல் தியாகங்களைப் புரிந்ததில்லை!

கழகம் ஆளும் கட்சியாக ஆன பின்னரும், இன்னமும் அடுக்கடுக்காக எதிரிகளின் தொல்லைகளைத் தாங்கிக் கொண்டுதான் வருகிறது! நாட்டு மக்கள் இதனை அறியாதவர்களல்லர்!

முளையிலேயே 'நம்மை கிள்ளி எறிந்து விடலாம்' என்றெண்ணியவர்களின் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது!

பின்னர், எதிரிகளின் தாக்குதல் முறை மாறியது!

கூத்தாடிகள்—வேடம் போடுபவர்கள்—சினிமாக் கட்சியினர் என்றெல்லாம் வர்ணிக்கத் தொடங்கினர்!

''கற்பூரக் கடை வைத்திருப்பவர்கள் ஒரு கட்சி

யில் சேர்ந்தால், அந்தக் கட்சி ஜோதிக் கட்சியாகி விடுமா? கள்ளுக்கடைக் காரர் ஒரு கட்சியில் சேர்ந் தால் அந்தக் கட்சி கள்ளுக்கடை கட்சியாகி விடுமா? திருடர்கள் ஒரு சிலர் ஒரு கட்சியில் இருந் தால் அந்தக் கட்சி திருடர் கட்சியாகி விடுமா?''

என்றெல்லாம் சுட்டிக் காட்டி, எதிரிகளின் தரக்குறைவான பேச்சுக்களைத் தகர்த்தெறிந்தார் அண்ணா!

'மக்கள் எங்கள் பக்கம் என் கிறார்களே — தேர்தலில் நின்று பார்க்கட்டுமே' என்று எதிரிகள் நமக்குச் சவால் விட்டனர்!

1952-ஆம் ஆண்டில் முதல் பொதுத் தேர்தல் வந்துவிட் டது; நாமும் முதல் மாநில மாநாட்டைச் சென்னையில் கூட்டி னோம்; அண்ணா தலைமை வகித்த முதல் மாநில மாநாடு இது தான்!

எண்ணற்ற அடக்குமுறை களைத் தாங்கிய நமது கழகத்தின் முழு வடிவத்தையும் காணும் வாய்ப்பு அப்போது ஏற்பட்டது!

மாநாட்டுத் திடல் முழுவதி லும் பெரிய பந்தல்—அலங்கார விளக்குகள்—அழகிய முகப்பு— இலட்சக்கணக்கில் மக்கள் திரண் டிருந்தனர்!

''இந்தப் பிரமிக்கத்தக்க காட் சியை வேறு எங்கும் -- எவரும் கண்டதில்லை'' என்று மக்கள் கூறியதைக் காதாரக் கேட் டோம்!

நமக்கே கூட, 'இவ்வளவும் நம்மாலா -- நாமா இவ்வளவை யும் செய்தோம்?' என்ற எண்ணம்!

பந்தலைச் சுற்றிலும், நமது கிளைக் கழகங்களின் கொடிகள் கம்பீரமாகப் பறந்தன!

கடல் கடந்து இலங்கை— பர்மா — இந்தோ சீனா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் கழகக் கிளைகளின் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்தன!

அதனைக் கண்டு களித்தனர் பலர்—ஆச்சரியப்பட்டனர் சிலர் —வேறு சிலர் அச்சப்பட்டனர்— ஒரு சிலர் சந்தேகப்பட்டனர்!

'இனி இந்தக் கழகம் என்ன செய்யுமோ — எதெதற்கு வழி வகுக்குமோ' என்ற ஐயம் அவர் களை வாட்டத் தொடங்கியது!

தி. மு. கழகம், கண்ணியத்திற்குத் தோழனாக—கொள்கைக்கு நண்பனாக —திராவிடத்தின் பாசறையாக 25 ஆண்டுக் காலம் உயர்ந்த இலட் சியங்களுடன் இயங்கி இருப்ப தன் சிறப்பைக் காட்டுவதே இந்த ஐந்தாவது பொது மாநாடு!

நமது பாதையில் பிணங்களைக் கண்டோம்! எலும்புக் கூடு களைக் கண்டோம்! இரத்த ஆறு களைக் கண்டோம்! கழுகுகள் வட்டமிட்டதைக் கண்டோம்! நரிகள் ஊளையிட்டதைக் கண் டோம்!

ஆனால், நாம் நடந்து சென்ற பாதையிலிருந்து நழுவவுமில்லை —பயணத்தை நிறுத்தவுமில்லை!

முதல் பொதுத் தேர்தலி லேயே கழகம் ஈடுபட வேண்டும் என்று பலர் வலியுறுத்தினர்!

கழகத்தின் ஆதரவுடன் தேர் தலில் நிற்க மாற்றுக் கட்சியினர் பலர் நேசக் கரம் நீட்டினர்!

மாநில மாநாட்டில் தலைமை உரை ஆற்றிய அண்ணா அவர் கள், தம்மைப் பற்றி மிகத் தெளி வாகக் குறிப்பிட்டார்:—

''நான், சனநாயகத் தில் நம்பிக்கை கொண்ட வன்!

''அரசியலில் கண்ணி யத்தை விரும்புபவன் -- கட்டளையிடுபவன் அல் லன்!

''சனநாயகம் வளர்ந் துள்ள இந் நாளில், கட் டளையிடும் தலைவர்கள் தோன்றவும் முடியாது -- தோன்றவும் கூடாது!

''சனநாயகம் இல்லா விட்டால், அரசியலால் பலன் இல்லை!

''நான், நானாக ஏதும் செய்வதில்லை -- செய்ய வும் மாட்டேன்; உங் களிலே பலரின் கருத் துரைகளைக் கேட்கிறேன்- தொகுத்துப் பார்க் கிறேன் -- கலந்து பேசி முடிவெடுக்கிறேன்''

என்று மிக மிகத் தெளிவாக எடுத்துரைத்து -- நமது கழகத் தின் சனநாயகப் பண்பை உலகறியச் செய்தார்!

அதே மாநாட்டில், நமது பாரம்பரியத்தைப் பற்றிக் கூறு கையில் அவர் குறிப்பிட்டார்:—

''இந்த மாபெரும் பந்தலில் பல இலட்சக் கணக்கில் கூடி யிருக்கிறீர்கள்; இந்த எழுச்சி— உணர்ச்சி — உத்வேகம் — எல் லாம் நமது முன்னுள் தலைவர் சர். பி. தியாகராயர் நமக்கு அளித்த பிச்சை என்றே கூறு வேன்.

''செல்வக் குடியிலே பிறந்த அவர், தேய்ந்து வரும் திராவி டச் சமுதாயத்தைத் தட்டி எழுப் பாமல் இருந்திருந்தால், நாம் இவ்வளவு பெரிய அளவில் வளர்ந்திருக்க முடியாது!

''டாக்டர் டி. எம். நாயர், இந்தியாவில் மட்டுமல்ல — இங் கிலாந்திலேயும் நமது துன்பக் குரலை எழுப்பி இராவிட்டால, நாம் வளர்ந்திருக்கவே முடி யாது.

''பல தலைவர்கள் அன்று திராவிட சமுதாயத்திற்காகப் போராடினார்கள்: அவர்களுக் கெல்லாம் இந்த நேரத்தில் மனம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

என்று கூறி, பொதுத் தேர்தலில் பங்கு கொள்வது பற்றிக் குறிப் பிடுகையில், 'முற்போக்கு சக்தி களைத் தி. மு. கழகம் ஆதரித்து-- பணியாற்றி -- வெற்றி பெறப் பாடுபடும்' என்று தெளிவுபடுத் தினார்.

அதே நேரத்தில், கழகத்தின் ஆதரவை நாடுவோரிடம் உறுதி மொழியையும் கேட்டார்.

'திராவிட நாடு கொள்கையை ஆதரிப்பேன்; அதற்காக ஆதரவு தேடிப் பணியாற்றுவேன்; கழ கத்தின் திட்டங்களை நிறைவேற் றுவேன்'' என்று எழுத்து மூலம் உறுதி தந்தவர்களை மட்டுமே கழகம் ஆதரித்தது!







நமது தொண்டர்களின் தன் னலமற்ற உழைப்பால் நாடாளு மன்றத்திற்கு எட்டுப் பேர்களும், சென்னைச் சட்டமன்றத்திற்கு 43 பேர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

★

இரண்டாவது பொதுத் தேர் தலும், 1957-இல் வந்துவிட் டது.

நாம், இரண்டாவது பொது மாநில மாநாட்டை 1956-ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20-ஆம் நாட்களில் திருச்சி யில் நடத்தினோம்!

இம் மாநாட்டிற்குக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் தலைமை வகித்தார்; அண்ணா அவர்கள், மாநாட்டுத் தலைவரை வழிமொழிந்து, 'தம்பீ வா-- தலைமை ஏற்க வா! உன் ஆணைக்கு நாங்கள் எல்லாரும் அடங்கி நடப்போம்--வா' என்று அழைத்ததைக் கேட்டு நாடே வியப்பில் ஆழ்ந்தது!

''பதவி ஆசை கொண்டவன்; 'தலைவனாக வேண்டும்' என்று தனிக் கட்சி தொடங்குகிறான்- பேராசைக்காரன்'' என்றெல் லாம் ஒரு காலத்தில் பழிச் சொல்லை ஏற்ற அண்ணா அவர் கள், தாம் எவ்வளவு பெரிய சன நாயகவாதி என்பதை அப்போது புலப்படுத்தினார்.

தம்மை ஒரு சாதாரணக் கட் சித் தொண்டனாகவே எண்ணிச் செயல்பட்டார்!

'நாமேதான் கட்சி' என்று அவர் நினைக்கவில்லை! தம் முடைய தம்பிமார்கள் அனை வருக்கும் தக்க வாய்ப்பளித்துச் செயலாற்றும் முறையைக் கட்சி யில் முதன் முதலில் புகுத்தியவர் அவர்தான்!

1957-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில், கழகம் என்ன செய்ய வேண்டும் என்ப தைத் தீர்மானிக்கும் பொறுப்பை மக்கள் முடிவுக்கே விட்ட பெருமை தி. மு. கழகத்திற்கு மட்டுமே உண்டு!

'கழகம், தேர்தலில் போட்டி யிட வேண்டும்' என்று விரும்புவோர், சிவப்பு நிறப் பெட்டியிலும், 'கூடாது' என்

போர் கருப்பு நிறப்பெட்டியிலும் வாக்கு அளித்தனர்.

'தேர்தலில் கழகம் நேரடியாகப் போட்டியிட வேண்டும்' என்று 56,942 பேர்களும், 'வேண்டாம்' என்று 4,203 பேர்களும் வாக்கு அளித்தனர்.

இந்த சனநாயக முறையை வேறு எந்தக் கட்சியும் பின்பற்றியதில்லை; இந்த முடிவை விளக்கி அண்ணு பேசுகையில் குறிப்பிட்டார் :—

"தேர்தல் என்ருல், 'வெற்றி' என்ற சொல்லையும் பக்கத்திலேயே எழுத வேண்டும் என்று எந்த அரசியல் அகராதியும் சொல்லவில்லை; தேர்தல் என்பது — ஒரு சனநாயகக் கடமை; ஒரு பெண் பருவமடைந்து விட்டாள் என்ருல், 'மணவினைக்கு அவள் தயாராக இருக்கிருள்' என்பது எவ்வாறு உறுதிப்படுகிறதோ அதைப் போன்றதுதான் இதுவும் !"

"அமைச்சராக வேண்டும் -- பெரிய பதவி வகிக்க வேண்டும்" என்றெல்லாம் அண்ணு விரும்பவில்லை; அவருடைய விருப்பத்தைப் பற்றி அவரே கூறுகிருர் :—

"அமைச்சர் பதவி என்பது, கொளுத்திவிட்ட வாணம்; வாணத்தைக் கொளுத்தியதும், அது உச்சிக்குப் போகும்; சில விஞடிகள் தீப் பொறிகள் பூ போல சொறியும்; அடுத்த விஞடி அது வேகமாகத் தரையை நோக்கி விழும்; சிறுவர்கள் அதை எடுத்து -- மண்ணைப் போட்டுக் கெட்டித்து மண்வாணம் விடுவார்கள்.

"கடந்த 25 ஆண்டுகளில், இப்படி மண் வாணம் ஆகிவிட்ட 'மாஜி மந்திரிகளின்' கணக்கு எனக்குத் தெரியும்; அதனுல்தான், மந்திரி பதவி மீது எனக்கு ஆசை ஏற்படவில்லை!

"எனக்கு உங்கள் இதயத்தில் இடம் வேண்டும்; உங்கள் இதயங்களில் மட்டுமல்ல—உங்கள் பிள்ளைகள், பேரர்கள் இதயங்களிலும் எனக்கு இடம் வேண்டும்; அதுதான் வேண்டும் என்று பாடுபடுகிறேனே தவிர, மந்திரி பதவிக்காக அல்ல"

என்று பலமுறை அவர் சொல்ல நாம் கேட்டிருக்கிருேம்; என்ருலும், அவர் விரும்பாத பதவியும் அவருக்குக் கிடைத்தது--அவர் விரும்பிய புகழும் அவருக்குக் கிடைத்தது!

இப்படிப்பட்ட மனப்பான்மையை அவர் பெற்றிருந்ததால்தான், 1962-இல் கண்ட தோல்விக்குப் பிறகு, 'தோல்வி கண்டு உள்ளம் துவளாமல் இருந்ததால்தான் கழகம் வளர முடியும்; தோற்றுவிட்டதால் துணியை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வேறு இடத்திற்குப் போய் விடுவார்களேயானுல், எந்தக் கட்சியும் வளர முடியாது' என்று கூறினுர்.

பண பலம்—
பத்திரிகை பலம்—
அதிகார பலல்—
தொழில் அதிபர்கள் ஆதரவு—
பணக்காரர்கள் ஆதரவு—
மதத் தலைவர்கள் ஆதரவு—

ஆகிய இவை அனைத்தும் இல்லாமல் முதன் முறையாகத் தி. மு. கழகம இரண்டாவது தேர்தலில் நேரடியாகப் போட்டியிட்டது'

உண்டியல்கள் ஏந்தி — சிறப்புக் கூட்டம் நடத்தி— நாடகம் ஆடி--சொற்ப நிதியைச் சேர்த்து கழக வேட்பாளர்களின் வெற்றிக்காகக் கழகம் பாடுபட்டது!

தொண்டர்கள்—தாங்களே போட்டியிடுவது போல் 'பந்தயக் குதிரைகளைப்போல ஓடியாடிச் சுறுசுறுப்பாகப் பணியாற்றினர்!

கழக வேட்பாளர்கள் அனைவருமே எளிய ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; ஆலை அதிபர்களாகவோ—மோட்டார் மன்னர்களாகவோ—தொழில் அதிபர்களாகவோ—எவரும் இருக்கவில்லை!

தேர்தலிலும் நாம், பல புதுமைகளைச் செய்து காட்டிய பெருமையைப் பெற்ருேம்!

முதன் முறையாக வாக்காளர்களுக்குத் தேர்தல் அறிக்கை



மூலம் கொள்கை விளக்கம் அளித்தோம்!

அரசியல் விளக்கங்களுடன் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோம்!

அரிய கருத்துக்களைக்கொண்ட சுவரொட்டிகளை வெளியிட்டோம்!

கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினுேம்!

பணியாற்றிய தொண்டர்கள், நடமாடும் கருத்துக் கருவூலங்களாக விளங்கினர்!

நமது வேட்பாளர்கள் — பஞ்சையாளுலும், பராரியாளுலும் —பெரும் பணக்காரர்களுக்கு எதிராகத் தேர்தலில் நேர்மையாக ஈடுபட முடிந்தது.

ஓட்டுக்குக் காசு கொடுக்கும் ஈனச் செயலை நம்மவர் புரியவில்லை!

நமக்குக் கிடைத்த ஓட்டுகள் வாங்கப்பட்டவை அல்ல; அவை நமது இலட்சியத்திற்குக் கிடைத்தவை!

இவர்களை யார் நம்புவார்கள்?—
இவர்களுக்கு என்ன தெரியும்?—
இவர்கள் எப்படி வெற்றி பெற முடியும்?—

என்றெல்லாம் கேட்டவர்கள், பின்னர், திக்குமுக்காடினர்!

150 இடங்களில் போட்டியிட்டு 15 இடங்களில் தி. மு. க. வெற்றி பெற்றது!

'போட்டியிடவே ஆள் கிடைக்காது' என்று கேலி பேசியவர்கள்—'ஒருவர்கூட வெற்றி பெற மாட்டார்கள்' என்று ஏளனம் பேசியவர்கள், தேர்தல் முடிவுக்குப்பின், '15 பேர்கள்தானே வெற்றி பெற்றனர்' என்று நையாண்டி செய்ய முற்பட்டனர்!

வேகமாக ஓடுகின்ற குதிரையைச் சவுக்கால் அடிப்பது, குதிரை மேலும் வேகமாக ஓடச் செய்வதற்குத்தான்; அதைப் போலவே எதிரிகளின் ஏளனம் நமக்குப் பயன்பட்டது!

நாம் பெற்றது 15 இடங்கள் என்ருலும், நமக்கு வாக்கு அளித்தவர்களோ 17 இலட்சம் பேர்!

அறிஞர் அண்ணு, சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவரானுர்; முதல் பேச்சிலேயே, 'நாங்கள் ஒரு விசித்திரமான அரசியல் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்; அதற்குக் காரணம், நாட்டில் நிலவும் விசித்திர நிலைமைதான்' என்று குறிப்பிடத் தவறவில்லை!

நாம் சட்ட மன்றத்தில் நுழைந்த பின்னர்தான், அங்கு 'நல்ல தமிழ் ஒலிக்கத் தொடங்கியது' என்று 'ஆனந்த விகடன்' ஏடே எழுதிற்று!

சட்ட மன்ற விவாதங்களுக்கு முக்கியத்துவம் தந்து, பெரும் அளவில் செய்திகளை வெளியிட ஏடுகள் பலவும் முனைந்தன!

கழக உறுப்பினர்கள் 15 பேர்தான் என்ருலும், எந்தப் பிரச்சினையிலும் தெளிவாகப் பேசும் ஆற்றலை ஒவ்வொருவரும் பெற்றிருந்ததைக் கண்டு நாடு வியந்தது!

கொட்டாவி விடும்போது மட்டும் வாயைத் திறக்கும் விபரீத அரசியல்வாதிகளாக நம்மவர் எவரும் இருக்கவில்லை!

1959-ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள், தி. மு. கழகத்திற்கு மற்ருெரு சோதனையாக அமைந்தது; இத் தேர்தலில் பல இடங்களில் நமது கழகம் உள்ளாட்சி மன்றங்களைக் கைப்பற்றியது.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில், கழகம் 1,48,712 வாக்குகளையும், காங்கிரசு 1,43,783 வாக்குகளையும் பெற்றது.

90 இடங்களில் மட்டுமே போட்டியிட்ட கழகம், 45 இடங்களைப் பெற்றது! 100 இடங்களில் போட்டியிட்ட காங்கிரசு 37 இடங்களை மட்டுமே பெற்றது!

பெருவாரியான பலத்தைப் பெருத நிலையில், தி. மு. கழகம், எங்ஙனம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுச் செயல்படப் போகிறது என்பதை மக்கள் மன்றம் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியது!

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியைத் தேடித் தந்த நமது கலைஞருக்கு, அண்ணு அவர்கள், தாமே கடைக்குச் சென்று கலைஞர் விரலுக்கு ஏற்ற தங்க மோதிரத்தைச் சொந்தப் பணத்தில் வாங்கி வந்து -- கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் அணிவித்தார்கள்.

கழக நகராட்சி உறுப்பினர்கள், நீதிக் கட்சித் தலைவர்—திராவிடத் தந்தை—வெள்ளுடை வேந்தர் — தியாகராயரின் சிலைக்கு மாலை அணிவித்து, மன்றத்திலே அமர்ந்தனர்.

சமுதாயத்திலே உயர்ந்தவர்கள்—செல்வாக்குப் பெற்றவர்கள்—பெரிய பணக்காரர்கள் வகித்து வந்த 'மேயர்' பதவியில், மிக மிக எளிய குடும்பத்தில் பிறந்த நமது கழகத் தோழர்கள் அமரும் புதிய நிலையை முதன் முதலில் ஏற்படுத்தியவர்கள் நாம்!

★

மூன்ருவது பொதுத் தேர்தல், 1962-இல் வந்தது; நமது கழகத்தின் மூன்ருவது பொது மாநில மாநாடு, 1961 சூலைத் திங்கள் 13, 14, 15, 16-ஆம் நாட்களில் மதுரை -- திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது.

மீண்டும் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அண்ணு அவர்கள், இம் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்கள்.

எந்த மதுரையில் நமது மாநாட்டுப் பந்தலை எதிரிகள் தீயிட்டுச் சாம்பலாக்கினுர்களோ —எந்த மதுரையில் கருப்புச் சட்டை அணிந்த நமது தோழர்களைத் தடி கொண்டு தாக்கினுர்களோ—அதே மதுரையில்தான், எங்கு காணினும் நமது கழகக் கொடிகள்--அலங்கார வளைவுகள்--எண்ணி முடியாத அளவிற்குக் கழகத் தோழர்களின் கூட்டம் காட்சி தந்தது!

மதுரை நகரிலிருந்து திருப்புரங்குன்றம்வரை மாபெரும் ஊர்வலம்!

நமது வளர்ச்சி என்ன—நமது சாதனை என்ன என்பவைகளை, நாமே கண்டு வியக்கும் நிலை!

வெளிநாடுகளிலிருந்தெல்லாம் செய்தியாளர்கள் திரண்டிருந்தனர்!

மைசூரிலிருந்து நீதிபதி மேடப்பா வந்திருந்தார்.

நல்ல வயலுக்கு அடையாளம் —நல்ல அறுவடை!

நல்ல விளக்கிற்கு அடையாளம்—நல்ல வெளிச்சம்!

நல்ல கட்சிக்கு அடையாளம்— மக்கள் தரும் ஆதரவு!

அந்த ஆதரவைப் படிப்படியாக-- முறையாக -- மனநிறைவு பெறத்தக்க அளவில் நமது கழகம் பெற்றிருப்பதை, உலகறியச் செய்தோம்!

மக்களுக்கு அறிமுகமாகாதவர்களையெல்லாம் நமது கழகம் தேடிப் பிடித்துத் தேர்தலில் போட்டியிடுமாறு செய்யவில்லை!

மக்களின் நல்வாழ்வையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றிய தோழர்கள்தான் கழகத்தின் சார்பில் தேர்தலில் வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்!

ஐந்தாண்டுக் காலம் எதிர்க் கட்சியினராகச் சட்டமன்றத்தில் அமர்ந்து, ஆட்சியினரைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்து -- பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டி -- தூய சனநாயக முறையில் பணியாற்றியவர்கள் நாம்; இருந்தும், 'தி. மு. க. என்ன செய்து விட்டது' என்று விசித்திரமாகக் கேள்வி எழுப்பினர்!

எழுதும் கையைப் பார்த்து, 'உனக்கு நடக்கத் தெரியுமா' என்ருே, காலைப் பார்த்து, 'உனக்கு எழுதத் தெரியுமா' என்ருே கேட்பது புத்திசாலித்தனமன்று!

அதைப் போலத்தான், எதிர்க் கட்சியினராக இயங்கிய நம்மைப் பார்த்து, 'என்ன செய்து விட்டீர்கள்' என்று கேட்டது மாகும்!

ஏழைகளை நம்பி--உழைப்பவர்களை நம்பி—பாட்டாளிகளை நம்பி —தொழிலாளர்களை நம்பி—

நல்லவர்களை நம்பித்தான் நாம் தேர்தலில் போட்டியிட்டோம்!

1957 தேர்தலில் 15 பேர் மட்டுமே வெற்றி பெற்றுச் சட்டமன்றத்தில் இடம் பெற்றோம்.

1962-இல் மேலும் 35 பேர் வெற்றி பெற்று — மொத்தம் 50 பேர் கழகத்துக் குரலைச் சட்டமன்றத்தில் எதிரொலித்தோம்!

1962-ஆம் ஆண்டுத் தேர்தலில், அறிஞர் அண்ணா அவர்கள் வெற்றி வாய்ப்பை இழக்க வேண்டியதாயிற்று; தமது தோல்வியைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் சொன்னார்:—

''நான் சட்டசபையிலிருந்து கொண்டு பணியாற்றுவதைத்தான் தடுக்க முடியுமே தவிர, கழகத்தை—அதன் இலட்சியத்தைத் தடுத்துவிட முடியாது; வெற்றி பெற்றவர்கள் எண்ணத்திலும்—பேச்சிலும் நான் இருக்கிறேன்; எனவே, பெரிய தோர் இழப்பு ஏதும் கழகத்திற்கு ஏற்பட்டு விடவில்லை.''

கழகத்திற்கு வாக்கு அளித்த 34 இலட்சம் வாக்காளர்களுக்கும் அண்ணா நன்றி தெரிவித்துக் கொண்டார்.

சட்ட மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவராக நாவலர் பணியாற்றினார்; அவரது தலைமையின் 50 பேர் சிறந்த எதிர்க் கட்சியினராக நற்பணியாற்றியதன் விளைவு--1967 தேர்தலில் வெளிப்பட்டது; ஆம்; நாம் ஆளும் கட்சியினராகி விட்டோம்!

இந்த இடைக்காலத்தில் அண்ணா அவர்கள், நாடாளு மன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது, கழகத்திற்குப் புதிய பொலிவையும் -- கூடுதலான செல்வாக்கையும் அளித்தது; நமது குரல் டில்லியிலும் ஒலித்தது; நாடு முழுவதிலும் பரவியது; அயல்நாடுகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியது!

இந்திய எல்லையைச் சீனர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதன் விளைவாக, இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலைக்கே சோதனைக் காலம் ஏற்பட்டது.

அரசின் போர் முயற்சிக்கு நிபந்தனையற்ற முழு ஆதரவை நமது கழகம் வழங்கியது; இதனால், பண்பட்ட அரசியல்வாதிகளின் பாராட்டைப் பெற்றோம்; எதிர்க் கட்சியினராக இருந்தும் நாம் போருக்கு நிதி திரட்டினோம்; மக்கள் அணிவகுத்து நின்று அண்ணா அவர்களிடம் நிதி வழங்கினர்!

நம்மைத் தவிர வேறு எவரும் இந்தப் புதிய முறையைக் கையாண்டதாக இந்திய வரலாற்றில் இல்லை!

சீனர் படையெடுப்பைக் கண்டித்து வானொலியில் பேசினார் அண்ணா; அவரது பேச்சை, வானொலிப் பெட்டிகள் இருந்த இடங்களிலெல்லாம் மக்கள் திரண்டு நின்று--கேட்டு மகிழ்ந்தனர்!

★

நான்காவது பொதுத் தேர்தலும் 1967-இல் வந்தது!

நமது கழகத்தின் நான்காவது பொது மாநில மாநாடு, 1966 டிசம்பர் 29, 30, 31, 1967 சனவரி ஆகிய நாட்களில் நடைபெற்றது.

இம் மாநாடு, சென்னை—விருகம்பாக்கத்தில் வெகு சிறப்பாக அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது; மக்கள் இம் மாநாட்டினை, தங்கள் குடும்பத்தின் பெரு விழாவாகக் கருதிப் பெருந் திரளாகக் குவிந்தனர்; வரலாறு கண்டிராத அளவுக்கு ஏழு மைல் நீளமுள்ள மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

கழகச் செய்திகளை உள் பக்கத்தில் நான்காவது பத்தியிலோ--ஐந்தாவது பத்தியிலோ -- தலைப்புக்கூட இல்லாமல்--ஓரிரு வரிகளில் மட்டுமே அவசியம் ஏற்படும்போது வெளியிட்டு வந்த ஏடுகள்கூட இம் மாநாடு பற்றிய செய்திகளைப் பெரிய அளவில் வெளியிட்டன என்றால், கழகத்தின் வளர்ச்சியைப் பற்றி வேறு என்ன சான்று கூற முடியும்?

காலம் மாறிவிட்டது; 'நாட்டின் நாயகர்கள் நாம்தான்' என்பதை அம் மாநாடு படம் பிடித்துக் காட்டியது!

இம் மாநாட்டில், அகில இந்திய சுதந்திராக் கட்சித் தலைவர் ஆச்சாரியாரும், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களும், தமிழரசு கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களும், நாம் தமிழர் கட்சித் தலைவர் ஆதித்தனார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாடகம் நடத்தியும்—சிறப்புக் கூட்டங்கள் நடத்தியும்—உண்டியல் ஏந்தியும்—கழகத் தோழர்களிடமும் வசூலித்த பதினெரு இலட்சம் ரூபாயைத் தேர்தல் நிதியாகக் கலைஞர் அவர்கள், அண்ணா அவர்களிடம் இம் மாநாட்டில் அளித்தார்.

'வரலாற்றின் புதிய கட்டத்தை நோக்கிக் கழகம் வந்துவிட்டது' என்பதை மக்கள் உணர்ந்தனர்!

தி.மு. கழகம்—மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகி விட்டது!

சட்டமன்றத் தேர்தலில் 137 இடங்களையும், நாடாளுமன்றத் தேர்தலில் 25 இடங்களையும் தி.மு. கழகம் பெற்றது!

உதயசூரியன் ஆட்சி மலர்ந்து விட்டது! கழகம் ஆளும் கட்சியாகிவிட்டது! அண்ணா முதல்வரானார்!

தமிழ்நாட்டின் முதல்வரானதும், வானொலியில் பேசுகையில் அண்ணா அவர்கள் கூறினர்:—

''இலட்சியம் மிகப் பெரியது; நான் சாமான்யன்; ஆனால் உங்கள் தோழன்; ஆகவே, என்னுடைய திறமையை நம்பியல்ல—உங்கள் எல்லாருடைய திறமையையும் நம்பி தான் இந்தப் பணியில் ஈடுபடுகிறேன்!''

அண்ணா பதவியேற்றதும், நாடெங்கிலும் மக்கள், புத்தாட்சி மலர்ந்ததைக் கொண்டாடும் வகையில் மகிழ்ச்சி விழா கொண்டாடினர்!

மக்களின் கருத்தை ஏற்று—மக்களுக்காக அரசு செலுத்துவது சனநாயகத்தின் இலட்சணம் ஆகும்; அதனை நடைமுறைப் படுத்தும் வகையில், நீண்ட நாட்களாக மக்கள் வற்புறுத்திய பல திட்டங்களைக் கழக ஆட்சி நிறைவேற்றத் தொடங்கியது!

சென்னை மாநிலத்திற்கு, 'தமிழ்நாடு' என்று பெயரிடப்பட்டது.

'செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்பதை, 'தமிழக அரசுத் தலைமைச் செயலகம்' என்று மாற்றப்பட்டு--பெயர்ப் பலகையும் பொருத்தப்பட்டது!

''அதெப்படி முடியும் -- அரசு 'திவால்' ஆகிவிடும் -- விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்--ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடவே முடியாது; வல்லவர்கள் ஆண்ட காலத்தில் முடியாதது இவர்களுடைய ஆட்சியில் எப்படி முடியும்? இதெல்லாம் ஏழைகளை ஏமாற்றும் தந்திரம்'' என்றெல்லாம் பிதற்றினர், சிலர்!

அறிஞர் அண்ணா அவசரக்காரருமல்லர்--ஆழம் தெரியாமல் காலைவிடும் அப்பாவியுமல்லர்!

சொன்னதைச் செய்யும் உறுதியும்—எதையும் சிந்தித்து முடிவெடுக்கும் அறிவாற்றலும் பெற்றவர் என்பதை மெய்ப்பித்தார்!

'ஏழைகளுக்காகவே இந்த அரசு' என்பதை மெய்ப்பித்துக் காட்டினார்!

ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடப்பட்டது! நாடே வியந்தது!

போரணி கண்டு பேரணி நடத்திய கழகம், 'சீரணி'யை முதன் முதலாக அமைத்து--சமுதாயத்திற்கு இளைஞர்களும் ஆர்வத்துடன் தொண்டாற்ற வழிவகுத்தது!

அரசினரால் மட்டுமே சமுதாயம் முன்னேற முடியாது என்பதனை முதன் முதலாக வலியுறுத்தி -- அதற்காகப் பணியாற்றியது கழக அரசு!

சிக்கனமாகவும் -- ஆடம்பரமில்லாமலும்--பகுத்தறிவுக்கு ஒத்த முறையில் நடைபெறும் சமூகச் சீர்திருத்தத் திருமணங்களைச் சட்டப்படி செல்லுபடியாக்கிய பெருமை கழக அரசுக்கே உண்டு!

சூதோ, சதியோ-வேறு எதன் காரணமாகவோ, ஏழை மக்கள் குடியிருக்கும் குடிசைகள் அடிக்கடி தீப் பற்றி எரிவதைக் கண்டு, தீயினால் பாதிக்கப்படாத குடியிருப்புகளைக் கழக அரசே கட்டித் தந்தது!



உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி--தமிழர்களுக்குத் தனிப் பெருமையைத் தேடித் தந்தது--கழக அரசு!

அருமையான திட்டங்கள் பல வற்றைச் சொல்லி, அண்ணா, 'தயங்காதே-மயங்காதே தமிழா; வேலை இருக்கிறது நிரம்ப' என்று அறைகூவல் விடுத்தார்!

தூத்துக்குடியில் — காமராஜர் பெயரில்—கல்லூரி ஒன்று நிறுவ, மத்திய அரசிடம் 50 ஏக்கர் நிலம் வேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது; 'இரண்டரை இலட்சம் ரூபாய் தர வேண்டும்' என மத்திய அரசு கூறிவிட்டது; மாநில முதல்வர் அண்ணா அவர்கள் தலையிட்டு, '100 ஆண்டுக் காலத்திற்கு 100 ரூபாய் வாடகை' என்ற அளவில் நிலத்தினைப் பெற்றுத் தந்தார்!

''காந்தி வழியில் அண்ணா ஆட்சி நடைபெறுகிறது'' என்று மத்திய அமைச்சர் ஜெகஜீவன் ராம் பாராட்டினார் என்றால், அந்தப் பெருமை கழகத்தையே சாரும்!

தமிழகம் உண்மையான சமதர்மப் பூங்காவாக மலரத் தொடங்கியது—அண்ணா ஆட்சியில்!

''தகப்பனின் சட்டையை எட்டு வயதுப் பையன் அணிந்து கொண்டது போலத்தான் நாம் பதவியில் இருப்பது'' என்று அண்ணா அடக்கத்தோடு கூறினார்--பதவியேற்றவுடன்! ஆனால், இரண்டே ஆண்டுகளில் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் புரிந்தார்--அகிலத்தின் கவனத்தை ஈர்க்கச் செய்தார்!

தமிழகத்தின் புகழ், கடல் கடந்து பரவியது!

இன்னல்கள் —தொல்லைகள் — ஏசல்கள் — சதிகள் — எதிர்ப்புக்கள் அத்தனையும் ஏற்று அண்ணா அவர்கள், கழக அரசுக்கு அரிய சிறப்புக்களைத் தேடித் தந்தார்!

நாட்டு மக்களின் நல்வாழ்விற்கான அரிய திட்டங்களைத் தீட்டித் தந்தார்!

அயராது பணியாற்றிவந்த நேரத்தில்தான் இயற்கை சதி செய்துவிட்டது!

இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் 'தெய்வமாக' வீற்றிருந்த அண்ணா அவர்களை நாம் இழக்க நேரிடுவிட்டது!

''தம்பிமார்கள் வேறு—நான் வேறு என்று பிரித்துப் பார்க்கிறார்கள்; தம்பிமார்கள் எல்லாம் சேர்ந்த உருவம்தான் நான்; தம்பிமார்களை எல்லாம் பிரிக்கா



மல் சேர்த்துப் பார்த்தால் என்னைக் காண்பீர்கள்''

என்று அண்ணா அவர்கள் அடிக்கடி கூறி வந்ததைச் சிலர் மறந்து, 'இனி கழகம் ஏது-- ஆட்சி நிலைப்பதேது' என்றெல்லாம் ஆருடம் கணிக்கத் தொடங்கினர்!

அண்ணாவின் தம்பிமார்கள் ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருந்த நேரத்தில், 'அடுத்து நாம்தான் ஆட்சியைக் கைப்பற்றுவோம்; இழந்த பதவியை மீண்டும் பெற்று விடுவோம்' என்று தப்புக் கணக்குப் போட்டுச் சிலர், 'அரசியல் சதுரங்கம்' ஆடினர்!

எந்தவிதமான இழப்புக்கும் ஆளாகாது. கழகம், கலைஞரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயலாற்றத் தொடங்கிவிட்டது!

அண்ணா வகுத்த பாதையில்—டாக்டர் கலைஞர் விழிப்புடன் செயலாற்றி, வியக்கத்தக்க சாதனைகளைப் புரிந்து -- இந்தியத் துணைக் கண்டத்திலேயே நல்ல முறையில் -- நிலையான எதிர்க்கட்சி ஆட்சியை நடத்திக் காட்டி வருகிறார்!

கலைஞர் ஆட்சிக்கு எதிராக உருவாகிய எதிர்ப்புக்கள் அனைத்தும் தோல்வியைத் தழுவின!

தோளோடு தோள் நின்று பணியாற்ற வேண்டியவர்கள், எதிரிக்கு வாரிசாகி -- விபரீத அரசியல் விளையாட்டு ஆடினர்!

எங்கும் தமிழ் மணம் கமழச் செய்தார் கலைஞர்!

எதிலும் தமிழ் பரவிடச் செய்தார்!

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளித்தார்!



குடிசைவாழ் மக்களின் குறைகளைப் போக்கினர்!



இலட்சக்கணக்கான ஏழை மக்களுக்குக் கண்ணொளி வழங்கினர்!

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமையை அகற்றி--கை ரிக்



ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்ஷா வழங்கினர்!

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருக்கு உயர் நீதிமன்றத்தில் நீதிபதி பதவி கிடைக்க வழிகோலினர்!

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தங்கப்



பதக்கம் வழங்கத் திட்டம் தீட்டிச் செயல்படுத்தினர்!

'டால்மியாபுரம்' என்ற பெயரைக் 'கல்லக்குடி'யாக மாற்றினர்!



ஆலயங்களில் அரிசன மக்களும் அர்ச்சகர்கள் ஆகும் தகுதியைத் தேடினர்!



அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கினர்!

19,000 அரிசன காலனிகளுக்கு மின்னொளி வழங்கினர்!

நலிவுற்ற பஞ்சாலைகளை அரசே ஏற்றுத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கச் செய்தார்!

விவசாயிகளுக்கு நில வரியை ரத்து செய்தார!

விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளித்தார்!



நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப் பட்டா வழங்கினர்!



பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டபோது, ஆறு கோடி ரூபாய் போர் நிதி திரட்டி — மத்திய அரசிடம் அளித்தார்!

தமிழகத்திற்கெனத் தனியாகத் திட்டக் குழு அமைத்துத் தந்தார்!

தமிழகத்தில் தனியாகக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை உருவாக்கினர்!

குடிநீர் -- வடிகால் வாரியம் அமைத்து எல்லோருக்கும் தண்ணீர் வசதி கிடைக்கச் செய்தார்!



தில்லையாடி வள்ளியம்மை நகர் அமைத்தவர்!

பூம்புகார் அமைத்தவர்!

15 ஏக்கர் உச்சவரம்பு நிர்ணயித்து--நடைமுறையிலிருந்த விதிவிலக்குகளை ரத்து செய்து--



உபரி நிலங்களை ஏழைகளுக்கு விநியோகம் செய்தவர்!

கூட்டுறவு வங்கிகளை அமைத்து விவசாயிகட்குக் கடன் உதவி தர ஏற்பாடு செய்வதர்!

திடீரென மரணமடையும்



அரசு ஊழியர் குடும்பத்திற்கு உடனடியாக ரூ. 10,000 தர வழி செய்தவர்!

தியாகிகளின் குறைகளைப் போக்கி மானியம் அளித்தவர்!

ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு அளித்நவர்!

அரசு ஊழியர்களின் குறைகளை ஆராய்ந்து புதிய சலுகைகள் பல அளித்தவர்!

மனு நீதித் திட்டத்தை நடை



முறைப்படுத்தி--மக்களின் குறை

களைக் களைந்தெறிய வழிகண்டவர்!

புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக்கியவர்!

உடல் ஊனமுற்றவர்களுக்கு வாழ்வளித்தவர்!



அண்டை மாநில மக்கள் உணவுப் பற்றாக்குறையால் அவதி



யுற்ற நேரத்தில், உணவுத் தானியம் அளித்தவர்!



பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கியவர்!

கவனிப்பாரற்றுக் கிடந்த மிகவும் பின்தங்கிய மக்களுக்குச் சலுகைகளைத் தந்தவர்!

இராஜராஜ சோழனுக்கும்—வள்ளுவருக்கும் — கட்டபொம்ம



னுக்கும் நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தியவர்!

கூவம் ஆற்றைச் சீர்படுத்தியவர்!

200 ஆண்டுகளாக நீடித்திருந்த குதிரைப் பந்தயச் சூதாட்டத்தை ஒழிக்க வழிகோலியவர்!

பரிசுத் திட்டத்தை ரத்து செய்தவர்!

1971-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில், கழகத்திற்கு மேலும் வலிவைத் தரத்தக்க வெற்றிகளைக் குவித்தவர்! 244 பேர்கள் கொண்ட சட்டமன்றத்தில் தி.மு. கழகத்திற்கு 184 இடங்களை — அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பின்னர்—கைப்பற்றச் செய்து, இந்த மாநில மக்களின் பேராதரவை —அண்ணா அமைத்த அரசுக்குத் தேடித் தந்தவர்!

திக்கற்ற வயோதிகர்கள் — விதவைகள் — அனாதைகள்— நாதியற்றவர்களின் நல்வாழ்விற்காக நல்ல பல திட்டங்களை உருவாக்கி, கழக அரசுக்குப் பொலிவையும், வலிவையும் தேடித் தந்தவர்!

இன்னும் எண்ணற்ற எத்தனையோ நல்ல பல காரியங்களைச் செய்து, பேரறிஞர் அண்ணாவுக்கும் — கழகத்திற்கும்—இந்த நாட்டு மக்களுக்கும் கூடுதலான மதிப்பைத் தேடிய வரலாற்று நாயகனாக விளங்குபவர் கலைஞர்!

"தேர்தலுக்காக அல்ல கழகம்; அது ஆற்ற வேண்டிய பணி அதிகம்; இன்னும் ஐம்பது ஆண்டுக் கடமை நமக்கு உண்டு!

"தமிழகம் தரணியில் தலைநிமிர்ந்து வாழ வகை செய்வீர்; அந்த வகை செய்யும் பொறுப்பும், காலத்தின் கரத்தால் நமக்குத் தரப்பட்டிருக்கிறது."

என்று நம்மை ஆளாக்கிய அண்ணன் கூறியது, இன்னும் நமக்கு நினைவில் இருக்கிறது!

அண்ணா குறிப்பிட்ட அந்த 50 ஆண்டுகளில் ஆற்ற வேண்டிய நல்ல தொண்டினை கலைஞர் 8 ஆண்டுக்கால ஆட்சியில் ஆற்றியிருக்கிறார் என்பது உலகறிந்த உண்மை!

கலைஞர் ஆட்சியில் தமிழகம் தலைநிமிரத் தொடங்கிவிட்டது! காலத்தின் கரத்தால் கலைஞரிடம் தரப்பட்ட பொறுப்பை அவர் திறமையோடு ஆற்றிவருவதை இன்று அயல் நாட்டவரும்--நல்ல ஏடுகளும், கடல் கடந்த நாடுகளிலும் நமது கழகம் பற்றி ஆராய்ந்து நூல்கள் பல வெளியிடும் அறிஞர்களும் வியந்து பாராட்டி வருகின்றனர்!

இந்திய அரசியலில் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் நமது கழகம் உரிய பங்கினை--உயர்ந்த முறையில்--செலுத்திவிட்டது!

கோட்டையோடு முடிவதல்ல நமது கழகத்தின் பணி!

நாம் மேற்கொண்டுள்ள பயணம் வெறும் பொழுது போக்குக்காகவும் அன்று!

நமது பயணம் இலட்சியப் பயணம்!

நாம் படைக்கும் வரலாறு இலட்சிய வரலாறு!

நாம் காண விரும்புவது, உண்மையான சமதர்மச் சமுதாயம்!

எல்லாரும் இன்புற்று வாழ வழி செய்வதே நமது கழகத்தின் முக்கிய நோக்கம்!

பெருகிவரும் பிற்போக்குச் சக்திகளையும், பாசிச வெறியர்களையும் விரட்டும் ஆற்றலை நமது கலைஞர் தலைமையில் தமிழகம் பெற்றிருக்கிறது!

மக்களுக்குத் தெளிவாக கருத்துக்களை எடுத்துக் கூறி — அவர்களின் அறியாமையைப் போக்கி உண்மையான -- உயர்ந்த ஜனநாயகம் வேரூன்றிடச் செய்வதே நமக்கு இன்றுள்ள முக்கியமான கடமையாகும்.

எது வரினும்—என்ன நேரிடினும்—நாம் நமது இலட்சியப் பயணத்தைத் தொடருவோம்! நமது தாய்நாடு சிறப்புறப் பாடுபடுவோம்!

வாழ்க தி. மு. க. — ஆயிரம் ஆண்டுகள்!

தொடரட்டும் கலைஞரின் ஆட்சி—பல்லாண்டு! ★




சாதனைச் செம்மல் சரித்திர நாயகன்
தானைத் தலைவன் தமிழகக் காவலன்
டாக்டர் கலைஞர் தலைமை ஏற்கும்
இம்மாநில மாநாடு நானிலம் போற்றிட
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

மேட்டுப்பாளையம் கூட்டுறவு
விற்பனைச் சங்கம் லிமிடெட்,
மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்.

தொலைபேசி எண்: 538

கிளைகள்:
டெல்லி — அன்னூர் — சிறுமுகை.

மு. வேலுசாமி,
செயலாளர்.

என். எம். பழனிசாமி,
தலைவர்.



நீலகிரி கூட்டுறவு விற்பனைச்
சங்கம் லிமிடெட்.

நெ.கே. 708

தலைமை அலுவலகம்:
உதகமண்டலம்

கிளைகள்:
மேட்டுப்பாளையம்,
கூடலூர்,
கோத்தகிரி

1. நீலகிரி மாவட்டத்தின் உருளைக்கிழங்கு மகசூலில் 50 சதவீதத்திற்குமேல் விற்பனை செய்து வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 350 இலட்சத்திற்கும் அதிக மதிப்பில் உருளைக்கிழங்கு விற்பனை செய்கிறது.
2. நீலகிரி மாவட்டத்திலுள்ள சுமார் 100 கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் 10,000 தனி நபர் உறுப்பினர்களுக்கும் இரசாயனக் கலப்பு உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் வினியோகித்து வருகிறது. ஆண்டொன்றுக்கு வினியோகித்து வரும் விவசாயத் தேவைகளின் மதிப்பு ரூ. 150 இலட்சத்திற்கும் அதிகமாகும்.
3. உதகமண்டலத்திலும், மேட்டுப்பாளையத்திலும் சொந்தமாக உரக் கலவை தயார் செய்து வழங்குவதுடன், மேட்டுப்பாளையத்தில் தேவையான கிடங்கு வசதிகளுடன் உருளைக்கிழங்கு விற்பனை நடந்து வருகிறது.
4. உதகைக் கிளையும், மேட்டுப்பாளையம் கிளையும், மலைக் காய்கறிகள் விற்பனையும் செய்துவருகின்றன.

எம். தேவராசன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.,
தலைவர்.

# அண்ணாவும் எழுத்தாளர் மன்றமும்

தந்தை பெரியாரிடமிருந்து நாம் பிரிந்த சிறிது காலத்தில், மதுரையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

மதுரை அழகரடிப் பகுதியில் உள்ள சுந்தரம் தியேட்டர் என்ற தகரக் கொட்டகை—அப்போது தான் அதைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்; மேலே உடைந்த தகரங்களும், தரையில் மணலுமான கொட்டகை அது; அந்த இடத்தில்தான் அந்தக் கூட்டம் நடைபெற்றது.

தி. க. மாநாடு தீப்பற்றி எரிந்ததே—அந்த மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த பு. மனோகரன் போன்ற கழக முக்கியத் தோழர்கள் எல்லாம் இருந்தார்கள்.

1949 தொடக்கம் எனக் கருதுகிறேன்; அண்ணா அவர்கள், உள்ளூர்த் தகராறுக்காக அழுதார்கள்!

அண்ணா அவர்கள்—பெரியாரின் நடவடிக்கைகள் பற்றியும், 'நாம் கழகம் அமைப்போமா -- வேண்டாமா' என்பது பற்றியும் பேசினார்கள்.

அன்றுதான் நான் முதன் முதலாக அண்ணா அவர்களைக் கண்டேன்; அவரின் சீர்திருத்தக் கொள்கைகள் என் மனத்தில் பதிந்தன!

நாளடைவில், பார்ப்பனரல்லாதார் உணர்வு கொண்ட பல அலுவல்களில் பணிபுரியும் மத்தியதர நண்பர்களைக் கொண்டு, Y.M.D.A. (Young Men Dravidian Association) என்ற அமைப்பை உருவாக்கினோம்; அதன் தலைவராக டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியனாரின் மருமகன் திரு. கணேசன் எம்.ஏ., பி.எல். அவர்கள் இருந்தார்கள்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் அவர்களை அழைத்துப் பொங்கல் விழா நடத்தி -- பொன்னாடை அணிவித்து -- கணையாழி ஒன்றும் பரிசாக அளித்தோம்.

அதே போன்று, தமிழ்ப் பேரறிஞர்கள் அனைவரையும் அழைத்துப் பாராட்டி இலக்கியக் கூட்டம் நடத்துவது ஒன்றே இதன் கொள்கையாக இருந்தது.

**1957**-இல் ஒரு நாள்; அண்ணா அவர்கள், டாக்டர் அருணாசலம் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்தபோது, நண்பர் பு. மனோகரன் போன்றவர்கள், சென்னை எழுத்தாளர் சங்கத்தைப் பற்றிக் கேட்டார்கள்; அந்த நேரத்தில் தான், 'திராவிட நாடு' இதழில் என்னுடைய சிறு கதை ஒன்று வெளியாகியிருந்தது; ஈழத்து அடிகளால், 'தொடர்ந்து இது போன்ற சிறு கதைகளை எழுதி அனுப்பவும்' என்று எழுதப்பட்டு—அண்ணா அவர்கள் கையொப்பமிட்டிருந்த அஞ்சல் அட்டை எனக்கு வந்த நேரம்; என் வாழ்வில் கிடைத்த பெரிய கருவூலமாக அதனைக் கருதினேன்.

அறிஞர் அண்ணா அவர்களால், நாமும் ஓர் எழுத்தாளன் என்ற சான்றிதழைப் பெற்றுவிட்டோம் என்ற பெருமையில், அந்த அட்டையை எடுத்துக்கொண்டு — ஒரு தாய், தன் குழந்தையைப் பெருமையோடு தூக்கிக் காட்டுவாளே—அதைப் போன்று, எல்லாரிடமும் காட்டிப் பெருமையடைந்தேன்!

அண்ணா அவர்கள், 'சென்னையில் உள்ள எழுத்தாளர் சங்கம், தமிழ்ப் பற்றே இல்லாதார் கையில் இருக்கிறது; அவர்கள், நம்மையெல்லாம் எழுத்தாளர்களாக ஏற்றுக்கொள்வதில்லை' என்று வேதனையோடு கூறினார்கள்; அத்துடன்,

**"நமது இயக்கத்திற்கு இரண்டாம் அணி இருக்க வேண்டும்; அதுவும், முழுக்க முழுக்க அரசியலாக இல்லாமல், கலை -- இலக்கியம் -- சமுதாயம் ஆகிய மூன்று துறைகளையும் பண்படுத்தும் கழகங்களாக இருக்க வேண்டும்.**

**"அரசியல் அறிஞர்கள் எல்லாரும் இரண்டாம் கிளாஸ் (வகுப்பினர்) பற்றித்தான் கூறியிருக்கிறார்கள்; ஒன்று—Upper Class (மேல் தட்டு); மற்றொன்று Lower Class (கீழ்த் தட்டு); நாம் Middle Class (நடுத்தர) வகுப்பையும் உண்டாக்கி -- முழுக்கவும் அரசியலாக ஆக்கிவிடாமல் ஆங்காங்கே நமது பிரச்சாரக் கருத்துக்களை அமைத்துக் கொள்ள வேண்டும்"**

என்றும் கூறினார் அண்ணா!

**கருணைதாசன்**

"மதுரையில் எழுத்தாளர் மன்றம் தொடங்கலாமா, அண்ணா?" என்றார் பு. மனோகரன்; 'செய்யுங்கள்; ஆனால், **தமிழ் விரோதிகளுக்கு மட்டும் இடம் கொடுத்து விடாதீர்கள்**' என்றார்.

அதன் விளைவே, இன்றுவரை சீரோடு நடைபெற்றுவரும் எழுத்தாளர் மன்றமாகும்.

அண்ணா அவர்களே 1959-இல், 'தமிழ்நாட்டில் எழுத்தாளர்களுக்கெனப் பல எழுத்தாளர் சங்கங்கள் -- அமைப்புக்கள் இருந்த போதிலும், தமிழ்ப் புலவர்களை—அறிஞர்களையும் தலைவர்களாகவும் -- வழிகாட்டிகளாகவும் கொண்ட மன்றம்—நான் அறிந்த வரையில்—மதுரை எழுத்தாளர் மன்றம்தான்' என்று மாநாட்டில் கூறினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், முதன்முதல் கொடைக்கானல் சென்றது 1962-ஆம் ஆண்டு தான்; நாடாளுமன்றத்தில் ஆற்ற வேண்டிய உரையை உருவாக்குவதற்காக நண்பர்களோடு சென்றிருந்தார்.

**அங்கு நடந்த இரண்டு நிகழ்ச்சிகளை, அரசியல்வாதிகளாகிய நாம் மறக்கவே கூடாது!**

ஒன்று — அண்ணா அவர்கள் தூங்கி எழுந்த காலைப்பொழுதில், வெளியே சென்று எட்டிப் பார்த்த நண்பர் ஒருவர், மிக வியப்போடு, 'அண்ணா, அண்ணா; வெளியே வந்து பாருங்கள்' என்று அழைத்தார்.

குளிர் வாட்டியெடுக்கும் நேரம்; அண்ணா அவர்களோ தம் உடலைச் சால்வையால் போர்த்திக்கொண்டு, 'என்ன அங்கே?' என்று கேட்டார்.

'வெளியே வந்துதான் பாருங்களேன்' என்று, வந்தவர் கூற—அண்ணா அவர்களும வெளியே வந்து பார்க்கிறார்கள்.

அங்கு ஒரு பெரிய கூட்டம் நின்றிருந்தது—அந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல்; அண்ணாவைப் பார்த்ததும், ஓடோடி வந்தவர்களில் பலர் அண்ணாவின் காலில் விழுந்தார்கள்; அண்ணாவோ பதறிப் போய் கால்களை நகர்த்திக்கொண்டு, அன்பு கலந்த குரலில்,

**"இப்படிக் காலில் விழுவது அடிமைப் புத்தியாச்சே -- எழுந்திருங்கள்" என்றார்.**

**அந்தச் சொற்றொடர், 'ஆண்டான்--அடிமை' என்ற தத்துவத்தை அப்படியே விளக்குவதாக இருந்தது!**

**இரண்டாவது நிகழ்ச்சி:**—அண்ணா அவர்கள் மலையை விட்டுக் கீழே இறங்கிச் சென்னை புறப்படும் நாள்; நண்பர்கள் அனைவரும் அண்ணாவை வழியனுப்புவதற்காகக் கோடை ரோடு புகை வண்டி நிலையத்திற்கு வந்திருந்தார்கள்; அப்போது நடந்த **நிகழ்ச்சி, அரசியல் வாழ்வில் எத்துணைத் தூய்மையாக அண்ணா அவர்கள் விளங்கினார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.**

புகை வண்டி வந்து நின்றது; அண்ணா அவர்களுக்குத் தெரியாமல் நான்கைந்து கூடைகளில் பழங்களும். காய்கறிகளும் இருக்கைக்குக் கீழே வைக்கப்பட்டன.

அண்ணா அவர்கள் வண்டிக்குள் ஏறியதும், அந்தக் கூடைகள் அவர் கண்களில் பட்டுவிட்டன; அவருக்குக் கோபம் வந்துவிட்டது; முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, 'இதெல்லாம் என்ன?' என்று கேட்டார்.

பண்ணைக்காடு—கொடைக்கானல் தோழர்கள், 'காய்கறிகள் அண்ணா' என்று சொன்னார்கள்.

**"இவைகளைக் கீழே இறக்காவிட்டால் நான் பயணம் செய்யமாட்டேன்" என்று மறுத்து, வண்டியை விட்டுக் கீழே இறங்கிவிட்டார்! எவ்வளவோ மன்றாடிக் கேட்டும் ஏற மறுத்துவிட்டார், அண்ணா!**

**எல்லாக் கூடைகளையும் இறக்கிவிட்ட பின்னர்தான், பயணம் செய்தார்!**

**அந்த நேரம் அண்ணா அவர்களுடைய புகழ், மிக மிக உயர்ந்திருந்த நேரம்; அந்த உச்ச நிலையிலும், தம் அரசியல் வாழ்வை எத்துணைத் தூய்மையாகக் கட்டிக்காத்து**



**திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு உறுப்பினரான மதுரை வி. அ. கருணைதாசன், நெடுநாளைய இயக்கத் தோழர்; எழுத்தாளர்; தமிழ்த் தொண்டர்; பேரறிஞர் அண்ணா அவர்களிடத்தும், டாக்டர் கலைஞர் அவர்களிடத்தும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.**

**அண்ணா அவர்கள் தொடர்பாகப் பழைய நிகழ்ச்சிகள் சிலவற்றை மிகவும் சுவைபட எழுதியுள்ளார்; அண்ணாவின் அருமை பெருமைகளை அறிந்துகொள்ள இளைய தலைமுறையினருக்கு இது பயன்படும்.**





# மதுரை எழுத்தாளர் மன்றத்தில் அண்ணா

★

பைந்தமிழ்ப் பாவலர் அ. கி. பரந்தாமனார், டாக்டர் இராச மாணிக்கனார் போன்ற அறிஞர் பெருமக்களுடன் அண்ணா வீற்றிருக்கும் காட்சி.

**வந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்!**

பேரறிஞர் அண்ணா அவர்களை எழுத்தாளர் மன்ற மாநாட்டிற்கு இரண்டாம் முறையாக அழைப்பதற்காக 1964 நவம்பர் 3-ஆம் நாள், சென்னையில் உள்ள அண்ணா இல்லத்திற்குச் சென்றேன்; அந்த நேரத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியும், **அண்ணா அவர்களுடைய பெருந்தன்மைக்கு எடுத்துக் காட்டாகும்.**

திருவள்ளுவரின்

**"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**
**மிச்சில் மிசைவான் குலம்"**

என்ற குறளுக்கு ஒப்ப அண்ணா வாழ்ந்து காட்டினார்; அந்த நிகழ்ச்சி மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

மாலை 4 மணிக்கு, அண்ணா அவர்களே சொன்னபடி—அவர்கள் இல்லம் சென்று காத்திருந்தேன்; அண்ணா, மாடியில் தூங்கிக்கொண்டிருந்தார்; மாடிப் படியின் கதவு தாழிடப்பட்டிருந்தது; கீழே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தேன்.

சிறிது நேரத்தில், மறைந்த மாண்புமிகு அமைச்சர் என். வி. என். அவர்கள் வந்தார்கள்; அவரும் அமர, இருவரும் பேசிக் கொண்டிருந்தோம்.

சிறிது நேரத்தில், ஈரோடு சின்னசாமியும் அங்கு வந்தார்.

5-30 மணியளவில், மேலே தாழிடப்பட்டிருந்த கதவு திறக்கும் ஒலி கேட்டது; நானும், அண்ணன் என். வி. என். அவர்களும் மேலே சென்றோம்.

அண்ணியார் அவர்கள் கதவைத் திறந்தார்கள்; வணக்கம் செலுத்திவிட்டு உள்ளே சென்றோம்.

இந்த இடத்தில்தான், **நமது கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதுரை மகளிர் மாநாட்டில் (16—11—75) பேசியபொழுது சொன்ன கருத்துக்கள் என் நினைவிற்கு வருகின்றன.**

"அண்ணா அவர்களை, தூங்கும் பொழுது உடம்பைத் தொட்டு எழுப்பியவர்கள் நாங்கள்" என்றார் கலைஞர்.

நானும் -- அண்ணன் என். வி. என். அவர்களும், தூங்கிக்கொண்டிருந்த அண்ணா அவர்களை எழுப்ப முயன்றோம்; நான் தட்டி எழுப்புவதா அல்லது அண்ணன் என்.வி.என். அவர்கள் தட்டி எழுப்புவதா என்ற சர்ச்சை நடந்து—'நீங்களே எழுப்புங்கள்' என்று அண்ணன் என்.வி.என். கூற, சட்டையின்றிப் படுத்திருந்த அந்தத் தொந்தியான உருவத்தை, உடலைத் தொட்டு இரண்டு முறை, 'அண்ணா, அண்ணா' என்று எழுப்பினேன்.

அண்ணா அவர்கள், 'உ...ம்' என்று விழித்துப் பார்த்துவிட்டு, தன் ஐந்து விரல்களையும் சுட்டிக் காட்டி, 'இன்னும் 5 நிமிடம்' என்று சொல்லிவிட்டு மீண்டும் தூங்கிவிட்டார்கள்.

அங்கேயே அமர்ந்து நானும் -- அண்ணன் என்.வி.என்., ஈரோடு சின்னச்சாமி மூவரும் செய்தித் தாள்களைப் புரட்டிக் கொண்டிருந்தோம்; அரைமணி நேரத்தில் அண்ணா அவர்கள் எழுந்து விட்டார்கள்; எழுந்தவுடன் முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து, **தாம் கட்டியிருந்த வேட்டியின் ஒரு நுனியை எடுத்து, முகத்தைத் துடைத்துக் கொண்டபடியே அண்ணியாரை அழைத்து** 'டீ' என்றார்கள்!

உடனே அங்கு நின்றிருந்த ஒருவர் (சுந்தரேசன் என்று கருதுகிறேன்), ஏற்கனவே பிளாஸ்க்கில் வாங்கி வைத்திருந்த டீயை இரண்டு குவளைகளில் ஊற்றி, ஒன்றை அண்ணாவிடத்தில் கொடுத்தார்.

அண்ணா அதை வாங்கிக் கொண்டு, 'மேலும் டீ வாங்கி வா' என்று கூறிவிட்டு, ஒன்றை என் கையிலும்—மற்றொரு குவளையை அண்ணன் என்.வி.என். கையிலும் நீட்டினார்கள்.

'நீங்கள் குடியுங்கள் அண்ணா' என்று சொல்லித் தந்தோம்.

"வரட்டும் -- நான் குடிக்

## 'கோடை மலை'யின் வாடைக் குளிரிலும் சிந்தனையில் ஆழ்ந்துள்ள கொள்கைக் கோமான்!



★



**என்னதான் சிந்தனையோ -- ஏனிந்தப் பார்வையோ -- அண்ணனின் அருள்நோக்கின் பொருள்தான் என்னவோ!**

கிறேன்; நீங்கள் குடியுங்கள்" என்ருர்.

எப்படி, அண்ணுவுக்கு இல்லாலாமல் நாங்கள் குடிப்பது?

"சூடு ஆறிவிடும் -- நீங்கள் குடியுங்கள்" என இருவரும் அண்ணுவிடம் நீட்டினேம்.

அதை மறுத்துவிட்டு, பேச்சைத் தொடங்கிவிட்டார்.

அண்ணுவுக்கு அருகில் டீ ஆறிக்கொண்டிருந்தது; எங்களுடைய அரசியல் பேச்சும் சுவையாகச் சென்று கொண்டிருந்தது!

**அரைபணி நேரம் சென்றுதான் டீ வந்தது; வந்த டீயை எங்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு, ஆறிப் போயிருந்த டீயைக் குடிக்க எடுத்தார் அண்ணு; நாங்கள் தடுத்தோம்; அண்ணு அவர்கள் மறுதது விட்டு, ஆறியிருந்த டீயை மடக் மடக்கென்று குடித்துவிட்டார்கள்.**

பின்னர், 'மண்' என்ற தலைப்பில் எங்கள் மன்றத்தில் பாடிய கவிதைகள் வெளியாகியிருந்த 'தமிழ்ப் பாவை' இதழ்களை எடுத்துப் படிக்கச் சொன்ஞர்கள்; தன்னை மறந்து அக்கவிதைகளைச் சுவைத்தார்கள்; அது, இன்று நமது கலைஞர் அவர்களோடு கவியரங்கில் பாடும் அப்துல் ரகுமானின் கவிதையும்—டாக்டர் தமிழண்ணலின் கவிதையுமாகும்; படிக்கப் படிக்கச் சுவைத்தார்கள்.

அதன்பின், மலருக்கென நான் கேட்ட கட்டுரையை எழுதத் தொடங்கினர் அண்ணு; தரையில் பாயில் அமர்ந்து, இடது காலை மடித்து மடிமேல் போட்டுக் கொண்டு, அட்டையை எடுத்துத் தாளைச் சொருகிக்கொண்டு எழுதத் தொடங்கினர்; மூச்சு விடும் சத்தம்கூடக் கேட்காமல் நாங்கள் அமர்ந்திருந்தோம்.

அண்ணு மளமளவென்று எழுதிக் குவித்தார்; அரைமணி நேரத்தில் ஏறத்தாழ 15 பக்கங்கள் கொண்ட கட்டுரையை எழுதி முடித்தார்; அனைத்தையும் ஒன்ருக அடுக்கி அள்ளி என் கையில் கொடுத்து,



**ஆயிரமாயிரம் எண்ணங்களின் அலைமோதலுக்கிடையேயும், வண்ணங்கள் கண் சிமிட்டும் கோடைமலை எழிற்கோலத்தைக் கண்டு மகிழ்கிருர் அண்ணு—தொலைநோக்காடி மூலம்!**

**"படித்துப் பாருங்கள்; பிழை இருந்தால் சொல்லுங்கள்" எனக் கேட்டார்; நான் திடுக்கிட்டேன்; அவரின் சொற்கள் என்னை மெய் சிலிர்க்க வைத்தன; எவ்வளவு உயர்ந்த அரசியல் அறிஞர் -- எழுத்தாளர்களின் தலைவர்--சாதாரணமான என்னைப் போன்றவனிடம், 'நான் எழுதியதில் பிழை இருந்தால் சொல்லுங்கள்' என்று கூறுகிருர்! என் உள்ளம் குறுகிவிட்டது! எத்துணை அடக்கம்--எவ்வளவு உயர்ந்த பண்பு!**

அவர் எழுத்தில் பிழை திருத்தும் அளவுக்கு நான் யார்? எம் மாத்திரம்?

தன்னடக்கத்தின் மொத்த உருவமாக அந்த இடத்தில் காட்சியளித்தார் அண்ணு!

அந்த எளிமையின் உருவம் தான்—உடலில் சட்டையின்றி அப்படியே அமர்ந்திருந்த அந்தக் காட்சிதான் — இன்று தமிழகமெங்கும் நமது தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் சிலையாக நிறுவப் பெற்றிருக்கிறது என்பதைக் காணும் போது, உண்மையிலேயே தமிழக மக்களுக்கு அண்ணுவின்மேல் பக்தியே ஏற்பட்டிருக்கிறது!

அப்பேர்ப்பட்ட அண்ணுவின் அடியொற்றி நமது கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் தொண்டு தான், தமிழகத்துக்கு வாழ்வு அளிக்கின்றது!

"அண்ணு காலத்தில் நாம் வாழ்ந்தோம் -- ஒன்ருகப் பழகினேம்" என்ற பெருமை ஒன்றே போதும்—நாம் உயிர் வாழ்வதற்கு!

**வாழ்க—அண்ணுவின் புகழ்!**
**வளர்க—கலைஞர் தொண்டு!**


கூட்டுறவே நாட்டு உயர்வு!

# பொன்னி கூட்டுறவு சிறப்பு அங்காடி

**சேலம்-1.**

## தினமும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும் ஒரு பெரிய கூட்டுறவு நிறுவனம்!

ஆண்களுக்கும் -- பெண்களுக்கும் -- குழந்தைகளுக்கும் தேவையான ஜவுளி, ரெடிமேட் ஆடைகள், தட்டுமுட்டுச் சாமான்கள், பலசரக்கு, அழகுச் சாதனப் பொருட்கள், மருந்து, பிளாஸ்டிக் பொருட்கள், காய்கறி மற்றும் பழ வகைகள் நியாயமான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன!

அரசு நிறுவனங்கள், கல்லூரி, பள்ளி விடுதிகள், அரசுடைமை ஆக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் யாவருக்கும் கடன் முறையில் விற்பனை செய்யப்படுகின்றன.

## உங்கள் சேவையே எங்கள் குறிக்கோள்!

**கிளைகள்:**

| | | |
|---|---|---|
| நாமக்கல் | கெங்கவல்லி | மஞ்சக்குட்டை |
| கொமாரபாளையம் | ஏற்காடு | நாகலூர் |
| எடப்பாடி | காவேரி பீக் | சின்னக்கல்ராயன்மலை |

**ஆர். நரசிம்மன்,**
பொது மேலாளர்.

நிலவளம்

# எங்கள் பணி விவசாய வளர்ச்சிக்கே!

வேளாண்மை தழைக்கவும் ---
விவசாயி வாழ்க்கை செழிக்கவும் ---
45 ஆண்டுகளாக நற்பணி ஆற்றி வருவது
தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி!

★

தமிழகமெங்கும் ஆல்போல் படர்ந்துள்ள
223 பிரதம நிலவள வங்கிகள் மூலம்
பல்வேறு வேளாண்மைப் பணிகளுக்குக் கடனுதவி புரிந்து வருகிறது.
விவசாய மேம்பாட்டுக் காரியங்களுக்கு
நீண்டகாலக் கடனுதவி வழங்கும் கூட்டுறவு நிறுவனம்

★

வேளாண்மை -- எங்கள் சேவைக்குரிய ஒரே துறை!
உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவி -- எங்கள் தொண்டு!
விவசாயி நல்வாழ்வு -- எங்கள் இலட்சியம்!

# தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி

32, லஸ் சர்ச் சாலை, சென்னை-600004.

பி. எஸ். முத்துச்செல்வன், எம்.எல்.ஏ.
துணைத் தலைவர்,

வி. பி. மல்ஹோத்ரா,
நிர்வாக இயக்குநர்

எம். செல்வராசு, எம்-எல்.ஏ.
தலைவர்.

# திரும்பிப் பார்க்கிறேன்



மன்னார்குடியை அடுத்த எடமேலையூரைச் சேர்ந்த சு. நாராயணசாமி, நமது கழகத்தின் பழம்பெருந் தோழர்—பொதுக் குழு உறுப்பினர்.

முப்பதாண்டுக்கு முன்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்து வரவேற்று மகிழ்ந்த நிகழ்ச்சியையும், பாவேந்தர் படத்தை அண்ணா அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய புகழ் பெற்ற சொற்பொழிவு ('ஏ-- தாழ்ந்த தமிழகமே') பற்றியும் அழகாக விளக்கியுள்ளார்—தமது கட்டுரையில்; படித்துச் சுவையுங்கள்! 'அந்த நாளும் மீண்டும் வந்திடாதோ' என்று எண்ணத் தோன்றும்!

'தமிழகத்தின் ஷெப்பீல்டு' என்று போற்றப்படும் கோவை நகரில், ஐந்தாவது தி. மு. க. பொது மாநாடு கூடுகிறது; நான்காவது கழகப் பொது மாநாடு சென்னை விருகம்பாக்கத்தில் கூடியபோது, நாம் பொறுப்பான எதிர்க் கட்சி வரிசையில்; பேரறிஞர் அண்ணா, நம்மோடு இருந்தார்கள்.

இதற்கிடைப்பட்ட காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேன்; எத்துணைச் சோதனைகளை--சாதனைகளைக் கழகம்-கழக அரசு வெற்றிகரமாகச் சந்தித்து--சாதித்து, குமரி முதல் இமயம் வரை புகழ் பரப்பி நெஞ்சுயர்த்தி நிற்கிறது!

கழகம் தொடங்கிய நேரத்தில், காவிரி ஆறு குடகு மலையில் உற்பத்தியாகும்போது இருக்கும் நிலைதான் அதற்கும் இருந்த தென்றாலும், சோழ மண்டலத்தில் வரும்போது காவிரி ஆறு பெருத்து -- அகண்டதுபோலக் கழகம் இன்று தமிழகத்தையே தன்னுள் அடக்கிக் கொண்டு--ஆல மரம் போலத் தழைத் தோங்கி நிற்கிறது!

வயதான தம்பதிகள்—தங்களுடைய இளம் பருவத்தை நினைத்து—இருவரும் அதைப்பற்றிச் சுவைபடப் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் முகத்திலே ஏற்படுகின்ற திடீர்ப் பொலிவைப் போல--எனக்கும் ஒருவித களை ஏற்படுகிறது; அதை எப்படி வர்ணிப்பதென்றே எனக்குத் தெரியவில்லை!

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டார்கள்; ஆண்டு 1945; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உருவப் படத் திறப்பு விழா நிகழ்ச்சி ஏற்பாடு.

அப்போது தி.க. மாணவர் கழகப் பொதுச் செயலாளராக மறைந்த வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி பணியாற்றிய நேரம்; அப்போது அவர் ஆனர்சு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்: கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லை வில்லாளன் ஆகியோருடன் நானும்--மற்றக் கழக மாணவர்களும் ஒன்றாகப் படித்துக் கொண்டிருந்தோம்; நாங்களெல்லாம், உணர்ச்சிப் பிழம்பாய் மாணவர் கழகத்தில் பணியாற்றிய நேரம் அது!

எங்களுடைய, பணியின் அனல்--அனத்தல் தாங்காமல், சிதம்பரம் சுவாமி சகஜானந்தா, சட்டமன்றத்தில், 'அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அரசினரால் கொடுக்கப்படும் மானியத் தொகை நிறுத்தப்பட வேண்டும்; பல்கலைக் கழகம், திராவிடர் கழகக் கோட்டை போலக் காட்சி அளிக்கிறது; பல்கலைக் கட்டிடங்கள்மீது பறக்கும் கொடிகள், திராவிடக் கழகக் கொடிகளாகவே இருக்கின்றன; ஒரு கதர்க் கொடியைக்கூடக் காண முடியவில்லை' என்று பொருமிக் கொண்டு உரையாற்றினார்.

அந்த நேரத்தில்தான், புரட்சிக் கவிஞர் படத் திறப்பு விழாவுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் அழைக்கப்பட்டார்.

வரலாற்றுப் புகழ்பெற்ற 'சாஸ்திரி ஹாலில்' நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது; அப்போது துணைவேந்தராக இருந்த பேராசிரியர் இரத்தினசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்டார்.

அண்ணாமலை நகர் பல்கலைக் கழகத் தி.க. மாணவர் கழகம், ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தது.



நிகழ்ச்சி நாளன்று, அண்ணா அவர்களைச் சிதம்பரம் இரயில் நிலையத்திலிருந்து அழைத்து வரக் காலை 9-மணிக்கே இரெ. இளம்வழுதி தலைமையில் நாங்களெல்லாம் சென்று காத்திருந்தோம்.

அண்ணா அவர்கள் வந்துவிட்டார்கள்; எங்களுக்கு மகிழ்ச்சி கரைபுரண்டோடியது; காரணம், அண்ணா அவர்கள் குறித்த நேரத்தில் வந்ததுதான்!

தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒற்றை மாட்டு வண்டியில் அண்ணாவை ஏற்றி உட்கார வைத்து—நாங்கள் ஏறத்தாழ ஐம்பது மாணவர்கள்—'பெரியார் வாழ்க! அண்ணா வாழ்க!' என்று முழக்கமிட்டுக் கொண்டு சென்றோம்.

ஒற்றை மாட்டு வண்டி, கோஸ்கன் சாலையில் அண்ணாவைச் சுமந்து கொண்டு மெல்ல நகர்ந்து வந்துகொண்டிருந்தது; அந்தப் புகழ் பெற்ற சாலையில், கவர்னர்களும் -- அமைச்சர்களும் -- வெளிநாட்டுப் பிரமுகர்களும் ரோல்ஸ்ராய் காரில் எத்தனையோ முறை சென்றிருக்கிறார்கள்!

அதே சாலையில்தான் அண்ணா அவர்கள், ஒற்றை மாட்டு வண்டியில் வருகிறார்கள்; எப்படி இருக்கும் எங்களுக்கு?

எடமேலையூர்
சு. நாராயணசாமி

மாற்றுக் கட்சியைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள், விடுதியின் மாடிகளில் நின்று கொண்டு--இந்த ஊர்வலத்தை ஏளனமாக எண்ணிக் கண் சிமிட்டிக் கொள்கிறார்கள்; ஆனால் எங்களுக்கு அண்ணாவின் அறிவாற்றலில் இருந்த மதிப்பும் பாசமும்—'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்ற பழமொழியை நினைவுபடுத்தி—இந்த ஏளனங்களை அசட்டை செய்ய வைத்தது!

வருங்காலத்தில் தமிழகத்தின் விடிவெள்ளியாகவும்--முதல்வராகவும் வரப்போகின்றவர்தான் அண்ணா என்பது—நாங்கள் அப்போது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்றாகும்; நான்கு முழ வேட்டியும்--சரியாகப் பித்தான் போடாத கசங்கிய சட்டையும் அணிந்து கொண்டிருந்த அந்த மாமேதைதான் ஒற்றை மாட்டு வண்டியில் எங்களால் அழைத்து வரப்பட்டார்!

துணைவேந்தர் தங்குமிடத்திற்கு முன்னால் ஊர்வலம் வந்து கொண்டிருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியவில்லை; பொறியியல் கல்லூரித் தலைவராக இருந்த டாக்டர் சாக்கோ என்பவர்—அப்போது, 'இந்தியாவின் புகழ்மிக்க பொறியாளர்களில் ஒருவர்' எனக் கருதப்பட்டவர்—எதிரில் காரில் வந்துகொண்டிருந்தார்!

அண்ணா அவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார் என்று கேள்விப்பட்டதும் அவர்—காரை ஓரத்தில் நிறுத்தி விட்டு, இளம்வழுதி அவர்களை அணுகி, 'நான் வெளியில் செல்லுகிறேன்; அண்ணாவைப் பார்த்துவிட்டுச் செல்கிறேன்; நான் நிறைய அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் நேரில் பார்த்ததில்லை; நேரில் பார்க்க ஆவலாக இருக்கிறது' என்று மூச்சுவிடாமல் கூறினார்.

இளம்வழுதிக்கு ஒரே மகிழ்ச்சி; 'நம் அண்ணாவை, இவ்வளவு பெரிய மனிதர் பார்க்க வேண்டும் என்று சொல்கிறாரே' என்ற குதூகலம்; அந்தக் காலத்தில், பெரியார் அவர்களையோ—பேரறிஞர் அண்ணா அவர்களையோ—முக்கிய 'அந்தஸ்து' பெற்றவர்கள் யாராவது பார்த்துப் பேசிவிட்டால், 'இவர்களெல்லாம் மதித்து வந்து பேசுகிறார்களே' என்ற பெருமை எங்களைப் போன்றவர்களுக்கு; இது, தலைவர்கள்பாலும், தலைவர்கள் கொண்ட கொள்கைகள் மீதும் அதிக நம்பிக்கையையும் ஊக்கத்தையும் எங்களுக்கு அளித்தது!

அப்போது, சமுதாயத்திலே—அரசியல் அரங்கிலே, திராவிடர் கழகத்திற்கும்—அதன் தலைவர்

# பேராவூரணியில் 'கல்லக்குடிகொண்டான்'



கல்லக்குடிப் போராட்டத்தில் சிறை சென்று மீண்ட கலைஞர் அவர்களுக்கும் —அவருடன் சிறை சென்ற தோழர்களுக்கும் தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது; அந்த வரவேற்பையொட்டி எடுக்கப் பட்ட படமே இது.

கலைஞருக்கு வலப்புறம் அமர்ந்திருப்பவர்—மன்னை ப. நாராயணசாமி; இடப்புறம் இருப்பவர்—முல்லை சத்தி; அவரை அடுத்து இருப்பவர்—அன்பில்தருமலிங்கம்.

பின் வரிசையில் கடைசியில் நிற்பவர்—பேராவூரணி அடைக்கலம்.

களுக்கும், உரிய மதிப்பும்--மரியாதையும் கொடுக்கப்படாத காலம்! 'வகுப்புவாதிகள் -- கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்' என்ற பட்டங்களுக்கு ஆளாகிக் கேவலப்படுத்தப்பட்ட காலம்!

இப்போதுதானே கோபாலபுரத் திற்குச் செல்வதை, 'புனித யாத்திரை'யாக அகில இந்திய அரசியல் தலைவர்களெல்லாம் நினைக்கிறார்கள்!

நிகழ்ச்சிக்கு வருவோம்!

தோழர் இளம்வழுதி, அண்ணா அவர்களிடம், டாக்டர் சாக்கோவின் வேண்டுகோளைத் தெரிவித்தார்; அண்ணா அவர்கள்—தமக்கே உரித்தான நிதானத்துடன்—ஆங்கிலத்தில், 'Please ask him to meet me at the Guest House; This is not the proper way to meet at the road' என்று கூறிவிட்டார்!

ஒற்றை மாட்டு வண்டியில் அண்ணா—மிக உயர்ந்த வெளிநாட்டுக் காரில் டாக்டர் சாக்கோ; என்றாலும் அண்ணா அவர்கள், தலைவருக்குரிய கம்பீரத்தையும் -- தன்மானத்தையும் விடவில்லை.

அண்ணா கூறிய செய்தி டாக்டர் சாக்கோ அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது; இந்தியாவின் தலைசிறந்த பொறியியல் நிபுணர்களில் ஒருவராக இருந்த அவர் தமதுதவற்றை உணர்ந்து —பின்பு விருந்தினர் மாளிகைக்குவந்து—அண்ணாவைச் சந்தித்து—தமது அவசர நடவடிக்கைக்கு வருத்தம் தெரிவித்து அளவளாவிச் சென்றார்!

பின்னர் அண்ணா அவர்கள், டாக்டர் சாக்கோவிடம் தாம் உரையாடியபோது கண்ட ஆழ்ந்த அறிவாற்றலை வியந்து பாராட்டினார்!

அண்ணா அவர்கள், எளிமையையும் -- அடக்கத்தையும் தம் சொத்தாகக் கொண்டபோதிலும், சரியான நேரம் வரும் போது மேருமலை போன்று—சரியான எதிரிகளிடம்—உயர்ந்து நின்றார்கள்!

அன்று மாலை அண்ணா அவர்களுக்குப் பல்கலைக் கழகம், துணைவேந்தர் இரத்தினசாமி அவர்கள் தலைமையில்-பல்கலைக் கழகப் பூந்தோட்ட மைதானத்தில்—சிறப்பான தேநீர் விருந்தளித்தது; பேராசிரியர்களும்--விரிவுரையாளர்களும் -- தமிழ்ப் புலவர்களும்--பல்கலைக் கழகப் பல்வேறு துறை மாணவர்களும்-மாணவிகளுமாக ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்கள் தேநீர் விருந்தில் கலந்து கொண்டு அண்ணாவைப் பெருமைப்படுத்தியதன் மூலம், தங்களையும் பெருமைப்படுத்திக் கொண்டார்கள்!

அப்போதும் சிலருக்கு, உள் குமுறல்--கசப்புணர்வு இருக்கத்தான் செய்தது! தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், லெ. பா. கரு. இராமநாதன் செட்டியார் போன்றவர்களுக்கு, அண்ணா என்றாலே அந்தக் காலத்தில் அதிர்ச்சி! அவர்களும், பட்டும் படாமல் தேநீர் விருந்தில் கலந்து கொண்டார்கள்.

மாலை 6-மணிக்கு 'சாஸ்திரி ஹாலில்' புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் படத் திறப்பு விழா நிகழ்ச்சி தொடங்கியது; தமிழ் இலக்கிய மன்றம், முன்னின்று விழா நடத்திக் கொண்டிருந்தது; துணைவேந்தர் தலைமை; அண்ணா அவர்கள் பக்கத்து நாற்காலியில்; அதற்குப் பக்கத்தில் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள்! தலைவர், தமது உரையை அரை குறைத் தமிழில் பேசி முடிந்தார். துணைவேந்தருக்கு ஆங்கிலத்தில்தான் நன்றாகப் பேச வரும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் புகழ் பெற்ற மேடையில் எழுந்து நின்று — முன் வரிசையிலே பேராசிரியர்களும், பண்டிதர்களும், தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், பண்டிதமணியும், மாணவ மாணவிகளும் மண்டபத்தில் பொங்கி வழிந்த நிலையில் அத்தனைக் கண்களும் அண்ணாவையே உற்றுநோக்க, ஒரு சப்தமும் எழாத சூழ்நிலையில்—பேசத் தொடங்கினார்.

தமிழ் மழை இரண்டு மணி நேரம் பொழிந்தது. கொஞ்ச நேரம் கலைச் சுவை தமிழ் மழை —எல்லாருக்கும் இதமாக இருந்தது; தெ. பொ. மீ. அவர்களும் தலையை அசைத்தார்!

பிற்பாதி, கருத்து மழை—அது, நம்மைப் பிடிக்காதவர்களையெல்லாம் திக்குமுக்காடச் செய்துவிட்டது!

கொஞ்ச நேரம், 'சோ'வென மழை பெய்வதைப்போல, எங்களையெல்லாம்—ஏன்—தெ.பொ. மீ. அவர்களைக்கூட — 'சோ' வென அழும் அளவிற்குக் கொண்டுவந்து விட்டுவிட்டார் அண்ணா!

அதன் வடிவம்தான், 'ஏ-- தாழ்ந்த தமிழகமே' என்ற உணர்ச்சிப் பெட்டக நூலாகும்!

இதைப் போன்ற பல நிகழ்ச்சிகளை, நான் நேரில் கண்டு அனுபவித்ததைக் கூறிக்கொண்டே போகலாம்—'கழகக் குரலில்' இடம்தான் போதாது!

இதன் மூலம் ஒன்றை நண்பர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; அண்ணாவின் இப்படிப்பட்ட புகழ்மிக்க சொற்பொழிவுகள், கல்லூரி மண்டபங்களிலே எதிரொலித்ததன் விளைவாகத்தான், நம் இயக்கத்திற்குக் கற்றோரும் -- கல்லூரி மாணவர்களும் வருவதற்குரிய சாலைகள் போடப்பட்டன!

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழகத்தில் திராவிடர் இயக்கத்தின் கருத்துக்கள் பரவுவதற்குரிய நாற்றங்காலாக மாறியது!

பெரியாரும்--அறிஞர் அண்ணாவும் அங்கே வந்து, இளந்தாடி நெடுஞ்செழியன் (இப்போது நாவலர்), க. இராமையா (தற்போதைய பேராசிரியர்), இரெ. இளம்வழுதி, கே. ஏ. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லை வில்லாளன் மற்றும் எங்களைப் போன்ற எண்ணற்ற உணர்ச்சிப் பிழம்புகளான மாணவத் தொண்டர்களை விதைகளாகத் தெளித்து -- அவர்களுடைய கருத்து மழையினால் செழிப்பாக வளர்த்து -- தமிழக வயல்களிலெல்லாம் பரந்து நட்டனர்!

இன்று, நட்டவர்கள் மறைந்தாலும், தமிழக மக்கள் அறுவடையின் பயனை அனுபவிக்கிறார்கள்.

இப்படிக் கல்லூரி மண்டபங்களில் நிலவியிருந்த சாதி -- மத வேறுபாடும், வர்ணாஸ்ரம தர்மமும், மௌடீகப் பழக்க வழக்கங்களும், வடவர் ஆதிக்கமும், அண்ணாவின் வாதத் திறமையால் நிலை குலைந்து கொண்டிருந்த சமயத்தில்தான், திருவாரூர் உயர்நிலைப் பள்ளியிலிருந்து புகை கிளம்பிக் கொண்டிருந்தது!

பெரியார்—அண்ணா ஆகியோரின் கனல் கக்கும் பேச்சுக்கள், திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் அனல் பொறியாகத் தெறித்து விழுந்து புகையத் தொடங்கியது!

'நெருப்பில்லாமல் புகையாதே' என்று கவனித்துப் பார்த்தபோது, அங்கே துடிதுடிக்கும் இளமையுடனும் -- கண்டவர்களைக் கவ்வும் பார்வையுடனும் இருந்த இளம் மாணவன் மு. கருணாநிதியைக் கண்டார்கள்.

அந்த இளைஞர்தான், இன்றைய முதல்வர் — டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி; இதே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தான், டாக்டர் பட்டத்தையும் கலைஞர் அவர்களுக்கு அளித்துச் சிறப்பித்தது!

"The Abode of D. M. K. Leaders" என்று இந்தப் பல்கலைக் கழகத்தை வர்ணிப்பதில் வியப்பொன்றுமில்லை; ஏனெனில், நாவலர்—பேராசிரியர் — மதியழ

கன் போன்ற தலைவர்கள் உருவாக்கப்பட்ட இடமல்லவா அது?

அந்தக் காலத்தில், ஓர் உயர்நிலைப் பள்ளி மாணவனுக்கு அரசியல் ஞானம் ஏற்படுவதென்பது நடவாத ஒன்ருகும்!

இப்போது மாட்டுக்காரச் சிறுவன்கூட அரசியல் பேசுகிருன்-- அது வேறு விஷயம்!

அந்த நேரத்தில்தான் நம்முடைய இன்றையத் தலைவர் கலைஞர் அவர்கள், தீச் சுடராய்- பழைமைக் கருத்துக்கள் பொசுங்கி நாசமடையும் வண்ணம்—சமுதாய ஏற்றத் தாழ்வு நிலைகள் நிலைகுலையும் வண்ணம் —சாதி பேதக் கொடுமைகள், ஏழைகள் படும்பாடு, பெண்ணடிமை—இன்ன பிற பிற்போக்குச் சக்திகள் புறமுதுகிட்டு ஓடும் வண்ணம்—அவருக்கே உரித்தான எழுச்சிமிக்க பேச்சால்-- அழகு தமிழ் நடையால்--அயராது பாடுபட்டு வந்தார்!

திருவாரூர் தெற்கு வீதியிலே அப்போது அவர் குடியிருந்தார்; எங்கள் ஊராகிய எடமேலையூர் கிராமத்தில், எப்படியாவது கலைஞர் அவர்களை வரவழைத்துப் பொதுக் கூட்டம் நடத்த வேண்டுமென எண்ணி நானும்-- மற்றக் கழக மாணவர்களும் பலமுறை திருவாரூருக்குச் சென்று தேதி கேட்பது உண்டு; காரணம், அப்போது கலைஞர் அவர்கள் எங்கு சென்று பேசினாலும், அங்கே உள்ள மாற்றுக் கட்சியினர்கூட மனம் மாறும் அளவிற்கு உணர்வுகளை நாதமிசைக்கவைத்துப் பேசும் ஆற்றலை, அப்போதே கலைஞர் அவர்கள் பெற்றிருந்தார்!

நாங்கள் போகும்போதெல்லாம், ஒரு பழைய சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு —அந்த நாற்காலியின் இரண்டு சட்டங்களுக்கும் மேலே எழுதப் பயன்படுத்தும் ஒரு சிறிய பலகையை வைத்துக் கொண்டு —எதையாவது எழுதிக் கொண்டிருப்பார்!

எங்களைக் கண்டதும், அந்த ஒல்லியான--சிவந்த -- அழகான இளைஞர் எழுந்துவந்து, நின்று கொண்டிருக்கும் எங்களை உட்காரச் சொல்லி, 'வந்த விஷயம் என்ன' எனக் கேட்பார்; பிறகு உள்ளே சென்று 'டைரி'யை எடுத்து வந்து எங்களிடம் காட்டி, அதிலே இடைவெளியின்றித் தமக்கிருக்கும் நிகழ்ச்சிக் குறிப்புக்களைச் சுட்டிக்காட்டி-- வருத்தம் தெரிவித்து, 'பிறகு வருகிறேன்' எனச்சொல்லி அனுப்பி வைத்ததை இன்றும் நினைத்துப் பார்க்கிறேன்!

அவர் திடீரென்று, 'இந்தா, விபீஷணா--இலங்காபுரி ராஜ்யம்' என்று தானம் செய்து எடுத்துக் கொண்டதைப்போல, முதலமைச்சராக வந்துவிடவில்லை; மாருக, நாற்பது ஆண்டுகள் உழைத்து உழைத்து உயர்ந்து — தமிழகத்தின் முதல்வரான உத்தமர்!

விட்ட இடத்திற்கு வருகிறேன்; எங்கள் ஊரில், 'கலைஞர் அவர்களைக் கொண்டு கூட்டம் நடத்த வேண்டும்' என்ற எங்களுடைய ஆசை, பின்னலே-- குளித்தலைத் சட்டமன்ற உறுப்பினராக அவர் ஆன பிறகுதான் நிறைவேறியது!

அப்போது நாம் எதிர்க் கட்சி; 'காங்கிரசுக் கட்சிக்கு எதிரி' என்று சொல்லக் கூசும் நேரம் அப்போது!

'எடமேலையூரில் கலைஞர் மு. கருணாநிதி, 'எம்.எல்.ஏ.' என்று போடப்பட்ட சுவரொட்டிகளை நாங்கள் படித்துப் பார்க்கும் போதெல்லாம், எங்களுக்கு ஏற்பட்ட பெருமிதம் வார்த்தைகளால் விவரிக்க முடியாததாகும்; அப்போதுதானே -- எங்களுக்கென்று சொந்தம் கொண்டாடக்கூடிய ஒரு எம்.எல்.ஏ.-யைப் பெற்றிருந்தோம்!

ஒரு குட்டி ஜூலியஸ் சீசரை வரவேற்பது போன்று, அன்று, எடமேலையூர் வாசிகளும்--மற்ற ஊராரும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு கலைஞர் அவர்களை வரவேற்று மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர்!

கலைஞர் பொதுக் கூட்டத்தில் உணர்வு பொங்கப் பேசி முடிந்ததும், 'நம் நாடு' என்ற சிறப்பு நாடகம் அதே மேடையில் நடந்தது!

கலைஞர் அவர்கள் முதன் முதலாகச் சட்டமன்ற உறுப்பினரானதும், அவருடைய புதுப் பதவியைத் தமது இயக்க வளர்ச்சிக்கு எருவாக்கி -- முன்னிலும் பன்மடங்கு வேகத்தில் கழகப் பணியை முடுக்கிப் பணியாற்ற முற்பட்டார்!

அவருடைய எழுத்துக்களின் வேகம்—சொற்போர் நிகழ்த்திய



பாணி—தாம் எழுதிய நாடகங்களில் புகுத்திய தீவிரமான கருத்துக்களைக் கொண்ட வசனங்கள் —சினிமாத் துறையைக் கழக வளர்ச்சிக்காக ஆக்கிரமிப்புச் செய்த விதம் எல்லாம், மாற்றுக் கட்சியினரை மூச்சடைக்கச் செய்தன! சமாளிக்கும் விதம் தெரியாது தவித்தனர்! அண்ணா அவர்கள், அந்தக் காட்சிகளைக் கண்டு உளம் பூரித்துக் கிடந்தார்!

கலைஞர் அவர்களைப்பற்றி என் எல்லா நினைவுகளையும் எழுதுவதென்ருல், அது ஒரு பெரிய புத்தகமாகிவிடும்!

விலைவாசிப் போராட்டத்தின் போது, திருச்சி மத்திய சிறையில் நாங்களும்—கலைஞரும் ஒன்ருக அனுபவித்தவைகளை நினைக்கிறேன்; மெய்சிலிர்க்கிறது; நாள்தோறும் கலைஞர், சிறை உடையில் முழுக்கால் சட்டை அணிந்து--கையோடு வெளியில் வரும்போது, சிறை வெளியில் ஆங்காங்கே வேலைகள் செய்து கொண்டிருக்கும் எங்கள் அனைவருக்கும், கவலை—கஷ்டங்களெல்லாம் மாயமாய் மறைந்து போகும்!

கலைஞர் அவர்களிடம் நான் கவனித்த வகையில், அவரிடம் மற்றவர்களிடம் காணாத தொன்று—எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அவர், அதைக் கழக வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதிலே சிறிதளவும் தவறமாட்டார் என்பதுதான்; அதனால் தான், இன்று ஒப்பாரும் மிக்காருமின்றி வளர்ந்து -- தமிழக அரசியலில் வேரூன்றி நிற்கிருர்!

அவருடைய தாரக மந்திரம், உழைப்பு—உழைப்பு!

'தமிழ் இனிமையுள்ளது' என்று படிக்கிறோம்; மேதைகள் சொல்லக் கேட்டிருக்கிறோம்; ஆனால் அந்தத் தமிழ், கலைஞர் வாயிலிருந்து வெளிவரும்போதுதான், 'இவ்வளவு இனிமை தமிழுக்குள்ளதா?' என்று நாம் வாய் பிளந்து நிற்கிறோம்!

எழுதும்போதே—கலைஞரைப் பற்றிய எண்ணங்கள் ஒன்றோடு ஒன்று மோதி என்னை—தலைப்பு மாறி எழுதச் செய்கின்றன! எதை எழுதுவது -- எதை விடுவது?

உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம் அழகுற வந்து கொண்டிருக்கிறது; நான், ஐ. ஜி. அலுவலகத்திற்கு எதிரில் நின்று கொண்டு, தமிழ் உணர்வைப் பருகிக் கொண்டிருக்கிறேன்.

ஒலிபெருக்கியிலிருந்து கரகரப்பான—கணீர் கணீரென்ற குரலில் தமிழ் சொற்கள் தெறித்து வந்து என் காதுகளில் ஒலிக்கின்றன! ஒவ்வோர் ஊர்தியின் சிறப்புப் பற்றியும் கலைஞர் அவர்களின் வர்ணனைதான் அது! ஆகா--எத்துணை அழகு! எவ்வளவு உணர்ச்சி மயமான காவிய நடையழகு! ஒவ்வொரு தமிழ்ச் சொல் வந்து விழும் போதும், உடல்மீதுள்ள ரோமங்கள் மேலும் மேலும் குத்திட்டு நின்றன!

வேறு யாரால் அந்த உணர்ச்சித் தமிழ் நாதத்தை எழுப்ப முடியும்?

சென்ற ஆண்டு கலைஞர் அவர்கள், மன்னார்குடியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தென்கொண்டார் அவர்கள் நடத்திய முத்தமிழ்ப் பெரு விழாவில் கலந்துகொண்டு, முத்தமிழின் சிறப்புப் பற்றி இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்; சங்க கால இலக்கியங்கள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு— கலைஞர் வாயிலிருந்து, 'நான் முந்தி--நீ முந்தி' என்று வந்து கொண்டிருந்தன!

சிலப்பதிகாரத்தில் ஒரு அடியை எடுத்துக் கலைஞர் தருகிருர் — கோவலனும், கண்ணகியும் எப்படி இறுக்கமாக இன்பம் அனுபவித்தார்கள் என்பதை வர்ணிக்கும் அடிகள் அவை; 'தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தாலன்ன'-இதைக் கலைஞர் அவர்கள், சைகையோடு பொருள் சொல்லிப் பேசிய போது, தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்களும் அயர்ந்து போனார்கள்!

என்னிடம் ஒரு புலவர் வந்து, 'என்ன தம்பி--நானும் எவ்வளவோ தமிழ் இலக்கியப் பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன்; இப்படி யாராலும் பேச இயலாது; காளிதாசனுக்குக் காளி நாக்கில் எழுதியதுபோல, இவருக்கும் ஏதாவது நடந்திருக்கும் போலிருக்கு' என்று திகிலோடு சொன்னார்; நான் உளம் பூரித்துப் போனேன்!

அப்படிப்பட்ட மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பேச்சாற்றல், பேரறிஞர் அண்ணாவுக்கும்—கலைஞர் அவர்களுக்கும் தான் உண்டு! வடக்கே மறைந்த பண்டித நேருவுக்கு உண்டு!

அப்படிப்பட்டவரின் தனித் தலைமையில்தான், கோவையில் தி. மு. க. ஐந்தாவது பொது மாநில மாநாடு நடைபெறுகிறது; அம் மாநாட்டில், பல சிறப்புகள் இடம் பெறும்; வரலாறு படைக்கும் பல தீர்மானங்கள் உருவாகும்; தமிழகமும்-- தமிழும் பெருமிதத்தில் விம்மும்!

நான்காவது பொது மாநில மாநாடு விருகம்பாக்கத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது—தமிழக அரசைக் கொண்டு வந்தது! இராஜாஜியும், காயிதே மில்லத்தும் மேடையில் காட்சி தந்தார்கள்!

கோவையில் ஐந்தாவது மாநில மாநாடு—கலைஞர், யார் யாரைக் காட்சியாக்கப் போகிருரோ, தெரியவில்லை!

அதைவிடப் பெரும் புகழைக் கழகத் தலைவர் கலைஞர் சேர்ப்பார் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு!

அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள்—

"I am addicted to Prohibition"—'நான் மது விலக்கில் மயக்கம் கொண்டிருக்கிறேன்' என்று!

கலைஞர் அவர்கள், இத்தோடு,

"Kalignar is addicted to Tamil"—'கலைஞர் தமிழ் இலக்கியத்தில் மயக்கம் கொண்டிருக்கிருர்'

என்று நம்மைச் சொல்ல வைக்கின்ருர்!

வெல்க—கலைஞர் பயணம்!

# ஜே. கே. கே. தொகுப்பு தொழில் நிறுவனங்கள்

சுந்தரம் ஸ்பின்னிங் மில்ஸ், கொமாரபாளையம்.

கந்தசாமி ஸ்பின்னிங் மில்ஸ், பவானி.

தி அழகப்பா காட்டன் மில்ஸ், ராஜபாளையம்.

புள்ளிக்கார் மில்ஸ் லிமிடெட், திருச்செங்கோடு.

ஸ்ரீ இராமலிங்க சூடாம்பிகை மில்ஸ் லிமிடெட், திருப்பூர்.

கந்தசாமி வீவிங் பேக்டரி அண்டு கோ., கொமாரபாளையம்.

ஜே. கே. கே. டெக்ஸ்டைல் பிராசசிங் யூனிட், கொமாரபாளையம்.

## தென்னகத்தின் தலைசிறந்த நூற்பு ஆலை!

## 1974-ஆம் ஆண்டில் எமது வெளிநாட்டு ஏற்றுமதி மட்டும் ரூ. 4 கோடிக்கும் அதிகம்

★

| | கதிர்கள் | விசைத் தறிகள் |
|---|---|---|
| நிறுவப்பட்டவை: | 1,22,800 | 342 |
| அனுமதிக்கப்பட்டவை: | 1,38,600 | 1,050 |

உரிமையாளர்கள் :

ஜே. கே. கே. அங்கப்பன்
ஜே. கே. கே. சுந்தரம்
ஜே. கே. கே. நடராஜா
ஜே. கே. கே. முனிராஜா

# தொண்டின் இமயம் தொண்டர்களின் இதயம்

அறந்தாங்கி இராசன்



அறந்தாங்கி இரா. இராசன், ஆர்வத் துடிப்புமிக்க கழகத் தொண்டர்; செயல் வீரர்; தஞ்சைமாவட்டத் தி. மு. க. பொறுப்பாளராகப் பணியாற்றியவர்; தற்போதைய பொதுக்குழு உறுப்பினர்.

பேரறிஞர் அண்ணு அவர்களிடமும், டாக்டர் கலைஞர் அவர்களிடமும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.

அண்ணு அவர்களையும், கலைஞர் அவர்களையும் தமது சிற்றூருக்கு அழைத்துக் கூட்டம் நடத்திய சிறப்பினைப் பெருமிதத்தோடு கூறுகிறுர்; அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய தகவல்கள் இக்கட்டுரையில் இடம் பெற்று உள்ளன.

“மிகச் சிறந்த நிர்வாகி—இராசதந்திரி—அரசியல் தலைவர்—எழுத்தாளர் — பேச்சாளர் — கவிஞர் — கலைஞர்’’ என நாடு போற்றும் டாக்டர் கலைஞர், அண்ணு அவர்களால், ‘தம்பி’ என அழைக்கப்பட்டவர்!

அண்ணு அடிக்கடி சொல்வார் — ‘தம்பியுடையான் படைக்கஞ்சான்’ என்று; அவர் இந்தத் தம்பியை மனத்திற்கொண்டுதான் அப்படிச் சொல்லி இருப்பார் போலும்!

‘இத்துடன் தி.மு.க. ஒழிந்தது -- ஆட்சி கவிழ்ந்தது’ என மாற்ருர் கொக்கரித்துக் கொண்டிருக்கையில், எதையும் தாங்கும் இதயத்துடன்—இப் பேரியக்கத்தைக் கட்டிக்காத்த பெருமை அவருக்குத்தானே உரியது?

நம் அண்ணனின் தங்கத் தம்பி -- நம் இளைய அண்ணன் டாக்டர் கலைஞர் தலைமை தாங்கும் முதல் மாநில மாநாடுதான்—கோவையில் நடக்கும் தி.மு.க. 5-ஆவது மாநில மாநாடு; அதனுல்தான், எத்தனையோ கழக மாநாடுகளைக் கண்டிருந்தாலும், இந்த மாநில மாநாட்டிற்குச் செல்வதைத் தம் வாழ்நாளின் பெருமைக்குரிய நிகழ்ச்சியாக ஒவ்வொரு தொண்டரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர்!

தொண்டின் இமயமாய்த் திகழும் கலைஞர், ஒரு மாபெரும் தொண்டர்; அவருக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சிறப்பையும் தங்களுக்குக் கிடைத்ததாக எண்ணி மகிழ்ந்திடும் தொண்டர் பட்டாளம்தான் தி.மு.க.; ஆயிரமாயிரம் உணர்வுகள் அதற்குள் பொதிந்து கிடக்கின்றன!

## இமாலயப் பணிகள்

‘‘குடிப் பெருமை இல்லை -- குலப் பெருமை இல்லை; சமுதாயத்தில் மிக மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவன் நான்; எத்தனை ‘மிக’ வேண்டுமானுலும் போட்டுக் கொள்ளுங்கள்; தாழ்ந்து கிடக்கின்ற மக்களுக்கு வாழ்வு அளிப்பதே என் இலட்சியம்’’ என்று சொல்லி, மக்களிடம் வாக்குக் கேட்ட ஒரே அரசியல் தலைவர்!

அண்ணுவிற்குப் பின், ‘ஒப்பாரும் மிக்காரும் இல்லை’ எனும் வகையில், மிகச் சிறந்த ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிருர்—என அனைவரின் போற்றுதலையும் பெற்ற ஒரே முதலமைச்சர்!



பின்தங்கியோர் நலத் துறைப் பணி—பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்—கண்ணொளி வழங்கும் திட்டம்—கைம்பெண்டிர்க்கு மறுவாழ்வுத் திட்டம்—கைரிக்ஷா ஒழிப்புத் திட்டம்—ஊனமுற்ருேர் மறுவாழ்வுத் திட்டம்—அனுதைச் சிறுவர் பராமரிப்புத் திட்டம்—தாழ்த்தப்பட்டோர், மீனவர்களுக்கு வீட்டு வசதித் திட்டம்—அரசு ஊழியர் குடும்ப நலத் திட்டம் — அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டம்—பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கக் குடிநீர் வாரியம்—பஸ்கள் நாட்டுடைமைத் திட்டம்—குடிசைகளை மாற்றி வீடு கட்டித் தருவதற்குக் குடிசை மாற்று வாரியம்—குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கிடத் தனிச் சட்டம்—ஊர்தோறும் மின் இணைப்பு—உழைப்போர் மகிழ்ந்திடத் தொழிலாளருக்குத் தொழிலில் பங்கு-உலகம் கவர்ந்திடச் சுற்றுலாக் கழகம்—வாணிபத்திற்குக் கப்பற் கழகம் — வேலை வாய்ப்புக்கு இளைஞர் அணி—விவசாயிகள் மனம் மகிழ நில உச்சவரம்புக் குறைப்பு—விதி விலக்குகள் நீக்கம்—குத்தகைப் பாக்கிகள் தள்ளுபடி—கடன் நிவாரணம்—இலவச நிலப் பட்டா, மனைப் பட்டா வழங்குதல்—ஏழைகள் ஏற்றம் பெற்றிட அண்ணன் வழியில் மது ஒழிப்பு—குதிரைப் பந்தய ஒழிப்பு—பரிசுச் சீட்டு ஒழிப்பு—இப்படி, இருநூற்றுக்கு மேற்பட்ட திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிருர்!

அத்துடன், நாள்தோறும் பார்வையாளர்களை--கழகத் தோழர்களை -- அரசு அலுவலர்களை -- அரசியல் தலைவர்களை -- அமைச்சர்களை -- பத்திரிகையாளர்களைச் சந்திக்கவும் தவறுவதில்லை!

நாளிதழ்கள், புத்தகங்கள் படிப்பது—ஏடுகளுக்குக் கட்டுரை, கவிதை, ஓவியங்கள் தீட்டுவது--மேடைகளில் முழங்குவது—அரங்குகளில் கவிதை வடிப்பது—அன்ருடம் கழகப் பணிகளைக் கவனித்து இயக்கத்தைக் காப்பது—கழக நண்பர்களின் குடும்ப நிகழ்ச்சிகளில் தவருது கலந்து கொள்வது—தமிழகத்தில் மட்டுமன்றி அகில இந்திய அளவில் தமக்கென ஒரு தனி இடத்தை ஏற்படுத்திப் பீடுநடை போடுவது—ஆக இத்தனைப் பணிகளையும் சோர்வின்றிச் செய்கிருர்!

இப்படித் தொண்டின் இமயமாய்த் திகழும் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர்தான், தொண்டர்களின் இதயமாய்த் திகழ்கிருர்!

அந்த இதயம் மனம் திறந்து பேசியதைப் பலமுறை கேட்டுப் புல்லரித்திருக்கிறேன்.

‘‘இன்றையத்தினம் தொண்டனுக்குத் தொண்டனுகிய நான் கழகத்தின் தலைவனுக இருக்கிறேனென்ருல், காரணம் என்ன தெரியுமா—என்னுடைய தலை, அந்தத் தொண்டர்களின் காலடியில் இருப்பதுதான்’’ என்று சொல்லுகின்ற அடக்கம் நிறைந்த -- ஆற்றல் படைத்த ஒரே மக்கள் தலைவர்—நானறிந்த வரையில்—டாக்டர் கலைஞர்தான்!

அவருடைய வார்த்தைகள் வெறும் அலங்காரச் சொற்கள் அல்ல -- அர்த்தம் நிறைந்தவை என்பதை ஒவ்வொரு கழகத் தொண்டன் வாழ்விலும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிருர்! எனது உணர்வோடு உணர்வாய், உயிரோடு உயிராய்க் கலந்துவிட்ட ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

## அரசியல் ஆசான்

பள்ளிச் சிறுவனுக இருந்த நான், 1948-ஆம் ஆண்டு முதல் இயக்கத்தோடு ஒன்றிவிட்டேன்.

1953-ம் ஆண்டில் பேரறிஞர் அண்ணு அவர்கள், மும்முனைப் போராட்ட அறிவிப்பு வெளியிட்டார்; நாடெங்கும் புதிய எழுச்சி; டால்மியாபுரம் பெயர் மாற்றப் போராட்டத்திற்குக் கலைஞர் தலைமை ஏற்கிருர்; அப்போது நான் புதுக்கோட்டைக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன்.

நானும்—இன்றைய அறந்தாங்கி ஒன்றிய அவைத் தலைவர் நண்பர் முத்துக்கிருட்டிணனும் டால்மியாபுரம் செல்வதற்காகத் திருச்சி சென்ருேம்; திருச்சியிலேயே நிறையப் போலீஸ் காவல்; முன்பின் செல்லாத ஊர்; அருகில் இருந்த சப்-இன்ஸ்பெக்டரிடம் விவரம் கேட்டோம்; ‘ஏன் -- எதற்கு’ என்று கேட்டார்; ‘போராட்டத்தில்

கலந்துகொள்வதற்காகச் செல்கிறோம்' எனக் கூறினோம்.

கலைஞர் கைது செய்யப்பட்டு விட்டதாகவும், டால்மியாபுரம் தொலைவில் இருப்பதால் இனி மேல் அங்கு செல்வதில் பயனில்லை என்றும் அவர் கூறினார்.

இளம் இதயங்களில் கொலுவீற்றிருந்த எங்கள் தலைவருடன் போராட்டத்தில் பங்கு பெறும் வாய்ப்பினை இழந்து--ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

மறுநாள் செய்தித் தாள்களில், தொடர் போராட்டம் நடைபெற்றதாகவும், பலர் கைது செய்யப்பட்டதாகவும் செய்தியைப் பார்த்ததும், அந்தப் போலீசு அதிகாரிமீது எங்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது; படிப்பதில் நாட்டம் செல்லவில்லை; கலைஞர் ஊட்டிய எழுச்சி, எங்களை இயக்கப் பணியில் ஈடுபடத் தூண்டியது.

அறந்தாங்கிப் பகுதியில் கழகம் வளர்க்கின்ற பணியில் நண்பர்கள் மு. சீ. மாரிமுத்து, அசோகன், கருணா ஆகியோருடன் தீவிரமாய் ஈடுபட்டேன். தத்துவமேதை டி. கே. சீனிவாசன், அண்ணன் சி. பி சி., பொன்னம்பலனார், அருண்மொழி, பூங்கோதை, சிற்றுளி சுப்பிரமணியம், இளமுருகு பொற்செல்வி, நாவலர், பேராசிரியர், பேரறிஞர் அண்ணா ஆகிய அனைவரையும் அழைத்து கழகப் பிரச்சாரத்தை முடுக்கினேன்.

1954-ஆம் ஆண்டில், சுப்ரமணியபுரத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆயிங்குடி புகைவண்டி நிலையத்திற்கு 'சைக்கிள் கேரியரில்' உட்கார வைத்து—அண்ணன் டி. கே. சீனிவாசனை அழைத்துச் சென்ற காட்சி இன்னும் என் நினைவில் பசுமையாகவே இருக்கிறது! அவருக்கு சைக்கிள் ஓட்டவும் தெரியாது; ஓட்டுகின்ற நிலையில் சைக்கிள் கேரியரில் ஏறி உட்காரவும் தெரியாது; நல்ல 'வெயிட்'; அப்பப்பா—இப்போது நினைத்தாலும், நான் பட்டபாட்டை......!

அண்ணா வந்தபோதுதான், திராவிடர் கழகத்திலிருந்து ஒதுங்கியிருந்த பாலையவனம் துரையரசன் அவர்களை சுப்பிரமணியபுரம் தி. மு. கழகக் கிளையில் உறுப்பினராகச் சேர்த்தேன்.

## கூட்டத் தேதி

அண்ணா உட்பட எல்லாரும் வந்தாலும், எங்களின் இளம் உள்ளங்களுக்கு ஒரு பெரும் குறை—எங்களின் 'அபிமானத் தலைவன்'—இளம் உள்ளங்களின் எழுச்சி முரசம்—'கலைஞர்' வரவில்லையே என்பதுதான் அது!

துறையூரில் ஒரு சிறப்புக் கூட்டத்திற்குக் கலைஞர் வரும் செய்தி அறிந்து, கூட்டத்துக்குத் தேதி கேட்கத் துறையூர் சென்றேன்; அண்ணன் அன்பில்—மணி—அழகமுத்து ஆகியோர் எனக்காகப் பரிந்துரைத்தனர்.

"இப்போது முடியாது; அடுத்து மாயூரம் வருகிறேன்; அங்கு வா--தேதி தருகிறேன்' என்றார் கலைஞர்; ஓரளவு மகிழ்ச்சியுடன் திரும்பினேன்.

கலைஞர் குறிப்பிட்டதுபோல் மாயூரம் சென்றேன்; அங்கு ஒரு படிப்பக விழா (ஆசிரியர் வேலாயுதம் மன்றம் என்று நினைவு); கலைஞரும், இராமாமிர்தத்தம்மையாரும் கலந்து கொண்டு பேசினர்.

விழா முடிந்தபின், கலைஞரைக் காணச் சென்றேன்; களைப்பின் மிகுதியால் கண்ணைமூடிக் கொண்டு படுத்திருந்தார்; உடன் கவிஞர் மற்றும் நண்பர்கள் இருந்தனர்.

நான் அருகில் சென்று, கூட்டத் தேதியை நினைவுபடுத்தினேன்; 'களைப்பாக இருக்கிறது --சென்னை சென்று எழுதுகிறேன்' என்றார்.

எனக்கோ, பெரிய ஏமாற்றம்--தாங்கிக்கொள்ள முடியவில்லை!

"நானும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன்தான்; எனக்கும் களைப்பாத்தான் இருக்கு; நானும் நூறு மைல் தாண்டித்தான் அன்றைக்குத் துறையூர் வந்தேன்; இன்றைக்கு மாயூரம் வந்திருக்கிறேன்; ஏதோ. கொள்கை -- இலட்சியம் என்றெல்லாம் சொல்றீங்களேன்னு நம்பித்தான் வந்தேன்; நான் வர்றேங்க'' எனப் படபட வென்று சொல்லிவிட்டுத் துயரத்துடன் எழுந்து நடந்தேன்.

"இங்கே வா ஐயா; உனக்குத் தேதிதானே வேண்டும்—சரி; கூட்டத்திற்கு ஏற்பாடு செய் -- வருகிறேன்'' என்று கோபமாகக் கூறினார் கலைஞர்.

பேசிய தொனியில் கோபமாகத் தெரிந்தாலும், அதனுள்ளே இருந்த கனிவு என்னைக் காந்தம்போல் கவர்ந்தது!

அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிய என்னுடைய அறியாமையை எண்ணி நொந்து கொண்டேன்!

என் தலைவனின் முன்னிலையில் நான் வார்த்தைகளைக் கொட்டியது அந்த ஒரே ஒரு நாள்தான்!

தாம் ஓர் இலட்சியவாதி என்பதை எந்தச் சூழலிலும் அவர் நிரூபிக்கத் தவறியதில்லை; இந்தச் சிறு சம்பவம்கூட அதற்கொரு சான்று!

## சிறப்புக் கூட்டம்

1958-இல், சுப்பிரமணியபுரத்தில், திருவாரூரில் நடந்த தஞ்சை மாவட்ட மாநாட்டு நிதியளிப்புச் சிறப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன்; ஒரு கிராமத்தில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது--அது, சுப்பிரமணியபுரமாகத்தான் இருக்கும். கலைஞரிடம் மாநாட்டு நிதியாக ரூ. 250 அளித்தேன்; கூட்டத்திற்கு வருவதானால், ரூ. 250 தரவேண்டும் என்பது அப்போதே கலைஞர் வைத்திருந்த நிபந்தனை!

சிறப்புக் கூட்டச் செலவு—மாநாட்டு நிதி போக சிறப்புக் கூட்ட வாயிலாக மிஞ்சிய ரூ. 1,000 செலவில் கழகத்திற்குக் கட்டிடம் ஒன்று கட்டினோம்.

சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்த கலைஞரை வீட்டிற்குச் சாப்பிட அழைத்தேன்; உடன் வந்த அண்ணன் அன்பில் அவர்களும் எனக்காகப் பரிந்துரைத்தார்; மறுமுறை வருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

"அண்ணா, நாவலர் மற்றும் கழகத் தலைவர்கள் எல்லாம் வந்தார்களே--கலைஞர் மறுத்துவிட்டாரே'' என எனக்கு உள்ளூர வருத்தம்; காரணம், அவர் என்னுடைய உள்ளத்தில் 'அபிமானத் தலைவராய்' இடம் பெற்றவர் என்பதால்தான்; இதை அந்தக் காலங்களில் அண்ணன் துரையரசன்கூடக் கேலி செய்திருக்கிறார்; இப்

தொலைபேசி: 3537

அஞ்சல் பெட்டி: 108

எண்: என். 810

# சேலம் கூட்டுறவு அச்சகம்

(வரையறை)

சங்கராலயம் சாலை, சேலம்-636001.



அரசு அலுவலகங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் தனியார் துறையினரின் பணியினை ஏற்றுச் சிறந்த முறையில் -- குறைந்த செலவில் அழகிய வேலைப்பாடுகளுடன் அச்சிட்டுத் தருகிறோம்.

ஒருமுறை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

எம். பெரியசாமி,
முதுநிலை ஆய்வாளர் / செயலர்.

எஸ். ஏ. அன்புக்கரசு,
தலைவர்.

போது என் வழிக்கு வந்து விட்டார்.

அந்த வேளையில் மன்னார்குடியில் எனக்கொரு கடை இருந்தது; சிறப்புக் கூட்டம் முடிந்தபின், மன்னார்குடி கடையில் இருந்தேன்; அண்ணன் மன்னை, கவிஞர், தென்னன் மற்றும் நண்பர்கள் சூழ--எதிர்பாராத நிலையில்--கலைஞர் ஒரு நாள் கடைக்கு வந்தார்கள்; 'சாப்பிட வேண்டும் என்றுயே--என்ன இருக்கிறது--கொண்டு வா' என்றார்கள்; என் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை; ஏதோ ஏற்பாடு செய்தேன்; தேநீர் அருந்திவிட்டு, சிறிது நேரம் உரையாடியபின், 'திருவாரூர் மாநாட்டுப் பணிகளைப் பார்க்கலாம் வா' என்றார்கள்; 'நாளை வருகிறேன்' என்று சொல்லி விட்டு, மறுநாளே அங்கு புறப்பட்டுச் சென்றேன்.

### ஆரூர் மாநாடு

கலைஞரின் இல்லம்தான் மாநாட்டு அலுவலகம்; 22 நாட்கள் தங்கியிருந்தேன்; பகலில், மாநாட்டுப் பணிகளைக் கவனிப்பதும், இரவில் மாநாட்டு நிதியளிப்புப் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு இரவு வெகு நேரம் கழித்துவந்து அப்போதும் மாநாட்டுப் பணிகளைக் கவனிப்பதும் கலைஞரின் தினசரி வேலையாக இருந்தது.

ஒரு நாள் இரவு எங்களோடு சேர்ந்து கலைஞர் தோரணம் ஒட்டியது இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது; கட்சிப் பணியாற்றும் ஒவ்வொரு வேளையும், இந்தக் காட்சிதான் என் நினைவுக்கு வரும். இதில் அவரை யாரும் வெல்ல முடியாது!

அண்ணன் மன்னை—வாழக்கரை இராசகோபால், கோமல் வெங்கட்ராமன்—வெங்கடங்கால் சந்தானம் மற்றுமுள்ள நண்பர்கள், தினசரி வெளியில் சென்று நன்கொடை வசூலித்து வருவார்கள்; அப்படி வசூலானது ரூ. 2,500 என நினைவு; அப்போது, அது பெரிய தொகை!

கலைஞரின் சொந்தப் பணம்—நன்கொடை வசூல்—கலைஞரின் கூட்ட வழிச் செலவு வசூல்—இப்படி எல்லா வரவுகளையும் போட்டுச் செய்தாலும், மாநாட்டுச் செலவுக்குத் தட்டுப்பாடு வந்து கொண்டுதான் இருந்தது; நிலைமைகளைப் பார்த்து, கடையிலிருந்து ரூ. 1,000 கொண்டுவந்து கலைஞரிடம் கொடுத்தேன்; 'போகும்போது கேட்டு வாங்கிக் கொள்' என்றார்.

மாநாட்டுப் பந்தலிலும், வீதிகளிலும் கட்டுவதற்கு 'பேனர்'கள் எழுதப்பட்டன; அனைத்து வாசகங்களும் கலைஞரே எழுதித் தந்ததுதான்!

கூட்டத்திற்குச் சென்றுவிட்டு ஒருநாள் இரவு கலைஞர் வெகு நேரம் கழித்து வந்தார்; 'எல்லாம் எழுதியாயிற்று' என்றார்.

'ஆம்' என்றோம்.

''அடடா—கலைவாணரை மறந்து விட்டோமே'' என்று கூறிக்கொண்டே, ஒரு சீட்டில், 'கலையுலகின் முடிசூடா மன்னரே! கலைவாணரே! உமை மறவோம்!' என எழுதித் தந்து, 'பேனரில்' எழுதச் சொன்னார்; நாங்களெல்லாம் புன்முறுவல் கொண்டோம்! எவ்வளவு பெரிய இதயம்!

மாநாடு வெற்றிகரமாய் நடந்தது; கழக வரலாற்றிலேயே ஒரு மாவட்ட மாநாட்டை நடத்தி நிதியை மிச்சப்படுத்தி—அண்ணாவின் கையில் கொடுத்து—கழக வரலாற்றில் 'ஒரு திருப்புமுனை'யை ஏற்படுத்தியவர் கலைஞர்தான்!

அவரைப் பார்த்துச் சிலர் 'சூடு' போட்டுக் சொண்டனர்; அவர்களைக் கழகம், பின்னால் அடையாளம் கண்டுகொண்டது; 'சம்பந்தம்' இல்லாதவர்களைப் பற்றி எழுதி, இடத்தை வீணாக்குவானேன்?

மாநாடு முடிந்தபின், மாநாட்டுப் பணியில் உழைத்த தோழர்கள் விடைபெற்றுச் சென்ற வண்ணம் இருந்தனர்; நானும் கலைஞரிடம் விடைபெறச் சென்றேன்; 'ஊருக்குப் போக வேண்டுமா' என்றார்; 'ஆம்' என்றேன்.

''டிரைவரிடம் சொல்லி, இராசனை, 'பஸ் ஸ்டாண்டா--இரயில்வே ஸ்டேஷனா' என்று கேட்டு விட்டு வரச் சொல்லுங்கள்'' என அருகிலிருந்த அண்ணன் கவிஞரிடம் கூறினார்.

அத்துடன் நான் கேட்காமலேயே — மாநாட்டுச் செலவுக்குக் கொடுத்திருந்த ரூ.1000-யும் கொடுத்து அனுப்பச் சொன்னார்.



வசதியான ஒரு குடும்பத்துப் பிள்ளைதான் நான்; ஆனால் அதுவரையில், ஒரு புதிய பியட் காரில் ஏறியதில்லை; அந்த நாளில், ஒரு தொண்டனுக்குக் கிடைத்த கார் சவாரியை இன்றும் என்னால் மறக்க இயலாதது!

அன்பின் மிகுதியால், தளும்பிய கண்களுடன் என் தலைவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன்.

### தொண்டனைத் தேடி...

1960-ஆம் ஆண்டில் திருத்துறைப்பூண்டிக்குப் பக்கத்திலுள்ள பாண்டியில் ஒரு திருமண நிகழ்ச்சி; ஒரே மேடையில் இரண்டு திருமணங்கள்; பண்ணையாருக்கு இரண்டு மகன்கள்; மூத்த பையன் பொதுவுடமைவாதி—இளைய பையன் தி. மு. க.; மூத்தவர் திருமணத்திற்கு ஜீவா தலைமை வகிக்கிறார்; இளையவர் திருமணத்திற்குக் கலைஞர் தலைமை வகிக்கிறார்; ஒட்டுமொத்தமான விழாத் தலைமை -- கலைஞர் ஏற்றுச் செய்கிறார்.

★

நான் திருத்துறைப்பூண்டியில் எங்களுக்குச் சொந்தமான 'நகை அடகுக் கடை'யில் இடைக்கால நிர்வாகத்தைக் கவனித்து வந்தேன்; எனது தந்தையாரின் கட்டளையை மீற முடியாமல் சில நாட்கள் இருந்தேன்; அப்போதும் அப் பகுதியில் கழகப் பணிகளைத் தீவிரமாய் செய்துவந்த நண்பர் டி. எஸ். கல்யாணசுந்தரத்துடன் தொடர்பு கொண்டு கட்சிப் பணியில் ஈடுபட்டிருந்தேன்.

உள்ளூர் தோழர் ஒருவர் வந்து, கலைஞர் வரும் விவரத்தைக் கூறினார்; கடையிலோ உதவிக்கு வேறு ஆள் இல்லை; ஒரு துண்டுச் சீட்டை எடுத்து இப்படி எழுதினேன்—

''அன்புள்ள கலைஞர் அவர்கட்கு, இராசன் வணக்கம்; நான் திருத்துறைப்பூண்டியில் கடையில் இருக்கிறேன்; உதவிக்கு ஆள் இல்லாததால் நேரில் வர முடியவில்லை: மன்னியுங்கள்; முடியுமானால், திரும்புகையில், இந்த வழியாக வாருங்கள்''

என எழுதி அந்த நண்பரிடம் கொடுத்து, 'கலைஞரிடம் எப்படியும் சேர்த்துவிடுங்கள்' என்று கூறியனுப்பினேன்.

சீட்டு எழுதி அனுப்பிய பின், எனக்கு ஒரே மனக் குழப்பம்; 'எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டோம்' என எண்ணினேன்; 'தலைவனுக்குத் தொண்டன் இப்படியா எழுதுவது; தலைவனைத் தேடித் தொண்டன் செல்வதா--தொண்டனைத் தேடி தலைவன் வருவதா? எவ்வளவு பைத்தியக்காரத்தனமாய் நடந்துகொண்டோம்--கலைஞர் என்ன எண்ணுவார்?' எனக் குழம்பிக் கொண்டிருந்தேன்.

அப்போது கவுண்டருக்குள் கையை நீட்டி, 'இந்த மோதிரத்திற்கு என்ன தரலாம்' எனக் குரல் கேட்டது; கேட்ட குரலாக இருந்தது; நிமிர்ந்து பார்த்தேன்; எதிரே கலைஞர்; என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை; 'உள்ளே வாருங்கள்' என்று சொல்லி மன்னிப்புக் கேட்டேன்; சிரித்துக் கொண்டே முதுகில் தட்டிக்கொடுத்தார்.

அவருடன்—அண்ணன் பராங்குசம், கவிஞர், தென்னன், வெங்கடங்கால் சந்தானம் மற்றும் பலர் வந்ததாக நினைவு; கூட்டம் திரண்டுவிட்டது!

''சரி; சாப்பாடு வாங்கி வரச் சொல்'' என்றார்.

அப்போதுதான், திருமணத்தை முடித்துவிட்டு—எஞ்சிய விழாத் தலைமையை ஜீவா பொறுப்பில் விட்டுவிட்டு—பண்ணையார் வீட்டில் சாப்பிடாமல் வந்ததைந் தெரிந்துகொண்டேன். உடன் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தேன்.

உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர், 'நான்தான் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' எனக் கூறி என்னைத் தடுத்தார்; அவருடைய வேண்டுகோளுக்குக் கலைஞர் இணங்கவில்லை.

நீண்ட காலத்திற்குமுன் ஒருமுறை திருத்துறைப்பூண்டி வந்தபோது, உணவுக் கடையில் விட்டுவிட்டு அந்த நபர் சொல்லாமல் கொள்ளாமல் சென்றுவிட்டதாகவும், அப்படிப்பட்டவர் இப்போது அழைப்பதற்கு இணங்க முடியாது என்றும் மறுத்துவிட்டார்; சம்பவங்களை நினைவில் வைத்துக்கொள்வதில் அவருக்கு இணை எவரும் இல்லை!

விடாக்கண்டனான அந்த நபர், கலைஞரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு--என்னையும் சமாதானப்படுத்தி--ஒருவாறு சாப்பாட்டிற்கு ஒப்புக்கொள்ளச் செய்தார்.

மாலையில் ஆலத்தம்பாடியில் நடைபெறும் கூட்டத்திற்கு வருமாறு சொல்லிக் கலைஞர் புறப்பட்டுச் சென்றார்.

தொண்டர்களிடம் அன்பைக் கொட்டுவதிலும் -- அவர்களை மதிப்பதிலும் அவருக்கு நிகர் அவர்தான்!

### கழகத்தவரைச் சந்திக்கும் ஆர்வம்

அமைச்சர் பொறுப்பை ஏற்றபின், நிகழ்ச்சிகளுக்குக் கலைஞர் அவர்கள் வரும்போநு சென்று சந்திக்கத் தயங்கினேன்; 'அதிகாரிகள் வருவார்கள்—பெரிய மனிதர்கள் வருவார்கள்—நாம் தொல்லையாக இருக்கக்கூடாது' என்று எண்ணினேன்.

தம்மைக் காண வரும் கூட்டத்தினர் ஆயிரக்கணக்கில் இருந்தாலும், 'வந்தவர் யார்—வராதவர் யார்' எனப் பகுத்தறியும் காந்தக் கண்கள் அவருடையதாகும்!

ஒருநாள் அவரை நான் சந்தித்தபோது, வருத்தத்தோடு இப்படிக் கேட்டார்—'என்னய்யா; அமைச்சரானதும் என்னைக் காண யார் யாரோ வர்ராங்க; காரியத்துக்காக வர்ரவங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருக்க, நான் என்ன—இயந்திரமா? கொஞ்ச நேரமாவது மனம் விட்டுப் பேசவேண்டுமானால், நீங்களெல்லாம் கூட இருந்தாத்தானே' என்றார் கலைஞர்!

அவருடைய வார்த்தைகளில்தான் எத்துணை ஆழமான உணர்வுகள்! தாம் எவ்வளவு பெரிய பொறுப்பில் இருந்தாலும், கழகத் தோழர்களைச் சந்திப்பதில்தான் எவ்வளவு ஆர்வம்!

அன்று காட்டிய அந்த ஆர்வம், இன்று பெரும் பொறுப்புகளும்--சுமைகளும் பல மடங்கு அதிகரித்துவிட்ட நிலையிலும் கொஞ்சம்கூடக் குறையவில்லை; நானறிய அதில் அவர், சலிப்போ--வெறுப்போ காட்டியதாக ஏதுமில்லை!

## தொண்டர் நலம் விரும்பும் தலைவர்!

1968-ஆம் ஆண்டில் என்னுடைய பழைய காரை விற்றுவிட்டுப் புதிய அம்பாசிடர் கார் ஒன்று வாங்கினேன்; அந்த வண்டிக்கு, அண்ணாவின் கார் எண்ணை 7007-ஐத் தேர்வு செய்து தந்தவர் கலைஞர்தான்; அந்தக் காரில் அடிக்கடி சென்னை சென்று வந்தேன்.

கலைஞர் என்னை இருமுறை அழைத்துக் கண்டித்தார்—'அடிக்கடி விபத்துக்கள் நடக்கிறது; கார் பயணம் வேண்டாம்; காரில் செல்வதை மாவட்ட அளவில் வைத்துக்கொள்; சென்னைக்கு வருவதானால் இரயிலில் வா; நாங்களெல்லாம் மாற்றிக்கொள்ளவில்லையா?' என அன்புடன் கடிந்துகொண்டார். நானும், காரில் வருவதைத் தவிர்த்துக்கொண்டேன்.

கலைஞர் கண்வலியால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்தவுடன், அவரைக் காண்பதற்காகச் சென்னை சென்றேன்; வீட்டில் மாடியிலிருந்தார்--போய்ப்பார்த்தேன்.

சிறிது நேரம் இருந்துவிட்டு, 'உடம்பை நல்லாப் பார்த்துக்கங்க; சுற்றுப் பயணங்கள் கொஞ்ச நாளைக்கு வேண்டாம்' என்றேன்; 'உன் கூட்டத்திற்கு?' என்று கேட்டார்—சிரித்துக் கொண்டே! வேதனையிலும் அப்படி ஒரு சமாளிப்பு!

அறந்தாங்கியில் புதிதாகக் கட்டிய மருத்துவமனையைத் திறக்கத் தேதி கேட்டிருந்தேன்; அதை நினைத்து அப்படிக் கேட்டார்.



''நாவலரை அழைத்து நிகழ்ச்சியை நடத்திக் கொள்கிறேன்; எல்லாமே நீங்கதான்; உடம்மை நல்லா கவனிச்சுக்கங்க'' என்று சொல்லும்போதே என்னுடைய நா தழுதழுத்தது.

விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன்; கலைஞர் அழைப்பதாகச் செயல்மணி கூறவே, மீண்டும் மாடிக்குச் சென்றேன்; 'எதில் வந்திருக்கிறாய்' என்று கேட்டார்; 'காரில்' என்றேன்.

''கார் பயணம் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேனே; நீங்களெல்லாம் நல்லா இருந்தாத்தானய்யா நான் நல்லா இருக்க முடியும்; இனியாவது சொல்றதைக் கேளய்யா'' என வேதனையுடன் கூறினார்.

அவருடைய உடல்நிலை கண்டு உள்ளம் நொந்திருந்த என்னை, அவருடைய பாசமிகு மொழிகள் அழ வைத்துவிட்டன!

தேம்பிய நிலையில் கண்ணைத் துடைத்துக் கொண்டே, 'சரிங்க' என்று விடைபெற்றேன்; கார் பயணத்தை அன்றுடன் விட்டுவிட்டேன்; இப்போது, காரையும் விற்றுவிட்டேன்.

மனைவி — மக்கள் — சுற்றம் இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் இலட்சக்கணக்கான தொண்டர்கள் தி.மு. கழகத்தில் இருப்பது பலன் கருதியும் அல்ல--கவர்ச்சிப் பிடிப்பாலும் அல்ல; 'ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்காக இன்னுயிர் நீத்தாலும், தங்களுக்காகக் கவலைப்பட--கண்ணீர் சிந்த ஒரு தலைவன் இருக்கிறானே' என்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கைதான்!

1968-இல் சென்னை மாநகராட்சித் தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருக்கையில், செங்கற்பட்டிற்கு அருகில் கோ. சி. மணி கார் விபத்திற்கு உள்ளானபோதும்—அமெரிக்காவில் அண்ணாவுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றபோதும்—அண்ணா சிலை திறப்பதற்காக நாவலருடன் தஞ்சை வந்திருந்தபோதும் கலைஞர் துடித்த துடிப்பை, அவருடன் அருகிலிருந்த நான் கண்டு கலங்கியிருக்கிறேன்.

தம்மைப் பற்றிக் கவலைப்படாமல் பிறருக்காகக் கவலைப்படுகின்ற ஒரு தலைவர், அவரைத் தவிர யார் இருக்க முடியும்?

அதனால்தான், இலட்சக் கணக்கான கழகத் தொண்டர்கள், அடிவயிறு வலிக்க, 'கலைஞர் வாழ்க--கலைஞர் வாழ்க' என்று வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்!

அந்த வாழ்த்து, நிச்சயம் நம் தலைவனை நெடிது வாழ வைக்கும்! ★

ஸ்தாபிதம்: 1921

தொலைபேசி எண்: 20046 மற்றும் 21499
தந்தி : 'COSASO'

# திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்.,

எண். கே. 184 / 5769

திருப்பூர்-638604.

திரு. கே. வி. கொச்சுகேசவன், பி.ஏ.
துணைப் பதிவாளர் / செயலாளர்.

திரு. சு. பழனிச்சாமி,
தலைவர் பொறுப்பு.

இயக்குநர்கள்:

திரு. எம். ஆர். ராமசாமி, திரு. எம். அவனாசியப்பன், திரு. மா. பழனிச்சாமி, திரு. கே. பழனிச்சாமி கவுண்டர், திரு. எஸ். கே. ராமசாமி, திரு. ஆர். சுப்பையன், திரு. என். அம்மாசை கவுண்டர், திரு. எம். சுப்பிரமணியம், திரு. கே. ராமசாமி, திரு. வி. அய்யாவு, திருமதி என். கண்ணம்மாள்.

மகத்தான விவசாயத் தொண்டு!

## 'பொழிலகம்'

(உழவர் அங்காடி)

★

மங்காத வியாபாரப் பணி!

திருப்பூர், பொங்கலூர்
மற்றும்
கொடுவாய்

எல்லா வகையான இரசாயன உரங்களும், விவசாயக் கருவிகளும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் மொத்தமாகவும்--சில்லரையாகவும் கிடைக்கும். குறைந்த வட்டிக்குச் சரக்கீட்டுக் கடன் வழங்கப்படும். இயந்திரக் கலப்பை, கதிரடிக்கும் இயந்திரம் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும்.

விவசாயப் பெருமக்களின் பருத்தியை அரைக்க எல்லா வசதிகளுடன் கூடிய பருத்தி அரைவை ஆலை ஒன்று இயங்கி வருகிறது.

# தியாகச் செம்மல்

## உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம்



**திராவிட இயக்கத்தின் தியாகிகள் பட்டியல் மிக நீண்டது; அதில் மூன்ருவதாக இடம் பெற்றவர்தான் உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம்! முதல் இரண்டு இடங்களேயும் பெற்றவர்கள், தாளமுத்து--நடராசன் என்னும் இளைஞர்கள் ஆவர்!**

**பள்ளியாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த வேலாயுதம், பகுத்தறிவுக் கொள்கைகளைச் சுற்றுவட்டாரத்து மக்களிடையே பரப்புவதிலும்--திராவிடர் கழகக் கிளைகளைத் தொடங்கி வைப்பதிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.**

**அதே நேரத்தில், ஊரை அடித்து உலையில் போட்டு, 'பெரிய மனிதர்கள்' என்ற போர்வையில் உலவியவர்களின் ஊழல் நடவடிக்கைகளையெல்லாம் பொது மேடைகளில் அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார்.**

**ஊர் மக்களிடையே அவருக்குச் செல்வாக்கு வளர்ந்தபடி இருந்தது; அதே நேரத்தில், அவருக்கு எதிரிகளும் உருவாகிக் கொண்டிருந்தனர்!**

**உத்தமர் காந்தியடிகளின் உயிரையே பறிக்க ஒரு கொடியவன் தோன்றினுன் என்கின்றபோது, உடையார்பாளையம் வேலாயுதத்துக்கு எதிரிகள் தோன்றுவதில் வியப்பு என்ன இருக்கிறது?**

**'இனியும் வேலாயுதம் உயிருடன் இருந்தால் நமது குட்டு அம்பலமாகிவிடும்' என்று சிலர் அஞ்சினர்; திரைமறைவில் 'சதி'கள் நடைபெற்றன; ஒரு நாள் காலை வழக்கம்போல் வேலாயுதம், குளிப்பதற்குக் கோவில் குளம் நோக்கிச் சென்ருர்; சென்றவர் சென்றவர்தான்—திரும்பி வரவே இல்லை!**

**குளிக்கச் சென்றவர், மரக் கிளையில் பிணமாகத் தொங்கினுர்; குளிப்பதற்காக அவர் எடுத்துச் சென்ற சோப்புப் பெட்டி மட்டும் படித்துறையில் இருந்தது!**

**இந்தச் செய்தியறிந்ததும், ஊர் மக்களெல்லாம் பதைபதைத்தார்கள்; துடிதுடித்தார்கள்; 'இது தற்கொலையல்ல; பாதகர்கள் அடித்துக் கொன்று தொங்கவிட்டிருக்கிருர்கள்' என்பதையும் உணர்ந்தார்கள்!**

**திராவிட இயக்கத் தீவிர பிரசாரகராகச் செயல்பட்டதற்காக ஆசிரியர் வேலாயுதத்திற்குக் கிடைத்த பரிசுதான் இது!**

ஆசிரியர் வேலாயுதம் தற்கொலை செய்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்று எவருமே நம்பவில்லை; 'அரசியல் எதிரிகளின் சதிச் செயலே அவரது மரணத்துக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்' என்று கருதினர்.

உள்ளூர்ப் போலீசார் நடத்திய பிரேத விசாரணையின் முடிவு 'தற்கொலை' என்பதாகும்; ஆனுல் பொதுமக்களின் திட்டவட்ட முடிவு, 'படுகொலை' என்பதுதான்!

"வேலாயுதம் மரணம் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பொது மக்கள், அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்!

துப்பறியும் போலீசார் நடத்திய விசாரணையில், வேலாயுதம் கொலை செய்யப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்தன!

துப்பறியும் போலீசார் அறிக்கையின் அடிப்படையில், அன்றையச் சட்ட மன்ற உறுப்பினர் பி. வெங்கடாசலம் பிள்ளை உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

திருச்சி அடிஷனல் மாவட்ட மாஜிஸ்திரேட் திரு. தாயப்ப தேவர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வரவிருந்தது.

ஆனுல், இந்த வழக்கை இடையிலேயே கைவிடும்படி மாவட்டக் கலெக்டரிடமிருந்து திடீரென ஆணை பிறந்தது.

அப்போது திருச்சி மாவட்டக் கலெக்டராக இருந்த திரு. வி. வி. சுப்பிரமணியம் என்பார், வழக்கு விவரங்களைப் பார்வையிட்டதாகவும், வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியமில்லை என்று அவர் கருத்தறிவித்து விட்டதாகவும் கூறப்பட்டது.

வழக்கைத் திரும்பப் பெற்ற செய்தி பொதுமக்களிடையே மீண்டும் குமுறலை ஏற்படுத்தியது!

திருச்சி மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் துணைச் செயலாளரான லாடபுரம் குருசாமி என்பவர், அன்றைய முதலமைச்சருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினுர்; அந்தக் கடிதத்தில்—

"ஆசிரியர் வேலாயுதம் தற்கொலை செய்துகொள்ளவில்லை -- படுகொலை செய்யப்பட்டார் என்பதை நிரூபிக்க ஆதாரங்கள் உண்டு; இதில் முதலமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"பொது வாழ்வில் ஏற்பட்ட கொள்கை மாறுபாடே இச் சித்திரவதைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது"

என்று தெரிவிக்கப்பட்டிருந்தது; கடிதத்தின் நகல்கள், அன்றையக் கல்வியமைச்சர் — மாவட்டக் கலெக்டர் — மாவட்ட போலீஸ் சூப்பிரண்டெண்டு — போலீஸ் ஐ. ஜி., சட்டமன்ற உறுப்பினர் பி. ஆர். தேவர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன.

பொது மக்கள் கிளர்ச்சியின் விளைவாக, மீண்டும் வழக்கை நடத்த அரசு ஆணை பிறப்பித்தது.

இதற்கிடையில், எதிரிகளில் ஒருவரான முத்துசாமி ஐயர் என்பவர், 28—10—48-இல் மரணமடைந்தார்.

முதல் எதிரியான இரங்கசாமி படையாச்சி என்பவர் அப்ருவர் ஆகிவிட்டார்.

மற்ற எதிரிகளான 1. பி. வெங்கடாசல தேவர் எம். எல். ஏ. (ஜில்லா போர்டு தலைவர்), 2. பி. நடராச பிள்ளை, 3. சண்முக முதலியார், 4. எஸ். ஏ. வைத்தியநாத ஐயர், 5. கிருஷ்ணசாமி நாயுடு, 6. இராமசாமி நாயுடு, 7. சதாசிவம், 8. கலியபெருமாள் படையாச்சி, 9. நடராச படையாச்சி, 10. சண்முக படையாச்சி, 11. நல்லவீரமுத்து ஆகியோர் மீது வழக்கு நடைபெற்றது.

திருச்சி மாவட்ட அடிஷனல் மாஜிஸ்திரேட்டு திரு. தாயப்ப தேவர் முன்னிலையில் ஜெயங்கொண்டத்தில் வழக்கு விசாரணை தொடங்கியது.

அரசுத் தரப்பு வழக்குரைஞர், எதிரிகளின் மீதுள்ள குற்றச் சாட்டுக்களை வலியுறுத்தி நீதி மன்றத்தில் கூறியதன் சாரம் வருமாறு:—

**"வேலாயுதம் படித்த அறிவாளி; வித்துவான் பட்டம் பெற்றவர்; திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்; கழக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.**

**"அரியலூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில், பி. வெங்கடாசலத் தேவர், ஜில்லா போர்டு தலைவராகவும் -- சில கூட்டுறவுச் சங்கங்களின் தலைவராகவும் இருந்துகொண்டு செய்துவரும் செயல்களைக் கண்டித்துப் பேசினுர்.**

**"அப்ருவருக்கும் -- ஆசிரியர் வேலாயுதத்துக்கும், சங்கம் சம்பந்தப்பட்ட பகைமை இருந்தது; 1, 2, 3, 5 ஆகிய எதிரிகள் சீமான்கள்; அவர்களுக்குள் பணம் போட்டு வேலாயுதத்தை ஒழித்துக்கட்டச் சதி செய்திருக்கின்றனர்.**

**"பொதுநல விரோதிகளின் புரட்டை உடைத்தார் -- வேலாயுதம்; திராவிடர் கழகத்தைச் சேர்ந்த பொதுப் பணி ஆர்வலர் அவர்.**

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும்

# டெக்ஸ்டூல்

## குழுமத்தின் உன்னதத் தயாரிப்புகள்

★ நூற்பு ஆலை இயந்திரங்கள்

★ பொறியியல் இயந்திரங்கள்

★ இரும்பு எஃகு உருக்கு ஆலைகள்

★ எஃகு வார்ப்படங்கள்

★ ஆயில் என்ஜின்கள்



விவரங்களுக்கு:

## டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட்,

கணபதி அஞ்சல் :: கோயமுத்தூர் 641006.

**"ஏழாவது எதிரியான சதாசிவத்தின் உதவி கொண்டு வேலாயுதத்தை ஏமாற்றி அழைத்துவரச் செய்து கொலை செய்திருக்கிறார்கள்!**

**"உள்ளூர்ப்போலீசார் விசாரணை நடத்தி, 'தற்கொலை' என்று முடிவு செய்துவிட்டனர்; சி.ஐ.டி. போலீசு விசாரணையில், 'கொலை' என்று ஆதாரங்களுடன் தெரிய வந்தது."**

மேற்கண்ட கருத்துக்களை அரசுத் தரப்பு வழக்குரைஞர் தெரிவித்ததன் பேரில் விசாரணை நடைபெற்றது.

அரசுத் தரப்பு முதல் சாட்சியாக ஆசிரியர் வேலாயுதத்தின் துணைவியார் திருமதி செகதாம்பாள் வேலாயுதம் விசாரிக்கப்பட்டார்.



## செகதாம்பாள் வேலாயுதம் உருக்கமான சாட்சியம்

13—10—48 அன்று ஆசிரியர் வேலாயுதத்தின் துணைவியார் திருமதி செகதாம்பாள் வேலாயுதம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:—

"வழக்கம்போல் அன்று குளிக்கச் சென்றவரைக் கொன்று—கட்டித் தொங்கவிட்டு விட்டனர்!

"என் கணவர் மிகவும் சாதுவானவர்; சுயமரியாதைக்காரர்; தமிழாசிரியராக வேலை பார்த்தார்.

"இப்பொழுது நான் இரண்டு இளம் பெண்களுடன் நிர்க்கதியாக விடப்பட்டேன்!

"1928-ஆம் ஆண்டில், ஜில்லா போர்டில் அவர் ஆசிரியராகச் சேர்ந்தார்; 1946-இல் உடையார்பாளையம் வந்தோம்; அதற்கு முன், லால்குடி தாலுகா சாலைக்குடியில் அவர் வேலை பார்த்தார்.

"வித்துவான் ஆரம்பத் தேர்வு முடித்து—அடுத்த தேர்வுக்கு அவர் படித்து வந்தார்; நான் கல்வி கற்றதுகூட அவரிடம்தான்.

"எனது பெண்கள் மங்கையர்க்கரசி, மணிமேகலை ஆகிய இருவரும் பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறார்கள்.

"தாலுகா வன்னியகுல க்ஷத்திரியர் சங்கத்தில் அவர் உறுப்பினர்; அப்ருவர் இரங்கசாமி படையாச்சி வன்னியகுல கல்வி வளர்ச்சி சங்கத்தில் செயலாளராக இருந்தார்.

"என் கணவரை அன்று பலகாரம் சாப்பிடக் கூப்பிட்டேன்; பல் விளக்கி—குளித்துவிட்டு வருவதாக எண்ணெய்—சோப்புப் பெட்டி—பல்பொடி எல்லாம் பெற்றுக்கொண்டு சென்றார்; காலை 8-மணிக்குச் சென்றவர், 9-மணி வரை திரும்பவில்லை.

"அவர் சாதாரணமாகக் கோவில் தெப்பக்குளத்துக்குத்தான் குளிக்கப்போவது வழக்கம்; என் மகள் மங்கையர்க்கரசியை, குளத்துக்கு அனுப்பிப் பார்த்து வரச் சொன்னேன்; 'அங்கே அப்பா இல்லை' என்று என் பெண் வந்து சொன்னாள்.

"அடுத்த வீட்டுத் தமிழ்ப் பண்டிதர் சென்று பார்த்தும் தகவல் கிடைக்கவில்லை; பிறகு நானே நேரில் சென்றேன்; அங்கு யாருமே இல்லாததால் வீடு திரும்பினேன்.

"பின்னர்தான், அவர் மரத்தில் தொங்கிய செய்தி கிடைத்தது; ஏழு முழ வேட்டியை முறுக்கிக் கழுத்தில் போட்டு இழுத்துக் கொன்றிருக்கிறார்கள். அவர் மார்பில் இரத்தம் வழிந்திருந்தது.

"பிரேத விசாரணை மூன்று மணி நேரம் நடந்தது; பின்னர் ஒரு நாள் போலீசார் வந்து, அப்ருவர் என் கணவரை மிரட்டி எழுதிய கடிதத்தை எடுத்துச் சென்றனர்.

"பலா மரத்தில்தான் அவரைத் தொங்கவிட்டிருந்தனர்; அதன் பக்கத்தில் ஆள் உயரச் சோளப் பயிர் இருந்தது.

"நாங்கள் உடையார்பாளையம் வந்த இரண்டு மாதத்தில் கரடிகுளத்துக்குப் போனோம்; நாங்கள் தீபாவளி கொண்டாடவில்லை. என் கணவருக்கு மாதச் சம்பளம் 36 ரூபாய்; 1935 முதல் இன்சூரன்சுக்குப் பணம் கட்டிவந்தார்.

"அவர் குளித்த இடத்திற்கும்—அவர் கொலையுண்ட இடத்திற்கும் இரண்டு பர்லாங் தூரம் இருக்கும்."

இதுதான், துணைவரை இழந்து—துயரத்தில் ஆழ்ந்திருந்த திருமதி செகதாம்பாள் வேலாயுதத்தின் சோகக் கதை!

தொடர்ந்து ஆசிரியர் வேலாயுதத்தின் 12 வயது மகள் மங்கையர்க்கரசி, ஆசிரியர் வேலாயுதத்தின் மைத்துனரும்—திருமதி செகதாம்பாளின் அண்ணனுமான திரு. செகநாதன், உடையார்பாளையம் போர்டு உயர்நிலைப் பள்ளி மாணவர் முருகேசன், ஆசிரியரும்—வேலாயுதம் வீட்டில் குடியிருந்தவருமான திரு. கோவிந்தசாமி ஆகியோரும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

## வேலாயுதம் குடும்பத்துக்கு நிதியளிப்பு

இதற்கிடையில், 14—11—48 அன்று உடையார்பாளையத்தில், ஆசிரியர் வேலாயுதத்தின் முதலாண்டு நினைவு நாள் கொண்டாடப்பட்டது.

அப்போது, ஆசிரியர் வேலாயுதம் குடும்ப நிதிக்காகப் பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதி (1,027 ரூபாய் 7 அணா 6 தம்பிடி), வேலாயுதத்தின் மகள் மங்கையர்க்கரசியிடம் அளிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, எதிரி பி. வெங்கடாசலம் பிள்ளை எம்.எல்.ஏ. சார்பில் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு மனுக் கொடுக்கப்பட்டது; 'வழக்கு விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும்' என்று அந்த மனுவில் வேண்டப்பட்டிருந்தது.

ஆனால், அந்த வேண்டுகோளை ஏற்க நீதிபதி இராசகோபாலன் மறுத்துத் தீர்ப்பளித்துவிட்டார்.

வழக்கு விசாரணையின்போது சாட்சிகள் சாட்சியம் அளிக்கும் முறை, திராவிடர் கழகக் கூட்டங்களில் பிரசாரம் செய்வதைப்போல் இருப்பதாகவும், அதனாலேயே வேறு கோர்ட்டுக்கு மாற்றக் கோருவதாகவும் எதிரிகள் தரப்பில் வாதாடப்பட்டது.

வன்னியர் சங்கத் தலைவர் விசுவநாத படையாச்சி, பொன்னம்பலக் கவுண்டர் எம்.எல்.ஏ. உள்பட மொத்தம் 295 பேர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

வேலாயுதத்தைக் கொலை செய்ய 14—10—47-இல் சதி நடைபெற்றதாகப் போலீசுத் தரப்புச் சாட்சியான சப்-இன்ஸ்பெக்டர் பெரியநாயகம் சாட்சியம் அளித்தார்,

இந்தச் சதி பற்றி அன்றைய முதலமைச்சருக்கு (கொலை நடப்பதற்கு முன்னதாகவே) 15—10—47-இல் அப்ருவர் கடிதம் எழுதியதாகச் சாட்சியங்கள் விசாரணையின்போது தகவல் வெளியிடப்பட்டது.

மொத்தம் 31 நாட்கள் விசாரணை நடத்தி முடித்த நீதிபதி, எதிரிகளை மேல் கோர்ட்டு (செஷன்ஸ்) விசாரணைக்கு அனுப்பி வைத்துத் தீர்ப்புக் கூறினர்.

## மேல் விசாரணையும் முடிவும்

திருச்சி மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. பி. டி. இராமன் நாயர் முன்னிலையில் 4—7—49 அன்று விசாரணை தொடங்கியது.

விசாரணை முடிவில் நீதிபதி அளித்த தீர்ப்பு இதுதான்:—

"வேலாயுதம் கொலைக்கு எதிரிகள்தாம் காரணம் என எண்ணவோ—சிறிது சந்தேகிக்கவோகூட நான் சான்று காண


வரலாறு படைக்கும் தி. மு. கழக

5-ஆவது பொது மாநில மாநாட்டிற்குத்

தலைமையேற்கும் வரலாற்றுத் தலைவன்

**டாக்டர் கலைஞர்**

அவர்கட்கு

**எங்கள் இதயங் கனிந்த வாழ்த்துக்கள்!**

★

இரா. சிவசுப்பிரமணியன் அண்டு கோ.,

பாத்திர உற்பத்தி—வியாபாரம்,

நெ. 2, ராயபண்டாரம் வீதி,

திருப்பூர்-2.

முடியவில்லை. 'எதிரிகள் குற்றவாளிகள் அல்லர்' என அசெசர்கள் தெரிவித்த கருத்தைத் தவிர வேறுவிதமான கருத்துக்கு வழியில்லை; எதிரிகள்மீது சாட்டப்பட்ட கொலை -- கொலைச் சதி ஆகிய குற்றங்களிலிருந்து நீக்கி, அவர்களை விடுதலை செய்ய உத்தரவிடுகிறேன்.''

தமிழகமே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த வழக்கில் தீர்ப்பு மேற்கண்டவாறு அமைந்தது.

எதிரிகளில் ஒருவரான பி. வெங்கடாசலம் பிள்ளை, சட்டமன்றக் காங்கிரசு உறுப்பினர்; முதலமைச்சர் பிரகாசத்துக்குப் பார்லிமெண்டரி செயலாளராக இருந்தவர்; அவருடைய செல்வாக்கு' வேலாயுதத்தின் பேச்சுக்களால் பாழடிக்கப்படாமல் தடுப்பதற்கே அவரைக் கொலை செய்யச் சதித் திட்டம் வகுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

பிரகாசத்துக்குப் பிறகு முதலமைச்சராக வந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கும்—தனக்கும் இருந்த வேற்றுமையை வைத்துக்கொண்டு, துப்பறியும் இலாகா தம்மீது பழிசுமத்தியதாக எதிரி வெங்கடாசலம் பிள்ளை தரப்பில் வாதிக்கப்பட்டது.

எப்படியோ ஒருவழியாக வழக்கு முடிந்துவிட்டது; எதிரிகள் விடுதலையாகிவிட்டனர்!

1949 செப்டம்பரில் திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்தது!

ஆசிரியர் வேலாயுதம் குடும்பத்துக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தக்க வகையில் உதவி அளிக்கக் கருத்துக் கொண்டிருந்தார்.

அவ்வப்போது முடிந்த அளவுக்கு உதவியும் அளிக்கப்பட்டது; வேலாயுதத்தின் மூத்த மகள் செல்வி மங்கையர்க்கரசியின் திருமணச் செலவுக்காகத் தி.மு.க. சார்பில் கணிசமான பண உதவி அளிக்கப்பட்டது.

நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில்தான் மங்கையர்க்கரசியின் திருமணமும் நடைபெற்றது.



கல்லூரி விரிவுரையாளராகவிருந்த திரு. கே. என். இராமச்சந்திரன் எம்.ஏ. அவர்கள்தான் மங்கையர்க்கரசியை மணந்தார்.

1962-இல் நடந்த பொதுத்தேர்தலில், வேலாயுதத்தின் மருமகனை திரு. கே. என். இராமச்சந்திரனை, செயங்கொண்டம் தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராக நிறுத்திவைக்க அண்ணா விரும்பினார்.

ஆனால், கே. என். இராமச்சந்திரன் தேர்தலில் நிற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

தேர்தலுக்கு முன்பாகவே கல்லூரிப் பணியிலிருந்து விலகிட -- விலகல் கடிதம் அனுப்பிவிட்டார் கே. என். இராமச்சந்திரன்; ஆனால், அவருடைய 'விலகலை'க் குறிப்பிட்ட காலத்துக்குள் ஏற்றுக்கொள்ள அரசு மறுத்துவிட்டது; இதன் விளைவாகவே, அவர் தேர்தலில் நிற்க முடியாமல் போயிற்று!

ராஜேந்திரா டெக்ஸ்டைல்ஸ்

203, பெரிய கடை வீதி,

கோயமுத்தூர் - 641001.

போன்: 30505

திருமணம்

மற்றும் விழாக் காலங்களுக்கும்,

விசேஷ வைபவங்களுக்கும் ஏற்ற

தூய பட்டுப் புடவைகள்

மற்றும் மில் ஜவுளிகள்

புதிய ரகங்களில் கிடைக்கும்!

உடனே, ஆசிரியர் வேலாயுதத்தின் துணைவியார் திருமதி செகதாம்பாள் வேலாயுதத்தைத் தேர்தலில் போட்டியிடச் செய்தார், அண்ணா!

திருமதி செகதாம்பாள் வேலாயுதம், தேர்தலில் நின்று -- பழம் பெரும் காங்கிரசுப் புள்ளியான சாமிக்கண்ணு படையாச்சி என்பவரை வென்று -- சட்டமன்ற உறுப்பினர் ஆனார்!

அடுத்து, 1967-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கே. என். இராமச்சந்திரன், தி. மு. க. வேட்பாளராகப் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

1967 தேர்தலுக்கு முன்னர், விருகம்பாக்கத்தில் நடைபெற்ற தி. மு. க. மாநில மாநாட்டில் கழகத் தியாகிகளையெல்லாம் நினைவு கூறும் வகையில், மாநாட்டு மேடைக்குத் 'தியாகிகள் கோட்டம்' என்று பெயர் சூட்டச் செய்தார், அண்ணா!

அந்தத் தியாகிகள் கோட்டத்தை, திரு. சி. பி. சி. திறந்து வைத்தார்.

அடுத்து, தேர்தலில் வெற்றிபெற்று -- ஆட்சிப் பொறுப்பேற்கக் கோட்டைக்குச் செல்லுமுன், தேனாம்பேட்டை 'அன்பக'த்தில், 'தியாகி'களின் படங்களையெல்லாம் வைத்து மாலையணிவித்து -- 'அஞ்சலி' செலுத்திவிட்டுத்தான் அண்ணா அவர்களும், பிற அமைச்சர்களும் பதவியேற்கச் சென்றனர்.

**கண்ணீராலும் -- செந்நீராலும் வளர்த்த இந்தக் கழகம், தியாகிகளை என்றும் மறவாது; அந்தத் தியாகிகளின் குடும்பங்களுக்குக் கைகொடுத்து உதவத் தவறாது என்பது நாடு கண்ட உண்மை!**

**அந்தத் தியாகிகளின் வரிசையில் உள்ள உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம், என்றும் நம் நெஞ்சத்தில் நிறைந்திருப்பார்!**

—மா. செங்குட்டுவன்

# காஞ்சியில் அண்ணா பாதம்பட்ட கடைசி நாள்

காஞ்சியில் அண்ணா!

''இதில் என்ன வியப்பு; அவர் பிறந்த ஊரே காஞ்சிதானே'' —இப்படி கேட்கத்தான் தோன்றும்!

காஞ்சியிலேதான் பிறந்தார்—வளர்ந்தார்—படித்தார்-பட்டம் பெற்ருர்—அரசியல் வளர்த்தார்!

காஞ்சியில் அவர் போகாத இடம் இல்லே; தெரியாத தெருக்கள் இல்லே; அறியாத ஆட்கள் இல்லே.

அப்படிப்பட்ட காஞ்சியைத்தான் எங்கள் அண்ணன் சுற்றிப் பார்த்தார்--ஆசையோடு நடந்து பார்த்தார்!

'ஏன், ஏன்?'—இந்தக் கேள்விக்குப் பதில் அப்போது தெரியவில்லே!

பின், எப்போது?

சென்னேயில் ஒரு நாள் இரவு 7–மணியளவில், அண்ணு படுத்திருந்த அறைக்குச் சென்றேன்; 'காஞ்சிபுரம் போகிறேன் அண்ணு' என்றேன்.

''வீட்டுக்குப் போய் கண்மணியிடம் இதைத் தந்துவிடு; நாளே பொங்கல்; நான் வருவது சந்தேகமாக இருக்கிறது; டாக்டர்கள், 'எங்கும் போகக்கூடாது' என்று கூறுகிருர்கள்; இதனே, பாப்பாப்புக்குச் சொல்லு'' என்ருர்.

எனக்குத் துக்கம் தாளாமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டே அவர் தந்த பொட்டலத்தைப் பெற்றுக்கொண்டேன். (பாப்பாப்பு என்பது அண்ணுவின் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும்; அறிஞர் அண்ணுவை ஈன்றெடுத்த அன்னேக்கு அது செல்லப் பெயர்; தம்பி இளங்கோவனின் மகள் கண்மணி; அவர் என்னிடம் தந்தது--பேத்திக்குப் பொங்கல் பரிசாக வளேயலும், மோதிரமும் அடங்கிய பொட்டலம்.)

'வருகிறேன் அண்ணு' என்று கூறி, அவர் அறையை விட்டு வெளியே வந்து படியில் இறங்கப் போனேன்; உடன் இருந்த கம்பவுண்டர் பின்னுலேயே வந்து, 'அண்ணு அழைக்கிருர்' என்று என்னேக் கூப்பிட்டார்; மறுபடியும் சென்றேன்.

''பரிமளம்—சரோஜா இருவரும், இரவே காஞ்சிபுரம் வருகிருர்கள்; நான், நாளே வருவதாக இல்லே என்ற செய்தியை பாப்பாப்புக்கோ—இளங்கோவனுக்கோ—விஜயாவுக்கோ கூருதே; உசிதம்போல் ஆகட்டும்; நீ போய் வா'' என்ருர் அண்ணு.

நான் ஒன்ரும் புரியாமல்--அவர் உடல் நிலேக்காக வருந்திய வண்ணம்--நுங்கம்பாக்கம் அவென்யூ சாலேயை விட்டுக் காஞ்சி நோக்கிப் புறப்பட்டேன்.

இந்த நிகழ்ச்சி, 1969 சனவரித் திங்கள் 13-ஆம் நாள் போகி அன்று நடைபெற்றதாகும்.

குறும்பாகப் பேசும் கண்மணியிடம், அண்ணு கொடுத்தனுப்பியதைத் தந்தேன்; பரிமளம், சரோஜா வருவதை மட்டும்

கே. டி. எஸ். மணி, காஞ்சி நகர மன்றத் தலேவர்

கூறிவிட்டு, பாப்பாப்புக்குச் சரியானபடி விவரம் கூருமல் என் வீட்டுக்கு வந்துவிட்டேன்.

சென்னேயிலிருந்து அறிஞர் அண்ணு காஞ்சிபுரம் புறப்பட்டாரானுல், கம்பியில்லாத் தந்தி மூலம் காவல் நிலேயத்திற்குச் செய்தி வந்துவிடும்—அவர் 'முதலமைச்சர்' என்பதால்; அவர் புறப்படும் செய்தி காஞ்சிபுரம் காவல் நிலேயத்திற்குக் கிடைத்தவுடன் எனக்குத் தகவல் தருவார்கள்.

இரவாக இருப்பினும்—பகலாக இருப்பினும், வீட்டுக்கு அவர் வரும்போது நான் அங்கு இருப்பேன்; நடுநிசியில் காஞ்சிக்கு வரும் நிலேயிலும் அவர், படியேறி வராண்டாவுக்கு வந்ததும்—அங்குள்ள பலகையில் நான் படுத்திருப்பேன் என்ற நம்பிக்கையுடன்—'மணி' என்ற குரல் தந்தவண்ணம் உள்ளே நுழைவார்!

இந்த நிலே, அவர் முதல்வர் ஆனபிறகு ஏற்பட்டது அல்ல -- கடந்த இருபது ஆண்டுக்காலமாக ஏற்பட்ட தொடர்பு; இந்தக் கனிவான குரல் கேட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன!

பொங்கல்—தமிழர் திருநாள்—இந் நாளே எப்படி எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும் என்று பேசியும்--எழுதியும்



செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளராக இருந்தவரும்--இன்றைய பொதுக் குழு உறுப்பினருமான இவர், பேரறிஞர் அண்ணு அவர்கள் கடைசி முறையாகக் காஞ்சிக்கு வந்து சென்ற நிகழ்ச்சியை நெஞ்சம் நெக்குருக எடுத்துரைக்கிருர். இக்கட்டுரையைப் படிப்பவர்கள் கண் கலங்காமல் --கண்ணீர் விடாமல் இருக்க முடியாது!

இன்று காஞ்சி நகராட்சி மன்றத் தலேவராகவும், செங்கற்பட்டு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலேவராகவும் உள்ள தோழர் கே. டி. எஸ். மணி அவர்கள், பேரறிஞர் அண்ணு அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினேப் பெற்றவர்; அண்ணுவின் 'திராவிட நாடு' அலுவலகத்தில் பணியாற்றியவர்.

இந்தத் தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பிய அண்ணன், 'காஞ்சிக்கு வருவாரா--வரமாட்டாரா' என்ற ஐயப்பாட்டுடன் இருக்கும்போது, எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் அண்ணியாருடன் அண்ணு வந்திருப்பதாகப் பகல் 12-20 மணியளவில் செய்தியறிந்து அவரது இல்லம் விரைந்தேன்.

அங்கு சென்றதும், என் உள்ளம் பெரிதும் வேதனேயடைவதாகவே இருந்தது; காரணம், அவரது இல்லத்தின் பெரிய கதவு தாளிடப்பட்டிருந்ததுதான்!

வெளியில் இருந்த பாதுகாப்பு அதிகாரி திரு. இராமானுசம் என்னேப் பார்த்து, 'வந்ததும் தங்களேக் கேட்டார்; பிற்பகல் 3-மணிக்கெல்லாம் மணியை வரச் சொல்' என்று கூறிவிட்டு, 'குடும்பத்தாருடன் மட்டும் தனித்து இருக்க எண்ணி--யாரையும் அனுமதிக்காமல் இருக்கக் கதவு தாளிடப்பட்டு விட்டது' என்று கூறி, '3-மணிக்கு வந்து விடுகிறீர்களா?' என்று கேட்டார்.

இந்த நிலே, எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது; பொங்கல் அன்று அன்போடு அழைத்து--பக்கத்தில் அமரச் செய்து--ஒன்ருகவே நாங்கள் சாப்பிடுவது வழக்கம்; அந்த வழக்கம் மாறுபட்டுப் போய்விட்டது; மனச் சோர்வுடன், எனது மாமா காஞ்சி கல்யாணசுந்தரனுர் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு, 2-45 மணிக்கெல்லாம் அண்ணு இல்லத்திற்குச் சென்றேன்.

'அண்ணு படுத்திருக்கிருர்' என்பதை அறிந்து, கூடத்தில் அமர்ந்திருந்தேன்.

3-15 மணிக்கு அண்ணு எழுந்து வெளியே வந்தார்; 'மணி-- வெளியே போய் வரலாமா?' என்று கேட்டார்.

''போகலாம், அண்ணு!''

''ஆள் நடமாட்டம் இல்லாத இடமாகவும்—யாரும் நம்மைச் சூழ்ந்து கொள்ளாத இடமாகவும் போக வேண்டும்; எங்கே போகலாம்?''—இது, அண்ணனின் கேள்வி!

''அரக்கோணம் வழியாக உள்ள வெள்ளேகேட்டுக்குப் போய் —அங்கிருந்து வேலூர் சாலேயில் சிறிது தூரம் சென்ருல், தாங்கள் எண்ணுவதுபோல் தனித்து இருக்கலாம்'' என்றேன்.

'' என் வண்டி வேண்டாம்; புதிய வண்டியாக—(அதாவது, 'அண்ணு செல்லும் வண்டி' என்று அடையாளம் தெரியக்கூடாது என்ற கருத்தில் கூறினர்)—யாருக்கும் அடையாளம் தெரியாத வண்டியாகத் தயார் செய்; நம்முடன் போலீசு--செக்யூரிட்டி எதுவும் வரவேண்டாம் என்று சொல்'' என்ருர்.

கௌதமன் அப்போது புதிதாக வாங்கியிருந்த நீல வண்ணப் பியட் காரைப் பயன்படுத்துவது என்றும் -- வண்டியையும்

கௌதமனே ஓட்டுவது என்றும்--உடன் இரா. செழியன், எம்.பி. வருவது என்றும் முடிவு செய்து, அரக்கோணம் நோக்கிச் செல்வதற்கு வசதியாக மேற்குப் பக்கமாகக் காரை நிறுத்தி வைத்துவிட்டு, நான்—இளங்கோவன்—பரிமளம்—சுந்தரேசன்—டிரைவர் சண்முகம் ஆகியோர் செல்வதற்கு இளங்கோவனின் வண்டி அம்பாசிடர் காரை தயார் செய்துவிட்டு. அண்ணா அவர்களிடம், 'போகலாம்' என்றேன்; உடன் அவரும் புறப்பட்டு வண்டியில் ஏறினர்; சின்ன காஞ்சிபுரம் சுங்கச் சாவடி பக்கம் காரைச் செலுத்துமாறு கூறினர்.

நாங்கள் போட்ட திட்டம், 'மேற்குப் பக்கமாக அரக்கோணம் நோக்கிச் செல்வது' என்பதாகும்; ஆனல், நேர்மாருக எதிர்ப் பக்கம் கார் போகவே, நாங்களும் வண்டியைத் திருப்பிக் கொண்டு அவர் பின்னல் சென்ருேம்; நேராக ஐயம்பேட்டையிலிருந்து செவிலிமேடு செல்லும் மிலிட்டரி சாலையில் சென்று—பச்சையப்பன் கல்லூரி தெரியும் அளவில் வண்டியை நிறுத்திவிட்டு, 'மணி--இங்கே வா' என்ருர்.

அவர் அருகில் போய் நின்று, 'என்ன அண்ணா--இங்கே வந்துவிட்டீர்களே; வெள்ளைகேட்டுக்குப் போகத்தானே சொல்லி வைத்தேன்' என்று—ஏதோ, என் திட்டம் மாறி விட்டதைப்போல் அவரிடம்—அவர் மனநிலையையும், அவரது அளவற்ற ஆசையையும் சிறிதளவும் உணராமல் கேட்டேன்.

''அது இருக்கட்டும், மணி; கேன்சர் ஆஸ்பத்திரி கட்டுவதற்குக் கலெக்டர் இடம் பார்த்தாராமே—அது எந்த இடம்? போய்ப் பார்க்க வேண்டும்'' என்ருர்.

''அண்ணா; அந்த இடம் இந்தப் பகுதியில் இல்லை; முதலில் குறிப்பிட்டேனே வெள்ளைகேட்—அதன் அருகில்தான்'' என்றேன்.

ஆனல் அண்ணா அவர்கள், நான் கூறியதைக் கேட்பதைக் காட்டிலும், பச்சையப்பன் கல்லூரிக் சட்டடத்தையும்--அந்தப் பகுதியையும் நிதானமாகப் பார்த்து ரசிப்பதையே பெரிதும் விரும்பினர்; பார்த்து முடித்தபின், 'அந்த இடம் இங்கு இல்லையா? அப்படியானல், இந்தப் பகுதியில் எதைப் பார்க்கலாம்?' எனருர்.

''தொழில் பேட்டை—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆகியவைகளுக்கான இடத்தைப் பார்க்கலாம்'' என்றேன்.

''சரி--ஏறு'' என்று கூறினர். வண்டி நேரே தொழில் பேட்டைக் கட்டடத்தின் வாயிற்படியின்முன் சென்று நின்றது.

கதவு மூடப்பட்டு இருந்தது; உள்ளே இரண்டொருவர் பணியாற்றிக் கொண்டிருந்தனர்; நான் கதவைத் திறந்து, உள்ளே வண்டியை வரச்செய்தேன்; அண்ணா கீழே இறங்கினர்; அங்கு பணியாற்றியவர்களுக்குக் கைகால் ஓடவில்லை; 'திடீரென்று முதல்வர் வந்துவிட்டாரே' என்ற அச்சம்!

''கதவுகளைத் திறக்க முடியுமா? ஒவ்வொரு பிளாக்குகளையும் பார்க்க முடியுமா?' என்று அண்ணா கேட்டார்.

சாவி வைத்திருப்பவரை அழைத்து வந்து திறந்து காட்டினேம்; ஒவ்வொன்ருக நான்கு பிளாக்குகளையும் பார்த்துவிட்டு, 'மணி--வாடகை எவ்வளவு?' என்ருர்.

''நிச்சயமாகத் தெரியவில்லை, அண்ணா; சுமாராக ரூ. 175 முதல் ரூ. 200-க்கு மேற்படாமல் இருக்கும்'' என்றேன்.

''இவ்வளவு பெரிய இடம் ரூ. 200 என்பது மலிவுதான்; யார் யார் எடுத்துள்ளனர்?''

''இன்னும் யாரும் எடுக்கவில்லை; இது முடிய இன்னும் 2 மாதகாலம் ஆகும், அண்ணா!''

''இதற்குத் தண்ணீர் எப்படி சப்பளையாகிறது?''

''நகர மன்றத்தின் சார்பில் பாலாறு மெயினிலிருந்து நாங்கள் தருகிருேம்.''

''சரி; உன் பேரில் ஒரு பிளாக் எடுக்க உடனடியாக ஆவன செய்.''

''அப்படியே செய்கிறேன் அண்ணா; ஆமாம்--என்ன தொழில் செய்ய அண்ணா?''



''அதைப் பற்றி நீயே யோசி; கொஞ்சம் மக்களுக்கு வேலை தரும் விதமாகத் தொழில் நடத்த வேண்டும்'' என்று கூறினர்.

இப்படிப் பேசிக் கொண்டே திரும்பி வந்து கொண்டிருந்தோம்; அப்போது, மிலிட்டரி சாலையில், அப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவரும்—அண்ணாவின் அன்பைப் பெற்றவரும்—எனது மதிப்பிற்கும் அன்புக்கும் உரியவருமான திரு. இலட்சுமிகாந்தன் பாரதி, தமது இல்லத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்.

''கலெக்டர் போகிருர், அண்ணா; நாம் இங்கிருப்பது அவருக்குத் தெரியாது.''

''போகட்டும்; கூப்பிடாதே'' என்ருர்.

சிறிது நேரம் கழித்து, 'மணி--கலெக்டர் பங்களாவை எங்கு கட்டப் போகிருேம்?' என்று கேட்டார்.

''குருவிமலையில் அண்ணா!''

''எப்படிப் போக வேண்டும்?''

''பாலாற்றுக்கு அந்தப் பக்கம்; போவோமா?''

''கலெக்டர் போனரே—அந்தப் பக்கம் போக வேண்டுமா?''

''ஆமாம், அண்ணா!''

''சரி; அது வேண்டாம்; கலெக்டர் ஆபீசைப் பார்க்கலாம்.''





''சரி'' என்று சொல்லி வண்டியில் ஏறினோம்; உடனே தமது இடது கையால் வயிற்றின் அடிப் பாகத்தைப் பிடித்துக் கொண்டு --முகத்தைச் சுளித்தபடி அவர் பட்ட வேதனை, இன்றும் என் கண்முன் நிழலாடுகிறது!

கலெக்டர் ஆபீசுக்கு வண்டி வந்தது; அங்கு வேலை செய்வோர் அதிகம் பேர் இருப்பதைக் கண்ட அண்ணா, 'வண்டியை நிறுத்தாதே; மெதுவாக உள்ளே போய், பார்த்துக்கொண்டே போய்விடலாம்' என்றார்.

அதன்படி, காவல்துறைக் கண்காணிப்பாளரின் அலுவலகம் பக்கம் நுழைந்து--கலெக்டர் ஆபீசுப் பக்கமாகச் சென்று--வண்டியில் இருந்தபடியே அனைத்தையும் பார்த்துக் கொண்டு வெளியே வந்து--காவலான் தெரு திரும்பி--பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிப் பக்கம் வண்டி வந்துகொண்டிருக்கும்போது, என் அலுவலகமான எம். எம். ஒர்க்ஸ் கட்டடத்தைத் தாண்டும்போது, அண்ணா வண்டியை நிறுத்தச் சொன்னார்.

வண்டியிலிருந்து இறங்கி--'கிடுகிடு' என்று நடந்து, எம். எம். ஒர்க்ஸ் கட்டடத்திற்கு வந்து மேஜைக்கு எதிரே நாற்காலியில் அமர்ந்துகொண்டார்; அங்கு, திரு. அரு. முருகேசன், மூலப்பட்டு கிராமம் சுதர்சனம் நாயுடு, திரு. கந்தசாமி (மாமல்லன் வீடு கட்டும் சங்கச் செயலாளர்) ஆகியோர் இருந்தனர்.

கட்டடத்தைப் பார்த்து, அண்ணா அவர்கள், 'இதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகியது' என்று கேட்டுவிட்டு, 'நகரக் கழகத்திற்கு நீ தந்துள்ள இடத்தில் இதைப்போல் கட்ட முடியுமா?' என்றும் வினவினார்.

''இதைப் போல் மூன்று மடங்கு இடம் தந்துள்ளேன் அண்ணா.''

''அந்தப் 'பிளான்' இங்கு இருக்கிறதா?''

உடனே மேஜையிலிருந்து 'அப்ருவல்' ஆன பிளானை எடுத்து அண்ணாவிடம் தந்தேன்.

''இதைப் போல் மூன்று மடங்கு கட்டடம் வருகிறதா? நான்கு கடைகள் உள்ளன; மேலே ஆயிரம் சதுர அடியில் பெரிய ஹால் வருகிறது; கடைகளின் வருவாயைக் கொண்டே கழகக் கட்டடத்தின் நிர்வாகம் நடைபெற்றுவிடும்; என்னங்க நாயுடு (அதாவது சுதர்சனம் அவர்களைப் பார்த்து) -- 'உங்கள் அண்ணன் பாங்கியில் இருக்கிறாரே—(தற்போது வைசியா பாங்கியின் சேர்மனாக இருக்கும் திரு. பி. ஜி. சரண்யன் அவர்கள்)—அவரிடம் கூறி, எங்கள் மணிக்குக் கழகக் கட்டடம் கட்டக் கடன் கொடுக்கச் சொல்லுங்கள்; நாணயமாகத் திருப்பித் தந்துவிடுவான்; உடனடியாகக் கழகக் கட்டடம் கட்ட வேண்டும்'' என்று கூறினார்.

நாயுடுவும், 'ஆகட்டும்' என்றார்.

ஏறக்குறைய அரை மணி நேரம் அங்கே இருந்து, கழகக் கட்டடம் கட்டுவதைப் பற்றியே பேசிவிட்டு -- யோசனைகள் கூறி, 'குறைந்த செலவில் கட்டப்பட வேண்டும்' என்றும், 'உடனடியாகக் கட்டப்பட வேண்டும்' என்றும் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

மாலை ஆறு மணி இருக்கும்.

''அண்ணா; பனியில் வெளியே இருக்கக்கூடாது என்று டாக்டர் கூறியுள்ளார்; நேரே வீட்டுக்குப் போகலாம்'' என்றேன்.

''மணி; உன் வீடு கட்டும் சங்கத்தைப் போய்ப் பார்க்க வேண்டும்; அதை மட்டும் பார்த்துவிட்டுப் போய்விடலாம்; நேரே மாமல்லன் வீடு கட்டும் சங்கத்தின் இடத்துக்குப் போ'' என்றார்.

அவர் விருப்பத்தை நிறைவேற்ற, மாமல்லன் வீடு கட்டும் சங்கத்தின் இடத்திற்குச் சென்றோம்; முதலில் கட்டப்பட்டுள்ள வீட்டின்முன் வண்டியை நிறுத்தி -- அந்த வீட்டின் கேட்டைத் திறந்து உள்ளே சென்ற வண்ணம், அண்ணா அவர்கள், 'இது யாருடையது?' என்று கேட்டார்.

''இது, வி. பி. எஸ். அவர்களுடையது; கதவுகள் பூட்டப்பட்டுள்ளன'' என்றேன்.

அளவற்ற ஆசையோடு அண்ணா அவர்கள் சுற்றிப் பார்த்தார்; வி. பி. எஸ்., அண்ணாவின் அன்பைப் பெரிதும் பெற்றவர்; அண்ணாவின் அந்தரங்க நண்பர்களில் ஒருவர்; அவர்தான், புட்டாசாமி அவர்கள் ஆவார்.

1949-இல் தி. மு. கழகம் தொடங்கப்பட்டபோது, அண்ணாவின் பிரசித்தி பெற்ற 4758 எண்ணுள்ள இந்துஸ்தான் வண்டியை, இரவு--பகல் என்று பாராமல், தமிழ்நாடு முழுவதிலும் சுற்றிவரும் அளவில் அறிஞர் அண்ணாவுக்குத் துணையாகவும்--உள்ளம் கவர்ந்த நண்பராகவும் கார் ஓட்டியவர், 'வி. பி. எஸ்.' என்று அண்ணாவால் அழைக்கப்பட்டவர் அவர்! அவரது புதுமனை புகும் விழாவில் அண்ணா கலந்து கொள்வதற்காக நாள் கேட்ட வண்ணம் இருந்தார்; நான், 'சற்றுப் பொறுங்கள்; அண்ணாவின் உடல் நலம சரியாக இல்லை; உடல் நலம் தேறும் நேரமாகப் பார்த்து, நாள் கேட்டுப் பெறலாம்' என்று வாய்தா போட்டுக் கொண்டே வந்தேன்; ஆனால் அண்ணாவோ—நானோ அவரோ அழையாமலே—அந்த வீட்டிற்கு வந்து சுற்றிப் பார்த்துவிட்டு, 'எவ்வளவு ரூபாய் செலவு ஆயிற்று?' என்றார்.

''சங்கத்தின் திட்டப்படி, இந்த வகை வீடுகளின் மதிப்பு ரூ. 35,000; ஆனால் இவர், சற்று அதிகமாகவே செலவு செய்துள்ளார்'' என்றேன்.

எதிர்ப்புறம் உள்ள மாடல் வீடு ஒன்றைக் காட்டி, 'அதன், மதிப்பு எவ்வளவு' என்று கேட்டார்; 'ரூ. 12,500' என்றேன்.

''வா; அதைப் போய்ப் பார்ப்போம்'' என்றார்.

அங்கு சென்றவுடன், 'முப்பதாயிரம் ரூபாயில் வீடு கட்டுவோர்க்குச் சொசைடியிலிருந்து கடன் வாங்கித் தராதே; பன்னிரண்டாயிரம் ரூபாயில் வீடு கட்டும் நடுத்தர மக்களுக்கு—அதிகம் நபர்களுக்கு வாங்கித் தர முயற்சி செய்; முப்பதாயிரம் ரூபாயை

# கைத்தறி ஆடைகளின் இல்லம் "அம்கோ டெக்ஸ்"

அழகிற்கு -- ஆடைகள் உறுதிக்கு --
இயற்கை வண்ணங்களுக்கு --
எண்ண முடியாத தயாரிப்புகளுக்கு --
" அம்கோ டெக்ஸ் "
அழகு மயிலின் சின்னம் -- கைத்தறியின் வண்ணம்!



அதுவே

# அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி -- விற்பனைச் சங்கம்

எஸ். எண். 532 (வரையறுக்கப்பட்டது)

**அம்மாப்பேட்டை : : சேலம் -- 636003.**

துவக்கம்: 1938. தந்தி: "சொசைட்டி": தபால் பெட்டி எண்: 3.
தொலைபேசி: 2433, 4623, 4625, 3204, 3437, 5863, 4621.

## எங்கள் தயாரிப்புகளான—

| | |
|---|---|
| 120 எண் நூலில் | வேட்டிகள், மேல் துண்டுகள். |
| 100 எண் நூலில் | பாவாஞ்சு, குண்டஞ்சு, சன்னஞ்சு வேட்டிகள், சரிகை மேல் துண்டுகள், சரிகை வேட்டிகள். |
| 80 எண் நூலில் | பாவாஞ்சு, குண்டஞ்சு, சன்னஞ்சு வேட்டிகள், சாதா சேலைகள், கட்டம் பார்டர் சேலைகள். |
| 60 எண் நூலில் | பாவாஞ்சு, குண்டஞ்சு, சன்னபேட் வேட்டிகள், சாதா சேலைகள், கட்டம் பார்டர் சேலைகள். |
| 40 எண் நூலில் | சாதா சேலைகள், கட்டம் பார்டர் சேலைகள். |
| 20 எண் நூலில் | வேட்டிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள். |

கோடம்பாக்கம், ஸ்பன் சேலைகள் அழகு வண்ணத்தில் அழகுக்கு அழகூட்டும் டிசைன்கள்!

மாநிலமெங்கும் உள்ள எமது விற்பனை நிலையங்களிலும்,
'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

## வாருங்கள்; கைத்தறி அழகைப் பாருங்கள்; வாங்கி மகிழுங்கள்!

### எங்களது கிளை விற்பனை நிலையங்கள்:

1. தியாகராயநகர் விற்பனை டெப்போ, 8, உஸ்மான் ரோட், சென்னை-17.
2. பெங்களூர் விற்பனை டெப்போ, 24/1, 5-வது வளைவு, பெங்களூர்-3.
3. சேலம் விற்பனை டெப்போ, 47/646, தேர் வீதி, சேலம்-1.
4. செவ்வாய்ப்பேட்டை விற்பனை டெப்போ, 65-பி, கன்னரத் தெரு, சேலம்-2.
5. தலைமை அலுவலக சில்லறை விற்பனைப் பகுதி, திரு. வி. க. ரோடு, சேலம்-3.
6. ஆத்தூர் விற்பனை டெப்போ, 257, மெயின் ரோடு, ஆத்தூர்.
7. அரூர் விற்பனை டெப்போ, 151, கடை வீதி, அரூர் (தருமபுரி).
8. ஈரோடு விற்பனை டெப்போ, 292, அக்ரஹார வீதி, ஈரோடு.
9. திருச்சி விற்பனை டெப்போ, 35-பி, சின்னக் கடை வீதி, திருச்சி-2.
10. திருநெல்வேலி விற்பனை டெப்போ, 103-87, மேல ரத வீதி, திருநெல்வேலி.
11. திருப்பத்தூர் டெப்போ, 22, ஆலங்காயம் ரோடு, திருப்பத்தூர் (வ. ஆ.).
12. நெய்வேலி டவுன்ஷிப் டெப்போ, சென்ட்ரல் பஜார், பிளாக்-19, நெய்வேலி-3.
13. சேலம் மொத்த விற்பனை டெப்போ, 2-வது அக்ரஹாரம், சேலம்-1.

**வி. ரத்னசாமி,**
கைத்தறி & துணி நூல் உதவி இயக்குநர் / தனி அலுவலர்.

ஒருவருக்கு வாங்கித் தருவதைவிட, அதனை மூன்று பேர்களுக்குத் தந்து--மூன்று வீடுகள் கட்ட ஆவன செய்; இதைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்க்கின்றேன்; இதற்கு நான் அடிக்கல் நாட்டி எவ்வளவு நாள் ஆகிறது?' என்று கேட்டார்.

''13—10—1967-இல்.''

''இவ்வளவு குறுகிய காலத்தில் அதிக வீடுகள் கட்டப்பட்டு விட்டதே; உன் முயற்சி வளரட்டும்!''

அவரது வாழ்த்து, என்னை எங்கேயோ அழைத்துச் சென்றது!

''அண்ணா--மணி அதிகம் ஆகிவிட்டது; வீடு திரும்புவோம்'' என்றார் திரு. இரா. செழியன்.

புறப்பட்டோம்; வீடு வந்தோம்; அதிகாரிகளும் -- நண்பர்களும் காத்திருந்தனர்.

அண்ணா வண்டியை விட்டு இறங்கி அனைவரையும் பார்த்து வணங்கிய வண்ணம் வீட்டுக்குள் நுழைந்து நேரே படுக்கை அறைக்குச் சென்று படுத்துக்கொண்டு, 'அனைவரையும் காலையில் வரச் சொல், மணி; எனக்கு மிகவும் சோர்வாக இருக்கிறது' என்றார்.

அவரது எண்ணத்தை வந்தவர்களிடம் கூறி—அனைவரையும் அனுப்பி வைத்துவிட்டு—உள்ளே வந்து உட்கார்ந்தேன்.

சட்டப் பேரவைத் துணைத் தலைவர் (ஆம்; இப்போதைய சட்டப் பேரவைத் தலைவர்—அப்போதைய துணைத் தலைவர் புலவர் க. கோவிந்தன்) அவர்களும், அவரது இளவல் டாக்டர் நடராசன், எம். டி. (இப்போது ஸ்டான்லி மருத்துவமனையில் பணியாற்றுகிறார்) அவர்களும் உள்ளே வந்தனர்.

''அண்ணா படுத்துவிட்டார்; நாளை காலையில்தான் பார்க்க முடியும்'' என்றேன்.

அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம்; இருப்பினும், புலவர் உடனே புறப்பட்டு விடாமல், 'வாய்ப்புக் கிடைக்காதா' என்ற ஆவலுடன் காத்திருந்தார்.

காத்திருந்ததற்குப் பலன் கிடைக்காமல் போகவில்லை; அண்ணா எழுந்து வந்து, வழக்கம்போல் கூடத்தில் உள்ள ஈசிச் சேரில் உட்கார்ந்து, 'வா, கோவிந்தா--எப்போது வந்தாய்?' என்று கேட்டுப் பதில் பெற்று, 'என்ன நடராசா--சௌக்கியமா?' என்றார், டாக்டரைப் பார்த்து!

டாக்டர், அண்ணாவின் நிலையை உணர்ந்து, 'ஓய்வும்--மனத் தைரியமும்தான் அண்ணா தங்களுக்குத் தேவை' என்றார்.

'ஓய்வா......' என்று இழுத்தாற்போல் கூறிவிட்டு, 'தைரியத்திற்கு ஒன்றும் குறைவு இல்லை; சாப்பிடத்தான் முடியவில்லை' என்று சொல்லிக்கொண்டே, அறுவைச் சிகிச்சை பற்றிக் கேட்டார்.

டாக்டர் தமக்கு ஏற்பட்ட அறுவைச் சிகிச்சையைப் பற்றிக் கூறினார்.

அதைக் கேட்ட அண்ணா, 'அப்படியா? இவ்வளவு பெரிய ஆப்ரேஷன் செய்து கொண்டாயா?' என்றார்.

டாக்டர், தாம் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி, பின்புறத்திலிருந்து தொடங்கி மார்புவரை அறுக்கப்பட்டு--தைக்கப்பட்டிருப்பதைக் காட்டி, 'இப்போது நான் நலமாக இருக்கிறேன், அண்ணா; தாங்களும் செய்துகொண்டால் நலமாக இருக்க முடியும்; ஓய்வும், மனவலியும் மட்டுமேதான் இப்போது தேவை' என்றார்.

அண்ணா அவர்கள் சலிப்புடன், 'இச்' கொட்டிவிட்டு, அருகில் நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்து, 'போய் சாப்பிடு; பகலே நீ இங்கு சாப்பிடவில்லை' என்று உத்திரவிட்டார்.

நான் சாப்பிட்டுவிட்டு வந்தேன்.

''மணி; புலவரையும் அழைத்துக் கொண்டு செல்; காலை 8-மணிக்கெல்லாம் நான் சென்னை செல்ல வேண்டும்; நீ 7-மணிக்கே வந்துவிடு; நீ வந்துதான் கலெக்டருடன் பேச வேண்டும்'' என்று கூறினார்.

இரவு மணி பத்து இருக்கும்; அவர் ஆணையை நிறைவேற்றினேன்; புலவர்--டாக்டர் நடராசன் இருவரும் செய்யாறு சென்றார்கள்; நான் என்னுடைய வீடு வந்து சேர்ந்தேன்; மனம் ஒரு நிலையில் இல்லை!

காலை ஏழு மணியளவில் (15—1—68 அன்று) அண்ணா வீட்டுக்குச் சென்று, அவரது படுக்கை அறைக்குப் போய்ப் பார்த்தேன்; தூங்குவதுபோல் தெரிந்தது; வெளியே வந்துவிட்டேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி, 7-45 மணிக்கு வந்துவிட்டார்; நான் மீண்டும் 8-30 மணிக்குப் படுக்கை அறைக்குச் சென்றேன்.

அண்ணா கண் விழித்துப் பார்த்து, 'முன்னமே நீ வந்தது தெரியும், மணி; கொஞ்ச நேரம் போகட்டும்--எழுந்திருக்கிறேன்; இராணியைத் தயாராக இருக்கச் சொல்--புறப்பட்டு விடலாம்' என்றார். (காஞ்சிபுரத்திற்கு அண்ணா வந்தால் வழக்கமாகக் காலையில் அவர் குறிப்பிடும் நேரத்துக்கு நான்தான் எழுப்புவது வழக்கம்.)

அண்ணியாரிடம் கூறி, அவர்களைத் தயாராக இருக்கச் சொன்னேன்; ஆனால், அண்ணா எழுந்து வரவில்லை; நேரம் சென்றுகொண்டே இருந்தது; 10-45 மணிக்குத்தான் எழுந்தார்; ஐந்தே நிமிடத்தில் சட்டை--வேட்டி மாற்றிக் கொண்டு, பாப்பாப்பு -- விஜயா -- இளங்கோவன் -- அக்காள் -- கண்மணி ஆகியோரிடம் விடைபெற்றுக் கொண்டுவிட்டு, நின்று கொண்டிருந்த


மாநாடு சிறப்புற எங்கள் நல்வாழ்த்துக்கள்!

துவக்கம்: 16—4—1930

தொலைபேசி: தலைமை அலுவலகம்: 236; திருச்செங்கோடு: 359; கொங்கணாபுரம் கிளை: 23

# திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம்,
## திருச்செங்கோடு.

குறைந்த கமிஷன்! நிறைந்த விற்பனை!

கடலைக்காயை நல்ல விலைக்கு விற்க வேண்டுமா? பருத்திக்கு உயர்ந்த விலை கிடைக்க வேண்டுமா? கொட்டமுத்து நல்ல விலைக்குப் போக வேண்டுமா?

**சங்கத்தை நாடுங்கள்!**

எண்ணெய் பிழிய வேண்டுமா? நெல் அரைக்க வேண்டுமா? தரமான இங்கிலீஷ் மருந்துகள் வேண்டுமா? புத்தம் புதிய மளிகை சாமான்களும் வேண்டுமா?

**விற்பனைச் சங்கத்தை நாடுங்கள்!**

எந்தப் பொருளும் -- ஏலம் தீர்ந்தவுடன் -- கைமேல் பணம்! டிராக்டர், ஸ்பிரேயர், கிணறு துளை போடும் கருவி அனைத்தும் குறைந்த வாடகைக்குக் கிடைக்கும்; விவசாயத் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுகிறது; இன்றே நாடுங்கள்!

**திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

கொங்கணாபுரம் கிளை --- மல்லசமுத்திரம் கிளை

க. ரங்கசாமி, பி.ஏ.
செயலாளர்.

என். ஏ. நடேசன்
தலைவர்,

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி

(வரையறுக்கப்பட்டது) எண்: 151. சேலம்-1.

தபால் பை எண்: 171 தொலைபேசி எண்: 2402

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| நாமக்கல் | சங்ககிரி | ஜலகண்டாபுரம் | தலைவாசல் |
| திருச்செங்கோடு | சேந்தமங்கலம் | ஆட்டையாம்பட்டி | எருமைப்பட்டி |
| ஆத்தூர் | கொங்கணபுரம் | செவ்வாய்ப்பேட்டை | வாழப்பாடி |
| மோகனூர் | சிறப்பு அங்காடி | பெத்தநாய்க்கன்பாளையம் | ஏற்காடு |
| இராசிபுரம் | சேலம் கடைவீதி | மேட்டூர் டேம் | எளம்பிள்ளை |
| ஓமலூர் | எடப்பாடி | நாமகிரிப்பேட்டை | மகுடஞ்சாவடி |
| தாரமங்கலம் | பி.கொமாரபாளையம் | கொண்டலாம்பட்டி | வேலகவுண்டம்பட்டி |
| வேலூர் | தம்மம்பட்டி | மல்லூர் | |

சொந்த நிதி: ரூ. 327 இலட்சம் நடைமுறை மூலதனம்: ரூ. 1,711 இலட்சம்

## வட்டி விகித அட்டவணை:

### கால் டெபாசிட்டுகள்:

| | |
|---|---|
| ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் (முன் அறிவிப்பு இல்லாமல்) ... | $3\frac{1}{4}$ % |
| ரூ. 10,000-க்கும் அதற்கு மேலும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்) ... | $3\frac{1}{2}$ % |

### சீசன் டெபாசிட்டுகள்:

ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும்—

| | |
|---|---|
| 15 நாட்களுக்கும் அதற்குமேல் 45 நாட்களுக்கும் ... | 3 % |
| 46 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் ... | $3\frac{1}{2}$ % |

### பிக்செட் டெபாசிட்டுகள்:

ரூ. 50-ம் அதற்கு மேற்பட்ட பிக்செட் டெபாசிட்டுகளுக்கு—

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள் ... | 6 % |
| 6 மாதத்திற்கும் அதற்கு மேல் 9 மாதத்திற்குள் ... | $6\frac{1}{2}$ % |
| 9 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள் ... | $7\frac{1}{2}$ % |
| 12 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள் ... | $8\frac{1}{2}$ % |
| 36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள் ... | $9\frac{1}{2}$ % |
| 61 மாதத்திற்கும் அதற்கு மேலும் ... | $10\frac{1}{2}$ % |

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$ % சேமிப்புக் கணக்கு 6 %

- ★ ரூ. 5,000-க்கு மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவசப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ★ பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு.
- ★ ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்புகொள்க!

**தி. பாலசுந்தரம்,** பி.ஏ.
துணைப் பதிவாளர்/நிர்வாக அதிகாரி

**பி. காசி,** பி.எஸ்ஸி., எச்.டி.சி.,
காரியதரிசி

**எஸ். ஆறுமுகம்,**
தலைவர்

என்னைப் பார்த்து, 'சற்று வெளியே இரு; மற்றவர்களையும் அங்கே இருக்கச் சொல்--வருகிறேன்' என்றார்.

அவர் ஆணையை ஏற்றுச் செயல்பட்டேன்; ஆனால் இந்த இருபதாண்டுக்காலப் பழக்கத்தில், குடும்பத்தில் என்னை வெளியே இருக்கச் சொல்லிப் பேசியது கிடையாது; இது எனக்குப் புதியதாகவும்—ஏதோ ஒருவிதக் கிலேசத்தையும் ஏற்படுத்தியது; ஐந்து நிமிடத்தில் வெளியே வந்து, அனைவருக்கும் வணக்கம் கூறியபடியே காரில் போய் ஏறிக்கொண்டார்—உடன் அண்ணியார், கம்பவுண்டர்.

"வருகிறேன், மணி" என்றார்.

கார் புறப்பட்டு விட்டது.

புறப்பட்ட கார் மறுபடியும் காஞ்சிபுரம் வந்தது; ஆனால், என் அன்புத் தெய்வம்—தமிழ் அன்னையின் தலைமகன்—தானைத் தலைவன்—என் வாழ்க்கையோடு கலந்து வழிகாட்டிய பேரறிஞர் அண்ணா, காஞ்சிபுரம் வரவே இல்லை!

தமிழ்நாட்டைத் தன் நாடாகக் கொண்டு –தமிழ்நாடு சிறக்கப் பல திட்டங்கள் வகுத்தாலும், தாம் பிறந்த மண்ணான காஞ்சிபுரத்தைக் கண்குளிரப் பார்க்க அவர் ஏன் திட்டமிட்டார் என்பது, அந்தப் பொங்கல் நாளன்று எங்களில் யாருக்கும் விளங்கவில்லை!

பிறந்த ஊர் செழிக்கத் திட்டம் தந்து—'அது முழுப் பலன் தருவதற்கு முன் நாம் இருக்கமாட்டோம்' என்று கருதி—கடைசியாக, அரசு -- அதிகாரம் -- ஆடம்பரம் -- இவை எதுவும் தன்னுடன் வராமல்—60 ஆண்டுகளுக்குமுன் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவன் எப்படிச் சாதாரணமாக இருப்பானோ அப்படியே மிக மிகச் சாதாரணமான அண்ணாவாக மாறி—தாம் பிறந்த ஊருக்காகக் கொண்டுவந்த திட்டங்களின் வளர்ச்சியை அன்று கடைசியாகக் கண்குளிரக் கண்டார்; எப்பொழுதும் தம்முடன் இருக்கும் நண்பர்களுடன்தான் அதனைக் காண விழைந்தார்; ஆனால், அன்றோ............!

அவர் தமிழ்நாட்டுக்குச் செய்ய எண்ணிய நல்ல பல திட்டங்களை, இரவு பகலாக அவருடன் இருந்து பேசி--விவாதித்து அறிந்துள்ள அத்தனையையும், அறிஞர் அண்ணா வழியில் நின்று கலைஞர் கருணாநிதி அவர்கள் செயல்படுத்தி வருகிறார்!

அண்ணா காஞ்சிபுரத்திற்குச் செய்ய எண்ணியதை—அவருடன் கடந்த இருபதாண்டுக் காலமாகப் பழகியவன்--என்ற முறையில்—முதல்வர் கலைஞரின் துணையுடன் என்னால் இயன்றதைச் செய்து கொண்டிருக்கிறேன்.

கழகக் குரல்
தி.மு.க. தலைமைக்கழக வாரஏடு — ஆசிரியர்: சிட்டி பாபு எம்.பி
22.9.74 முதல் சந்தா விவரம்
ஆண்டு சந்தா 20-00
அரை ஆண்டு 10-00
தனி இதழ் 00-40
ஏஜன்டுகள் இல்லாத ஊர்களுக்கு விண்ணப்பிக்கவும்
கழகக் குரல்-சென்னை, 600013

அண்ணா அவர்கள் கடைசியாகக் காஞ்சியைப் பார்த்தபோது, 'கழகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட வேண்டும்' என்பதைப் பெரிதும் விரும்பினார். அவர் மறைந்து -- அவரது நினைவு நாள் வந்துற்றபோதும், கழக மனை, மனையாகவே இருக்கிறது; கட்டடம் எழுப்பக் கலைஞரின் உதவியைக் கோரியிருக்கிறேன்; அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் மூலம் அதற்கான வழி வகைகளை மேற்கொண்டிருக்கிறேன்; அனைவரின் உதவி -- ஒத்துழைப்பால், விரைவில் கழகக் கட்டடம் கட்டி, அதனை அறிஞர் அண்ணாவின் பாதக்கமலங்களில் சமர்ப்பிப்பதே நான் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது பொது மாநில மாநாடு நடைபெறும் இந்த நேரத்தில், அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்திற்குக் கடைசியாக வந்திருந்து--அந்த நாளில் அவர் கூறிச் சென்ற திட்டங்களை நிறைவேற்ற முதல்வர் கலைஞர் அவர்களின் உதவியுடன் முயற்சிக்கிறேன்.

அண்ணா! என்றும் தங்கள் அறிவுரைகளை மறவாமல் இருக்க எனக்கு அருள் செய்!

'குடி உயரக் கோன் உயரும்' எனும் தமிழ் வரலாறு மெய்ப்பிக்கும் தமிழக அரசை -- தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப் போற்றுகிறோம்!

ஆத்தூர் கூட்டுறவு நிலவள வங்கி

எஸ். 447 ஆத்தூர் (சேலம் மாவட்டம்) (வரையறுக்கப்பட்டது)

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. 15,10,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. 14,95,175 |
| மாநில நிலவள வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் நிலுவை | ரூ. 1,62,57,310.00 |
| அங்கத்தினர்களுக்கு வழங்கிய கடன்கள் நிலுவை | ரூ. 1,65,41,331.21 |

நோக்கம்: உணவு உற்பத்தியைப் பெருக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் வங்கி பணியாற்றி வருகின்றது. டிராக்டர் வாங்கவும், விவசாயக் கருவிகள் வாங்கவும், பைப்பு பதிக்கவும், நிலச் சீர்திருத்தம் செய்யவும் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இக்காலம் பொற்காலமோ என வியக்கும் வண்ணம் என்றும் இல்லா அளவில் விவசாயிகள் செழிப்புறக் கடன்களை வாரி வழங்க உதவும் தமிழக அரசையும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் எங்கள் வட்டத்தின் சார்பில் பாராட்டுகிறோம்.

சி. மாரிமுத்து, எம்.ஏ.,
செயலாளர்.

இரா. கன்னையன்,
தலைவர், கூட்டுறவு நிலவள வங்கி.
செயலாளர்,
நகர தி. மு. கழகம், ஆத்தூர்.

# தங்கள் குழந்தைகளின் எதிர்காலச் சேமிப்புக்கு ஒரு நல்ல வாய்ப்பு!



எமது

## பொற்குவியல் திட்டத்தில்



பங்கு கொண்டு
17·51% முதல்
60·22% வரை
வட்டி பெற்று
வாழ்க்கையை
வளமாக்கிக்
கொள்ளுங்கள்



எம்மிடம் ரூ. 4,000
டிபாசிட் செய்து
முப்பது ஆண்டுகளில்
ரூ. 76,265·90
திரும்பப் பெறுங்கள்

★



மற்ற விபரங்களுக்குத் தலைமையகம் அல்லது கிளைகளுடன் தொடர்பு கொள்ளவும்.

**கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிட்., கோயமுத்தூர்-641018**

**எம். பழனிசாமி,** பி.காம். எச்.டி.சி.
செயலர்.

**எம். சுப்பிரமணியன்,** பி.ஏ பி.எல்., எம்.எல்.ஏ.
பெருந் தலைவர்.

# இலட்சிய வீரர் என்.வி.என்

கோவையில் நடக்கும் தி. மு. க. ஐந்தாவது பொது மாநாட்டுப் பந்தலுக்கு மறைந்த இலட்சிய வீரர் என். வி. நடராசன் அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

என். வி. என். அவர்களைப் பற்றிப் பழம்பெரும் சுயமரியாதை இயக்கத் தோழரான தென்னவராய நல்லூர் இரத்தின சபாபதி எழுதியுள்ளார்—படியுங்கள்.



வைதிகப் பிரமுகர்களிடம் நடராசனைப் பற்றிக் கேட்டால்—தில்லைவாழ் நடராசனைக் காட்டுவர்!

பகுத்தறிவு இயக்கப் பிரமுகர்களைக் கேட்டால்—ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தொன்பதாவது ஆண்டதனில் இந்திப் போராட்டத்தில் மாண்ட நடராசனையும்—பேரறிஞர் அண்ணாவால் ஈர்க்கப்பட்ட திரு. என். வி. நடராசன் அவர்களையும்தான் காட்டுவர்!

இனப் பற்று இல்லாத தமிழர் சமுதாயம் அடிமைப்படுத்தப்பட்டு—கொடுமைப்படுத்தப்பட்டு—தாழ்த்தப்படுத்தப்பட்டு—தன்மானமின்றி அல்லலுற்ற நேரத்தில், தமிழர்களுக்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டுவதற்குச் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டார்—தந்தை பெரியார்!



'இனப் பற்று என்றால் விலை என்ன' என்று கேட்கப்பட்ட நேரத்தில்—'தமிழ்ப் பற்று என்றால் அது எப்படி இருக்கும் என்று கேட்கப்பட்ட நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் தமிழனை விறு கொண்டு எழச் செய்தார்!

'தமிழன் ஓர் இனம்—அவனுக்கு ஒரு வரலாறு உண்டு' என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டினார்!

## எதிர் முகாமில் என். வி. என்.

இப்படிப்பட்ட நேரத்தில்—அண்மையில் மறைந்த நமது மாண்புமிகு அண்ணல் என். வி. நடராசன் அவர்கள்—நமது இயக்கத்தில் இல்லை; இல்லாதது மட்டுமன்று--எதிர் முகாமில் இருந்தார்: அதாவது, சத்தியமூர்த்தி, இராஜாஜி ஆகியோர் சீடராக -- காங்கிரசின் தூணாக இருந்தார்!

இன்னும் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணாவையே 1936-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சித் தேர்தலில் தோற்கடிக்க அரும் பாடுபட்டவர்!

திரு. என். வி. நடராசன் காங்கிரசுக் கட்சியிலிருந்தபோதிலும் தமிழ்—தமிழர் இனம்—என்கின்ற பற்றுடையவர்; ஆச்சாரியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசுக் கட்சியின் மொழிக் கொள்கையைக் கட்டோடு எதிர்த்தார்; 'கோட்டைக்குள் படை வெட்டு' என்பதைப்போல், காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே ரகளை செய்தார்; பல கூட்டங்களில் பேசியும்--எழுதியும் வந்தார்!

அது மட்டுமன்றி காங்கிரசிலிருந்துகொண்டே மாற்றுக் கட்சிப் பத்திரிகையை—தந்தைபெரியார் அவர்களால் நடத்தப்பட்ட 'குடியரசு'ப் பத்திரிகையைப் படித்துவந்ததன் காரணமாகக் காங்கிரசுத் தோழர்களின் கடும் கண்டனத்திற்கு ஆளானார்; அதனையொட்டிக் காங்கிரசுக் கமிட்டி சமாதானம் கேட்கும் அளவிற்கு வந்துவிட்டது; அதற்கு அங்கு பதில் சொல்லாமல், அதற்கான பதிலை,

தென்னவராயநல்லூர்
இரத்தின சபாபதி

'குடியரசு'ப் பத்திரிகையிலேயே எழுதிவிட்டார்.

மீண்டும் இவ்விவகாரம் கட்சிக்குள்ளே புகுந்து புயலாக மாறிய போது, காங்கிரசுத் தலைவரான திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தலையிட்டு—'திரு. என். வி நடராசன்மீது எந்தவிதத் தவறும் இல்லை' என்பதாகத் தமது தீர்ப்பை அளித்தார்.

சாதாரணக் காங்கிரசுத் தொண்டராக அவர் இருந்திருந்தால், உடனடியாக அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருப்பார்; ஆனால் நமது என். வி. என். சாதாரணமானவரல்லர் என்பதுடன், கொள்கை வீரர்—தொழிலாளர்களின் தோழர்—குணக்குன்று—சலியாத உழைப்பாளி என்பதால், அவரை இழந்துவிடக் காங்கிரசுத் தலைவர்கள் தயாராக இல்லை!

## அறிஞர் அண்ணாவின் அருமைச் சீடர்

காங்கிரசில் உறுப்பினராக திரு. என். வி. என். இருந்த போதிலும், தொழிலாளர் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கேற்றிருந்தார்.

அதுபோலவே, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் தொழிலாளர் இயக்கத்தில் தனி அக்கறையும்--நல்ல ஈடுபாடும் இருந்தது.

அப்போது தொழிலாளர் தலைவராக இருந்த தோழர் பாசுதேவ் மூலம், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் திரு. என். வி. என். அறிமுகப்படுத்தப்பட்டார்.

பின்னர், தொழிற் சங்கக் கூட்டங்களில் பேரறிஞர் அண்ணாவும்—திரு. என். வி. என். அவர்களும் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டதால், இருவரும் சிறந்த நண்பர்களானார்கள்.

பேரறிஞர் அண்ணாவிடமும்—திரு. என். வி. என. அவர்களிடமும் பல கொள்கைகளில் ஒற்றுமை உண்டு என்றும் சொல்லலாம்.

பெத்துநாயக்கன் பேட்டை வாசிகளான இருவரும், காந்தியவாதிகள்; சாந்தமே உருக்கொண்டவர்கள்; இலட்சியத்திலே பிடிவாதமுள்ளவர்கள்; கொள்கைக் கோமான்கள்; மாற்றாரையும் மதிக்கும் பண்பாளர்கள்; சலியாத உழைப்பாளிகள்; தொழிற் சங்க வாதிகள்—இப்படிப் பலப்பல!

திரு என். வி. நடராசன், மொழிப் பிரச்சினையில் போர்க்கொடி உயர்த்தியதைப் பார்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நீ இனி அதிக நாளைக்குக் காங்கிரசில் இருக்கமாட்டாய்' என்று கூறிய நேரத்திலும், 'உங்கக் கட்சியில் யார் சேருவார்கள்--காங்கிரசைவிட்டு வெளியேற மாட்டேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தவராவார்!

காந்தியவாதியான என். வி. என். தூய கதராடை கட்டுபவர்; என்றாலும், மொழித் திணிப்பை மட்டும் அவரால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

திரு. என். வி. என். காங்கிரசுக் கட்சியிலிருந்து கொண்டே கொள்கையை எதிர்த்ததால், கட்சியிலேயே அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்தில், திரு. என். வி. என்., 'இப்போது நடப்பது காங்கிரசு ஆட்சி; இதுபோன்றதொரு திட்டத்தைக் கொண்டுவருவதானால், கட்சியிடம் அனுமதி பெற்ற பின்னர்தான் கொண்டு வர வேண்டும்; அனுமதி பெறாமல் தன்னிச்சையாகக் கொண்டு வருவதற்குச் சுதந்தரம் இருக்கின்றதென்றால், அதனை எதிர்ப்பதற்கு எனக்கு சுதந்தரமும்--உரிமையும் உண்டு' என்று விளக்கம் சொன்னதைத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், காங்கிரசுக் கமிட்டிக் கூட்டம் ஒன்று சென்னையில்



வளர்க - கூட்டுறவு ! மலர்க -- சமநிலை வணிகம் !

# சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி

கோயமுத்தூர்-641002.

## 1. சிந்தாமணியின் வணிகச் சிறப்புகள் :

தரமான பொருட்கள் -- சரியான அளவு -- சீரான விலை - சிறப்பான விற்பனை முறை -- பல்பொருள் வணிகம் -- பணிவான சேவை!

"குறள் நெறி வணிகம்"

## 2. சிந்தாமணியின் விற்பனைச் சிறப்புகள் :

| | |
|---|---|
| கிளை நிலையங்கள் | : ஆறு |
| தினசரி சராசரி விற்பனை | : ரூ. 3.75 இலட்சம் |
| மாதாந்திர சராசரி விற்பனை | : ரூ. 92 இலட்சம் |
| ஒரு நாளில் அதிக அளவு விற்பனை | : ரூ. 5.17 இலட்சம் |
| ஒரு மாதத்திய அதிக அளவு விற்பனை | : ரூ. 1.08 கோடி |
| சென்ற ஆண்டின் விற்பனை (1974—75) | : ரூ. 10.95 கோடி |
| மொத்த உறுப்பினர் எண்ணிக்கை | : 65 ஆயிரம் |
| மொத்த ஊழியர்கள் எண்ணிக்கை | : 1084 |

## 3. 'சிந்தாமணி' நிர்வகிக்கும் இதர அங்காடிகள் :

திருச்சி கூட்டுறவு மொத்த பண்டகசாலை, திருச்சி.
ஈரோடு கூட்டுறவு மொத்த பண்டகசாலை, ஈரோடு.
பூங்கா நகர் கூட்டுறவு மொத்த பண்டகசாலை, சென்னை.

## 4. சிந்தாமணியின் சொந்தத் தயாரிப்புகள் :

தரமான — நயமான — 'சிந்தாமணி பனியன்கள்' மற்றும் தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், காப்பித் தூள், சீயக்காய்த் தூள், மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், கடலை மாவு, கோதுமை மாவு, இலவம் பஞ்சு மெத்தை – தலையணை வகைகள் முதலியன.

ஜி. வி. இராமசாமி,
செயலாளர்.

ஜி. ஆர். கோவிந்தராஜுலு,
தலைவர்.

மொழிக் கொள்கையை ஆதரிப்பதற்காகக் கூட்டப்பட்டபோது, அதில் கலந்துகொள்வதற்காகத் திரு. நடராசன் புறப்பட்டுச் செல்கையில், எதிரில் வந்த பேரறிஞர் அண்ணு அவர்கள் நடராசனைப் பார்த்து, 'கூட்டம் முடிந்து நீ திரும்பும்போது காங்கிரசுக்காரனுக வரமாட்டாய்' என்று சொன்னுர்; 'ஒருநாளும் நான் காங்கிரசுக் கட்சியை விட்டு விலகவும் மாட்டேன்—உங்கக் கட்சியிலும் சேர மாட்டேன்' என்று சூளுரைத்துவிட்டுச் சென்றுவிட்டார்!

அந்தக் கூட்டத்தில் திரு. நடராசன் எதிர்ப்புத் தெரிவித்தும் தோற்றுப்போகவே, 'இனி, காங்கிரசுக் கட்சியிலிருந்து பயனில்லை' என்று சொல்லிவிட்டு, இராஜிணுமாக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியேறி விட்டார்!

கூட்டத்திலிருந்து வெளியேறிய என்.வி.என்., வெளியே தொண்டர் ஒருவர் விநியோகம் செய்து கொண்டிருந்த துண்டுப் பிரசுரம் ஒன்றைப் படித்ததும், அவருக்கே ஆச்சரியம் தாங்கவில்லை; அதில், 'இன்று காலை காங்கிரசுக் கட்சியிலிருந்து இராஜிணுமா செய்த திரு. என். வி. நடராசன், இன்று மாலை கடற்கரையில் நடைபெறும் கூட்டத்தில் பேசுவார்' என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததைப் பார்த்ததும், 'இது யாருடைய வேலையாக இருக்கும்' என்று ஆழ்ந்து யோசித்தார்; அப்போதுதான் அவருக்கு அண்ணு அவர்களின் நினைவு வந்தது; அண்ணு சொன்னதுதான் வெற்றி பெற்றது என்பதை நினைத்ததும் பெருமிதம் அடைந்தார்; அன்றிலிருந்து அவர், அண்ணுவின் அருமைச் சீடரானுர்.

பேரறிஞர் அண்ணு அவர்களும், நட்புக் காரணத்துக்காகவோ -- வெறும் தயவு தாட்சண்யத்திற்காகவோ என். வி. என். வந்திருந்தால் அவரைப் பாராட்டியிருக்கமாட்டார்; தமிழைக் காக்கக் காங்கிரசைவிட்டு வெளியேறி வந்ததைத்தான் அவர் வெகுவாகப் பாராட்டினுர் -- அணைத்தும் கொண்டார்.

## தலைவரையும் எதிர்த்தார்

'காங்கிரசுக் கட்சி தடம் மாறிவிட்டது' என்ற கொள்கையின் அடிப்படையில் மட்டும் திரு. என். வி. என். செயல்படவில்லை; அதன் தலைவர்களும் தடம் புரண்டபோதெல்லாம், தனது எதிர்ப்பைக் காட்ட என்.வி.என். தயங்கவில்லை.

இவருக்கு அரசியல் குரு திரு. சத்தியமூர்த்தி; பல நேரங்களிலும் அவர், என். வி. என். அவர்களுக்காகப் பரிந்து பேசியவர்.

அப்படிப்பட்ட சத்தியமூர்த்தி அவர்களே ஒரு சமயம் டில்லி சட்டசபையில் முதலாளிகளுக்கு ஆதரவாகக் கொண்டுவந்ததாகக் கருதப்பட்ட மோடி மசோதாவைப் பல மணி நேரம் கடுமையாகத் தாக்கிப் பேசிவிட்டு, பின்னர் ஓட்டெடுப்பு நேரத்தில் சபையிலே இல்லாமல் போய்விட்டார்.

சத்தியமூர்த்தியின் இந்தச் செய்கையை, தொழிலாளர் சமுதாயமே எதிர்த்தது; பேரறிஞர் அண்ணு அவர்களும், அதன் பின்னர் பல கூட்டங்களில், சத்தியமூர்த்தி தொழிலாளர்வர்க்கத்திற்கு இழைத்த அநீதியை வன்மையாகக் கண்டித்தார்!

என். வி. என். அவர்களுக்கும் சத்தியமூர்த்தி மீது கடுங்கோபம் ஏற்பட்டது; டில்லியிலிருந்து சத்தியமூர்த்தி திரும்பியவுடன் பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதுபோது, காங்கிரசுக் கமிட்டிக்குத் தலைவர் சத்தியமூர்த்தி — காரியதரிசி என். வி. நடராசன்.

தலைவரைப் பார்த்து, காரியதரிசியே கேள்வி மேல் கேள்வி கேட்கத் தொடங்கிவிட்டார்; சத்தியமூர்த்தி பதில் சொல்ல முடியாமல் திணறிய நேரத்தில், கூட்டத்திற்குத் தலைமை வகித்த இராஜாஜி அவர்கள், என். வி. என். அவர்களைச் சமாதானப்படுத்த முயற்சித்தார்.

''இம்மசோதாமீது ஓட்டெடுக்கப்படும் நேரத்தில் திரு. சத்தியமூர்த்தி, பெரும் பணக்காரர்களிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு சபைக்கு வராமல் ஓடிவிட்டார் என்று பொது மக்களால் பேசப்படுகிறதே — அதற்கு என்ன பதில்?'' என்று கேட்கவே, ஆச்சாரியரர் அவர்கள், என். வி. நடராசனிடம், 'நீ, வீட்டுக்கு வந்து கேள்; உனக்குத் தனியாகப் பதில் சொல்லுகிறேன்' என்று கூறினுர்.

''இது, பொதுப் பிரச்சினை; பொது மக்களுக்குத் தெரியும்படி சொல்ல வேண்டும்'' என்று




கோவையில் நடைபெறும்
திராவிட முன்னேற்றக் கழக
மாநில மாநாடு வெற்றிகரமாக
நடைபெற
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

★

பெருந்துறை பிர்க்கா
கூட்டுறவு விற்பனைச் சங்கம்

★

தலைவர்: எம். பி. ராஜு, பி.ஏ.


கூறி, இராஜாஜியின் அழைப்பை உதறித் தள்ளினுர்.

கட்சியிலேயே அவருக்கு ஏதாவது பதவியைக்கொடுத்துச் சரி கட்டத் திட்டங்கள் போட்டார்கள்; ஆனுல் அந்த வலையில், என்.வி.என். விழவில்லை!

## கலைஞரின் பாராட்டு

திரு. என்.வி.என். தொடர்ந்து காங்கிரசுக் கட்சியில் இருந்திருப்பாரேயானுல், அமைச்சராகி இருக்கலாம்!

'கட்சியினுல் தனி மனிதனுக்குப் பெருமையா அல்லது தனிப்பட்ட மனிதனுல் கட்சிக்குப் பெருமையா' என்பதைப் பார்க்கும்போது, நமக்கு ஒரு நிகழ்ச்சி நினைக்கு வருகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'என்.வி. நடராசன் அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகம் பெருமைப்படுகிறது' என்று குறிப்பிட்டுக் கூறியது நமக்கு நன்ருக நினைவிருக்கிறது.

சமயச் சந்தர்ப்பவாதிகளும்—கொள்கையே இல்லாதவர்களும்—சுயநலவாதிகளும்—ஒரு கட்சி ஆட்சிக்கு வந்ததும், என்னவோ—தாங்கள் அக் கட்சிக்கு அரும்பெரும் சேவை செய்தவர்கள்போல் நடிப்பதும், கட்சியினுல் தங்கள் பொருளாதாரத்தையும் -- செல்வாக்கையும் உயர்த்திக் கொள்வதும் சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது.

ஓர் ஆளுங் கட்சிப் பிரமுகர்—பெரும் பதவி கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ள நேரத்தில், எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தில்—அதுவும் போராட்டத்தில் அக் கட்சி குதித்திருக்கும் நேரத்தில் வந்து சேருகிருர் என்ருல், அப்படிப்பட்ட என். வி. என். அவர்களுக்கு அமைச்சர் பதவி தந்த கலைஞர் அவர்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும் அல்லவா?

கொள்கைக் கோமான்-குணக் குன்று-மாண்புமிகு நடராசன் மறைந்தது, நமக்கு ஒரு பேரிழப்பாகும்.

நமது கழகத்தவருக்கு அவரின் சீரிய தொண்டு ஒரு முன்னேடி!

திரு. என். வி. என். நாமம் வாழ்க! அவரின் திருத்தொண்டு வளர்க! ★



தொலைபேசி: 3955
5554

# அண்ணா டெக்ஸ் பேப்ரிக்ஸ்

★ படுக்கை விரிப்புகள் ★ துண்டுகள் ★ தலையணை உறைகள்
★ அலங்காரத் துணிகள் ★ டிரில் துணிகள் முதலியன

தயாரிப்பாளர்கள் :

## அறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,

எண். C. H. I.

24, காரைவாய்க்கால் ரோடு, ஈரோடு -- 638002.

குறிப்பு :—எங்கள் தயாரிப்புகள் எல்லா 'கோ—ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

இயக்குநர்கள் :
ஆர். எஸ். முத்துசாமி கவுண்டர்
ஆர். நடேசன்
வி. எஸ். எளையப்பன்
பி. பூசப்பன்
கே. சுப்பிரமணியம்

மா. சுப்பிரமணியன், பி ஏ., பி.எல்., எம் எல்.ஏ.
தலைவர்.

கா. ரா. ரங்கசாமி,
உப -- தலைவர்.

தொலைபேசி : 20622 & 20623

தந்தி : 'சென்ஸ்டோர்ஸ்'

# வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிட்.,

இராஜகோபால் நிலையம், வேலூர்–1.

எங்களது மாபெரும் இரு பிரிவுகள் **"நேஃப்கோ"** கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்.

இங்கு தயாரிக்கப்படும் பழ ரசங்கள் -- பதப்படுத்தப்பட்ட பழங்கள் உலகின் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு -- பெருமளவு அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது.

மக்களின் அன்றுடத் தேவைப் பொருட்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் நியாய விலையில் வாங்கச் சிறந்த இடம்

## 'கற்பகம்' கூட்டுறவு சிறப்பு அங்காடி, வேலூர்-1.

மற்றும்

செய்யாறு, திருவண்ணாமலை, திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், ஆரணி, ஆற்காடு, அரக்கோணம், போளூர், வந்தவாசி சேத்பட், ஆலங்காயம், ஒடுகத்தூர், பேர்ணாம்பட்டு, அணைக்கட்டு, பள்ளிக்கொண்டா கிளைகள்

கா. ஏகாம்பரம், பி.ஏ.,
இணைப் பதிவாளர் / செயலர்.

ர. சம்பங்கி,
தலைவர்.

# புதுமைபொலியும் பொதுமாநாடு

—.வ—

**கவிஞர் ஆனந்தம்**

இதுமா நாடு! பொதுமா நாடு!
புதுமை, எழுச்சி, பொலிவு மலிந்தது!
வரலா றெழுதும் திறலெனக் கில்லை!
வரவும் போக்கும் வகையாய்ப் புரியும்!
ஐந்தாம் பொதுமா நாடு கோவையில்!
சிந்தனை பறக்கும் கிறகடித் தெங்கோ!
அண்ணனில் லாத அவலம் நினைக்கையில்
கண்ணீர் பெருகும் கல்மனம் உருகும்
கலைஞர் தலைமையில் நிலைமை உணர்த்திடும்
விலைமதிப் பற்ற வீறுமா நாடாம்!
இறந்தவர் போகத் துறந்தவர் சிலரும்,
மறந்தவர் சிலரும் மனத்தில் வருகிறர்!
யாரிருந் தாலும் யார்போ னுலும்
நீருள ஆறுபோல் நில்லாது போவோம்!
அண்ணன் போனபின் கண்ணீர் வற்றுமுன்
கண்ணியம் காக்கும் கழகத் தலைவர்
கட்சியைக் காத்தார்; ஆட்சியைக் காத்தார்!
பட்சிகள் பறந்தன பிணந்தனைக் கொத்த!
கொங்குச் சீமை எங்கணும் உணர்ச்சி
பொங்கி வழிந்திடப் பூரிப்பு வெள்ளம்!
மக்க ளாட்சி மாண்பினைப் பேணிடத்
தக்க தருணம்; முக்கிய நேரம்!
துரோகப் படுகுழி இராதினி; நம்பி
விரைவாய்ப் பயணம் வெல்ல நடப்போம்!
சிசுவை வென்றவர் பசுப்போல் பயனுள
சாமி நாதனும் சாதனைக் குழுவும்
சரித்திரம் படைக்கிறர்; தரித்திரம் நீங்கிட!
வரத்தயார் ஆகுக, வண்டமிழ்த் தோழனே!

★

விருகம் பாக்கம் வெற்றிப் பாதையின்
அருகிலே நம்மை அழைத்தமா நாடாம்!
நீலநா ராயணன் சாலஒத் துழைத்து
வேலை வாங்கினர்; வீரம் விளைத்தார்!
அண்ணன் அழைத்த அனைத்துக் கட்சிகள்
எண்ணரு நலத்துடன் இணைந்ததோர் விந்தை!
தலைவரிற் சிலர்தாம் நிலையாது நீங்கினும்,
குலைவுரு துள்ளதே கூட்டுத் தோழமை!
நுழைவுச் சீட்டு விழைந்தவர்க் களிக்கவும்,
அழைக்கவும், உள்ளே அரையடி நிலமில்லை!
கண்காட்சி ஒன்றைக் கருத்துடன் அமைத்தேன்;
கண்விழித் திருமாதம் கவனமாய் உழைத்தேன்;
நாலா யிரந்தான் செலவழித் தாக்கினேன்;
நாற்பதா யிரம்பேர் நாடியே பார்த்தனர்;
அண்ணன் கட்டளை எண்ணி இயற்றினேன்;
கண்ணியன் விருப்பம் வெற்றியே கண்டது;
இருபதாண் டாக இன்தமிழ் அழித்தவர்
ஒருபா டாக ஒழிந்தனர் தேர்தலில்!
எட்டாண் டாட்சியில் ஏற்றிட உதவிய
மட்டிலாப் புகழுடை மாநாடு அஃதே!

★

மீனுட்சி மதுரை கோனுட்சி சிறந்தது—
தேனுர் திருப்பரங் குன்றம் தேடியே
கழகம் நிகழ்த்திய அழகுமா நாடு
பழகிட இனிதாய்ப் பயின்றமூன் ருவதாம்!
அப்போ தும்சிலர் அகன்றநே ரந்தான்—
குப்புற வீழ்ந்து குமைந்திட வில்லை!
தலைவராம் அண்ணு நிலைகுலை யாமல்
விலைமதிப் பற்ற,தம் வீரம் நிகழ்த்தினர்!
கருப்புச் சட்டைக் கழகம் நடத்திய
சிறப்புமா நாட்டைச் சிதைத்தபே ரூரில்
வீரத் திருவுலா, வீதிகள் தோறும்!
காரணம் அண்ணன் கட்டுப் பாடுதான்!
அறுபத் திரண்டில் ஐம்பது பேரைப்
பெறுவதற்கான பேறிங்கே வாய்த்தது!

★

திருப்பு முனையாய் உரைப்பதற் கேற்ற
கருப்பொருள் அமைந்தது கழகம் நடத்திய
இரண்டாம் பொதுமா நாடென ஏற்போம்;
திரண்ட எழுச்சியைத் திருச்சியில் காட்டினேம்!
தம்பியர் குழுதரும் தென்புடன் அண்ணன்
கும்பலை அங்கே கூட்டினர் முன்னரே!
திங்கள்ஒன் றுக்குமேல் தங்கினேம் அனைவரும்
மங்காத வள்ளுவர் திருநகர் படைத்திட!
ஓவியக் காட்சிகள் ஓய்விலா தமைத்தோம்—
காவியம் படைக்கும் கவின்மிகு முகப்புகள்—
நிகழ்ச்சிக் கொருபுறம் நெடிய பந்தல் -
மகிழ்ச்சி நாடகம் மற்றெரு புறத்தில்!
''வெட்ட வெளிகளில் விளையாடு கின்றீர்;
சட்ட மன்றத் தகுதியுண் டோ?''வென
அறைகூவல் விட்டனர் அருங்காம ராசர்—
முறையுடன் ஏற்று முடிவுகள் மேற்கொள
வாக்குச் சீட்டுகள் வழங்கி மக்களின்

நோக்கம் புரிந்து, தூக்கி நிறுத்தினோம்!
''தம்பி,வா! தலைமை ஏற்க,வா! தகுதி
நம்பிநின் ஆணை கேட்டு நடக்கிறோம்!''
என்றிரு வரிகளில் இதயம் உணர்த்திய
ஒன்றுக் கீடாய் உலகம் கண்டதோ?
நாவலர் தலைமையில் நாட்டுக் குழைத்திடும்
ஆவல் மீதுற அமைவுடன் துணிந்தோம்!
கொட்டினோம் முரசு; குதித்தோம் களத்தினில்!
பட்ட துயர்க்குப் பதினைவர் வெற்றி!

★

தந்தை கோபம், வெந்துயர், சாபம்,
விந்தையாய் அவற்றைச் சந்தன மாக்கி
உடல்தனிற் பூசி உணர்ச்சியை ஏற்றிக்
கடமை கண்ணியம் கட்டுப் பாட்டுடன்
துண்டை உதறித் தோளிலே போட்டுக்
கண்டவர் வருந்திடக் கண்ணீர் உகுத்து
வெறுங்கைய ராக வெளியேறி யோர்க்கும்
அறிவகம் என்னும் அழகு மாளிகை;
அங்கிருந் தூர்வலம்; அண்ணன் பவனி;
பொங்கிடும் ஆர்வம்; பூரிப்பு; துள்ளல்!
பந்தயத் திடலிலே பாங்குடன் முதன்முதல்
செந்தமிழ் மைந்தர் திரண்டமா நாடு!
இன்றுள வளர்ச்சி அன்றைக் கின்மையால்
ஒன்று கூடிட உதவிற் றவ்விடம்!
நான்கு நாட்கள் நடத்திடத் தொடக்கம்
ஆங்குதான்; அதுமுதல் அந்தப் பாங்குதான்;
கலைத்துறைப் படைப்புகள் கவினுற இடம்பெறும்!
நிலைத்திடும் புகழுடன் நீடிய அமைப்புடன்
உலகினில் நிலவிடும் ஒப்பிலாக் கழகம்
இலகிடக் காரணம் என்னவோ? அண்ணன்
வழிந்திடும் அன்பால் பொழிந்த பாசத்தால்
அழிந்திடா தின்றவர் அடியொற்றி நடக்கும்
கலைஞர் நாவலர் பேரா சிரியரும்—
தலைவர் ஆணையைத் தட்டாது மேற்கொளும்
தம்பியர் உறுதியும், தலைமைக்குப் பணிவும்,
நம்பிய தமிழரை நட்டாற்றில் விட்டுக்
கழுத்தறுக் காத கருணை நெஞ்சமும்
அழுத்தமும் கொள்கையில் அலைவுருத் திண்மையும்,
சொற்பச் சுயநலம் அற்பமாய் ஒதுக்கலும்,
அற்புதம்; அதிசயம்; அகிலமே திகைத்திடும்!
இந்த அணிக்கோர் ஈடிலை;
வந்து குவிந்திடு; வாழ்களன் தோழனே!




சோதனைகளைக் கடந்து சாதனைகள் புரிந்த
தானைத் தலைவர் தமிழக முதல்வர் தலைமை ஏற்கும்
வரலாறு காணாத இம் மாநில மாநாடு
புதிய வரலாறு படைக்க எங்கள் நல்வாழ்த்துக்கள்!

மேட்டுப்பாளையம் கூட்டுறவு
பிரதம நிலவள வங்கி
மேட்டுப்பாளையம்.

டி. டி. அரங்கசாமி,
துணைத் தலைவர்.

மே. சி. தூயமணி, எம்.எல்.ஏ.,
தலைவர்.

காரமடை அரங்கநாதன், சிறுமுகை ரகுநாதன், இராசடி பாலகிருஷ்ணன்
இயக்குநர்கள்.

# கழக வளர்ச்சியில் தாய்க்குலத்தின் பங்கு

—.வ—.,

அமுதாராகவன்

வரலாறு படைக்கும் வீரர் கூட்டத்தின் வெள்ளி விழா முடித்து வெற்றி நடை போடுகின்ற நேரமிது!

1951-இல் முதல் மாநில மாநாடு! ஆட்சி பீடத்திலிருந்த ஆணவக்காரர்கள், 'மீண்டும் பதவி நாற்காலி கிடைக்குமா' என்று அரசியல் ஆரூடம் பார்த்துக் கொண்டிருந்த நேரம் அது! அப்போது கழகம், மூன்று ஆண்டுக் குழந்தை!

1956-இல் திருச்சியில் தீரர்களின் இரண்டாவது மாநில மாநாடு; 'திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடும்' என்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற முடிவை அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள்.

சென்னை விருகம்பாக்கத்தில் 1967-இல் நடைபெற்ற மாநில மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்பதற்கு முன்னோடியாக அமைந்தது!

1956-ஆம் ஆண்டில் டி. டி. வி. உயர்நிலைப் பள்ளியில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் மகளிர் மன்றத் தொடக்க விழா நடைபெற்றது; விழாவில் மறைந்த மூதாட்டி மூவாலூர் இராமாமிர்தத் தம்மையார்—டாக்டர் தருமாம்பாள்—வெற்றிச்செல்வி அன்பழகன் ஆகியோரும், மற்றும் தலைவர்களின் துணைவியர்களும் கலந்து கொண்டனர்.

மிகத் தீவிரமாக மகளிர் பணியாற்றினர்; மேடையில் பேசுவதற்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது; பேச்சுப் போட்டிகள்—பட்டி மன்றம் போன்றவைகளில் பெரும் அளவில் மகளிர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்; நாடகங்கள் மூலமாகக் கட்சிப் பிரச்சாரம் செய்தனர்; போராட்டங்கள் என்றால், தாய்மார்கள்—புறநானூற்றுத் தாய்மார்களின் வழிவந்தவர்கள்—புலியை முறத்தால் அடித்து விரட்டிய வீராங்கனைகளின் வாரிசுகள்—பெரும் அளவில் கலந்து கொண்டனர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், மாவட்டந்தோறும் மகளிர் பலர் கைது செய்யப்பட்டனர்!

கோவையில் இராசம்மாள் ஆறுமுகம் தலைமையிலும்--சேலத்தில் கமலம் மாணிக்கம் தலைமையிலும்—வேலூரில் வடிவாம்பாள் தலைமையிலும் — சென்னையில் அலமேலு அப்பாத்துரை. குப்பம்மாள் ஆகியோர் தலைமையிலும் தாய்மார்கள் பலர் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றனர்!

எந்தப் போராட்டமாக இருந்தாலும் சரி—பெண்கள் முன்னணி



யில் நின்று கலந்து கொண்டனர் என்பதை, நாம் மறக்கவே இயலாது!

1958-ஆம் ஆண்டில், மீனம்பாக்கத்தில் நடைபெற்ற கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சி—வெற்றிச்செல்வி அன்பழகன் தலைமையில் மகளிர் பலரும் கூடினோம்; அப்போது தலைவர்கள் பலரும் கைது செய்யப்பட்டுவிட்டனர்; நாங்கள் இவரோடு இரவாக யாருக்கும் தெரியாமல் மீனம்பாக்கத்திற்குப் போய்விட வேண்டும் என்று முடிவு செய்து -- நந்தம்பாக்கத்தில், கழகத் தோழர் ஒருவரின் இல்லத்தில் தங்கினோம்.

நாங்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் போய்விட்ட காரணத்தினால், அந்தத் தோழரின் இல்லத்தில் எங்களுக்கு இடம் போதவில்லை; உட்கார்ந்திருந்த நிலையி


கூட்டுறவே நாட்டுயர்வு!

## ஆற்காடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட்., C. 1252

21, செய்யாறு ரோடு, ஆற்காடு.

நல்வாழ்த்துக்கள்!

### விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓர் நற்செய்தி!

எங்கள் விற்பனை சங்கத்தில் விவசாய விளைபொருள்களின் பேரில் ரூ. 2,000 வரை குறைந்த வட்டியில் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. அரசாங்கக் கட்டுப்பாட்டுத் துணிகளையும் விற்பனை செய்கின்றோம். மேலும் விவசாயிகளிடமிருந்து நெல், கடலைக்காய், வெல்லம் மற்றும் உணவுத் தானியங்களை நல்ல விலையில் கொள்முதல் செய்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அங்கத்தினர் அல்லாதவர்களும் எமது விற்பனை சங்கத்தில் அங்கத்தினராக சேர்ந்து பயனடைவீர்!

இங்ஙனம்

ஏ. இராஜமாணிக்கம்,
முதுநிலை ஆய்வாளர் / செயலர்.

வளவனூர் டி. சுப்பிரமணியம்
தலைவர்
மற்றும் நிர்வாகஸ்தர்கள்.

லேயே அனைவரும் இரவைக் கழித்தோம்.

பொழுது புலருவதற்கு முன்பே நாங்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டோம்; கூட்டமாகச் சென்ருல் போலீசார் கைது செய்துவிடுவார்கள் என்றெண்ணி இரண்டிரண்டு பேர்களாக—திருமணத்திற்குப் போகிறவர்களைப் போல் பேசிக்கொண்டு—கருப்புக் கொடிகளை மறைத்துக் கொண்டு சென்ருேம்!

கண்ணீர்ப்புகை — துப்பாக்கிச் சூடு — தடியடி — அத்தனையையும் தாங்கிக் கொள்வதற்கு நாங்கள் தயாராகவே இருந்தோம்; எங்களில் அலமேலு அப்பாத்துரை. குப்பம்மாள், கமலா பாலசுந்தரம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இதனை எதற்காக நான் இங்கு குறிப்பிடுகிறேன் என்ருல், இன்றைக்கு அரசியலில் நாம் பணியாற்றுகின்ற சூழ்நிலை வேறு—அப்போது நமக்கிருந்த சூழ்நிலை வேறு என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான்!

நம்முடைய உயிருக்குக்கூடப் பாதுகாப்பு இல்லாத நேரம் அது!

அந்த நிலையில், கட்சிப் பணியாற்ற—கட்சிக்காகத் தியாகம் செய்ய முன்வந்த தாய்மார்களை இன்று எண்ணிப் பார்க்கிறேன்; அந்த வேகம்—அந்தத் தியாக உணர்வு இன்று நம்மிடையே மீண்டும் வரவேண்டும்.

1975-ஆம் ஆண்டில் கோவையில் கூடுகின்ருேம்; பொறுப்புக்கள் மிகுந்த வேளையில்—புல்லர்கள் புரளி கிளப்புகின்ற நேரத்தில்—அடலேறுகளின் அணிவகுப்பு கோவையில் நடைபெறுகிறது!

பேரறிஞர் அண்ணு அவர்கள் காட்டிய வழியில்—கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய கவசங்களை அணிந்து செயலாற்றப் புறப்படும் வீரர்களின்--வீராங்கனைகளின் பாசறைதான் கோவையிலே நடைபெறுகின்ற மாநில மாநாடு!

இந்த நேரத்தில்—இன்றைக்கு ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னர் — மதுரையிலே நடைபெற்ற மாநாடு ஒன்றில் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறிய கருத்து ஒன்று நினைவிற்கு வருகிறது.

அம் மாநாட்டிற்குத் தலைமை தாங்கக் கலைஞர் அவர்கள் வர இயலவில்லை; கார் விபத்தினுல் கண்களில் வலி வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்; எனினும், அவருடைய தலைமை உரை மாநாட்டில் படிக்கப்பட்டது.

அதிலேதான் கூறினுர்கள் :—

"முல்லைக் கொல்லையிலே முட்புதர்கள் மொய்த்த கதை எங்குமுண்டே; எனவே, துரோகத்தைப் பற்றிக் கவலைப்படாது நமது பணி தொடரட்டும்" என்று!

எத்தகைய தீர்க்கதரிசனம்!

இன்று நேற்று மட்டுமல்ல—தொன்றுதொட்டே தமிழினத்திற்குத் துரோகம் விளைவிக்கப் பலர் முயன்றிருக்கின்றனர்--இப்போதும் முயற்சிக்கின்றனர்; என்ருலும், துரோகம் வென்றதில்லை--தமிழினம் தோற்றதில்லை!

பாரதி சொன்னுரே — 'வாராது போல் வந்த மாமணி' என்று — அதுபோல, வாராது வந்த மாத் தமிழர் ஆட்சி கழக ஆட்சி!

காலம் நமக்கு அளித்த கடைசிக் கருணை, பேரறிஞர் அண்ணு வழியில் டாக்டர் கலைஞர் நடத்தும் கழக ஆட்சி!

இதனை இழக்க — மற்றவர் பறிக்க தமிழினம் இடந்தராது!

எட்டாண்டுக்காலக் கழக ஆட்சியில் சாதித்தவை ஏராளம்; என்ருலும், இன்னும் ஆற்ற வேண்டியப ணிகள் அளவில்லாதவை!

தாழ்வுற்று -- வறுமை மிஞ்சி-- தவறிக் கெட்டு--பாழ்பட்டு நிற்கும் தமிழ் சமுதாயம் முன்னேற—பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்ள—வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப் பெருக்கு மேவ—கழக ஆட்சி வேண்டும்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னுர் — 'புதியதோர் உலகு செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்' என்று—அதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம்--இதய மூச்சு எல்லாம்!

அறிஞர் அண்ணு அவர்கள் அந்த இலட்சியத்தை அடையத்தான் ஏறுநடை போட்டார்கள்!

நம்முடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞரும் அந்த இலட்சியத்தை அடையத்தான் இயக்கத்தின் நீண்ட நெடும் பயணத்தைத் தொடங்கியுள்ளார்!

அறப்போரும் -- போராட்டங்களும்--மறியலும் அன்று நம்முடைய கருவிகள்!

ஆட்சியாளர் அவிழ்த்துவிட்ட அடக்குமுறையும்--தடியடியும்--சிறைவாசங்களும் நாம் பெற்ற பரிசுகள்!

இலட்சிய வெறி கொண்ட நமக்கு, அடக்குமுறையோ--தடியடியோ தண்டனையாகத் தோன்றியதில்லை!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை --எமை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை' என்றுதான் கூறினேம்!

'இருட்டறையில் உள்ளதடா
உலகம்—சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின் ருனே!
மருட்டுகின்ற மதத்தலைவர்
வாழ்கின் ருரே!
வாயடியும் கையடியும்
மறைவ தெந்நாள் ?"

என்று கேட்டாரே புரட்சிக் கவிஞர்—அவர் கனவ நினைவாகத் திட்டங்கள் தீட்டுகின்றது கழக அரசு!

நாம் எதிர்க் கட்சியாக இருந்த போது, நமது மொழி காக்க—இனம் காக்க—இன நலம் காக்க—போர்ப் பரணி பாடும் பாடி வீடுகளாக இருந்தன, நம்முடைய மாநாடுகள்.

கழக அரசு கண்டபிறகு, நாடும் மொழியும் நலம் பெற—நலிந்தவர் ஏற்றம் பெற—நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதற்குக் கூடிடுவதுதான் நம்முடைய மாநாடுகள்!

துறைதோறும் துறைதோறும் தமிழருக்கு—தாய்க் குலத்திற்கு—இளைஞர் அணிக்கு—தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் தரும் ஆணையை பெறத்தான் கோவையிலே கூடுகிருேம்!

சங்கம் வளர்த்த மதுரையிலே கழக மகளிர் மாநில மாநாடு கண்டோம்!

நீலத் திரைகடல் ஓரத்தில் கோலம் செய் நாகர்கோவில் மாநாடு பார்த்தோம்!

இப்போது கோவையிலே மாநில மாநாடு!

கழக இயக்கத்தின் நீண்ட நெடும் பயணத்தில் இவையெல்லாம் குறிப்பிடத்தக்க மைல் கற்கள்!

பேரறிஞர் அண்ணு அவர்கள் கூறியதுபோல், நாமெல்லாம் புலி வேட்டையாடப் புறப்பட்டுள்ளோம்!

புல்லாங் குழலிசை கேட்டு மயங்கி நின்றுவிட மாட்டோம்! நீண்ட பயணத்தைத் தொடருவோம் -- வெல்வோம்! ★


தானைத் தலைவர் - தமிழக முதல்வர்
தலைமை ஏற்கும் இம்மாநில மாநாடு
நானிலம் போற்றிட எங்கள்
நல்வாழ்த்துக்கள்!

★

கோபிசெட்டிபாளையம் கூட்டுறவு
பிரதம நிலவள வங்கி

தலைவர் :
ஏ. சி. இராமன்

துணைத் தலைவர் :
எஸ். எஸ். இராமசாமி

செயலாளர் :
ஜி. கே. காளியண்ணன்



தானைத் தலைவர் -- தமிழக முதல்வர்
தலைமை ஏற்கும் இம்மாநில மாநாடு
தரணி போற்றும் புகழ்பெற்றிட எங்கள்
இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

★

தி. மாரிமுத்து,
தலைவர்

உடுமலைப்பேட்டை
கூட்டுறவு விற்பனைச் சங்கம்,
தாராபுரம் சாலை,
உடுமலைப்பேட்டை.

# கொங்குச் சீமையில் கூடிடும் மாநாடு



நீண்டகால சுயமரியாதை இயக்கத் தோழரும், திராவிடர் இயக்க இதழ்கள் -- நூல்கள் விற்பனையாளருமாகிய தோழர் அன்புமணி இக் கட்டுரையை எழுதியுள்ளார்.

தோழர் அன்புமணி, இயக்கம் நடத்திய அத்தனை மாநாடுகளிலும் -- அநேகமாக இளஞ் சிறுவனாக இருந்த காலம் முதலே கலந்துகொண்டவராவார்!

அத்தகைய இயக்கத் தோழர், உணர்ச்சிபூர்வமாக நமது இயக்க மாநாடு நிகழ்ச்சிகளை இக் கட்டுரையில் விவரிக்கிறார்.

இக் கட்டுரை, திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் பெருமையையும் -- திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையையும் இளந் தலைமுறையினருக்கு உணர்த்துகிறது!

—ஆசிரியர்

அன்புமணி

கொங்குச் சீமையிலே—
கோவை மாநகரிலே—

கொட்டும் மழையிலே கொள்கை முழக்கத்துடன் பிறந்த நமதுயிர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 5-ஆவது மாநிலப் பொது மாநாடு கூடுகிறது!

17—9—1949 முதல் 25—12—1975 முடிய—

இராபின்சன் பூங்காவிலிருந்து என். வி. என். பந்தல் முடிய—

இடையிலே நாம் கடந்து வந்த பாதையை ஒரு கணம் திருப்பிப் பார்த்தால், அப்பப்பா -- எத்தனை எதிர்ப்புகள்! போராட்டங்கள்!

நீண்ட -- நெடிய இலட்சியப் பயணத்திலே கொள்கை உரமேற்றிக் கொள்ளும் பாசறையாக நாம் நடாத்திய மாநாடுகள் -- கருத்தரங்குகள் -- கூட்டங்கள் -- சிறப்புக் கூட்டங்கள் எத்தனை, எத்தனை? ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புக்களைக் கொண்டதல்லவா?

நிகழ்ச்சிகள் சிறப்பு அடைந்திட நம்மவர் ஏற்றிட்ட தொல்லைகள் -- துயரங்கள் எத்தனை எத்தனை?

அத்துணைத் தொல்லைகளுக்கும் -- துயரங்களுக்குமிடையே அந் நிகழ்ச்சிகள் வெற்றியடையும்போது—தலைவர்களின் பாராட்டுதல்களைப் பெறும்போது—உழைத்தவர்தம் உள்ளங்கள் பெற்ற களிப்புதனை எடுத்தியம்பிடத்தான் இயலுமோ!

அவ்வாறே, சிறப்புமிகு நிகழ்ச்சிகளின் சீர்மைகளைக் காணும் கழகத் தோழர்களின் உள்ள மகிழ்ச்சிக்கும் அளவுதான் உண்டோ!

அளவில்லா அம் மகிழ்ச்சியினிடையே, 'இந் நிகழ்ச்சி, இதுவரை நடந்திட்ட நிகழ்ச்சிகளைவிட எழிலானது; இந்த மாநாடு' இதுவரை நடந்த மாநாடுகளைவிட எழிலும் ஏற்றமும் வாய்ந்தது, என ஒவ்வொரு நிகழ்ச்சியின்போதும் நமது தோழர்களைச் சொல்ல வைத்தன! நாம் நடத்திய கூட்டங்கள் -- கருத்தரங்குகள் -- மாநாடுகள் மாற்றார்களை நினைக்க வைத்தன!

அந்த வகையிலே, 'மாநாடுகள்' என்று மட்டும் எடுத்துக் கொள்வோமானால், நமது இயக்கம் இந்த இருபத்தாறுண்டுக் காலத்திலே நடத்திய மாநாடுகள் அனைத்தும் ஒன்றையொன்று எல்லா வகையாலும் மிஞ்சத்தக்க வகையிலேதான் அமைந்து வருகின்றன!

நமது மாநாடுகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்ட கண்ணோட்டத்தில் அல்ல -- இதனை நான் கூறுவது; உலக வரலாற்றிலேயே இவ்வாறு எழிலாக—மாற்றாரும் கண்டு வியக்கத்தக்க வகையிலே—காணுவோர் கருத்து விளக்கம் பெற்றிடும் வகையிலே—சீரோடும் சிறப்போடும் மாநாடுகளை நடத்துவது, தி. மு. கழகம் மட்டுந்தான் என்று துணிந்து கூறலாம்.

உலகிலே இதுவரை நடந்த மாநாடுகள் அனைத்தும், குறிப்பிட்ட ஒரு தலைப்பில் — ஒரு மண்டபத்தில்—சில நூறு பேர் அல்லது சில ஆயிரம் பேர் கூடிக் கலைந்தவையாகத்தான் இருக்கும்!

ஆனால், நாம் நடத்தும் மாநாடுகள், நமது இனத்தின் முந்தைய வரலாற்றை நினைவுபடுத்துபவையாக — நமது தற்காலச் சீரழிவை எடுத்துக் காட்டுபவையாக—நாம் எதிர்காலத்தில் ஏற்றம் பெற்றிட எவை எவை ஏற்ற செயல்கள் என்று எடுத்துக் கூறுபவைகளாக — கொள்கை முழங்கும் இலட்சியப் பாசறைகளாக — கருத்துக்களில் பதியும் வரலாற்று வகுப்புக்களாக—கருத்து விளக்கம் பெற்றிடும் கருத்தரங்குகளாகத்தான் விளங்குகின்றனர்!

மாநாடுகளையொட்டி நாம் நடத்திய ஊர்வலங்கள் - காண்போர் உள்ளங்களைக் கவர்ந்தது மட்டுமல்லாது, அந்த ஊர்வலங்களில் நாம் அமைத்துக்கொண்டு வந்த காட்சிகள்—கருத்து விளக்கப் படங்கள்—கண்ணுக்கு விருந்தாகவும், கருத்தினை ஈர்த்திடத் தக்கவையாகவும் இருந்தன!

இந்த வகையிலே, மாநாடுகளையும்--ஊர்வலங்களையும் நடத்துவது, உலகிலேயே நாமாகத்தான் இருக்க வேண்டும்.

மாநாடுகள் நடத்துவதிலேயும் —மாநாட்டு ஊர்வலங்களை அணிவகுப்பதிலேயும் உலகிலே மற்றையோர்க்கு முன்னோடியாகத் திகழ்வது நாம்தான்; நாம் செய்து முடித்த பின்னர்தான்—

'மக்களை அவைகள் கவர்ந்துவிட்டன' என்று அறிந்த பின்னர்தான்—மாற்றார்கள் அதே முறைகளைக் கையாளுகின்றனர்; ஆனால் தோல்வியைத்தான் அவர்கள் பரிசாகப் பெற்றனர்!

''பேச்சுக்காகக் கட்டணம் வசூலிக்கும் கட்சி, உலகிலேயே தி.மு. கழகம்தான்'' என்ற ஓர் 'உலகப் பெருமை'யை மட்டுமல்ல நாம் அடைந்திருப்பது!

பிரம்மாண்டமான மாநாடுகளைக் கூட்டுவது—

நீண்ட நெடிய, பல இலட்சக் கணக்கான தோழர்களைக் கொண்ட ஊர்வலங்களை நடத்துவது—

ஊர்வலங்களில் வெறும் கொடி பிடித்து நடப்பது என்றில்

லாமல், கருத்துப் படங்கள்--
கருத்து விளக்க நடிப்புக் காட்சிகளை அமைப்பது—

மக்களைக் கவரும் வகையில், சின்னஞ் சிறு வார்த்தைகளால்--அடுக்குத் தொடராக முழக்கங்களை அமைத்து முழக்குவது—

வரவேற்பு வளைவுகள் அமைப்பது; அதிலேயும் புதிய பாணி—

என்று எல்லாவற்றிலும் முன்னோடியாக--முதன் முதல் செய்வது என்றெல்லாம்கூட, 'உலகப் பெருமை' நமக்கு உண்டு!

இப்போது நடைபெறுகின்ற கோவை பொது மாநாடுவரை நாம் நடத்திய மாநாடுகள் நூற்றுக்கு மேற்பட்டவை!

இதுபோன்று, குறுகிய காலத்தில் இத்தனை மாநாடுகளைக் கண்ட ஒரு இயக்கம் உலகிலேயே நமது தி. மு. கழகம் ஒன்று மட்டுமே!

இதைக் கூறும்போது, கழகத்திலுள்ள இன்றையத் தலைமுறையினருக்கு ஆச்சரியமாக இருக்கும்—'நூறு மாநாடுகளா தி. மு. கழகம் நடத்தியிருக்கிறது' என்று! ஆம்; நிச்சயமாகக் கூற முடியும்—'நூற்றுக்கு மேற்பட்ட மாநாடுகளை நாம் நடத்தி முடித்துள்ளோம்' என்று!

இந்த மாநாடுகள் அனைத்தும், 'கூடினோம்—பேசினோம்—கலைந்தோம்' என்று இல்லாமல்—ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல—'மாநாட்டிற்கு வந்து கொள்கை முழக்கங்களைச் செவிமடுத்தவர்கள், அவற்றைத் தாங்கள் தெரிந்து கொண்டால் மட்டும் போதும் என்று நினைக்காமல், தாங்கள் கேட்டவற்றை, ஊரிலுள்ள தாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் விளக்கிக் கூறிடும் அளவுக்கு இயக்கப் பணியாற்றிடும்--கொள்கைகளைத் தாங்கிச் செல்லும் திருத்தூதுவர்கள்' என்று குறிப்பிட்டாரே—அப்படி அமைந்த மாநாடுகளாகும்.

ஒவ்வொரு மாநாடும் ஒவ்வொரு தனிச் சிறப்புடன் அமைந்தவையாகும்; அவற்றைப் பற்றி எழுத வேண்டுமானால், கழகம் துவக்கப்பட்ட பின்னர், முதன் முதல் கூடிய திருச்சி மாவட்ட மாநாடு முதல் கடைசியாகக் கடந்த 22, 23—11—75-இல் நடந்த குமரி மாவட்ட மாநாட்டின் சிறப்புவரை கூற வேண்டும்.

எனக்கேற்பட்ட சூழ்நிலைகளின் காரணமாகக் கலந்து கொள்ள முடியாத--விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில மாநாடுகளைத் தவிர--மற்றெல்லா மாநாடுகளுக்கும் நான் சென்றுள்ளேன்.

மாநாடு துவக்கப்படுவதற்கு முதல் நாள் சென்று -- மாநாடு முடிந்த மறுநாள்வரை இருந்து--மாநாட்டின் எழிலைக் கண்டு களித்து, அங்கே வழங்கப்பட்ட கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

இதுவரை நடந்த மாநாடுகளில் மிக மிகச் சிறப்புக் கொண்ட மாநாடுகள் பற்றிக் கோவை மாநகரிலே 5-ஆவது மாநிலப் பொது மாநாடு நடைபெறும் இவ் வேளையிலே நினைவுபடுத்திக்கொள்வது, நமது வளர்ச்சிக்கு எழுச்சி கூட்டுவதாகவே அமையும்.

அந்த வகையிலே, நமது கழகம் துவக்கப்பட்ட பின்னர், 1—1—1950-இல், திருச்சி மாநகரிலே முதல் மாநாடு நடைபெற்றது.

அம் மாநாட்டின் தலைவர்—திரு ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள்; திறப்பாளர்—பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள்.

மாநாடு, 'சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது' என்று கூறினால் போதாது; கழகம் துவக்கப்பட்டு மூன்றரை மாதக் குழந்தையாகத் தவழும் நேரத்தில் கூடிய இம் மாநாடு முடிந்த மறு வாரத்தில், மாநாட்டுச் சிறப்புப் பற்றி 'திராவிட நாடு' இதழில் எழுதிய அண்ணா அவர்கள், "திருச்சி மாவட்ட மாநாடு, மாவட்ட மாநாடல்ல--மாநில மாநாடு' எனத்தகும் வகையிலே இருந்தது" என்று குறிப்பிட்டு எழுதினர் எனில், மாநாட்டுச் சிறப்புக் குறித்துத் தனியாக வேறென்ன கூறிட இயலும்?

இந்தத் திருச்சி மாவட்ட மாநாடு முதல் கடைசியாக நடைபெற்ற நாகர்கோவில் மாநாடு ஈருக—நான் கட்டுரைத் துவக்கத்தில் கூறியபடி—நூற்றுக்கு மேற்பட்ட மாநாடுகளை நடத்தியுள்ளோம் என்றால் வியப்படையும் இளைஞர்களுக்குச் சிறு 'கணக்கு' ஒன்றினைக் காட்டிட விழைகிறேன்.

# முதல் மாவட்ட மாநாடுகள்

திருச்சி மாவட்டம்—திருச்சியில்;

சென்னை மாவட்டம்—சென்னையில்;

கோவை மாவட்டம்—கணியூரில்;

வடாற்காடு மாவட்டம்—ஆரணியில்;

மதுரை மாவட்டம்—சோழவந்தானில்;

தென்னாற்காடு மாவட்டம்—குறிஞ்சிப்பாடியில்;

தஞ்சை மாவட்டம்—மாயூரத்தில்;

நெல்லை மாவட்டம்—கோவில்பட்டியில்;

சேலம் மாவட்டம்—சேலத்தில்;

முகவை மாவட்டம்—சிவகெங்கையில்;

நாஞ்சில் மாவட்டம்—நாகர்கோவிலில்:

செங்கை மாவட்டம்—காஞ்சிபுரத்தில்;

எனும் வகையில் நடைபெற்றன.

# 5-வது மாவட்ட மாநாடுகள்

திருச்சி மாவட்டம்—திருச்சி.

வடாற்காடு மாவட்டம்—வேலூர்.

முகவை மாவட்டம்—இராசபாளையம்.

செங்கை மாவட்டம்—காஞ்சிபுரம்.

தஞ்சை மாவட்டம்—மன்னார்குடி

நீலகிரி மாவட்டம்—நீலகிரி

தர்மபுரி மாவட்டம்—தர்மபுரி

மதுரை மாவட்டம்—மதுரை

தென்னாற்காடு மாவட்டம்—விழுப்புரம்

நெல்லை மாவட்டம்—நெல்லை

சேலம் மாவட்டம்—சேலம்

புதுக்கோட்டை மாவட்டம்—அறந்தாங்கி.

குமரி மாவட்டம்—நாகர்கோவில்.

[தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள், அண்மையில் தோன்றிய மாவட்டங்களானாலும், கடைசிச் சுற்றில் நடைபெற்ற மாநாடுகள் என்ற வகையில் குறித்துள்ளேன்; குமரி மாவட்டத்தில் மூன்று மாநாடுகள் மட்டுமே நடந்துள்ளன.]

முதல் மாவட்ட மாநாடுகளை 12 மாவட்டங்களிலும், 5-ஆவது மாவட்ட மாநாடுகளை 13 மாவட்டங்களிலும் நடத்தியுள்ளோம்!

2-ஆவது, 3-ஆவது, 4-ஆவது மாவட்ட மாநாடுகள் என்று கணக்கிட்டால், 75 மாநாடுகளுக்கு மேல் நடத்தியுள்ளோம்!

இவை, தவிர கோவையில்—காரைக்காலில்—முத்தமிழ் மாநாடுகள்!

பல ஊர்களில் சமுதாயச் சீர்திருத்த மாநாடுகள்!

பொதட்டூர்பேட்டையில் நடத்திய ஆந்திர மாநில மாநாடு!

புதுவையில் நடத்திய மாநாடுகள்!

பெங்களூரில் நடைபெற்ற இரு கருநாடக மாநில மாநாடுகள்!

பம்பாயில் நடந்த மராட்டிய மாநில தி.மு.க. மாநாடு!

பேச்சுரிமை—எழுத்துரிமை--வகுப்புரிமை மாநாடுகள்!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடுகள்!

என்றெல்லாம் பலப் பல!

"தேர்தல் சிறப்பு மாநாடுகள்" என்று சில!

சென்னை அண்ணா நகரில் கூடிய மாநில சுயாட்சி மாநாடு—இந்தி எதிர்ப்பு மாநாடுகள்!

15, 16—11—75-இல் மதுரையில் நடந்த மாநில மகளிர் மாநாடு!

மாநிலப் பொது மாநாடுகள் நான்கு—சென்னை, திருச்சி, மதுரை, சென்னை—ஆகிய இடங்களில்!

இவை தவிர, தொழிலாளர்கள், விவசாயிகள் சம்பந்தப்பட்ட மாநாடுகள்!

இப்படி அனைத்தையும் முறையாகத் தொகுத்துப் பார்த்தால், நூற்றுக்கு மேற்பட்ட மாநாடுகளை நாம் கூட்டிவிட்டுத்தான் இன்று கோவையிலே 5-ஆவது மாநிலப் பொது மாநாட்டினைக் கூட்டுகிறோம்!

இதுபோல, 'அரசியல்' என்ற தலைப்பில் மட்டுமல்லாது, சமுதாயத்தின் உயர்வுக்கான பல்வேறு தலைப்புக்களில்—குறுகிய இந்த இருபத்தாறாண்டுக் காலத்தில், 'இவ்வளவு மாநாடுகள் கூட்டிய ஒரு கட்சி இந்தியத் துணைக் கண்டத்தில்—ஏன்—இந்த உலகிலேயே வேறெந்தக் கட்சியாவது உண்டா?' என்ற கேள்விக்கு எவராலும் பதிலிறுத்திட முடியாது! இதுவும், நமது கழகம் அடையும் 'உலகப் பெருமை'தான்!

அம்மட்டோ? உலகமே கண்டு வியந்து பாராட்டியதே

கொங்குவள நாட்டில் தங்கநிகர் தலைவர்--
தமிழக முதல்வர் தலைமை ஏற்கும்
இம்மாநில மாநாடு சிறந்திட எங்கள்
இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

★

**எஸ். ஆர். சென்னியப்பன்,**
தலைவர்.

**கம்பளியம்பட்டி கூட்டுறவு**
**பிரதம நிலவள வங்கி**

கம்பளியம்பட்டி அஞ்சல்,
(வழி) விஜயமங்கலம்,
ஈரோடு வட்டம்.



இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு—அவ்விழா, தமிழக அரசின் சார்பிலே கொண்டாடப் பட்டாலும், கழகம் ஏற்றுக் கொண்ட அரசு அல்லவா அதனைக் கொண்டாடியது?

அவ்விழாவின் சிறப்புக்கு அண்ணா அவர்களின் சிந்தனைத் திறமும், கலைஞர் அவர்களின் செயல் திறமும்தான் ஆதாரமாக விளங்கியது என்பதை எவரே மறுக்க முடியும்?

அந்த வகையிலே, உலகமே பாராட்டிய உலகத் தமிழ் மாநாட்டினை நாம் நடத்தியதும் நமக்குக் கிடைத்த 'உலகப் பெருமை'தானே!

திருச்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் மாவட்ட மாநாடு சிறிய அளவில் ஒரே ஒரு நாள் கூடியிருந்தாலும், அங்கே வருகை தந்த தோழர்களின் எண்ணிக்கையினையும்--உணர்ச்சியையும்--உத்வேகத்தையும் கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்த மாநாட்டையே, 'மாவட்ட மாநாடல்ல—மாநில மாநாடு' என்று குறிப்பிட்டாரெனில், அதன் பின்னர் நாம் நடத்திய மாநாடுகளை, 'அனைத்திந்திய மாநாடு' என்பதா?

தற்போது நாம் நடத்தவிருக்கும் கோவை மாநில மாநாட்டை, 'அனைத்துலக மாநாடு' எனக் குறிக்கலாம் அல்லவா?

இத்தகு எழுச்சியும்--ஏற்றமும் இந்த 'உலகிலேயே' நமக்கு மட்டும் எப்படி ஏற்பட்டது?

நாம் கொண்ட இலட்சியமும்—அந்த இலட்சியப் பயணத்திலே வீர நடை போடும் ஆற்றல் மிக்க தொண்டர்தம் அணிவகுப்பும் நாம் பெற்றதால்தான், இத்தரணியில் இவ்வளவு ஏற்றம் பெற்றேம்!

ஆரம்ப காலம் முதல் நமது இயக்கத் தொண்டர்கள் ஏற்ற கொள்கைபால் கொண்ட இலட்சியப் பற்று—அல்ல—'வெறி', தாங்கள் எவ்வளவுதான் ஏதுமற்றவர்களாக இருப்பினும்—வயிற்றுக்குச் சோறில்லாவிடினும்கூட, கழக மாநாட்டுக்குத் தோரணம் கட்டிட—வரவேற்பு வளைவுகள் வகை வகையாய் அமைத்திட—கையிலே உள்ள காசுகளை 'டீ'கூடக் குடிக்காமல், உணர்வால் உந்தப் பெற்று, மாற்றாரும் போற்றிடும் வண்ணம் எழிலைக் கூட்டினர்--கழகத்திற்கு ஏற்றத்தினைப் பெற்றுத் தந்தனர்--மக்கள் மத்தியில்!

நான் பல மாநாடுகளிலே கண்டு மனநெகிழ்ச்சியடைந்துள்ளேன்—போக்குவரத்துச் செலவுகளுக்காக மட்டும் பணத்தை எடுத்துக் கொண்டு, மாநாட்டில் கலந்து கொண்டு, மீதமுள்ள சிறதொகையில் சிறு உணவு ஏற்றும்--சில நேரங்களில் உணவில்லாமலும்கூட மாநாட்டுப் பந்தலிலேயே படுத்துறங்கி மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் குடும்பம் குடும்பமாகப் பங்கேற்றிடுவர் நமது தோழர்கள்!

அதுமட்டுமல்ல; சிறிது வசதி படைத்த நமது தோழர்கள், 'வசதியற்ற மற்ற தோழர்களும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும்--கருத்துரைகளைக் கேட்டிட வேண்டும்' என்ற கருத்து கொண்டு, அவர்களையும் அழைத்துக் கொண்டு வரும் 'பாசப் பிணைப்பு' இருக்கிறதே—இலட்சியப் பற்றுடன் கூடிய பாசப்பிணைப்பு—அது, கண்டு--உணர்ந்து--உணர்ச்சியுடன் உளம் நெகிழ வேண்டிய காட்சிகள்!

ஆனால் இன்றும், மாநாடுகளில் அதே தன்மைகளோடும்--உணர்வுகளோடும் நாம் கூடினாலும், குடும்பத்தோடு கலந்து கொள்ள வேண்டும்' என்ற எண்ணமும் உணர்வும், நம் தோழர்கள் அனைவரும் முன்பைவிட அதிகமாகப் பெற்றிட வேண்டிய தருணமாகும் இது!

இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டியது--நினைத்துப் பார்க்க வேண்டியது நமது கடமையாகும்.

இந்தக் 'குடும்ப உணர்வு' நாம் பெற்றிட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தமது துணைவியாருடனும்--இல்லத்தாருடனும் ஒவ்வொரு மாநாட்டிலும் கலந்து கொள்கிறார் என்பதும், அடக்கமே உருவான கலைஞரின் துணைவியார் மாநாட்டுப் பந்தலின் மணற்பரப்பிலே ஏனைய சகோதரிகளுடன் அமர்ந்து--கழக முன்னணியினரின் உரைகளைக் கேட்டிடுவதும், 'அந்தப் பாங்கினை நாமும் பெற்றாக வேண்டும்' என்பதற்காகத்தான் என்று நான் கருதுகிறேன்.

தலைவன் எவ்வழி—அவ்வழி நம்வழியல்லவா?

மாநாடுகளில் நாம் கலந்து கொள்ளும் மாட்சியினைப் பற்றியும், நமது குடும்பப் பாசத்தைப் பற்றியும், நமது பொதுச் செயலாளர்—நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் அவர்கள்—



அவருக்கே உரித்தான அழகு தமிழில், 'நமது குடும்பம்' எனும் தலைப்பில் அளித்துள்ள கருத்துக்களை இந் நேரத்தில் நமது சிந்தையிலே செதுக்கிக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.

அவர் தமது 'மன்றம்' ஏட்டில் எழுதியதாவது:—

"மாநாடோ, பொதுக்குழுவோ நடக்கப் போகிறதென்றால், ஏதோ நம் குடும்பத்தில் நடக்கவிருக்கும் விழாவாக--மகிழ்ச்சி தரும் நன்னாளாக எண்ணியே ஒவ்வொருவரும் பூரிப்புடனும், ஆர்வத்துடனும் பணியாற்றினார்கள்.

அவர்களுடைய அன்பு கலந்த அழைப்பே — வருவோருக்கு ஒளி வீசிடும் வரவேற்பு வளைவாயிற்று!

மகிழ்ச்சி தரும் முகமே—எழுத வொண்ணாத வரவேற்பு இதழாயிற்று!

ஆர்வமொழியே — தெவிட்டாத அமுதாயிற்று!

ஒவ்வொரு மாநாடும், குடும்பத்தினர் கூடிப் பிரியும் இடமாக இருந்தது!

"மாநாட்டுக்குச் சென்றால் காஞ்சி அண்ணனைச் சந்திக்கலாம்; ஆரூர்த் தம்பி அங்கே வந்திருப்பான்; கோவைக் குமரனும், தூத்துக்குடிக் குருசிலும், சேலம் செம்மலும், திருச்சிச் செல்வமும், மதுரை நம்பியும், சென்னை இளவலும் — இவ்வளவு பேர்களும் வந்திருப்பார்கள்; ஒருங்கே கண்டு உறவாடலாம்; இனி நடப்பதற்கான திட்டங்கள் வகுக்கலாம்' என்று எண்ணியபடி வருவோர் பலர்!

மாநாடுகளில் நிறைந்திருக்கும் இந்த மாபெரும் குடும்பத்தைக் காணும்பொழுது, இதயத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்; நினைக்கும் பொழுது, நெஞ்சில் உரனும்--புதிய வலிவும் உண்டாகும்!

இவ்வளவுக்கும் நமது மாநாடுகளில் வருவோருக்கு வேண்டிய வசதிகள் சில சமயங்களில் செய்யக் கூடுவதில்லை; அதற்கு நமக்கு இருக்கும் வளமும் குறைவானது; வருவோர் தொகையும் அளவு கடந்தது; எதிர்பாராமல் மழை பெய்துவிட்டால், கூடி இருக்கும் இடம் சேறும் சகதியுமாகிவிடும்: அதில் அமர்ந்துதான் மேற்கொண்டு நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டும்.

கட்டுச்சோற்றுடன் வந்து — இடைவேளையில் மற்றத் தோழர்களுடன் தாம் கொண்டு வந்திருக்கும் உணவைப் பகிர்ந்து கொள்ளும் குடும்பங்கள் எத்தனை எத்தனை? அந்தக் காட்சி, செட்டிநாட்டு வேந்தர் தரும் சிங்கார விருந்தைவிட--ஓர் ஆலையரசர் தரும் தேநீர்க் கச்சேரியைவிட-இன்பமாகவன்றே இருந்தது!

மாநாடு நடக்கும்பொழுது, ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளும் பரிவும், பண்பாடும், 'உதவி' என்றதும் ஓடோடி வந்து பணி புரியும தோழர்கள் — அழுகின்ற குழந்தையை முத்தமிட்டுத் தூங்க வைக்க முயலும் தாய்மார்—இவர்கள் எவ்வளவு பெருந்தகையினராக நம் மாநாடுகளில் குழுமியிருக்கக் காணுகிறேம்!

அதிலும்—இரவில் மாநாடு நிகழ்ச்சி முடிந்ததும்—அப்படியே மாநாட்டுப் பந்தலிலோ, வெளியில் வயற்புறத்திலோ, கையையே தலையணையாகக் கொண்டு--நிலவு வெளியில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் உறங்கிடும் காட்சி!

இவ்வளவு கஷ்ட நஷ்டங்களை ஏன் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்? கொள்கையிலே

உள்ள பற்று — அதைவிட நம் குடும்பத்திலே நிலவும் பாசம்— இவைதாம் காரணம்!''

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவதாண்டுத் துவக்க நாளின்போது, நமது நாவலர் எழுதிய மணி வாசகங்கள் இவை!

இத்தகு நமது குடும்ப விழாக்களை--கழக மாநாடுகளை அமைத்திட நமது தோழர்கள் ஏற்ற இன்னல்கள் ஆயிரமாயிரம்!

அப்படி ஏற்றுக் கொண்ட இன்னல்களே, ''அம் மாநாடுகளின் சிறப்புக்களாக மாறின'' எனில், அது மிகையன்று!

அத்தகு சிறப்புக்களை இந்நேரத்தில் நினைவுகூர்கிறேன். நமது தோழர்களின் செயல் திறன்—அன்றையத்தினம் எத்தகைய சீர்மை பெற்று விளங்கிற்று என்பதை நினைத்தால்— அடடா — 'வீர மறவர்களின் கோட்டம் நமது கழகம்' என்று அண்ணா கூறுவாரே — அந்த வார்த்தைகளுக்கு எடுத்துக்காட்டுகள்தான் ஒவ்வொரு நிகழ்ச்சியும்!

குறிஞ்சிப்பாடியில்—தென்னாற்காடு மாவட்ட முதல் மாநாடு; கொள்கைக் குன்று--'கருப்புத் துரை' -- மறைந்துவிட்ட திரு. இரெ. இளம்வழுதியின் தலைமையில் கழகக் கண்மணிகள் பதினைந்து நாட்களுக்கும் மேலாகப் பாடுபட்டு மாநாட்டுப் பந்தலை எழிலுற அமைக்கின்றனர்!

பந்தல் அமைக்கும் இடம், தனியார் ஒருவருக்கு உரிமையானது; என்ன காரணத்தாலோ, அந்த நிலச் சொந்தக்காரருக்கும் — இளம்வழுதி அவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது!

நிலச் சொந்தக்காரர், ஏதோ 'தகாதது' கூறிவிட்டார் போலிருக்கிறது; அவ்வளவுதான்; சுயமரியாதைச் சுடரொளியில் சொக்கத் தங்கமாக விளங்கிய இளம்வழுதி அவர்களுக்குச் 'சூடு' பிறந்துவிட்டது!

கூப்பிட்டார்—பந்தல் அமைப்பாளரை; 'இன்று இரவுக்குள், போட்டு முடிக்கப்பட்ட இந்தப் பந்தல் முழுதும் பிரிக்கப்பட வேண்டும்; நான் வேறு இடத்தினைச் சற்று நேரத்தில் குறிப்பிடுகிறேன்; அந்த இடத்தில் பந்தலை, இதைவிடப் பெரிதாக அமைக்க வேண்டும்' என்றார்.

பந்தல் அமைப்பாளர், 'எப்படி முடியும்' எனத் தயங்கினர்; 'அதற்கான அதிக வேலையாட்கள் இல்லையே' என்றார்.

''எவ்வளவு ஆட்கள் வேண்டுமோ அவ்வளவு பேரையும் தருவதாக''க் கூறினர் இளம்வழுதி!

ஒப்புக் கொண்டார்—பந்தல் அமைப்பாளர்!

வெளியே புறப்பட்டார்— இளம்வழுதி!

சிறிது நேரத்தில் திரும்பி வந்து ஒரு குறிப்பிட்ட இடத்தைக் கூறி, அங்கே பந்தலை அமைக்குமாறு கூறினர்.

அன்று இரவே சுற்றிலுமுள்ள கிராமங்களில் இருக்கின்ற கழகத் தோழர்களுக்கும் சொல்லி அனுப்பி--ஆட்களை வரவழைத்து விட்டார்!

மாநாடு நடைபெற மூன்று நாட்கள்தான் இருந்தன; அதற்குள் பந்தல் அமைய வேண்டும்; அதுவும், இதற்குமுன் போடப்பட்ட பந்தலைவிட எழிலாகவும் --பெரியதாகவும் அமைய வேண்டும்!

பணி தொடங்கப்பட்டது -- முடிக்கப்பட்டது!

இன்றுகூட நினைத்துப் பார்த்தால் உடம்பு புல்லரிக்கிறது! எவ்வளவு பெரிய சாதனை!

அதுமட்டுமல்ல; சென்னை மாவட்டத்தின் முதல் மாவட்ட மாநாடு, இன்று மிருகக் காட்சிச் சாலை இருக்கும் இடத்திற்குப் பின்புறம் நடந்தது.

அந்த இடத்தில், ஏற்கனவே ஆர். எஸ். எஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தமது அணி வகுப்புப் பயிற்சியினை நாள்தோறும் நடத்திக் கொண்டிருப்பார்கள்; அந்த இடத்தில் மாநாடு கூடுவதால் அவர்களுக்கு ஆத்திரம்!

சேலம் மாவட்ட முதல் மாநாடு, இரு நாட்கள் சேலம் மாநகரிலே!

முதல் நாள் காலை, மாநாடு துவங்கியது; பெரு மழையும் -- காற்றும் ஒன்று சேர்ந்தன; மேடையும் -- பந்தலும் சரிந்தன; பந்தல் முழுதும் சேறும் சகதியுமாகிவிட்டது!

உடனே மாநாடு, பந்தலை அடுத்திருந்த திறந்த வெளியில் பிற்பகல் நிகழ்ச்சிகளுடன் தொடங்கிவிட்டது!

''மேடை சரிந்துவிட்டதால், இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெறாது'' என்றே அனைவரும் கருதினர்; ஆனால், கழகத் தோழர்ககளில் ஒரு பகுதியினர், சரிந்த பந்தலையும் -- மேடையையும் தூக்கி நிறுத்தும் பணியில் ஈடுபட்டனர்!

சேறும் சகதியுமாக இருந்த தரை, மீண்டும், அனைவரும் உட்காரத்தக்க அளவில் சீர்படுத்தப்பட்டது.

சீர்படுத்தப்பட்ட -- செப்பனிட்ட பழைய மேடையிலேயே கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன!

எழுத்திலே படிப்பதற்கு இது மிகச் சாதாரணமாகத் தோன்றலாம்; ஆனால், ஒரு வினாடி எண்ணிப் பாருங்கள்—முற்றிலும் சரிந்துவிட்ட பந்தலையும் மேடையையும் மீண்டும் தூக்கி நிறுத்திச் சீர்செய்ய எவ்வளவு பெரிய உழைப்பு நல்கி, எவ்வளவு வேகத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும் என்பதனை!

இந்த நிகழ்ச்சியுடன், அண்மையில் நடைபெற்ற சேலம் மாவட்ட ஐந்தாவது மாநாட்டு நிகழ்ச்சியினை ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

மாநாட்டின் இரண்டாம் நாள் மாலை 4-மணியளவில் பலத்த மழை பெய்யத் தொடங்கி இரவு ஏழு மணியளவில்தான் நின்றது; பந்தல், சேறும் சகதியுமாக ஆகிவிட்டது; மக்கள் ஒதுங்க இடமின்றி நனைந்து கொண்டே நின்றனர்!

ஏன்? மாநாட்டின் இறுதியிலே அண்ணா நிகழ்த்திடும் உரையினைக் கேட்டிடக் கொட்டும் மழையாயினும் கலைந்திடாமல் அன்று நாம் இருந்தது போலவே, இன்றும், மாநாட்டின் இறுதியில் கழகத் தலைவரின் கட்டளை எதுவென அறியக் கலையாமல் கூடி நின்றனர்!

அந்த உணர்வு—இருபத்தைந்தாண்டுகளுக்குமுன் சேலம் மாநாட்டில் கொண்டிருந்த உறுதியும் கட்டுப்பாடும்—இன்னும் தொடர்ந்து நம்மிடையே நிலவி வருவதால்தான், நமது இயக்


தொலைபேசி : 22889 தந்தி : "கோபிரஸ்"

# கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம் லிமிடெட், கே. 678

8/450, திருச்சி ரோடு, தபால் பை நெ. 3829 கோயமுத்தூர்-641018.

தலைவர் :
**திரு. எம். எஸ். தேவசகாயம்**

துணைத் தலைவர் :
**திரு. ஈ. ஆர். குமாரசாமி**

மாநிலத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேவையான புத்தகங்கள்--பாரங்கள் முதலியனவும், அச்சியற்றல் மற்றும் பைண்டிங் தொடர்பான அனைத்து வேலைகளும், குறிப்பாகத் திருமண அழைப்பிதழ்கள்- ஆண்டு அறிக்கைகள்--விழா மலர்கள்--எல்லா நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் அவர்கள் தேவைக்கேற்ப செய்து தரப்படுகின்றது; தவிரவும், அலங்காரங்களுக்குத் தேவையான எல்லா விதமான எழுதுபொருட்களும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

★ மாநிலம் முழுவதிலும் உள்ள அச்சுக்கூடங்களிலும் சிறந்த அச்சுக்கூடம் எனப் புகழ் பெற்றது.

★ எல்லாவிதமான ரப்பர் ஸ்டாம்புகளும் தேவைக்கேற்பத் தயார் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**கே. மாரப்பன்,** எம்.ஏ.,
செயலாளர்.

கத்தை—நாவலர் நவில்வது போல—'எந்தக் கொம்பனாலும்' சாய்த்துவிட முடியவில்லை!

நாம் நடத்திய மாநாடுகளிலே திருச்சி மாநாடுகளுக்கு மட்டும் ஒரு தனிச் சிறப்பு இருக்கத் தான் செய்கிறது!

நமது கழகம் தொடங்கியதும் நடைபெற்ற முதல் மாநாடு—திருச்சியிலே!

நமது அண்ணன் மறைவுக்குப் பிறகு, மாண்புமிகு கலைஞர் தலைமையேற்றதும் நடைபெற்ற முதல் மாநாடும் திருச்சியிலே தான்!

இப்போதாவது அண்ணா மறைந்துவிட்டார்—அவர் இல்லாமல் முதன் முறையாகக் கழக மாநாடு திருச்சியிலே நடந்தது!

ஆனால், அண்ணா அவர்கள் இருந்தபோதே ஒருமுறை—அவர் இல்லாமல் மாநாடு நடைபெற வேண்டிய நிலை ஏற்பட்டது; கடைசி நேரத்தில் அண்ணா அவர்கள் வந்து கலந்து கொண்டார்!

முகவை மாவட்டத்தின் முதல் மாநாடு சிவகெங்கையில் கூடிய போது, 'ஆரிய மாயை' எழுதிய



தற்காக அண்ணா அவர்கள் தண்டிக்கப்பட்டுவிட்டார்கள்; அண்ணா இல்லாமலேயே மாநாடு நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது!

''அண்ணா இல்லாமலா மாநாடு?'' என ஆயிரமாயிரம் தம்பிமார்கள் சிந்தை நோக--விழிநீர் பெருகிட--கண்களிலே ஏக்கம் தொனிக்க--செய்வதறியாது கூடத் தொடங்கினர்—சிவகெங்கையில்!

திடீரென்று அரசினர், அண்ணாவை விடுதலை செய்துவிட்டனர்!

சனிக்கிழமை மாலை திருச்சியிலே நடந்த வரவேற்புப் பொதுக் கூட்டத்திலே கலந்து கொண்டு, அன்று இரவே புறப்பட்டு--மறுநாள் காலை ஞாயிறு அன்று மாநாட்டில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டார்.

மகிழ்ச்சிக் கூத்தாடின—தம்பிமார் உள்ளங்கள்!

அதுமட்டுமல்ல; ஓய்வு எடுக்கும் எண்ணம் சிறிதுமின்றி அண்ணா அவர்கள்' 'தம்பியர் தம் மகிழ்ச்சியே தனது பணி' என எண்ணி, அன்று நடைபெறவிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். நாடகத்தினை நிறுத்திவிட்டு, கே. ஆர். ஆர். அவர்களுடன் இணைந்து அண்ணா அவர்கள், தமது 'சந்திரமோகன்' நாடகத்தில் நடித்தார்!

மேலும், அண்ணாவுக்குப்பின் கலைஞர் தலைமை தாங்கி நடத்திய திருச்சி மாவட்ட ஐந்தாவது மாநாடு—'அண்ணா இல்லையே' என்ற எண்ணத்தை நமக்கு ஏற்படுத்திடினும், 'அண்ணா அமைத்த கழகம், அண்ணாவுக்குப் பின் துவளவில்லை--தொய்வடையவில்லை' எனக் குவலயத்துக்கு அறிவித்த மாநாடாக இருந்தது!

அதுமட்டுமல்ல; நமது இலட்சியப் பயணத்தில், நமது கொள்கைகளை வார்த்தெடுத்து--ஐம்பெரும் முழக்கங்களை அழகுத் தமிழில் தந்தார்—கலைஞர்!

இந்தத் திருச்சி மாநாடு சனி--ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெற்றாலும், வெள்ளியன்று நடைபெற்ற ஊர்வலம், நமது கழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க ஒன்றாகும்.

வெள்ளி மாலை 5-மணிக்குச் சிந்தாமணியில் புறப்பட்ட ஊர்வலம், மாநாட்டுத் திடலை அடைய இரவு மணி இரண்டு ஆயிற்று!

அந்த நள்ளிரவில்—இரண்டு மணிவரை—பொதுமக்கள் ஊர்வலச் சிறப்புக் காணத் திரள் திரளாகக் குழுமி நின்ற காட்சியும், ஊர்வலம் முடிந்தும் கழகத் தோழர்களும் -- மக்களும், நகரெங்கும் அமைக்கப்பட்டிருந்த வரவேற்பு வளைவுகளையும், மின் அலங்கார வளைவுகளையும் கண்டு களித்திட அன்று இரவெல்லாம் திருச்சி மாநகரின் தெருக்களிலே உறங்காமல் 'உலா' வந்த காட்சியும், என்றைக்கும் எவருடைய நெஞ்சத்தையும் விட்டு நீங்காத நினைவுகள் ஆகும்!

மாநாட்டினையொட்டிய வரவேற்பு வளைவுகளிலேயே ஒன்றினைக் குறிப்பிட வேண்டும்; திருச்சி கடை வீதிக்கு அருகில்—என்னென்ன வகையான காய்கறிகள் உண்டோ அவ்வளவு காய்கறிகளையும் கொண்டு 'காய்கறி வளைவு' ஒன்றை அமைத்திருந்தனர்—நம் கழகத் தோழர்கள்! காய்கறிகளாலும் வளைவு கட்டிய மாட்சி, பாராட்டத் தகுந்ததாகும்!

இவ்வாறு, 'மாநாடுகள்' என்று ஒவ்வொரு மாநாட்டுச் சிறப்பையும் வியந்து வியந்து எழுதினால், ஏடு கொள்ளாது!

நாம் நடத்திய ஒவ்வொரு மாநாடும், ஒரு புதிய வரலாற்றைப் படைப்பதாகவும்--புதிய செயல் திட்டத்தை உருவாக்குவதாகவும் அமைந்திருந்தன!

முதல் மாநில மாநாடு சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் கூடியது; அந்த மாநாட்டில்தான்—1952-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது—நமது கொள்கைகளைச் சட்டமன்றத்தில் முழக்கும் வேட்பாளர்களை நாம் ஆதரிப்பதென முடிவெடுத்து—அவ்வாறு நாம் ஆதரித்த வேட்பாளர்களில் பெரும்பான்மையோரை வெற்றி பெறச் செய்தோம்!

1956-இல் திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டில்தான், 'நாம் தேர்தலில் நிற்கலாமா -- வேண்டாமா' என்று சனநாயக முறையில் கழகத் தோழர்களிடம் ஓட்டெடுப்பு நடத்தி—தேர்தலில் நிற்பதென முடிவெடுத்தோம்.

1957 தேர்தலில் 15 சட்டமன்ற உறுப்பினர்களையும், 2 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பெற்றோம்!


முத்தமிழ்க் காவலர் முதல்வர் கலைஞர்
தலைமை ஏற்கும் இம்மாநில மாநாடு
நானிலம் போற்றிட
எங்கள் வாழ்த்துக்கள்!

★

துவக்கம்: 1930 தொலைபேசி: 265

# சூலூர் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி

எண்: கே. 636 சூலூர் (வரையறுக்கப்பட்டது)

தலைவர்: ஆர். சி. கந்தசாமி
துணைத் தலைவர்: எம். பழனிசாமி
செயலர்: எஸ். வேலுசாமி


1961-இல், மதுரை—திருப்பரங்குன்றத்தில் நடந்த மூன்றாவது மாநில மாநாடு, கழக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது!

அந்த நேரத்தில்தான், நமது கழகத்திலிருந்து பிரிந்த துரோகிகள் சிலர், 'தி. மு. கழகம் அழிந்துவிட்டது' என்று வெற்றுப் பறையினை முழக்கிக் கொண்டிருந்தனர்!

அந்தப் பறையினைக் கிழித்துக் காட்டி, 'சருகுகள் உதிர்ந்ததால் மரம் பட்டுவிடாது' என்ற உறுதியைக் காட்டியது—திருப்பரங்குன்றம் மாநாடு!

அம் மாநாட்டில் அண்ணாவும்--கலைஞரும், கழக முன்னணியினரும் ஆற்றிய வீர உரைகள், நமது தோழர்களின் ஆற்றலை அவர்களுக்கே உணர்த்திக் காட்டி, 1962 பொதுத் தேர்தலில் துரோகிகள் எவரும் வெற்றி பெறாத அளவுக்கு உரமூட்டி அனுப்பிய மாநாடு—50 சட்டமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அடைந்திட வைத்த மாநாடு!

1967-இல் சென்னை விருகம்பாக்கத்தில் கூடிய நான்காவது மாநில மாநாடு, இருபதாண்டுக் கால காங்கிரசு ஆட்சியினை ஒதுக்கிவிட்டு, நம் கரங்களில் மக்கள் ஆட்சியினை வழங்க முனைந்த மாநாடு!

இப்போது கோவையில் ஐந்தாவது மாநில மாநாடு--கலைஞர் தலைமையில் கூடுகிறது!

நம் இதயத்துச் சுடர் -- அண்ணா இல்லாமல் கூடிடும் முதல் மாநில மாநாடு இது!

கலைஞர் தலைமையேற்று இந்த ஐந்தாவது மாநில மாநாட்டினை நடத்திடும் வேளையில், இருபத்தைந்தாண்டுகளுக்குமுன் கோவில்பட்டியில் கூடிய நெல்லை மாவட்ட மாநாட்டில் தொண்டராக விளங்கிய கலைஞர், முதன் முதல் மாநாட்டுத் தலைமையேற்று ஆற்றிய உரை நினைவுக்கு வருகிறது:—

''நெல்லை மாவட்டத்தின் மாநாட்டிலே தலைமை தாங்கும் பெரும் பொறுப்பை எனக்கு அளித்த மாவட்டக் கழகத்தினருக்கு நன்றி......

'என் போன்றவர்களுக்கு இந்தச் சிறப்பு வழங்கப்படுவதன் நோக்கம், 'இயக்கம், இளைஞர்களின் சொத்து—உழைப்பாளிகள் அமைத்த மாளிகை—அதில், உல்லாசபுரியினர் வாழ முடியாது' என்பதை, நாட்டுக்கும்—நாட்டிலே நம்மைப் பற்றி நச்சுக் கருத்துக்களை நடமாட விடுபவர்களுக்கும், எடுத்துக் காட்டத்தான் என்பது என் எண்ணம்...

''...தலைமை வகிப்பது என்பது, கட்சியிலே ஒரு நட்சத்திரத்தை உண்டாக்குவது என்பதல்ல; அப்படித் தலைமை வகிப்பவர்கள் கருதினாலும் அல்லது தலைமை வகிப்பவரைப் பற்றிக் கருதினாலும், கட்சிக்கும்--கட்சித் தொண்டுக்கும் அற்ப ஆயுள் தான் என்று முடிவு கட்டிக் கொள்ள வேண்டும்.

''வரப் போகும் போராட்டங்களிலே, இதுவரை முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் தலைவர்கள் வரிசைக்கிரமமாக களத்

திலே நிறுத்தப்பட வேண்டும்; அந்தந்த மாவட்ட மாநாட்டுத் தலைவர்களின் சார்பாக நான் மத்தியக் கழகத்தைக் கேட்டுக் கொள்வதெல்லாம், 'எங்களை, எதிர்காலப் போராட்டத்தின் துணைத் தளபதிகளாக்குங்கள்; மார்பிலே வேல் தாங்கி மரணத்தை அணைப்போமே தவிர, மாற்றாரிடம் சரண் புகமாட்டோம்; மாணிக்கக் கொள்கைகளை எதிரிகட்குக் காணிக்கையாக்க மாட்டோம்; இந்த உறுதியோடுதான் இன்றைய மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறேன் என்பதுதான்!''

'துணைத் தளபதிகளாக்குங்கள்' என்று கேட்ட கலைஞரை மூன்றாண்டுகள் கழித்து—1953-ஆம் ஆண்டில், கல்லக்குடி போராட்டத்திற்குத் தளபதியாகவே ஆக்கினார், அண்ணா அவர்கள்!

1953-ஆம் ஆண்டில் சிதம்பரத்திலே நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள், கல்லக்குடி போர்த் தளபதி கலைஞரை வாழ்த்தி, 'சென்று வா -- தம்பி! வென்று வா -- தம்பி!' என்று உள்ளம் உருகக் களத்திற்கு அனுப்பி வைத்தார்!

இந்த நிகழ்ச்சி, மக்களின் உள்ளங்களையெல்லாம் உருக்கும் காட்சியாக இருந்தது! மெய் சிலிர்க்க வைக்கும் காட்சியாக இருந்தது!

"வெற்றி ஊர்வலம் நடக்கும் அல்லது எனது பிண ஊர்வலம் நடக்கும்''

என்று கலைஞர் பேசியபோது,

"தம்பி! உன் பிணத்தையா நான் காண வேண்



டும் -- வெற்றியைத்தான் காண்பேன்''

என்று அந்த உத்தமத் தலைவன் கூறி, எல்லாருடைய கண்களையும் குளமாக்கி வைத்தார்!

அன்றையத்தினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியபடி—கல்லக்குடி களம் சென்று வென்றுவந்த கலைஞர், இன்று கோவையிலே ஐந்தாவது மாநில மாநாட்டிற்குத் தலைமை தாங்குகிறார்.

1961-இல் நடந்த திருப்பரங்குன்றம் மாநாடு போலவே, கோவை மாநாடும் கழக வரலாற்றிலே இடம் பெறும் மாநாடாகும்.

1961-இல் முளைத்த துரோகம், மீண்டும் 1972-இல் முளைத்துள்ளது!

1961-இல் திருப்பரங்குன்றம் மாநாட்டிலே நமக்கு அளிக்கப்பட்ட தெம்பும்--உறுதியும்--கொள்கை முழக்கங்களும், 1962 தேர்தலில் எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்திட உதவியது!

இப்போது கோவையில் கூடிடும் நமக்குக் கழக முன்னணியினர் அளித்திடும் கருத்துரைகளும்—கலைஞரின் தேனினுமினிய தீந்தமிழ் வீர உரையும்—முழக்கங்களும், உறுதியினையும்--கட்டுப்பாட்டினையும்--உள்ள உரத்தினையும் அளிக்கவல்லதாக அமையவிருக்கின்றன!

குன்றத்திலே மாநாடு கூடி, வேரோடும் வேரடி மண்ணோடும் துடைத்துத் தூக்கியெறிந்தோம் துரோகிகளை!

இப்போது, கொங்கு நாட்டிலே கூடுகிறோம்—கொள்கை முழக்கமிட!

கோவையிலே நாம் முழங்கும் முழக்கத்தின் எதிரொலியே நமது எதிரிகளை முறியடிக்கவல்லதாக அமைய வேண்டும்! அத்தகைய உள்ள உரத்தோடு கூடிடுவோம்—கோவையிலே! ★


சாதனைச் செம்மல் சரித்திர நாயகன்
தானைத் தலைவன் தமிழகக் காவலன்
டாக்டர் கலைஞர் தலைமை ஏற்கும்
இம்மாநில மாநாடு நானிலம் போற்றிட
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

★

**வெள்ளக்கோவில் கூட்டுறவு**
**பிரதம நிலவள வங்கி**
வெள்ளக்கோவில், கோவை மாவட்டம்.
தொலைபேசி எண்: 375

**மு. பழனிசாமி**, எம்.எல்.ஏ.,
தலைவர்.



தங்கநிகர் தலைவர் - தமிழக முதல்வர் --
டாக்டர் கலைஞர் தலைமை ஏற்கும்
இம்மாநில மாநாடு
எழிலோடும் -- ஏற்றத்துடனும் --
எழுச்சியுடனும் நடந்தேற
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

★

**மடத்துக்குளம் கூட்டுறவு**
**பிரதம நிலவள வங்கி**
**கணியூர்**

டி. பாக்கியசாமி,
நிர்வாக அலுவலர்

டி. சேதுராமன்,
தலைவர்
மற்றும் இயக்குனர்கள்

# திராவிட இயக்க வரலாற்றில் சேலத்தின் பங்கு

இந்தியத் துணைக்கண்டத்தின் தென் கோடியில் அமைந்துள்ள சேலம் மாவட்டத்திலிருந்து தன்னலமற்றவர்கள் பலர் நீதிக் கட்சிக் காலந்தொட்டு அரசியலில் ஈடுபட்டு, இன -- மொழிப் பற்றுடன் செயலாற்றியுள்ளனர்.

திராவிடர் இயக்கத்தின் தூண்களாகவும் சேலம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் இருந்துள்ளனர்.

1938-இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில், தந்தை பெரியார்—பேரறிஞர் அண்ணா—மறைமலை அடிகள்—கி. ஆ. பெ. விசுவநாதம்—நாவலர் சோமசுந்தர பாரதியார்—மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார்—பட்டுக்கோட்டை அழகிரிசாமி—திரு. வி. க. போன்றோரின் கருத்துக்களை இதயத்திலே தாங்கி—இந்தி மொழி ஆதிக்கத்தை விரட்டியடிக்கப் பலர் களம் புகுந்துள்ளனர்!

களம் கண்டு சிறை புகுந்த பின்பும் மனம் தளராமல் தண்டனையை அனுபவித்துவிட்டு வெற்றிமுழக்கத்தோடு வெளிவந்த வீரர் கூட்டம் சேலம் மாவட்டத்திலும் உண்டு!

நீதிக் கட்சியைத் தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகவும்—பிறகு திராவிடர் கழகமாகவும் மாற்றிய பெருமை சேலத்திற்கு உண்டு!

சேலத்திலிருந்து பதினைந்து கல் தொலைவிலுள்ள ஏற்காட்டில் பெரியார் அவர்கள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தபோது தான், தம்முடைய திருமணத்திற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

1949 செப்டம்பர் 17-இல் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதும், தமிழகத்திலேயே முதலாவது கிளைக் கழகம் தொடங்கப்பட்டது ஓமலூரில்தான் என்பது குறிப்பிடததக்கதாகும்;



நைனாமலை

அதன் தொடர்ச்சியாக மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்தில்தான்—அந்தக் காலத்தில்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகளும், கழகச் சார்பு மன்றங்களும் பெரும் அளவில் ஏற்பட்டன!

இராமாயண எரிப்புப் போராட்டம்—'இராமாயணம் எரிக்கப்பட வேண்டுமா -- வேண்டாமா?'



ஜி. பி. சோமசுந்தரம்

என்ற விவாதம் சேலத்தில்தான் நடைபெற்றது!

★

சேலம் 'வி' மார்க்கெட் மைதானத்தில் அறிஞர் அண்ணா அவர்களும்—நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும் சொற்போர் நடத்தி, 'இராமாயணம் எரிக்கப்பட வேண்டியதுதான்' என்ற முடிவை எடுத்த பெருமையும், பேரறிஞர் அண்ணா அவர்களிடம் வாதத்தில் தோற்றுப் போன சோமசுந்தர பாரதியார் -- தம் தோல்வியை ஒத்துக்கொள்ளும் வகையில் 'இரயிலுக்கு நேரமாகிறது' என்று சொல்லிவிட்டுச் சென்றதன் மூலம் பகுத்தறிவுக் கொள்கைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களால் வெற்றி தேடித் தந்த பெருமையும் சேலம் மாவட்டத்திற்கு உண்டு.

சேலம் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு 1951 மே திங்கள் 5, 6-ஆம் நாட்களில் சேலம் -- அம்மாபேட்டை சின்னசாமி தோட்டத்தில், தியாகராயர் பந்தலில் நடைபெற்றது.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்—ஜி. பி. சோமசுந்தரம்; செயலாளர் அ. சித்தையன்; பொருளாளர் — ஆர். நாராயணசாமி; விளம்பர அலுவலர்—சலகை ப. கண்ணன்.

மாநாட்டின் தலைவர் — வி. எம். ஜான்; திறப்பாளர் — திருமதி சத்தியவாணிமுத்து.

இரு நாட்களிலும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி குழுவினரின் 'சந்திரமோகன்'—'நீதிதேவன் மயக்கம்' நாடகங்கள் நடைபெற்றன.

திடீரென்று ஏற்பட்ட பெரு மழை--காற்றினால் பந்தல் தரையோடு தரையாயிற்று; பேரறிஞர் அண்ணா அவர்களும் -- ஏனைய தலைவர்களும், பெரும் அதிர்ச்சியடைந்தனர்; ஆனால், சில மணி நேரத்திற்குள் தொண்டர்களும், மாவட்டக் கழக மாநாட்டை நடத்திய தளபதிகளும் வேட்டிகளை வரிந்து கட்டிக்கொண்டு சரிந்த பந்தலை சரி செய்து -- மாநாட்டின் நிகழ்ச்சிகள் தடைபடாமல் நடைபெற ஏற்பாடு செய்தனர்!

★

முதல் மாநாட்டிற்குப்பின் சேலம் மாவட்டத்தில் கழகத்திற்குப் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது; அன்றைக்குக் கழகத்தின் தூண்களாக இருந்தவர்கள்—ஜி. பி, சோமசுந்தரம், அ. சித்தையன், நாராயணசாமி, ப. கண்ணன் போன்றவர்களாவார்கள்.

★

சேலம் மாடர்ன் தியேட்டர் சாருக்குக் கதை – வசனம் – பாடல்கள் எழுதித் தருவதற்குக் கழகத் தலைவர்களில் முக்கியமானவர்களெல்லாம் சேலம் மாவட்டத்தில் தான் தங்கியிருந்தார்கள்.

கலைஞர், சி. பி. சிற்றரசு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கே. வேலன், கவிஞர் கண்ணதாசன் போன்றவர்கள் மாடர்ன் தியேட்டர்சில் இருந்ததால் கழகப்பிரசாரம் மாவட்டம் முழுவதிலும் பரவலாக நடைபெறவும்--கழகத் தோழர்கள் தலைவர்களைச் சந்திக்கவும் பெரும் அளவில் வாய்ப்பு ஏற்பட்டது!

★

சேலம் மாவட்ட தி. மு. க. இரண்டாவது மாநாடு 1954-ஆம் ஆண்டில் சேலம் விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் பரசுராமர் பந்தலில்—சேலம் வள்ளியப்பன் அரங்கில் நடைபெற்றது.

1—5—54-இல் முதல் நாள் மாநாடு, சமூக சீர்திருத்த மாநாடாக நடைபெற்றது; இந்த மாநாட்டின் தலைவர்—ப. உ. சண்முகம்;



எஸ். ஆறுமுகம்
செயலாளர்.
சேலம் மாவட்ட தி. மு. க.
(கட்டுரையாளர்)

திறப்பாளர் — பி. ஆர். கோகுலகிருஷ்ணன் பி.ஏ., பி.எல்.

புரட்சிகரமான சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பேரறிஞர் அண்ணா — கலைஞர் — நாவலர்— பேராசிரியர்—முன்னணித் தலைவர்கள் பொழிந்தனர்; இந்த நிகழ்ச்சி, இன்றும் கழகத் தோழர்களிடை பசுமையாகவே இருக்கிறது!

★

2—5—54 ஞாயிறன்று அரசியல் மாநாடு நடைபெற்றது.



சிற்றுளி சுப்பிரமணியம்

மாநாட்டின் தலைவர்—கடலூர் இரெ. இளம்வழுதி, எம்.ஏ., பி.எல்.; திறப்பாளர்: மதுரை எஸ். முத்து; வரவேற்புக் குழுத் தலைவர்: சேலம் பெரியார் ஜி. பி. சோமசுந்தரம்; செயலாளர்: குள்ளம்பட்டி ப. இராமலிங்கம்; பொருளாளர்—தர்மபுரி ஆர். எம். குப்புசாமி, பி.ஏ., பி.எல்.; துணைச் செயலாளர்: ப. கண்ணன்; தொண்டர்படைத் தலைவர் — இரா. தாண்டவன்; தொண்டர்படைத் துணைத் தலைவர் —பி. எம். கோபால்.

மாநாட்டில், பேரறிஞர் அண்ணா —கலைஞர்—நாவலர்—பேராசிரியர் மற்றும் முன்னணித் தலைவர்கள் வழங்கிய அரசியல் கருத்துக்கள் கழகத்தின் வளர்ச்சிக்கு மேலும் சேலம் மாவட்டத்தில் விறுவிறுப்பைத் தந்ததென்றால் மிகையாகாது.

★

1957 பொதுத் தேர்தலில், சேலம் மாவட்ட சட்டப் பேரவைத் தொகுதியில். 'சேலத்து மாப்பிள்ளை' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்ட— நாவலர் போட்டியிட்டார்.

சேலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் உள்ள கழகத் தோழர்களும், தேர்தலில் போட்டியிட்ட நாவலர் மற்றும் கழகத் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றனர்.

அன்று நாவலர் சேலம் நகரத்தில் ஒரு நாளைக்கு 5 இடங்களில் தேர்தல் கூட்டத்தில் பேசுகிறார் என்றால், முதல் கூட்டத்தில் பேச்சைக் கேட்டவர்கள் அவரைப் பின்தொடர்ந்து எல்லாக் கூட்டங்களுக்கும் சென்று அவருடைய பேச்சைக் கேட்பார்கள்.

★

1958 பிப்ரவரி 15, 16-ஆம் நாட்களில் சேலம் மாவட்ட மூன்றாவது மாநாடு, சேலம் வேலூரில் அழகிரி பந்தலில் நடைபெற்றது.

மாநாட்டின் தலைவர்—கலைஞர்; திறப்பாளர்: நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி; வரவேற்புக் குழுத் தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்; செயலாளர்: குள்ளம்பட்டி வி. இராமலிங்கம்; பொருளாளர்: பி. எம். குப்புசாமி; தொண்டர் படைத் தலைவர்: இரா. தாண்டவன்.

இம்மாநாட்டில் பேசிய பேச்சாளர்கள் அனைவருக்கும் 'தலைப்பு'க்கள் தரப்பட்டன; அந்தந்தத் தலைப்புக்களில் ஆற்றிய உரைகள் இன்னமும் கழகத் தொண்டர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கின்றன!

1961-இல் கழகத்திற்குத் துரோகம் செய்துவிட்டுச் சிலர் வெளியேறிய மறுநாள், எல்லாச் சுற்றுப் பயணங்களையும் ரத்து செய்துவிட்டுப் பேரறிஞர் அண்ணா அவர்கள், சேலத்திற்கு வருகை தந்தார்கள்.

பூலாவரியில் எஸ். ஆறுமுகம் தலைவராக இருந்த ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தைத் திறந்துவைத்து, பல்லாயிரக் கணக்கான மக்கள் மத்தியில்— பிரிந்து சென்ற தம்பிமார்களுக்கு அன்பழைப்பு விடுத்தார்; 'திராவிட முன்னேற்றக் கழகத்தின் கதவுகள் என்றென்றைக்கும் பிரிந்து சென்ற என் தம்பிமார்களுக்காகத் திறந்தே இருக்கும் -- வரலாம்' என்று குறிப்பிட்டது, மறக்க முடியாததாகும்!



ப. தா. முத்து

சேலம்—தர்மபுரி மாவட்ட தி. மு. க. நான்காவது மாநாடு, 1966 டிசம்பர் 3, 4-ஆம் நாட்களில் கிருஷ்ணகிரி சீனிவாசபுரத்தில், குள்ளு பந்தலில்—மோகனூர் வடிவேல் அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டுத் தலைவர்—உடுமலை நாராயணன்; திறப்பாளர்— திண்டிவனம் ஆ. தங்கவேல்; கொடியேற்றியவர்--காஞ்சி சரசுவதி வெங்கடேசன்; பொறுப்பாளர்—நாவலர்; பொருளாளர்— கலைஞர்; வரவேற்புக் குழுத் தலைவர்—எச். எல். முருகேசன; செயலாளர்—ஈ. ஆர். கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள்: பி. வி. சீராமுலு, ஆர். வெங்கடாசலம்;



ஏ. ஆறுமுகம்

எம். கமலநாதன்; தொண்டர் படைத் தலைவர்கள்—டி. எஸ். சண்முகம், எஸ். ஏ. அன்புக்கரசு.

இம்மாநாட்டில், செல்வி சந்திரகாந்தா குழுவினரின் 'பனி வேர்' என்ற நாடகமும், இரண்டாம் நாள் டி. என். பாலுவின் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற நாடகமும் சிறப்பாக நடைபெற்றன.

மாநாட்டின் ஏனைய நிகழ்ச்சிகள் பேரறிஞர் அண்ணா அவர்களாலும் -- ஏனைய தலைவர்களாலும் பாராட்டும் அளவில் நடைபெற்றன.

★

1964-இல், இந்தி எதிர்ப்பு ஒரு நாள் மாநாட்டைச் சேலத்தில் நடத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அனுமதி அளித்தார்; 'ஒரு நாள் மாநாடுதானே' என்ற எண்ணத்தில், திரு. ஈ. ஆர். கிருஷ்ணன், அம்மாபேட்டை மெயின் ரோடு உடையார் தோட்டத்தில் சுற்றிலும் தட்டிகள் கட்டி -- மறைப்புச் செய்து,மேடை மட்டும் அமைத்தார்.

மாநாடு தொடங்குவதற்கு முன்பே பெரும் காற்றும் -- மழையும் பெய்யத் தொடங்கியது; மாநாடு தொடர்ந்து நடைபெற முடியாமல் இடையிலேயே முடிந்துவிட்டது.

1964-இல் இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்த்தும்—இந்தி ஆட்சி மொழிப் பிரிவுச் சட்டத்தை எரித்தும், மத்திய அரசு அலுவலகம்— அஞ்சல் நிலையங்கள் முன்பு போராட்டங்களில் ஈடுபட்டுச் சேலம் மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான தோழர்கள் சிறை சென்றனர்.

சேலம் மாவட்டத்தில், அந்தக் காலத்தில், கழகத்தை வளர்ப்பதற்கு அண்ணாவுக்குப் பெரும் துணையாக இருந்தவர்களில் சேலம் பெரியவர் ஜி. பி. சோமசுந்தரம், அ. சித்தையன், ஆர்.



திருமதி கமலம்மாள்

நாராயணசாமி, ப. கண்ணன், இரா. தாண்டவன், ஆர். இராமலிங்கம், ஆர். எம். குப்புசாமி, எம் பி. சுப்பிரமணியம், இராசிபுரம் சின்னண்ணன் (டைலர்). சேலம் எம். பி. வள்ளியப்பன் போன்றவர்கள் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களைத் தொடர்ந்து ஈ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி சுப்பிரமணியம், நாமக்கல் பெருமாள், அரூர் எச். எல் முருகேசன், திருச்செங்கோடு வேலு மற்றும் ஆயிரக் கணக்கான தோழர்கள், கழக வளர்ச்சிக்காகப் பாடுபடும் தியாகச் செம்மல்களாக இருந்து வருகின்றனர்!

★

1962–1967–1971-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் கழகத்திற்கு சேலம் மாவட்ட மக்கள் பெருவாரியான ஆதரவினை நல்கினர்!

திரு. ஏ. கோவிந்தசாமி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பு விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்திய நேரத்தில் போலீசார் தாக்குதலுக்கு ஆளாகி—கை எலும்பு முறிவு ஏற்பட்ட சம்பவம் மறக்க இயலாததாகும்.

முறிந்த கைக்குக் கட்டுக் கட்டிக்கொண்டு -- சிறையிலிருந்து வெளியேவந்து, திருச்செங்கோடு நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழக வெற்றிக்காக அரும் பாடுபட்டு வெற்றியை தேடித் தந்தது மறக்க இயலாததாகும்.

★

1972-இல் தி. மு. கழகத்தை விட்டுச் சிலர் வெளியேறியபோது, மாவட்டக் கழக நிர்வாகிகள் முக்கிய நண்பர்கள் பலரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களாக நின்று பணிபுரிந்தனர்!

1972-ஆம் ஆண்டில் மாவட்டக் கழகத்தின் பொறுப்பாளராக மேட்டூர் அ. பாலு அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட நேரம்; தோழர் அ. பாலு அவர்களுடன் இன்றைய மாவட்டச் செயலாளர் எஸ். ஆறுமுகம் உடனிருந்து, ஒன்றியம் — நகரம் தோறும் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தைக் கூட்டி--கழக இலட்சியத்தைச் சுட்டிக்காட்டி--கழகத்தை விட்டுப் பிரிந்து சென்ற எட்டப்பர்களின் எண்ணத்தை வெட்ட வெளிச்சமாக்கி--கழக அமைப்பும், நிர்வாகிகளும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணிபுரிய வழிவகையைக் கண்டனர்!



எஸ். ஏ. அன்புக்கரசு

★

அண்ணாவின் பெயரால் அமைந்த அறக்கட்டளைக்கு— 'அண்ணா அறிவாலய நிதி'க்கு சேலம் மாவட்டம், தனது பங்கைச் செலுத்தியது!

மாவட்டச் செயலாளராக எஸ். ஆறுமுகம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முன்னரும் -- பின்னரும், மாவட்டத்திலுள்ள கழக முன்னணித் தோழர்கள் உதவியுடன் எல்லாத் துறைகளிலும் மாவட்டக் கழகம் ஆற்றிவரும் பணிகள் சிறப்பான எடுத்துக்காட்டுகளாகும்!



ஈ. ஆர். கிருஷ்ணன்

சேலத்தில் நடந்த செயல் வீரர்கள் கூட்டம், தலைவர்களின் கவனத்தை ஈர்க்கத்தக்கவகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

★

இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் சேலம் மாவட்டத் தி. மு. க. 5-ஆவது மாநாடு சேலம் விளையாட்டுத் திடலில், ஆகஸ்டு 16, 17-ஆம் நாட்களில் ஜி. பி. சோமசுந்தரம் பந்தலில்— சிற்றுளி சுப்பிரமணியம் அரங்கில் நடைபெற்றது.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்—எஸ். ஆறுமுகம்; செயலாளர்கள் — இராஜாராம், எஸ். கந்தப்பன், எஸ். ஏ. அன்புக்கரசு, ப. த. முத்து, எம். பழனிவேலன், டாக்டர் நைனுமலை, ஏ. ஆறுமுகம்; நிதிக் குழுத் தலைவர்—ஜே. கே. கே. சுந்தரம்; பொருளாளர்—என். நடேசன; தொண்டர் படைத் தலைவர் — கு. சி. வெங்கடாசலம்; துணைத் தலைவர்கள் — கே. வி. இராமனுஜன், ப. க. தமிழழகன்; தொண்டர் படைத் தலைவி—திருமதி கமலமாணிக்கம்மாள்.

மாநாட்டுத் தலைவர்—கா. வேழவேந்தன்; திறப்பாளர் — நன்னிலம் நடராசன்.

"கழக வரலாற்றில் இதுபோல் ஓர் எழுச்சிமிக்க மாநாட்டை— மக்கள் வெள்ளம் நிறைந்த மாநாட்டைப் பார்த்ததில்லை" என்று கழகத் தோழர்கள்--தலைவர்கள் கூறிடும் அளவில் நடத்திக்காட்டிய பெருமை, சேலம் மாவட்டக் கழக நிர்வாகிகளையே சாரும்!

சேலம் மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், தலைமைக் கழகத்தின் நன்மதிப்பை பெற்றுத் தொடர்ந்து தன் பணியை ஆற்றி வருகிறது!

★



# சூளுரை ஏற்போம்!

தையற்கலை சுந்தரம்

ஒரு மாபெரும் இயக்கத்திற்குத் தலைமை தாங்குபவருக்கு எத்தகைய தகுதிகள் வாய்க்கப் பெற்று இருக்க வேண்டும் என அரசியல் ஆராய்ச்சி யாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவை மறுக்கும் அளவில் எவ்விதத் தகவலும், நாட்டு மக்களுக்கு இன்றுவரை கிடைக்கப் பெறவில்லை!

ஆம், நமது திராவிட இயக்க வரலாற்றின் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் அவ்வப்போது தோன்றிய தலைவர்கள் பலரும், அவரவர்களின் தகுதிக்கும், திறமைக்கும், தன்மைக்கும் ஏற்பத் தமிழ் நாட்டு மக்களைத் தம்பால் ஈர்க்கக்கூடிய தனி ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தனர்!

இத்தகையவர்களில், தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் முதன்மையான வர்கள்; மக்களால் ஈர்க்கப்பட்டவர்கள்.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்க்கப்பெற்ற தலைவர்களின் வழித் தோன்றலே நமது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்!

கலைகளுக்கு எல்லாம் பிறப்பிடம் கலைஞர்களின் தாயகம் தஞ்சைத் தரணி தந்த தவப் புதல்வர் நமது தலைவர்!

கொங்கு நாட்டின் தலைநகரில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு, டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற இருக்கின்றது. அண்ணா மறைவுக்குப்பின் நடை பெறும் முதல் மாநில மாநாடு இது.

ஒரு மாபெரும் இயக்கத்திற்குத் தலைமை பொறுப்பேற்று அதனை நடத்திச் செல்லும் தலைவருக்கு எத்தகைய சாதுரியம் தேவைப்படு கின்றது என்பதை நீண்டகால அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களால் ஒருவாறு ஊகிக்க முடிகிறது.

தேர்ந்த முதிர்ச்சி பெற்றவருக்கு நாட்டு மக்களிடம் ஒருவகையான காந்த சக்தி தம்மையும் அறியாமல் குடிகொண்டு இருக்க வேண்டும்!

மக்களைத் தம்மால் ஈர்க்கும் இத்தகைய காந்த சக்தி படைத்தவர் நமது தலைவர் கலைஞர்!

மேலும், இதர அரசியல் மாற்று கட்சித் தலைவர்களிடையே ஒருவகையான அதிர்ச்சி இருக்க வேண்டும். அதாவது இவரிடம் வீண் வம்புக்கு சென்று மாட்டிக்கொண்டால், மின்சாரத்தால் தாக்குண்டு அதிர்ச்சி அடையும் நிலை நேரிடும் என்று அச்சமிருக்க வேண்டும்.

“காந்தத்தின் சக்தியைப் போல் நாட்டு மக்களை தன் வழியைப் பின்பற்றி நடக்கச் செய்யும் காந்த சக்தியுள்ளவராகவும், மாற்றுக் கட்சித் தலைவர் களையும் மின்சாரம் தாக்குவதுபோல் அதிர்ச்சியுறச் செய்யும் நிலை பெற்றவராகவும் இருக்க வேண்டும்” என்ற இலக்கணத்திற்கு முன்னோடியாகத் திகழ் பவரே டாக்டர் கலைஞர் அவர்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், தமக்குப் பின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை பொறுப்பேற்று நடத்திச் செல்லக் கூடிய தகுதியும், திறமையும் படைத்தவர் கலைஞர் அவர்களே எனக் கருதி இருக்கக் கூடும். எனவேதான், ஏழாண்டு களுக்கு முன்பே (3-6-68) கலைஞர் அவர்களின் நாற்பத்தைந்தாவது பிறந்த தின விழாவில் வழங்கிய கருத்துரை நமது கவனத்திற்கு வருகிறது:

“கடுமையான உழைப்பால் உயர்ந்த கருணாநிதி மூலமாக நாமும், நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம்; இப்பொழுது செய்திருக்கின்ற காரியங்களைப் போலப் பல மடங்கு அதிகமான காரியங்கள் அவருடைய திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது”.

இத்தகைய சீரும் சிறப்பும் கொண்ட கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் நடைபெற இருக்கும் மாநில மாநாட்டில், பொன்னெழுத்துக் களில் பொறிக்கத்தக்க சில பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டே தீரும்!

அண்ணா அவர்கள் பின்பற்றி வந்த மரபை பெருந்தன்மையைக் கடைப்பிடித்து வரும் கலைஞர் அவர்கள் காட்டும் வழி நடக்கத் தயக்கம் காட்ட மாட்டோம்!

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1956ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டில், நமது பொதுச் செயலாளர் நாவலரை, “தம்பி வா, தலைமை தாங்க வா! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக் கிறேன், வா” என்று கூறியது வெறும் அலங்காரத் திற்காக அன்று! அந்த நிலை, நமது கழகத்தில் வளர்ந்து கொண்டு வருகிறது! அது மேலும் வளர வேண்டும் என்பதுதான் எல்லாருடைய உண்மையான நம்பிக்கை; அப்படி வளர்ந்தால்தான் நம்முடைய கழகம் சனநாயகப் பண்போடு திகழ முடியும்!

நாவலர் அவர்கள் நம் கழகத்திற்குப் பொதுச் செயலாளராகக் கிடைத்திருக்கிறார்; அவர் இடுகின்ற ஆணைகளை ஏற்று நடத்துவதில், நாம் பெருமை கொள்ளுகிறோம்!

அவர் தருகின்ற திட்டங்களை ஏற்று, அவர் இடுகின்ற ஆணைகளைத் தலைமேற்கொண்டு கழகத்தை மேலும் வளர்த்து பொதுத் தேர்தலி லேயும் நாம் மகத்தான வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி நம்முடைய நல்லாற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் எல்லாம் இந்த மாநில மாநாட்டில் உறுதி பெற்றுக் கொள்வோமாக!

சூளுரை மேற்கொண்டு மாநில மாநாட்டி லிருந்து கலைந்து செல்வோமாக!

வாழ்க அண்ணாவின் புகழ்!

வளர்க திராவிட முன்னேற்றக் கழகம்!

# VEECO SAREES

Symbol of Quality

## A TREASURE OF MATCHLESS HANDLOOM SAREES

*

Manufacturers:

## K. S. VEE & CO.,

89, RANGAI GOWDER STREET, (Opp. Sukrawarpet Market)

COIMBATORE - 641001.

Phone: 23533 Cable: VEECOFABS

---

# VEECO® WET GRINDERS



Suitable for

HOMES
HOTELS
HOSTELS

and for

Commercial purposes

VEECO Quality Rice Grinding Machines

Manufacturers: Phone: PP 34034

## VEEKU SONS INDUSTRY

112, Thiruvenkataswamy Road East.

R. S. PURAM :: COIMBATORE - 641002

*With Best Compliments From*

# The Coimbatore District Co-operative Spinning Mills Ltd.

**Post Box No. 8**

**COIMBATORE-638656.**

**(Coimbatore Dist.)**

**Spinners of quality yarn in Hanks and Cones**

**COTTON & STAPLE FIBRE**

*With the best compliments of:*

★

## T. ABDUL RAZACK & SONS

**Tanners, Exporters of Hides & Skins**
**TANNERY, AMBUR. N.A.**
Phone: 2750

Head Office:

15/3, Vepery High Road,
PERIAMET, MADRAS - 600 003.

**Manufacturers of:**

E. I. Tanned goat and sheep skins,
wet Blue Chrome Goat Skins
and
Finished Leathers.

★

Associate Concern:
**DECCAN TANNING COMPANY (P) LTD.,**
Tannery, Thuthipet, AMBUR. N.A.
Phone: 2379 & 2609

## ஸ்ரீ கண்ணபிரான் இன்ஜினியரிங் & காஸ்டிங் ஒர்க்ஸ்

**மாதனூர்.**
வளத்தூர், வ. ஆ. மாவட்டம்.
தொலைபேசி எண்: 34

---

**கரும்பு ஆலை, தோல்பதனிடும் மிஷன்கள் தயாரிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.**

---

**S. கண்ணப்ப முதலியார்**
உரிமையாளர்.

*With best compliments from*

★

## Parama Chemicals

**110, Ilayarasanendal Road,**
**KOVILPATTI - 627715.**

✱

Manufacturers of Best

**Precipitated Calcium Carbonate**
**High (Chemical) Grade Burnt Lime**
**High (Chemical) Grade Hydrated Lime**
**and**
**Calcite Powder.**

With the best compliments from:

★

## GOBI ENGINEERING WORKS

**M. C. ROAD, MADANOOR. N.A. Dt.**

**Specialist in Manufacturing**

Reversable Setting Machine
Unhairing
Fleshing
Buffing
Pigments Mixing
Cone & Ball Paddle
Drums
Cane Crushers
Agricultural Implements.

All Spares on Tanning Machines are always available.

Prop: S. JANARTHANAN

Soon or late the man who wins, Is, the man who thinks he can.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. C. சிட்டிபாபு, M.P. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு : அழகிரி அச்சகத்தில் (24, எஸ். என். செட்டி தெரு, சென்னை - 6000|3) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

பதிவு எண் TN-MSN-24.





